
# இந்து நாதம்

## 2011-2012




யா/ பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி

உயர்தர மாணவர் மன்றம்

**J/PANDATERUPPU HINDU COLLEGE**

*Advanced level students Union*

கல்லூரி
தேதி :
நூலகம்

யா/பண்டத்தரிப்பு இந்துக்
வரவெண் :
வகுப்பெண் :
திகதி :
நூலகம்

யா/

# இந்துநாதம்

## மலர்-02


## 2011/2012

**யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி**

**உயர்தர மாணவர் மன்றம்**

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | :- | இந்துநாதம் |
| வெளியீடு | :- | உயர்தர மாணவர் மன்றம் |
| | | பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி (2010) |
| மலராசிரியர் | :- | செல்வி. ந.வனிதா |
| தாள் | :- | 70 கிராம் வெள்ளை |
| அளவு | :- | B4 (257x364 mm) |
| பிரதிகள் | :- | 300 |
| பக்கம் | :- | XIII +158 |
| மேற்பார்வை | :- | திருமதி.நி.தனபாலன் |
| அச்சுப்பதிப்பு | :- | சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை |



பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியின்
ஸ்தாபகர்
அமரர் முருகேசர் குமரேசர்

# கல்லூரிக் கீதம்

*இராகம்:- பிருந்தாவனசாரம்* *தாளம்:- ஆதி*

**பல்லவி**

வாழ்க என்றும் வாழ்த்துவோம்
வாழ்த்திச் சிரமே தாழ்த்துவோம்
(வாழ்க...)

**அனுபல்லவி**

சூழ்க இன்பம் என்று கல்வி
செல்வம் தந்து எங்களை
வாழ வைக்கும் பண்டத்தரிப்பு
வளர் இந்துக்கல்லூரியை
(வாழ்க...)

**சரணம்**

செந்தமிழும் ஆங்கிலமும்
செழுங்கலைகள் யாவையும்
விந்தைமிகு விஞ்ஞானமும்
விளங்கும் பாடல் ஆடலும்
தந்த கலைச் செல்வியை
தரணியெல்லாம் வணங்குவோம்
சந்தமும் நாம் பணிந்து
வந்தனை புரிகுவோம்

மேன்மை மிகு சைவநெறி
மேதினியில் விளங்கவே
ஆன்ம ஞானபோதம் நல்கும்
அன்னையைத் துதிப்போம்
நான்மறைகள் ஏத்துகின்ற
நாமகளும் பூமகளும்
தேன்மழை அருள்மொழியும்
தேவி எம் கல்லூரியை
(வாழ்க...)

# பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 01. பாடசாலை முகாமைத்துவம் | 01-09 |
| 02. குழந்தை குடும்பத்தில் இருந்து சமூகத்தினுள் | 10-12 |
| 03. இருப்பு | 13-16 |
| 04. மரணமும் அரசு குதிரைப் பாடத்தலைவனும் நாடகம் | 17-21 |
| 05. என் பண் இந்துவை நோக்கிய பயணம் | 22-24 |
| 06. பண் இசையின் சிறப்பும் பெருமையும் | 25-26 |
| 07. நுண்கலை | 27-36 |
| 08. நோய்களை குணப்படுத்த சில வழிகள் | 37-40 |
| 09. சிறுவர் அரங்கின் தோற்றமும் வளர்ச்சியும் | 41-42 |
| 10. Proverbs | 43-44 |
| 11. Tell us stories | 45-46 |
| 12. குரு | 47-48 |
| 13. General Knowledge Questions and Answers | 49-50 |
| 14. The good Teacher | 51 |
| 15. கர்நாடக சங்கீதத்தின் சிறப்பும் பயனும் | 52-53 |
| 16. என் விருப்பம் | 54 |
| 17 வெற்றிக்கான நுழைவாயில் | 55-57 |
| 18. வணக்கத்துக்குரிய பெண்கள் | 58-59 |
| 19. சர்வதேச அமைப்புக்கள் | 60-62 |
| 20. பண்ணிசை | 63-65 |
| 21. மாகாண விடயம் சம்பந்தமான பொது அறிவு | 66-67 |
| 22. நாட்டார் நாடகத்தின் தோற்றம் | 68-71 |
| 23. Hindu Festival Thai pongal | 72 |
| 24. New Year | 73 |
| 25. Deepavali | 74 |
| 26. எதிர்காலம் நம் பிள்ளைகள் கையில் | 75-76 |
| 27. நிம்மதி தேடும் உள்ளம் | 77-78 |
| 28. Country Before self | 79-80 |
| 29. சிறுவர் உரிமைகள் | 81-83 |
| 30. இயற்கைச் சீற்றங்களும் பாதுகாப்பு முறைகளும் | 84-90 |
| 31. Enviramental pollution | 91 |
| 32. வளமான வாழ்க்கைக்கு வாசிப்பு அவசியம் | 92-94 |
| 33. இலக்கியமும் வாழ்க்கையும் | 95-97 |
| 34. நாட்டார் பாடல்களின் தனிச்சிறப்பு | 98-100 |
| 35. பொது அறிவு | 101-107 |
| 36. மாணவர் கல்வியில் இடைவிலகலுக்கான காரணமும் தீர்வுகளும் | 108-111 |
| 37. சிந்தனை துளி | 112-113 |
| 38. சேக்ஸ்பியரின் யூலியஸ்சீசர் நாடகம் ஓர் பார்வை | 114-116 |

| | |
|---|---|
| 39. புவிக்கோளத்தை அச்சுறுத்தும் அமில மழை | 117-119 |
| 40. வாசிப்பின் பயன்கள் | 120-122 |
| 41. Anser Management (கோப முகாமைத்துவம் கோபத்தை கையாளுதல்) | 123-124 |
| 42. மனத்தால் உயர்ந்த உத்தமிக்கு மனம் நெகிழ ஓர் மடல் | 125-126 |
| 43. Death | 127 |
| 44. மாற்று ஆற்றலுடையோர் சம உரிமை உடையோர் | 128 |
| 45. 20ம் நூற்றாண்டில் இலங்கையின் இசை வளர்ச்சி | 129-130 |
| 46. விஞ்ஞானமும், மனிதவாழ்வும் | 131-133 |
| 47. மூன்றின் பெருமை | 134-135 |
| 48. நேரம் | 136-137 |
| 49. இலக்கியமும் மொழியும் | 138-139 |
| 50. விடியலைத் தேடி | 140-143 |
| 51. கிரேக்க திரெஜடி நாடகமான அன்ரிக்கன் | 144-148 |
| 52. மாணவ சமூக மாண்புகள் | 149 |
| 53. பாடசாலை | 150 |
| 54. வெற்றி நிச்சயம் | 151 |
| 55. விஞ்ஞான உண்மைகள் விதிகள் கொள்கைகள் | 152-154 |
| 56. இயாகோவின் பாத்திரப் பண்புகள் | 155-157 |
| 57. தமிழ்மொழி | 158 |



ப.விக்கினேஸ்வரன், மாகாணக்கல்விப்பணிப்பாளர்
மாகாணக்கல்வித்திணைக்களம்,வடமாகாணம்

அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி


பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் இரண்டாவது தடவையாக வெளியிடப்படும் "இந்துநாதம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

இச் சஞ்சிகை மாணவர் எழுத்தாற்றலை மேம்படுத்துவதுடன் அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும். அத்துடன் சமூகத்தினைப் பாடசாலையுடன் இணைக்கும் சாதனமாகவும் இது அமையும் என்றால் மிகையாகாது.

இம் முயற்சியில் ஈடுபடும் உயர்தர மாணவர் ஒன்றியத்தினர்களையும் அவர்களை வழிபடுத்தும் பொறுப்பாசிரியர்கள், அதிபர் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். உயர்தர மாணவர் சிறப்பான பெறுபேறுகளைப் பெறவும் கல்லூரி வளர்ச்சி பெறவும் வாழ்த்துகிறேன்.

ப.விக்னேஸ்வரன்
மாகாணக்கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்.

வடமாகாணம்.



ஆ.ராஜேந்திரன்
வலயக்கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்

அவர்கள் வழங்கிய

# இந்துநாதத்திற்கு இதயநல் வாழ்த்துக்கள்....

யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்களால் வெளியிடப்படும் "இந்துநாதம்" சஞ்சிகை இவ்வாண்டும் ஒலிப்பது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். பண்டத்தரிப்பு பிரதேசத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்கவென உருவாக்கப்பட்ட இந்துக்கல்லூரியின் நிறுவுனர் குறிக்கோள்களுக்கு இந்து நாதமும் தனது பங்களிப்பை நல்கி வருகின்றது.

படிக்கிற வழக்கத்தை உண்டாக்குவதே பாடசாலைகளின் பிரதான பணி" என்பர். கல்வியியலாளர்கள் இப்படிக்கிற வழக்கத்தை இந்துநாதமும் ஏற்படுத்தும் எனத்திடமாக நம்பலாம். ஏனெனில், இச்சஞ்சிகை மாணவர்களாலே, அவர்களின் தேடல்கள் வாயிலாக அவர்களுக்காகவே உருவாக்கப்பட்டு வருகின்றதொன்றாகும். உயர்தர வகுப்பு மாணவர்களின் உயரிய, நேரிய சிந்தனைகள் இச்சஞ்சிகை மூலம் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. இவர்களது சிந்தனைகளுக்கு உரமூட்டும் அதிபர், பலம் சேர்க்கும் ஆசிரியர்கள், வளம் சேர்க்கும் பாடசாலையின் பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகள் என அனைவருமே பாராட்டத்தக்கவர்கள்.

யாழ்ப்பாண தீபகற்பத்தில் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டக்கூடிய பாடசாலைகளில் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியும் ஒன்றாகும். ஈழத்துக் கல்விப்பாரம்பரியத்திலும், வளர்ச்சியிலும், வளர்ச்சிக்கான பங்கிலும் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரிக்கும் பெரியதொரு பங்குண்டு. தவிர இப்பாடசாலையின் அமைவிடம், நுழைவாயில், பூந்தோட்டம், அதன் நடுவே நடுநாயகமாக வீற்றிருக்கும் கலைமகள், கட்டடங்களின் அமைவிடம் என எல்லாமே மனங்கொள்ளத்தக்கன.

இக்கல்லூரி பல் துறைகளிலும் வளர்ந்து வரும் இவ்வேளையில், இந்துநாதம் தொடர்ந்து ஒலிக்கவும், இக்கல்லூரியின் கல்விச் சாதனைகள் மேன்மையுறவும் எனது உளம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆ.ராஜேந்திரன்
வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்

சு.சுந்தரசிவம்
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,நிர்வாகம், வலிகாமம் கல்வி வலயம்
அவர்கள் வழங்கிய

# ஆசிச்செய்தி

நவீன அறிவியல் தொழில் நுட்பத்தின் ஆரோக்கியமான, அமைதியுமான வாழ்வியற் சூழலை மாசுபடுத்தி வருகின்ற இன்றைய காலகட்டத்தில் சமய, சமூகப் பண்பாட்டினை எதுவித சிதைவுகளுமின்றி பேணிப்பாதுகாக்கும் நோக்குடன் யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி சமூகத்தினரால் இரண்டாம் தடவையாக வெளியிடப்படுகின்ற இந்துநாதம் எனும் அரிய ஆன்மீக ஓசைக்கு எனது நல்லாசிகளை நல்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

நலிவான பொருளாதாரச் சூழல் வறிதான சமூகப் பின்னனியில் இப் பாடசாலையினை வளர்த்தெடுப்பதில் அதிபரும், ஆசிரியர்களும் ஆன்மீகப்பற்றுடன் அர்ப்பணிப்பான, மகத்தான சேவையை நல்கி வருகின்றனர். அவர்களது சுய மதிப்பீடு தன்னம்பிக்கை, சமூகப் பற்றுருதி ஆகிய குணாம்சங்களின் வெளிப்பாடாக இம்மலராக்கம் அமைகின்றது என்றால் மிகையாகாது.

ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சமூகப் பெரியார்கள் ஆகியோரது கருத்துக்களை உள்வாங்கி எல்லோருக்கும் ஒளி வழங்கும் கதிரவனைப் போல் சமூகத்திற்கு வழிகாட்ட வேண்டுமென இறை ஆசியை வேண்டுகின்றேன்.

சு.சுந்தரசிவம்
பிரதிக்கல்விப் பணிப்பாளர்
நிர்வாகம்,
வலிகாமம் கல்வி வலயம்



திரு.சி.கந்தசாமி
கோட்டக்கல்விப்பணிப்பாளர். சண்டிலிப்பாய்.
அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

யா/ பண்டத்தரிப்பு இந்துககல்லூரியில் உயர்தரமாணவர் மன்றத்தினால் வெளியிடப்படும் இந்துநாதம் என்ற மலர் இரண்டாவது தடவையாக வெளிவருவது வரவேற்கக் கூடிய ஒரு நிகழ்வாகும். நீண்ட வரலாற்றினையும், கல்விப் பாரம்பரியத்தினையும் கொண்ட இக்கல்லூரி யுத்தச் சூழலினால் கட்டிடங்கள் முற்றாக அழிக்கப்பட்ட நிலையிலும் இன்று புதிய கட்டிடங்களுடன் புதுப் பொலிவு கொண்டு சகல துறைகளிலும் வளர்ச்சி கண்டு வருவதைக் காணமுடிகின்றது. "இந்துநாதம்" என்ற மலர் வெளியீடு இதன் வளர்ச்சிப்பாதையில் ஒரு படிக்கல்லாகும்.


மாணவர்களது பல்துறை ஆற்றல்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கும் இன் நிகழ்விற்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்த அதிபர், ஆசிரியர்களது முயற்சி பாராட்டுக்குரியது. இந்துப்பண்பாட்டை போற்றி வளர்க்கின்ற இக்கல்லூரியின் செயற்பாடுகள் மேன்நிலைபெறவேண்டுமெனவும் இம்மலர் தொடர்ந்து வெளிவரவேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

திரு.சி.கந்தசாமி,
கோட்டக்கல்விப்பணிப்பாளர்.
சண்டிலிப்பாய்.

அன்பே சிவம்

*Aru. Thirumurugan*, B.A., Dip. IN. Ed.,
Vice Principal
Skandavarodaya College
Chunnakam, Sri Lanka

செஞ்சொற் செல்வர்
ஆறு. திருமுருகன்
28, கைலாச பிள்ளையார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.



# செஞ்சொற்செல்வரின் ஆசியுரை

பண்புடையார் பலரை உருவாக்கிய உன்னத கல்விச்சாலையே பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி சுதேசிகளே! சைவப்பண்பாட்டுடன் கூடிய கல்லூரிகளை கிராமந்தோறும் நிறுவுங்கள் என நல்லை நகர் நாவலர் பெருமான் விடுத்த அறைகூவலுக்கு மதிப்பளித்தவர்கள் பண்டத்தரிப்பு மக்கள் இப்புனித கல்லூரியின் வெளியீடான இந்து நாதத்துக்கு வாழ்த்துரை வழங்குவதில் ஆனந்தமடைகிறேன். இக் கல்லூரி வளாகத்தில் இன்று காலடி எடுத்து வைத்தவுடனேயே மனமகிழ்ச்சி ஏற்பட்டு விடுகிறது. கவினுறு காட்சியோடு பாடசாலை அழகுற மிளிர்கிறது. பாடசாலையின் பிரதான மண்டபம் அளத்தமிழ் வாசகங்களாலும் ஓவியங்களாலும் மாணவர்களை ஆற்றுப்படுத்துவதைக் காணலாம். அருமையான அதிபர் திரு.பு.ஸ்ரீ விக்கினேஸ்வரன் அவர்களின் தலைமையில் சீரிய நெறியில் பாடசாலை வீறு நடைபோடுவது பாராட்டுக்குரிய விடயமாகும். இக்கல்லூரியின் சிறப்பை ஆண்டு தோறும் ஆவணப்படுத்தும் வகையில் "இந்துநாதம்" வெளிவருவது பாராட்டுக்குரியது. எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளின் திருவருளால் கல்லூரி மேலும் மேன்மை பெற வாழ்த்தி நல்லாசி கூறி அமைகிறேன்.

"யாவர்க்குமாம் இன்னுரை தானே"

ஆறு.திருமுருகன்
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
தலைவர்
சிவபூமி அறக்கட்டளை



திரு.பு. ஶ்ரீவிக்னேஸ்வரன்
அதிபர்
யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி

அவர்கள் வழங்கிய

# அதிபரின் உள்ளத்திலிருந்து

# வாழ்த்துரை.....

பெருமைமிக்க பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியின் உயர்தர மாணவ மன்றத்தினரால் வெளிவரும் "இந்துநாதம்" சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

2008 இல் எதுவித நிதியுமின்றி இந்து நாதத்தை வெளியிட்ட உயர்தர மாணவ மன்றத்தினர் இந்துநாதம் சஞ்சிகை மூலம் கிடைத்த நிதியை வங்கியில் சேமிக்கணக்கிலிட்டு இந்துநாதம் வெளியிட ஆவணம் செய்துள்ளனர். இவ்வகையில் இவ்வாண்டு இந்துநாதம் வெளிவர அர்ப்பணிப்புடன் உழைத்த உயர்தர மாணவ மன்றத்தினரை வாழ்த்துகின்றேன். மாணவர் ஆக்கங்களை அதிகமாக கொண்டு வெளிவரும் இச்சஞ்சிகைக்கு ஆக்கங்களை வழங்கி தன் திறனை வளர்க்கின்ற மாணவர்களைப் பாராட்டுகின்றேன். இம் மாணவர்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்து நல்வழிப்படுத்திய மன்றப் பொறுப்பாசிரியர் அவர்களையும் பாராட்டுகின்றேன். தன் கடின உழைப்பால் இவ் இந்து நாதத்தை ஓங்கி ஒளிக்கவைத்த மன்றத்தலைவரையும் உளமார வாழ்த்துகின்றேன்.

இவ் இந்துநாதம் வருடாவருடம் வெளிவந்து, மாணவர் ஆற்றலை மேலும் மேலும் மேம்படுத்த எல்லாம் வல்ல ஐயனார் பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

கேடு இல் விழுச்செல்வம் கல்வி ஒருவருற்கு
மாடு அல்ல மற்றயவை.

என்பது வள்ளுவரின் நாற்பதாவது அதிகாரமாகிய கல்வியின் பத்தாவது குறள் கூறுகிறது. அதாவது ஒருவனுக்கு அழிவற்ற மேலான செல்வம் கல்வியே. அஃதொழிந்த பொன்மணி முதலியன செல்வங்களாக அத்தகைய மேலான

கல்வியை வழங்கிவரும் பண் இந்துவின் இரண்டாவது நாதத்தினை ஒலிக்கச் செய்கின்ற இம்மாணவர்களின் செயல்பாராட்டத் தக்கது. பாடவிதானம், இணைப்பாடவிதானம் முறைசாராத பாடவிதானம் போன்றவற்றினூடாக மாணவர்களிடையே தன்னம்பிக்கையை வளர்த்து அவர்கள் தமது சொந்தக் காலில் நிற்கச் செய்யும் தன்மையான கல்வியை பண்.இந்து வழங்கியுள்ளது என்பதனை இந்நூல் வெளியீடு வெளிப்படுத்துகின்றது.

அத்துடன் மாணவர்களிடையே மறைந்து கிடக்கும் எழுத்தாற்றல், உள்ளக்கிடைக்கைகள் மன உணவுர்கள், அர்ப்பணிப்பான சேவை, குழுச்செயற்பாடு தலைமைத்துவம், தொடர்பாடல் திறன் போன்ற பல்வேறு திறன்களை வெளிப்படுத்தும் நூலாக உயர்தர மாணவ மன்றத்தினர் வெளியிடுவது பாராட்டத்தக்கது.

"மீண்டும் பள்ளிக்குச் செல்லலாம் நம்மை நாம்
அங்கு காணலாம்.

என்பதையே உயர்தர மாணவ மன்றத்தினரின் இந்நூல் வெளிப்படுத்துகின்றமை பாராட்டத்தக்கது.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

திரு.பு. ஸ்ரீவிக்னேஸ்வரன்
அதிபர்
யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி

பிரதியதிபர்
சுலோசனா இராமச்சந்திரன்



அவர்கள் வழங்கிய

# பிரதி அதிபரின் உள்ளத்தில் இருந்து....

"எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்பது வள்ளுவர் வாக்கு எந்தப் பொருளைப் பற்றியும் எவரிடம் இருந்து கேட்பதனாலும் அப்பொருளினது மெய்யான தன்மைகளைக் காண்பது தான் அறிவு அந்த அறிவை அள்ளிவழங்கவென பண்டத்தரிப்பு இந்துவில் உயர்தர மாணவர் மன்றத்தின் இதயத்தில் இருந்து இந்து நாதம் ஒலிக்கின்றது.

பல்வேறு இடர்கள் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட இந்துக்கல்லூரி பல இன்னல்களை அனுபவித்தும் சளைக்காது இன்றும் புதுப்பொலிவுடன் விளங்குகின்றது என்றால் அது இக்கல்லூரி முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலைச் சமூகத்தவர்களின் அர்ப்பணிப்பான சேவையினாலாகும்.

அச்சேவையின் பிரதிபலிப்பை தம் உணர்வுகளை பல்வேறு ஆக்கங்கள் மூலம் இந்து நாதத்தின் மூலம் ஒலிக்கச்செய்கின்ற உயர்தர மாணவர் மன்றத்தின் பணி அளப்பரியது. இம் மன்றத்தினரின் இரண்டாவது முயற்சியான இந்துநாதம் உலகமெங்கும் ஒலிக்கட்டும்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

செல்வி.சுலோசனா இராமச்சந்திரன்
பிரதியதிபர்



திருமதி.ம.ராதகிருஷ்ணன்
க.பொ.த (உயர்தரம்)
பொறுப்பாசிரியர்

அவர்கள் வழங்கிய

# உயர்தர மாணவர் மன்றப் பொறுப்பாசிரியரின் உள்ளத்திலிருந்து

யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் உழைப்பினால் புதியதோர் பரிமாணமாக இந்துநாதம் இரண்டாம் இதழை வெளியிடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். மன்றத்தினதும், ஆசிரியர்களினதும் ஒன்றுபட்ட செயற்பாட்டினால் மாணவர்களின் பல்துறை திறமைகளை வெளிக்கொணரும் வகையில் சிறந்த ஆக்கங்களையும், பல விசேட அம்சங்களையும் தாங்கியதாக எமது இந்து நாதம் இதழினை நாங்கள் வெளியிடுவதை இட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இம்மலர் வெளியீட்டிற்கு உதவிகளை உவந்தளித்த பெரியோர்கள், நலன்விரும்பிகள் மற்றும் ஆலோசனைகளையும் உதவிகளையும் தந்து இந்த மலரினை உருவாக்கும் முயற்சிக்கு ஊக்கமளித்து பல்வேறு வழிகளிலும் ஒத்தாசை புரிந்த அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள், நிதியுதவி அளித்த உள்ளங்கள் அனைவருக்கும் மற்றும் நேர்த்தியான முறையில் அச்சிட்டுத்தந்த சாய்ராம் அச்சகத்திற்கும் நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் இவ் இதழ் தொடர்ந்து வெளிவரவும் மாணவர்களின் பணி சிறக்கவும் என் வாழ்த்துக்கள்.

திருமதி.ம.ராதகிருஷ்ணன்
க.பொ.த (உயர்தரம்)
பொறுப்பாசிரியர்



உயர்தர மாணவர் மன்ற தலைவர்
செல்வன். துரைராசா தனஞ்சயன்

அவர்கள் வழங்கிய

# தலைமை உரை
# தலைவரின் உள்ளத்தில் இருந்து
# இந்துவின் ஒலி

இந்து சமுத்திரத்தின் முத்து என்று அழைக்கப்படும் அழகிய இலங்கையின் சொத்தாம் எம் யாழ்நகர். இந்த வளமிகு யாழ்நகர் கண்டெடுத்த பழைமையும், புதுமையும் மிகுந்த பல பாடசாலைகளுள் எமது பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரிக்கு ஒரு பெரும் இடம் உண்டு என்பதையிட்டு நாம் அனைவரும் பெருமை அடைகின்றோம்.

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி எனும் பெயரிலேயே ஒருநாதம் இது தான் எம் இந்துவின் இந்துநாதம் எம் இந்துகல்லூரி பழமையில் பல இன்னலை எதிர் கொண்டாலும் புதுமையில் பல சாதனை படைத்து வெற்றிநடை போடுகிறது. இதற்கு எம் கல்லூரி அன்னையின் கருணையே காரணம்.

எம் கல்லூரி அன்னையின் முத்து எம் அனைவரின் சொத்து எம் கல்லூரி அதிபர் விக்கினங்களை தீர்க்கும் பு.ஸ்ரீ விக்னேஸ்வரன் இவரது ஆசியுடன் இவ் இந்துநாதம் எனும் நூலை வெளியிடுவதில் நாம் பெருமை அடைகிறோம். இந்துநாதம் எனும் நூலை வெளியிடுவதற்கு எமக்கு சகல உதவிகளும் தந்துதவிய ஆசிரியர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும் உயர்தர மாணவர்களுக்கும் எமக்கு ஆக்கம் தந்துதவிய அனைவருக்கும், அடுத்ததாக, இம்மலரினை சிறந்த முறையில் அழகாகவும், குறுகிய காலத்திலும் அச்சிட்டு உதவிய சாய்ராம் பிறிண்டேர்சினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை கூறிக்கொள்கின்றேன்.

நன்றி

உயர்தர மாணவர் மன்ற தலைவர்
செல்வன்.து. தனஞ்சயன்



**செயலாளர்**

**உயர்தர மாணவி செல்வி. ஸ்ராலினி இராசேந்திரம்**

**அவர்கள் வழங்கிய**

# செயலாளரின் உள்ளத்திலிருந்து

இந்து சமுத்திரத்தின் முத்து எனும் இலங்கையின் வடக்கே யாழ்நகர் என்னும் பெருநகர் இதில் வளர்மிகு வலிகாமத்தில் பழமை மிகு பண்டத்தரிப்பில் பெருமை மிகு யா/பண்டத்தரிப்பு இந்துவில் கல்வி கற்கும் உயர்தர மாணவர்களாகிய நாம் முதலாவது வெளியிடப்பட்ட இந்துநாதம் நூலினை தொடர்ந்து இரண்டாவது தடவையாகவும், இந்துநாதம் நூலினை வெளியிடுவதில் நாம் பெருமையடைகின்றோம். இச் செயற்பாடானது மாணவர்களிடையே "இலை மறை காயாக" மறைந்திருக்கும் சுய ஆக்கத்தன்மைகளையும் நூலினை வெளியிடுவதற்க்கும் முன்நின்று செயற்படும் ஆற்றல்களையும் வெளிப்படுத்துவதற்கு ஒரு நல்ல களமாக அமைகின்றது.

கல்லைக்கண்ட சிற்பியும் மண்ணைக் கண்ட குயவனும் அவற்றை வைத்து எவ்வாறு வடிவம் மிக்க பொருட்கள் ஆக்குகின்றார்களோ அதேபோன்றே செயற்கையாக உருவாகிய அநாகத நாதம் போன்று எமக்கு கிடைக்கப்பெற்ற இந்துவின் நன்மை தரும் ஆக்கங்களை முன்மாதிரியாகக் கொண்டு "இந்துநாதம்" என்னும் இந்நூலினை வெளியிடுகின்றோம்"

மேலும் இந்நூல் உருவாக்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தவர்கள், நலன்விரும்பிகள், பண உதவி செய்தோர் அனைவரையும் இந்நேரம் வணங்குகின்றோம். அத்துடன் இவ்நாத உருவாக்கத்திற்கு விளம்பரங்களைத் தந்துதவியவர்களுக்கும், ஆக்கங்களை தந்துதவியவர்களுக்கும் மேலும் இந்நூலினை கணனிப்பதிப்பும் அச்சுப்பதிப்பும் செய்த "சாய்ராம் பிறிண்டேர்ஸ்" நிறுவனத்திற்கும் இத்தால் சிரம்தாழ்த்தி நன்றி கூறுகின்றேன். தொடர்ந்து 'இவ் இந்துநாதம் வருடாவருடம் ஒலிக்க வேண்டும் என்று ஐயனார் பெருமானின் அருளைவேண்டி என்னுரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

செயலாளர்

செல்வி.இ.ஸ்ராலினி



**பத்திரிகை ஆசிரியர்**
**உயர்தர மாணவி செல்வி.ந.வனிதா**

# பத்திரிகை ஆசிரியரின் உள்ளத்தில் இருந்து........

யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியின் உயர்தர மாணவர்களின் இந்துநாதம்-2 சஞ்சிகையின் வெளியீடு இவ் வருடமும் வெளிவருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இச் சஞ்சிகையானது பாடசாலை வாழ்கையின் இறுதிப் பருவ மாணவர்களால் வெளியிடப்பட்டு வருகின்றது. அதேபோல இவ்வருடமும் இந்நூல் உங்கள் கைகளில் தவழ்கின்றது.

காலங்கள் மாறினாலும் காட்சிகள் மாறினாலும் எம் கல்லூரி அன்னையின் மங்காப்புகழை என்றென்றும் இந்த இந்துநாதம் பறைசாற்றி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

காலத்தின் தேவைக்கேற்ப தகுதி தரம்வாய்ந்த ஆக்கங்களைத் தாங்கி இந்துநாதம் எனும் சஞ்சிகை வெளி வருகின்றது.

இம் மலர் வெளியீட்டுக்கான ஆசிகள், வாழ்த்துக்கள் வழங்கி வாழ்த்தியவர்களுக்கும் ஆக்கங்களை வழங்கி சிறப்பித்த பல்கலைக்கழக அறிஞர்களுக்கும், மாணவர்களுக்கும் மற்றும் விளம்பரங்களைத் தந்து ஆதரவுக்கரம் நீட்டியவர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன். மேலும் இம் மலரை உரிய காலத்தில் அழகுற வெளிவருவதற்கு அச்சிட்டுத் தந்த சாய்ராம் பிறிண்டேர்ஸ் நிறுவனத்திற்கும், தோளோடு தோள்நின்று உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் மலர்குழு சார்பாகவும், கல்லூரி சார்பாகவும் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

பத்திரிகை ஆசிரியர்
செல்வி. ந.வனிதா
உயர்தர மாணவி

# முன்னுரை

சிவபூமி என அழைக்கப்படும் ஈழத்திருநாட்டில் கல்விச்சுடர் ஏற்றும் பாடசாலைகள் பலவுண்டு. அதிலும் புண்ணியபூமி என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணத்தின் கண்ணே பண்டத்தரிப்பு என்னும் ஊரின் கண் திகழும் யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தினால் இந்து நாதம் எனும் நூல் வெளியிடப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தின் கல்வித்துறைசார் அறிஞர் பலருடைய கட்டுரைகளையும், மாணவர்களுடைய ஆக்கங்களையும் தாங்கி இந்நூல் வெளிவருகின்றது. மேலும் இந்நூல் இன்றைய மாணவர்களாய், நாளைய வித்தகர்களாய் உருவாக இருக்கும் மாணவர்களின் ஆக்கங்களும் இந்நூலிற்கு அணி சேர்க்கின்றன.

வித்தாரமாய் விண் மட்டும் விளங்கி தண்ணமுதால் தரணியின் துயர் துடைக்கவிருக்கும் மாணவர்களுக்கு இது ஓர் தேன் அமுதம். அவர்களுக்குப் பயன்படவல்ல நற் கருத்துக்கள் பல இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

மேலும் 2011/2012 மாணவர்களாகிய நாம் இந்நூலை வெளியிடுவதற்கு அத்திவாரமிட்டு அதனைச் செயல் வடிவில் நிறைவேற்றிய ஆசியர் திருமதி.த.தனபாலன் அவர்களுக்கும், அவருக்கு ஆசிகூறி இந்நூலின் பிறப்புக்கும் வழியமைத்த அதிபர் அவர்களுக்கும், உயர்தர பொறுப்பாசிரியர் திருமதி.ம.ராதாகிருஸ்ணன் அவர்களுக்கும், கட்டுரை தந்தோர், விளம்பரம் செய்தோர், நிதி வழங்கியோருக்கும் எம் நன்றிகள்.

இந்துநாதம் இனிவரும் காலங்களில் ஓங்கி ஒலிக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

நன்றி

இப்படிக்கு
மலர் வெளியீட்டுக்குழு



கல்லூரி அதிபர் திரு. பு.ஸ்ரீவிக்னேஸ்வரன்



# பாடசாலை முகாமைத்துவம்
# School Management

பேராசிரியர்
மா.சின்னத்தம்பி

# ஆசிரியர் வகிபாகம்
# The role of the teacher

## அறிமுகம்

பாடசாலைகள் சமூகத்திற்காக சமூக அங்கீகாரத்துடன் இயங்கும் நிறுவனங்கள் இலங்கையின் கல்வி முறைமையில் பாடசாலை முறைமை அடிப்படையானதாகவும் மிகப் பெரியதாகவும் அரச முறைமைக்குட்பட்டதாகவும் விளங்குகின்றது. இதனால் அரசின் வரிப்பணத்தில் ஒரு பகுதியைப் பெற்று அரச சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைவாக கண்காணிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றது. தேசிய கலைத்திட்டங்களுக்கும், மதிப்பீட்டு முறைகளுக்கும் அமைவாக பிள்ளைகளின் அறிவு மற்றும் திறன் மட்டங்கள் சான்றிதழ்ப்படுத்தப்படுகின்றன. இச்சான்றிதழ்களே பிள்ளைகளின் கல்வித்தகைமையை உறுதிப்படுத்துகின்றன. இதனடிப்படையில் உயர்கல்வி, தொழில்வாய்ப்பு, சமூக அனுகூலங்கள் என்பன பிள்ளைகளுக்கும், இளைஞர்களுக்கும் பங்கிடப்படுகின்றன. இதனால் இலங்கையின் கல்விமுறை சான்றிதழ்ப்படுத்தும் முறைமைதான்.

ஆனால் இந்த தேசிய செயன்முறையை பாடசாலைகள் நுண்பக அணுகுமுறையின்படியே நிறைவேற்றி வருகின்றன. இதற்கு ஏற்ற ஒழுங்கமைப்பாக பாடசாலைகளில் வகுப்பறைகள் விளங்குகின்றன. இத்தகைய வகுப்பறைகளின் விளைதிறன் மிக்க முகாமைத்துவம் தான் கீழிருந்து மேல்நோக்கிய முறையில் தேசிய பாடசாலை முறைமையையும் அதற்கும் அப்பால் தேசிய கல்வி முறைமையையும் நிர்ணயம் செய்து வருகின்றது.

இந்த பின்னணியில் இக்கட்டுரை வகுப்பறை முகாமைத்துவம் அதில் ஆசிரியர்களின் வகிபாகம் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது.

## வகுப்பறை என்ற செயலமைப்பு

பல்வேறு கல்வியியல் ஆய்வாளர்கள் வகுப்பறைகளின் முக்கியத்துவம் முகாமைத்துவ செயலாற்றம் தொடர்பாக விளக்கங்கள் அளித்துள்ளனர்.

வோக்கர் (1996) மற்றும் இணைந்த பலரும் பாடசாலைச் செயலமைப்பு பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்.

"தெளிவான எதிர்பார்க்கைகளையும், விதிகளையும் உருவாக்குவதன் மூலமும், ஆசிரியர்களின் புலமைசார் மற்றும் சமூக நடத்தைகளை சீரமைப்பதன் மூலமும், பாடசாலை பதவியர்களின் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதன் மூலமும் ஏராளமான மாணவர்களை உள்வாங்கிக் கொள்வதற்கான அமைப்பாக பாடசாலை முறைமை விளங்குகிறது."

கற்கும் வாய்ப்பையும், சூழலையும் வளங்களையும், வசதிகளையும் சமுதாய பிள்ளைகளுக்கு வழங்குவதற்கான அமைப்பாகவே பாடசாலை முறைமை விளங்குகின்றது. ஆனால் குடும்பங்களின் தன்மை, பண்பாடு, நடத்தைகள் பல்வகைப்பட்டவை. அதேபோல் சமூகங்களின் அமைப்பும், போக்கும், செயற்பாடும், வளர்ச்சியும் ஒத்ததன்மை கொண்டவையுமல்ல. இந்த நிலையில் சமூகத்தில் உள்ள பல்வகைமை கொண்ட குடும்பங்களிலிருந்து வரும் வேறுபாடுகள் நிறைந்த பிள்ளைகளை ஒழுங்குபடுத்தி, ஒருமுகப்படுத்தி 13 வருடங்கள் கற்பிப்பது சிரமமானது, சவால்கள் நிறைந்தது. இதனைச் சிறப்பாகச் செய்வதற்கு ஒரு உப செயலமைப்பு (Sub system) பாடசாலைகளுக்கு தேவைப்படுகின்றது. அவ்வாறு உருவாக்கப் பட்டவைதான் பாடசாலைகளின் வகுப்பறைகள்.

வோல்டர் டொயல் Waltor Doyle (1986) வகுப்பறைகள் பற்றி இரு அம்சங்கள் முக்கியமானவை என்று வற்புறுத்துகின்றார்.

- கற்பித்தல் - அதற்கான ஒழுங்குமுறை
- ஒழுங்கு - அதற்கான ஏற்பாடுகள்

கற்பித்தல் ஏதோ ஒரு வகையில் வகுப்பறைகளில் இடம் பெற முடியும். மாணவர்களும் அதில் ஈடுபாடு காட்ட இடமுண்டு.

எனினும் கற்பித்தலுக்கு சார்பான மற்றும் ஊக்கமளிக்கக்கூடிய நிலைமைகளை வகுப்பறை ஒழுங்கு (Class room orders) முறைதான் தோற்றுவிக்க வேண்டும். ஒழுங்கு நிலை நிறுத்தப்படாவிடில் ஆசிரியரால் கற்பித்தலை வினைத்திறனுடன் மேற்கொள்ள முடியாது. ஏனெனில் பிள்ளைகளின் ஒழுங்கு முறையுடன் கற்றல் இணைந்துள்ளது. உண்மையில் பின்வரும் மூன்று அம்சங்களில் ஆசிரியர்கள் தமது உபாயங்களைக் கையாள்வதே வகுப்பறை முகாமைத்துவம் என டொயல் விளக்குகின்றார்.

1. வகுப்பில் ஒழுங்குமுறையை மேம்படுத்தல்
2. கற்றலில் மாணவர் ஈடுபடுமாறு செய்தல்
3. கற்கும் ஊக்கத்தை உருவாக்கிக் கற்பித்தல்.

வகுப்பறையில் உருவாக்கப்படும் ஒழுங்கு என்பதை ஒழுக்கத்தை உருவாக்குவதற்கான முன்னாரம்ப செயல்களாகவே காணப்படுகின்றன. வகுப்பறை ஒழுக்கம் என்பது எல்லா மாணவரும் ஏற்புடைத்தான நடத்தைக் கோலங்களை வெளிப்படுத்துவது தான். இது வாழ்நாள் முழுவதும் தொடர்வதற்கான வகையில் வகுப்பறை அதனை உருவாக்குதல் வேண்டும்.

மாணவர்களது ஒழுக்கு மற்றும் ஒழுக்கம் இணைந்த வகையில் மேம்படும் போது மாணவ- மாணவர் ஒத்துழைப்பும் மாணவர்- ஆசிரியர் ஒத்துழைப்பும் வளர்ச்சி பெறவேண்டும்.

இவற்றிலிருந்து விலகி மாணவர் செயற்படும் போது முரண் நடத்தை (Mis behaviors) ஏற்பட்டுவிடுகிறது. இது வகுப்பறை முகாமைத்துவத்திற்கான தடைகளை உருவாக்கி விடுகின்றது. இவை எல்லாம்- ஒழுங்கு- ஒழுக்கம்- ஒத்துழைப்பு முரண் நடத்தை என்பன எப்போதும் மிகவும் கடினமானமுறையில், இறுக்கமாக பின்பற்றப்பட வேண்டியதில்லை. வகுப்பறை மதிப்பீடுகள், சோதனைகளின் போது வேண்டுமானால் அவற்றைக் கடுமையான முறையில் பின்பற்றமுடியும்.

வகுப்பறை நிலைமைகளைக் குழப்பாமலும் தடைகளையும், விரயங்களையும், உருவாக்காமலும் தமது எல்லைகளை உணர்ந்து மாணவர்கள் இயல்பாக நடந்து கொள்ளுமாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் அது நல்ல வகுப்பறையாக இனங்காணப்படும். இறுகிய வகுப்பறைகளை உருவாக்குதல் ஆகாது.

வோக்கர் (Walker) ஹோனர் (Horner) சுகை (Sugai) புள்ளீஸ் (Bullis) ஸ்பராக் (Sprague) பிறிக்கர் (Bricker) கஃப்மன் (Kaufman) போன்றோர் மேற்படி விடயங்கள் தொடர்பாக பல ஆய்வுகளை 1996ம் ஆண்டளவில் மேற்கொண்டிருந்தனர்.

பாடசாலைகளின் பரவலான கொள்கைகளையும் செயல் ஒழுங்குகளையும் கல்விசார் செயலாற்றங்கள் மூலமாகவும், மாணவர் சமூக நடத்தைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலமும் நிறைவேற்றுவதற்கான மிகச் சிறந்த செயலமைப்பாக வகுப்பறைகளே விளங்குகின்றன. இதனால் வகுப்பறைகளை பாடசாலைகளின் செயலாற்ற தரங்களையும் செயலாற்ற மட்டங்களையும் நிர்ணயம் செய்கின்றன. இதனால் வகுப்பறைகளின் தலைவர்களான ஆசிரியர்கள் வகுப்பறைகளின் முகாமையாளர் களாகவும் சிறப்பாகச் செயற்படவேண்டியது அவசியம்.

***வகுப்பறைகளின் உட்சேர்மானங்கள்***

வகுப்பறைகளின் போதனைக்கான தொழிற்படும் கூறுகளாக இருத்தல் வேண்டும். இதனால் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் ஒரு வகுப்பறையின் மூலக்கூறுகளை தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டியுள்ளது. அவை

1. கட்டமைப்புச் செய்யப்பட்ட சூழல்
   - நாளாந்த நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு மாணவர் பார்வைக்கு வைக்கப்படல்
   - மாணவரிடையிலான இடைவினையுறவையும், நகர்வுகளையும் தடைப்படுத்தாத வகையிலான தளபாட ஒழுங்கமைப்பு.

2. ஊக்கம் நிறைந்த மேற்பார்வையும் மாணவர் ஈடுபடுத்தலும்
   - மாணவர்களை ஆசிரியர் உற்றுநோக்கலும் மாணவர் எதிர்பாராத வகையில் நடந்து செல்லுதலும், நடத்தையைக் கண்காணித்தலும்.
   - ஆசிரியர் இயன்றளவு மாணவர்- ஆசிரியர் இடைவினையுறவை நேர்முறையில் முன்னேற்றுதல்.
   - மாணவர் பிரதி பலிப்புக்களுக்கு இயன்றளவு முன்னுரிமையும் அதிகரித்த வாய்ப்புக்களையும் வழங்குதல்.
   - மாணவர்களைக் காற்றில் ஈடுபடுத்துவதற்கு இயன்றளவு பன்முகப்பட்ட அவதானிப்பு முறைகளை ஆசிரியர் கையாளுதல்.

3. பாடசாலை மட்ட நடத்தைசார் எதிர்பார்க்கை

- நேர்முறையிலான, குறித்துரைக்கப்பட்ட நடத்தைசார் எதிர்பார்க்கைகள் சிலவற்றை மாணவர் அறியும்படி செய்தல்.
- ஒழுங்குமுறையின்படி பாடங்களை வகுப்பறையில் கற்பித்தல்.
- சரியான முறையில் மீளவலியுறுத்தல்.
- சிறப்பான முறைகளில் கண்காணித்தல்.

04. வகுப்பறை விதிமுறைகள்

- பாடசாலைமட்ட எதிர்பார்க்கைகளுக்கு இட்டுச் செல்லும் வகையிலான நடத்தைக் கோலங்களை மாணவர்களிடம் உருவாக்குவதற்கு உதவும் வகையில் சில சாதகமான நடத்தை விதிகளை ஏற்படுத்தல்.
- விதிமுறைகள் மாணவர் பார்வைக்குரியதாக வைக்கப்படல் வேண்டும்.
- நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட முறைகள் படிமுறைகளின்படி கற்பித்தல்.
- வகுப்பு மட்டங்களுக்கு ஏற்றமுறையில் மீளவலியுறுத்தல்
- நடுநிலையுடன், தொடர்ச்சியாக மாணவர்களது நடத்தைகளைக் கண்காணித்தல்.

05. வகுப்பறை நாளாந்த செயற்பாடுகள்

- நாளாந்த செயற்பாடுகள் பற்றிய விடயங்களை ஒழுங்கு முறையில் போதித்தல்.
- சிறப்பாக மீளவலியுறுத்தல்.
- வகுப்பறையில் நிகழும் முறைகளின்படி கண்காணித்தல்.

06. பொருத்தமான நடத்தையை ஊக்குவித்தல்.

- மாணவர் குழு மட்டத்தில் கையாளவேண்டிய பொருத்தமான நடத்தைக்கான செயல் ஒழுங்குகளை ஏற்படுத்தல்.
- தனிப்பட்ட மாணவர்கள் ஒவ்வொருவரும் கையாளவேண்டிய செயல் ஒழுங்குகளை வலியுறுதத்தல்.
- வகுப்பறைச் சூழ்நிலைக்குள் நிகழும் பொருத்தமான நடத்தை தொடர்பாக தரவுகள், தகவல்கள் சேகரித்தல்.

07. நடத்தைக் கட்டுப்பாட்டு உபாயங்கள்

- பொருத்தக்கேடான நடத்தைகளைத் தடுப்பதற்கான உபாயங்களைக் கையாளுதல்.
- தவறான நடத்தைகளை திருத்துவதற்கு உதவும் பல்வகைப்பட்ட செயல் ஒழுங்குகளைக் கையாளுதல்.
- பதில் நடத்தைகளைக் கற்பிப்பதற்கும், மீளக்கற்பிப்பதற்கும் பயன்படுத்தக்கூடிய செயல் ஒழுங்குகளைக் கையாளுதல்.
- பல்வேறு மாதிரியிலான மீள வலியுறுத்தல் உபாயங்களைப் பயன்படுத்தல்.
- நேர் விளைவுகளை உருவாக்குதற்கான பயன்விளைவுமிக்க முறைகளையும் பயன்படுத்தல்.

எல்லா ஆசிரியர்களும் மேற்குறிப்பிட்ட எல்லா மூலக்கூறுகள் பற்றிய அறிவையும், திறன்களையும், மனப்பான்மையையும் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

***வகுப்பறையை முகாமை செய்தல்***

மாணவர்கள் பாதிப்பை உண்டாக்கும் வகையில் கற்பித்தல் செயன்முறையின் போது நடந்து கொள்ளும் நிலையிலும் வகுப்பறையில் பாடங்களைச் சுமூகமாக கற்பிப்பதற்கான படிமுறைச் செயல்களை வகுப்பறை முகாமைத்துவம் என்று ஆசிரியர்கள் விபரிப்பதுண்டு. தடைப்படைத்தும், செயல்களிருப்பின் அவற்றைக் கட்டுப்படுத்துவதென இது குறிப்பிடுகின்றது. கட்டுப்படுத்தல் பற்றிய பிரச்சினைகளினாலேயே அதிக எண்ணிக்கையினரான ஆசிரியர்கள் கற்பித்தல் தொழிலிருந்து விலகிவிடவும் விரும்புவதுண்டு. ஆகவே அதிக களைப்பையும், சலிப்பையும் ஏற்படுத்துவதாகவும் பல ஆசிரியர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். ஐக்கிய அமெரிக்காவின் தேசிய கல்விச் சங்கத்தைச் சேர்ந்த 36 சத வீதமான ஆசிரியர்கள் இத்தகைய கருத்தைத் தெரிவித்து உள்ளனர்.

மொஸ்கோ விட்ஸ் மற்றும் ஹய்மன் (Moskowitz & Hayman: 1976) கருத்துப்படி ஒருமுறை கட்டுப்பாட்டை ஆசிரியர்கள் இழந்தால் பின்னர் மீளவும் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவது கடினம் என்பதை வலியுறுத்தினர்.

வகுப்பறைகளின் படிப்பு தொடர்பான ஈடுபடுதல் குறைவாக காணப்படும் நிலைமைகளை மதிப்பிடும் போது அங்கெல்லாம் சரியான மாணவர் நடத்தையை ஏற்படுத்துவதற்கு ஆசிரியர்கள் குறைவான நேரத்தை செலவிட்டிருப்பதாக பேர்லினர் (Berliner: 1988) புறொபி Brophy and Good 1986) மற்றும் குட் போன்றோர் வலியுறுத்தியுள்ளனர்.

இணக்கமான கற்றல் நிலைமைகளும் நடத்தைகள் மற்றும் புலமைசார் எதிர்பார்க்கைகள் தொடர்பாக தெளிவான தொடர்பாடல் காணப்படும் போது விளைதிறன் மிக்க வகுப்பறை முகாமைத்துவம் காணப்படுவதாக மாணவர்கள் நம்புகின்றனர் என்பது அலனின் (Allen:1986) கருத்தாகவுள்ளது.

வகுப்பறை முகாமைத்துவம் என்பது ஊக்கப்படுத்தல், ஒழுங்கு, மரியாதைப்பண்பு என்பவற்றுடன் நெருக்கமாக தொடர்புபடுகின்றது. கற்பித்தல் முறையியல் தொடர்பாக ஆசிரியர்களிடையே ஒத்த கருத்துக்கள் நிலவுவதில்லை. கல்வி உளவியல் தொடர்பான ஆசிரியர்களின் அணுகுமுறை, நம்பிக்கை என்பவற்றைப் பொறுத்து முறையியல் பற்றிய தர நிலைகள் வேறுபடுகின்றன.

மரபுவழியான வகுப்பறைகளில் நடத்தைகளை ஒழுங்குபடுத்தல் என்பது அதிக கவன ஈர்ப்புக்குரியதாக எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று வகுப்பறை விதிமுறைகளை வலியுறுத்துவதிலேயே அதிக கவனம் செலுத்தப்படுவதாகவும் பல ஆய்வாளர்கள் விளக்கமளித்துள்ளனர். தற்போதெல்லாம் வகுப்பறை விதிமுறைகளை வலியுறுத்துவதால் மாத்திரம் வகுப்பறைகளில் ஆசிரியர்கள் வெற்றி பெறமுடியாது என்றும் அதற்குப் பதிலாக மாணவர்கள் வெற்றி பெறும் வகையில் ஆசிரியர்கள் அவர்களுக்கு வழிகாட்டுவதும், அவர்களது முயற்சியில் நம்பியிருக்கச் செய்வதும் அதற்கேற்ற வகுப்பறைச் சூழலை உருவாக்குவதும் தான் வகுப்பறை வெற்றிக்கான வழி என்றும் வற்புறுத்தப்படுகின்றது.

***வகுப்பறையும் நேர முகாமைத்துவமும்***

ஆசிரியர்கள் வகுப்பறை முகாமைத்துவம் பற்றிச் சிந்திக்கும் போது நேரத்தை முகாமை செய்வது தொடர்பாக அதிக அக்கறையை வெளிப்படுத்த வேண்டும்.

கோச்சக் மற்றும் எகன் (Kauchak and Eggen : 2008) இது பற்றி மிக விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

வகுப்பறை முகாமைத்துவம் வகுப்பில் ஒழுங்குமுறையை நிலை நிறுத்துவதில் பெரிதும் தங்கியிருப்பதில்லை. பதிலாக மாணவர் கற்பதை உத்தம நிலைக்கு உயர்த்துவதிலேயே தங்கியுள்ளது. இவை தொடர்பாக பின்வரும் நான்கு அம்சங்கள் முக்கியமானவை.

1. நேர ஒதுக்கீடு

வகுப்பறைகளில் கற்பித்தல், கற்றல், அறிவுறுத்தல் வழங்குதல் மாணவர் வரவினைப் பதிதல் போன்ற எல்லா வேலைகளுக்கும் மொத்தமாக ஒதுக்கப்படும் நேரம் மொத்த நேரம் (Total time) எனப்படுகின்றது.

பாடசாலைகளில் இது 40 நிமிடங்களாகவும் தனியார் கல்வி நிலையங்களில் 60 நிமிடங்களாகவும் காணப்படுகின்றன.

2. போதனை நேரம்

மாணவர் வரவுப்பதிவு, அறிவுறுத்தல்கள் வழங்குதல் என்பன தவிர்ந்த மிகுதி நேரத்தை இது குறிப்பிடுகின்றது. வகுப்பில் உண்மையான கற்பித்தலும், கற்றலும் நிகழும் நேரமாக இதுவே விளங்குகின்றது. இதில் அதிகளவு நேரம் செலவிடும் போது தான் அதிக பெறுபேறு கிடைக்கின்றது. இதனை தெளிவாக ஆசிரியர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

3. ஈடுபடுதலுக்கான நேரம்

மாணவர்கள் வகுப்பறையில் பல மாதிரியான பணிகளில் பங்கேற்கவேண்டும். இவை மாணவரது கற்றல் தொடர்பான பணிகளாக காணப்படும் கலந்துரையாடல், குறிப்பெடுத்தல், வினாக்கள் கேட்டல், வேலைப்பட்டியல் களைப்பூர்த்தி செய்தல், செயல்முறை விளக்கங்களில் ஈடுபடுதல் போன்றன இத்தகையனவாகும். கற்றலுக்கான உபகரணங்களைத் தயார் செய்தல், குழுவேலைகளைச் சமர்ப்பித்தல் போன்றவற்றிலும் ஈடுபடுதற்கு போதிய நேரம் வழங்கப்படுதல் அவசியம்.

பாடசாலைகளில் 5E மாதிரிகையிலான கற்பித்தலில் இத்தகைய தேவைக்கான நேர ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் தனியார் கல்வி நிறுவனங்களில் பெரிதும் செவி மடுப்போராக மாத்திரமே மாணவர்கள் செயற்படுகின்றனர். இதனால் போலியானதும் ஆசிரியர் மேலாதிக்கத்துக்கு உட்பட்டதுமான கற்பித்தலே வெற்றிகரமாக நிகழ்த்தப்படுகின்றது.

4. பாடங்களைக் கற்பதற்கான நேரம்

வகுப்பறையில் கற்றலில் பங்கேற்பதற்கும், வெற்றிகரமாக கற்பதற்கும் செலவிடப்படுகின்ற நேரத்தை இது குறிப்பிடுகின்றது. சிறப்பான வகுப்பறை முகாமைத்துவம் இதற்கான நேரத்தை இயன்றளவு அதிகரிப்பதாக காணப்படும்.

தனியார் கல்வி நிறுவனங்களில் இத்தகைய நேரத்தை தனியாக பிரித்துக் காணமுடியாது. மேசை, கதிரை பிணைப்புடன் ஆசிரியரின் வெளிப்பாட்டை அவதானிப்பதாக மாத்திரமே அங்கு கற்பதற்கான நேரம் செலவிடப்படுகின்றது. இதனால் மாணவர்களைப்படைதல் துரிதமடைவதை அவதானிக்கமுடியும்.

ஒவ்வொரு ஆசிரியரும் இதனை விளங்கிக் கொண்டு வினைதிறன் மிக்க வகையில் நேர ஒதுக்கீட்டை மேற்கொள்வதும் அவசியம்.

*வகுப்பறை அணுகுமுறை*

முகாமைத்துவம் பற்றிய எண்ணக்கரு நீண்டகாலமாகவே ஒழுங்கு பற்றியும் மதுப்புறுதி பற்றியும் வலியுறுத்தி வருகின்றது. கௌரவத்துடனான ஒழுங்கு முறையின் முக்கியத்துவம் பற்றி ரிச்சட் கார்வினும் (Richard Carwin) அலன் மெண்டலரும் (Allen Mendler) 12 நாடுகளின் அனுபவங்களினடிப்படையில் தெளிவுபடுத்தியுள்ளனர்.

நெகிழ்வுடைய அணுகுமுறை மூலம் இதனைச் சிறப்பாக ஏற்படுத்த முடியும். மாணவரிடம் பொறுப்புணர்வை வளர்த்தல் முக்கியமாகிறது. சிந்தித்தல், ஒத்துழைத்தல், பரஸ்பரம் மரியாதை வழங்குதல், முடிவுகளை மேற்கொள்வதில் பங்குபற்றல் தொடர்பாக பொறுப்புணர்வுடனான மாணவர் நடத்தையை வலியுறுத்துவதில் ஆசிரியர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

*கற்பித்தலுக்கான துணை*

வகுப்பறை முகாமைத்துவத்தை வினைத்திறனும், விளைதிறனும் மிக்க கற்பித்தலுக்கான துணையாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி ஆசிரியர்கள் அதிக அக்கறை கொள்ளவேண்டும். அதிகார மேலாண்மையை வெளிப்படுத்துமிடமாக வகுப்பறை முகாமைத்துவத்தை ஆசிரியர்கள் பயன்படுத்த முயற்சித்தலாகாது. பிரட் ஜோன்ஸ் (Fred Jones) இது பற்றி நிறையவே எழுதியுள்ளார்.

*நேர்முறையிலான வகுப்பறை*
(Positive Classroom)

ஆசிரியர்கள் சுமுகமான வகுப்பறை நிலைமையை ஏற்படுத்த வேண்டும். மாணவர் தொடர்பாக ஆசிரியர்கள் எவ்வாறு கருத்துருவாக்கம் செய்து கொள்கின்றனர் என்பது மிகவும் முக்கியமானதாகும். இதில் நான்கு விடயங்களில் ஆசிரியர்கள் அக்கறை கொள்ளவேண்டும்.

1. மானசீக அணுகுமுறை

மாணவர்களை எப்படி ஆசிரியர்கள் நோக்குகின்றனர் என்பது இதுவாகும்.

உதாரணமாக:- படிக்க மாட்டார்கள்.
திறமையான மாணவர்கள்
படிப்பு தேவையில்லை
இவர்களுக்கு படிப்பு கட்டாயம்

என்பன போன்ற கண்ணோட்டங்களை இது குறிப்பிடுகின்றது.

2. பௌதிகவள அணுகுமுறை

வகுப்பறை மாதிரி, தளபாடம், இடவசதி என்பன தொடர்பாக எத்தகைய ஒழுங்கு முறையை உருவாக்குவதென்ற எண்ணம் அல்லது சிந்தனை முக்கியமானது. அதிக வசதிகளை வழங்கவேண்டும் என்ற எண்ணம் முக்கியமானது.

3. போதனை பற்றிய அணுகுமுறை

பாட உள்ளடக்கங்களை எவ்வாறு எவ்வாறு திறமையாக கற்பிப்பதென்ற ஈடுபாடும், எண்ணமும், செயலும் முக்கியமானவையாகும்.

மாணவர் சார்பான போதனை, நிலமை சார்பான போதனை, பாட உள்ளடக்கம் சார்பான போதனை என்பவற்றைக் கவனமாக வடிவமைத்துச் செயற்படல்வேண்டும்.

4. முகாமைத்துவ அணுகுமுறை

மாணவரது செயல்கள், நடத்தைக் கோலங்கள் தொடர்பாக ஆசிரியர்களின் கண்ணோட்டம் என்பது முக்கியமானது. மாணவர்கள் இயல்பாகவே நல்லவர்கள் தான் என்ற நேர்முறை மனப்பாங்கை வளர்த்துக் கொள்ளும் போது ஆசிரியர்களின் வகுப்பறை முகாமைத்துவம் தரமானதாகவும், விளைதிறன் மிக்கதாகவும் அமைகின்றது.

இவை எல்லாம் ஆசிரியர்கள் சார்பாக முக்கியமானவையே.

✎ உறுதியான ஒழுக்கமுடைமை

வகுப்பறையில் எல்லா மாணவரும் எப்போதும் ஒழுக்கமும், ஒழுங்கு ஒன்றிணைந்த வகையில் நடந்து கொள்ளவேண்டும் என்பதை ஆசிரியர்கள் எப்போதும் வலியுறுத்திய வண்ணம் இருத்தல்வேண்டும்.

***வகுப்பறை மட்டத்திலான முகாமை நுட்பங்கள்***

வகுப்பறையில் ஒழுங்கான மாணவர் நடத்தையை வலியுறுத்து வதற்கும், கற்பதற்கான மிகச் சிறந்த சூழலை பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்துவதற்கும், போதனை விளைதிறனுடன் நடாத்துவதற்கு பல்வேறு நுட்பங்களை ஆசிரியர்கள் நிச்சயமாகக் கையாளவேண்டும்.

இதற்கமைய பின்வருவன பற்றி அறிதலும், செயல்முறைப்படுத்தலும் அவசியமாகின்றது.

***பிரம்பால் அடித்தல்***

வகுப்பறையை குழப்புகின்ற எத்தகைய மாணவர் நடத்தையையும் கட்டுப்படுத்துவதற்காக மூங்கில் பிரம்பால் பிள்ளைகளின் உள்ளங்கைகளினதும், முழங்காலுக்கு கீழேயும் அடித்தல் என்பது நீண்டகாலமாக பாடசாலைகளில் பின்பற்றப்பட்டு வந்த முறையாகும்.

வகுப்பறைகளில் வெண்கட்டி, அழிப்பான், மூங்கில் பிரம்பு என்பன வைக்கப்பட்டிருக்கும் மரபு முன்பு பேணப்பட்டு வந்தது.

இப்போது இது ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இது மனித உரிமை சார்ந்த நீதிமன்ற தலையீடுகளையும், உருவாக்கி வருகின்றன.

ஆசிரியரிடமிருந்து அதிகாரம் தேய்ந்துபோன நிலையில் இம்முறை ஏற்புடையதாகாது.

***தண்டனையாக மீண்டும் மீண்டும் எழுதுதல்***

பிள்ளைகளின் துர்நடத்தையைக் கட்டுப்படுத்துவதற்காக சில வரிகளை- வசனங்களை "100 தடவை எழுதுங்கள்" என்ற மாதிரி தண்டனைகளை முற்கால ஆசிரியர்கள் வழங்கி வந்துள்ளனர். சுயமான தண்டனை உருவாக்கும் முறையாக ஆசிரியர்கள் இதனை வடிவமைத்தனர்.

இது தற்போது அதிகம் கையாளப்படுவதில்லை. பதிலீடுகளான கல்வி வாய்ப்புக்கள் பெருகியுள்ள நிலையில் மாணவரும், பெற்றோரும் இதனை ஏற்பதில்லை.

ஆசிரியர்கள் இதனை விளங்கிக் கொண்டு நிதானமாக நடந்து கொள்ளவேண்டும்.

***தவிர்ப்பு நுட்பங்கள்***

ஆசிரியர்- மாணவர் உறவுகளில் பரஸ்பர நம்பிக்கையை உருவாக்கும் முறைகள் இதில் உள்ளடக்கப்படுகின்றன.

ஆசிரியர்கள் மாணவர் தொடர்பாக கௌரவமானதும், ஏற்றத்தக்கதும், பிள்ளைகளுக்கு ஆதரவளிப்பதுமான வகையில் தமது மொழி, உரையாடல், கட்டளை, கண்காணிப்பு, ஆலோசனை, வழிகாட்டல் என்பவற்றை வழங்குதல் அவசியமாகும்.

வகுப்பறை விதிகளில் சிறிதளவு நெகிழ்ச்சியையும் பின்பற்றமுடியும். மனிதாபிமான காரணிகளுக்கு மதிப்பளிப்பது மிக முக்கியமானது. பிள்ளைகளின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகளை விளங்கிக் கொள்வதற்கு ஆசிரியர் உண்மையாகவே விரும்பவேண்டும்.

ஒரு நிகழ்வின் அடிப்படையில் முடிவுகள் மேற்கொள்ளக்கூடாது. பிள்ளைகள் ஒவ்வொருவரையும்- அவர்களது நடத்தைகளையும் தனித்தனியாக தொடர்ந்து கூர்ந்து அவதானித்து வருவது மிகவும் பயனுடையது.

இத்தகைய விடயங்களை ஆசிரியர் நிதானமாக- சமநிலை இழக்காமல் - தீர்மானித்து ஈடுபாட்டுடன் நடைமுறைப்படுத்தவேண்டும்.

***முடிவுரை***

வகுப்பறைகளின் முகாமைத்துவத்தின் வினைத்திறன், விளைதிறன், தரம் என்பன பாடசாலைகளின் விளைதிறனை நிர்ணயம் செய்கின்றன.

பாடசாலைகளின் தொழிற்பாட்டு மையவிசை ஆசிரியர்களே, இதனால் வகுப்பறை முகாமைத்துவ திறன்களை மேம்படுத்தி தமது புலமையைப் பயன்படுத்தி சிறந்த பாடசாலைகளை உருவாக்கும் வல்லமை ஆசிரியர்களுக்குண்டு.

மாறுபடும் சமூகம், பொருளாதார, அரசியல், தொழில்நுட்ப மாறுபாடுகளை உணர்ந்து சிறந்த வகுப்பறை முகாமையாளர்களாக ஆசிரியர் தம்மை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

பேராசிரியர்.மா.சின்னத்தம்பி
கல்வியியல் பேராசிரியர்
தலைவர்- சட்டத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



திருமதி.ம.ராதாகிருஷ்ணன்
(ஆசிரியர்)

# குழந்தை குடும்பத்திலிருந்து சமூகத்தினுள்

குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் ஒவ்வொரு மனிதனும் தனது சமூக வாழ்க்கையை ஒரு குடும்பத்திலேயே தொடங்குகிறான். இந்த வையகத்தில் வந்துதிக்கும் ஒரு குழந்தை முதன் முதலில் தன் தாயுடன் தொடர்பு கொள்கின்றது. அங்கு அது அன்பை அனுபவிக்கின்றது. நீதியைப் பெற்றுக் கொள்கின்றது. ஒழுக்கதில் ஆழ்கின்றது. இதனாலன்றோ "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" எனப்படுகின்றது. "தாயிற் சிறந்தொருகோயிலுமில்லை"என்பது இதனாற்றான்போலும்.

கடவுள் குழந்தையைப் பெற்றோர்களிடம் ஒப்படைக்கின்றார். அதை முழு மனிதனாக்கும் பொறுப்பையும் அவர்களிடமே பணிக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றது. எமது சமூகத்தை நாம் நோக்கும் போது ஒவ்வொரு குழந்தையின் சொந்த வாழ்வும் படைப்பில் மாத்திரம் தங்கியிருப்பதில்லை என்பது புலனாகின்றது. "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே! அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பதிலே! என்ற கவிஞரின் கூற்றும் இதனையே புலப்படுத்துகின்றது. தத்துவ ஞானிகளின் கண்ணோட்டத்தில் குழந்தை இளஞ்செடி போன்றது. மற்றவர்கள் வளர்த்த மரம் போன்றவர்கள் புறோபல் என்னும் கல்வி அறிஞர் குழந்தைகளில் கல்வி நிலையத்தை சிறுவர் பூங்கா என்றே குறிப்பிட்டார். இளஞ்செடியை வளர்க்கும் காரணிகளான மண்,நீர்,காற்று,ஒளி போன்றவை உயிரற்றவை. ஒரு நிலையாக இருப்பவை ஆனால் குழந்தைகளை வளர்க்கும் பெற்றோரும், ஆசிரியரும், மற்றோரும் உயிருள்ளவர்கள். உணர்ச்சி உடையவர்கள், மாறும் இயல்புடையவர்கள். ஆகையினால் இளஞ்செடி போல் குழந்தையை வளர்க்க முடிவதில்லை. வளர்ப்பவர்களின் உணர்ச்சிகளும், விருப்பு வெறுப்புகளும் அவர்களின் அறிவும் குழந்தையின் வாழ்வைப் பாதிக்கின்றன. அதன் வாழ்வைப் பலவாறு மாற்றியமைக்கின்றன.இதனை நாம் கண்கூடு காண்கின்றோம்.

ஒருவன் தனது பாலப் பருவத்திலேயே தனி வாழ்விற்கும், சமூக வாழ்விற்கும் உரிய இயல்புகளைப் பெற்று விடுகிறான். முதல் ஐந்து வருடங்களில் அவனது மூளை வளர்ச்சியடைந்து விடுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர் முதல் ஆறு வருடங்களில் பெறும் வளர்ச்சியைப் போல் அவனது முழு வாழ்க்கையிலுமே அவன் பெறுவதில்லை. ஆகையினால் அந்த ஆறு வருடங்கள் அவன் எதிர்காலத்தையே நிர்ணயிக்கும் காலம் எனக்கூறலாம். இதனைத்தான் "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? " மற்றும் 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை" என்னும் முதுமொழிகள் மொழிகின்றன. இதனால் தான் சிறுவர்களாகத் தோன்றினாலும் சிறார்களை நாம் புறக்கணிக்க முடியாது. அவர்களைப் புறக்கணிக்கவே கூடாது. கண்ணும் கருத்துமாகப் பேணி வளர்க்க வேண்டும். நற்பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுக்கவேண்டும். ஒரு சிறு வித்தினுள் எவ்வாறு ஒரு பெருவிருட்சம் பொதிந்து மறைந்து உள்ளதோ அதே போல ஒவ்வொரு குழந்தையும் ஒரு பெரிய எதிர்காலத்தைத் தன்னுள்ளே கொண்டுள்ளான். அந்த எதிர்காலத்தை மலர வைக்க அச்சிறு குழந்தை மற்றவர்களையே நாடுகின்றது. இன்றைய மழலைச் செல்வங்கள் நன்கு மலர்ந்தால் தான் நாளைய சமுதாயம் சிறப்புப் பெறும். தனது முதல் அனுபவங்களிலே உண்மையை, நீதியை, அன்பினை,அழகினை,நன்மையை மற்றும் நற்பண்பினைக் கண்டால் தான் குழந்தையும் அவ்வழியிலே வளரக்கூடும். தன் குழந்தைக்கு நற்பண்புகளைப் புகட்டி அவன் நல்லவன் என்ற பெயர் பெறுவதுதான் தாயின் பெருமை என வள்ளுவரும் கூறுகின்றார்.

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்." எனவே பிள்ளைகளுக்கு அடிப்படைத் தேவைகளான உணவு, உடை உறையுள், கல்வி ஆகியவற்றைப் பெற்றோர் வழங்குவதோடு நின்றுவிடாது அவர்களுக்கு கடமை,கண்ணியம்,கட்டுப்பாடு என்பவற்றையும் முழுமையாகப் புகட்டுதல் வேண்டும். கடவுள் பக்தி,பிறரன்பு,நற்கொள்ளைகள் கொண்ட ஒரு ஒழுக்கத்தை மழலைச் செல்வங்களின் உள்ளங்களில் பதிப்பது பெற்றோரினதும், ஆசிரியரினதும், மற்றும் முதியோரினதும் கடமை ஆகும். மனிதர்கள் தங்கள் சிறுபராயத்திலேயே தங்களின் உணர்ச்சிகளின் வளர்ச்சியைப் பொறுத்து ஒரு நிலையை அடைகின்றார்கள். இந்நிலையில் தங்கள் தாயையும் தந்தையையும் வியப்புக்குரியவர்களாகக் கருதி அவர்களைப் போலவே தாமும் உடுக்கவும்,நடக்கவும், பேசவும் செய்கிறார்கள்.

நிறைவான மனிதர்களாக வளரும் வளர்ச்சியிலே சிறுவர்கள் தங்களைச் சுற்றி நிற்கும் மனிதர்களிடமிருந்தும், சூழ்நிலையிலிருந்தும் எவ்வளவோ கற்றுக் கொள்கிறார்கள். அச் சுற்றாடல் வளர்ச்சிக்குகந்ததாய் அமைய வேண்டும். மனிதத் தன்மை கொண்ட சூழ்நிலையில் வாழ்ந்தால் தான் குழந்தையும் எதிர்காலத்தில் மனிதப் பண்புகள் நிறைந்த ஒரு மனிதனாகுவான். ஒழுக்கமுள்ள மனிதனாக வளர முதலில் ஒழுக்கத்தை அப்பிள்ளை கண்டுணர வேண்டும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் அது உயிரினும் ஓம்பப்படும்" என்பது இருவரிக் காவியமாகும். பாடசாலைகளிலும் கூட மதம், கலை, கலாச்சாரம் ஊடாக மாணவர்களுக்கு ஒழுக்கத்தைப் புகட்டி சுயமான ஒழுக்க சீலர்களாக வாழ அவர்களுக்கு வழிகாட்டவேண்டும். ஆசிரியர்கள் பொறுப்புணர்ச்சி, சேவை மனப்பாங்கு, தியாக உள்ளம் கொண்டு கற்பிக்கும் பொழுது பிள்ளைகளும் சிறந்த சமூகப் பொருத்தப்பாடு கொண்ட பிரஜையாக சமூகத்தினுள் நுழைவான். மேற்படி பண்புகளை வெளிக்காட்டாமல் ஆசிரியர்கள் சம்பளத்திற்காகக் கல்வி கற்பித்தால் இதன் வழியாக சமுதாயத்திற்கு ஒரு கொடுமை தான் ஏற்படும்.

குழந்தை இயற்கையாகவே தான் பார்த்துப் படிக்கும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. தனக்கொரு சட்டம். குழந்தைக்கொரு சட்டம் என்பதில்லை. குழந்தைகளின் உலகத்திலே எல்லோருக்கும் ஒரு சட்டம் தான். நல்ல கொள்கைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்காகவே எப்பொழுதும் வாழ்வதைத் தான் குழந்தை காண வேண்டும். இதே வகையில் தான் புத்தகங்களும் பத்திரிகைகளும் சினிமாப்படங்களும், தொலைக் காட்சியும் நல்ல கொள்கைளைப் பரப்ப வேண்டும். உலகத்திலே கொடுமையை அகற்றுவதற்கு நாம் செய்ய வேண்டியது வீட்டில் பிள்ளைகளுக்கு அன்பைக் காட்டுவதே என்று பாரதியார் கூடக் கூறுகின்றார். அவனவன் வீட்டில் இருப்போரைக் கொல்லாது ஒற்றுமையுடனும் அன்புடனும் வாழ்வானாயின் உலகத்தில் கொடுங்கோன்மையும் போரும் விளையக் காரணமில்லை. எனவே எமது குழந்தைகளின் உள்ளங்களில் அமைதியையும் அன்பையும் உருவாக்க வேண்டும். சமுதாயத்தில் நீதியை நிலைநாட்டுவ்தற்கு அன்பை அனுபவிப்பதற்கு சமாதானத்தை நாற்றிசையும் சேர்ப்பதற்கு முதலில் குழந்தைகளுக்கே இவற்றினை வழங்கிட வேண்டும். இவற்றை வழங்கும் நாம் வள்ளல்கள் என்றெண்ணாது உரிமையாளர்களுக்கு கடமைப்பட்டவர்கள் என்று கருதியே வழங்கிடுவோம். வாழ்க எம் சமுதாயம் வளரும் குழந்தைகளின் உதவியுடன் வாழிய என்றும் வாழியவே!!

திருமதி.ம.ராதாகிருஷ்ணன்

****



கல்லூரி உப அதிபர் செல்வி இ.சுலோசனா



எஸ்.ரி.குமரன்
(ஆசிரியர்)

# இருப்பு

*நாடக பாத்திரங்கள்*
பாத்திரம்-01, பாத்திரம்-02, பாத்திரம்-03, பாத்திரம்-04, பாத்திரம்-05, பாத்திரம்-06, பாத்திரம்-07, பாத்திரம்-08, பாத்திரம்-09.

(திரைவிலகும் போது பயங்கரமான அவல இசை இசைக்கின்றது. அவ்வேளை பாத்திரங்கள் உடல்வலி மிகுந்தவராய் பயத்துடன் துடிதுடித்தபடி மேடையில் குவிக்கின்றனர். அவ்வேளையில் பயங்கரமான ஆட்டத்துடன் போர் மனிதன் பிரவேசித்து தாண்டவம் ஆடுகின்றான். ஆடும் போது பாத்திரங்கள் ஒன்றாக ஒதுங்குகின்றன. சிறிதுநேரம் ஆடிய போர் மனிதன் ஒன்றாக நின்றவர்களை சிதைத்து தன்னுடைய கோரத்தால் விழுத்திய பின் மேடையில் நின்று வெளியேறுகின்றான்)

(சில வினாடிகளின் பின் பாத்திரம் 8 மெதுவாக எழுந்து ஏனைய பாத்திரங்களை பார்த்தபடி பாடலை பாடுகின்றது)

*பாடல்*

ஆ...............ஆ...............ஆ...............ஆ...............
வாழ்வினில் சோதனையும் வேதனையும்
தாழ்நிலை தள்ளிடும் வேளையிலும்
வழமையும் வறுமையும் எமதாகி
நிரந்தர இருப்பின்றி அலைகின்றோம்
ஆ...............ஆ...............

எத்தனை வருடங்கள் கடந்தாலும்
எம் வாழ்வினில் நிம்மதி கிடையாதோ
உறவுகளைத் தேடி அலைகின்றோம்
கருணைக் கடவுளே கண்பாராய்.
ஆ...............ஆ...............

(பாத்திரம் 8 பாடலை அனைத்து பாத்திரங்களையும் பார்த்து பாடியபின் மெதுவாக அமர்கின்றது. அவ்வேளை பாத்திரம் பிரவேசிக்கின்றது. அப்போது கீழே விழுந்த ஏனைய பாத்திரங்கள் எழுந்து தங்களுக்குரிய நிலையில் நிற்கின்றன. அவ்வேளை

உரையாடல் தொடர்கின்றது)

**பாத்திரம் 01** :- எல்லாம் முடிஞ்சுது..........
**பாத்திரம் 02** :- வார்த்தையே வரேல்லை.......
**பாத்திரம் 03** :- உறக்கம் கலைகிறது....
**பாத்திரம் 04** :- வீடில்லை.....
**பாத்திரம் 05** :- இருபது வருஷம்.....
**பாத்திரம் 06** :- சொந்த மண்ணை காணேல்லை...
**பாத்திரம் 07** :- தொழிலில்லை....
**பாத்திரம் 08** :- காசில்லை......
**பாத்திரம் 09** :- கனவில்லை....
**பாத்திரம் 01** :- அகதிகள்....
**பாத்திரம் 02** :- முகாம் வாழ்க்கை....
**பாத்திரம் 03** :- கலாசார அழிவு....
**பாத்திரம் 04** :- உயிரிழப்பு.....
**பாத்திரம் 05** :- உறவுகளைத் தேடுறம்....
**பாத்திரம் 06** :- சொத்திழப்பு....
**பாத்திரம் 07** :- கல்வியிழப்பு....
**பாத்திரம் 08** :- வாழ்க்கையே போராட்டம்....
**பாத்திரம் 09** :- இடப்பெயர்வு...
**பாத்திரம் 01** :- நிவாரணமும் எடுக்கவேணும்...
**பாத்திரம் 02** :- பதியவேணும்...
**பாத்திரம் 03** :- இடி பேரிடி.....
**பாத்திரம் 04** :- (இருக்கையை விட்டெழுந்து பதற்றத்துடன்)
கள்ளன், கள்ளன்....
(ஏனைய பாத்திரங்களும் பதற்றத்துடன் இடம் மாறுகின்றனர்)
**பாத்திரம் 05** :- (அனைத்து பாத்திரத்தையும் பார்த்து) இல்லை! இல்லை!
**பாத்திரம் 06** :- (அனைத்து பாத்திரங்களையும் பார்த்து)
கலக்கத்துடன் மனித முகங்கள்
**பாத்திரம் 07** :- மானிடத்தின் இருப்பு.....?
**பாத்திரம் 08** :- இன்னும் எத்தனை எத்தனை!
(பாத்திரங்கள் அனைத்தும் சேர்ந்து) நின்மதி இல்லை
(உரையாடல் முடிய பாத்திரங்கள் அசைவின்றி நிற்க பாத்திரம் 1 ஏனையவர்களை சுற்றிப்பார்த்து பழைய மகிழ்ச்சியுடன் கூறுதல்)

**பாத்திரம் 01** :- நாங்கள் முந்தி...
(இதன்போது பழைய நினைவுகளை நினைத்து சிரித்தபடி அனைவரும் வெளியேறுகின்றனர்)
(சந்தோஷமான பழைய நினைவுகளுடன் அரங்கினுள் பாத்திரம் 4,8 பிரவேசித்து கடலுக்கு சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். அவ்வேளை பாடல் ஒலிக்கிறது.

**பாடல்**

ஏலேலோ..... ஏலஏலோ
ஏலேலோ..... ஏலஏலோ
ஆழமில்லை கடலினிலே
ஆலையுமில்லை ஏலேலோ

ஏலேலோ..... ஏலஏலோ
ஏலேலோ..... ஏலஏலோ
அள்ளிவலை வீசி நாங்கள்
ஆனந்தமாய் போய் வருவோம்

(மேடையில் கடற்கரைக்காட்சி இடம்பெறுகின்றது. பின்னணிக் குரல்கள் ஒலிக்கின்றன. பாத்திரம் 5,6 எதிர்எதிராக சந்தித்து மகிழ்ச்சியுடன் வெளியேறுகின்றனர். இக்காட்சி முடிவடைய பாத்திரம் 1,7 மேடையினுள் பிரவேசித்து விவசாயத்தில் ஈடுபடுகின்றனர்)

***பாத்திரம் -01 :-*** இந்த முறையும் நல்ல விளைச்சல் கிடைக்கவேணும்
***பாத்திரம் -07 :-*** இளையவருக்கு சங்கிலி வாங்கிக் கொடுக்கவேணும்
***பாத்திரம் -01 :-*** ஓம் கடவுள் கைவிடமாட்டார்.
(அப்போது பாத்திரம் 09 சாப்பாட்டுடன் பிரவேசிக்கின்றது.

***பாத்திரம் -01 :-*** ஏனப்பா ஏலாதத்தோடையும் கொண்டு வந்தனியள்
***பாத்திரம்- 09 :-*** இல்லை, நீங்கள் களைச்சுப்போய் இருப்பியள்
***பாத்திரம்- 07 :-*** சரி, வாங்கோ சாப்பிடுவம்
(மூவரும் சாப்பிடுகின்றனர். சாப்பிட்டு முடிய மூன்று பாத்திரங்களும் Still ஆக பாத்திரம் 3,5,6 மேடையினுள் பிரவேசித்து மாபிள் விளையாடுகின்றனர்)

***பாத்திரம் -03 :-*** நான்கோடு கீறுறன்
***பாத்திரம் -06 :-*** சரிகீறும்
***பாத்திரம் -05 :-*** நான் தான் முதல் விடுறன்
(மூவரும் மாபிளை விடுகின்றனர்)
***பாத்திரம் -03 :-*** என்ரதான் முதல்
***பாத்திரம் -06 :-*** இல்லை என்ரதான் முதல்
***பாத்திரம் -03 :-*** இல்லை என்ரைதான் (இருவரும் சண்டை செய்கின்றனர்)
(அவ்வேளையில் பாத்திரம்-02 வயோதிபத் தோற்றத்துடன் மேடையினுள் பிரவேசிக்கின்றது)

***பாத்திரம் -02 :-*** ஏன் பிள்ளையள் அடிபடுறியள்
(பாத்திரம் 3,6 தங்கள் முறைபாட்டை சொல்கின்றனர். இருவரையும் சமாதானம் செய்து வைத்துவிட்டு)

***பாத்திரம் -02 :-*** அடிபடாமல் சந்தோசமாய் விளையாடுங்கோ.
(மூவரும் ஓம் என்று தலையசைத்து விட்டு சந்தோஷத்துடன் விளையாடியபடி Still ஆகின்றனர். அவ்வேளையில் பாத்திரம் 2 தனியே உரையாடுகின்றது)

***பாத்திரம் -02 :-*** மயிலிட்டி காணிக்கை மாதாவே!
ஊறணி அந்தோணியாரே!
கூத்தியவத்தை பிள்ளையாரே!
தலையிட்டி வைரவா!
மாவைக் கந்தா!
இண்டைய நாளைப்போல எப்பவுமே
சந்தோஷமாக இருக்கவேணும்
(அவ்வேளையில் பாத்திரம் 8,4 பதற்றத்துடன் எதிர் எதிர் திசையில் வந்து)

பாத்திரம் -08 :- எல்லாம் போச்சுது.......!

பாத்திரம் -04 :- எல்லாம் போச்சுது........!

(இதன் பின் பாத்திரங்கள் அனைத்தும் காட்சியின் ஆரம்ப நிலை மன நிலைக்கு வந்து தங்கள் பழைய இடங்களில் அமர்கின்றனர்) அவ்வேளையில் உரையாடல் தொடர்கின்றது)

பாத்திரம் -01 :- எங்கபோறது.......

பாத்திரம் -02 :- வீட்டாலை எழும்பட்டாம்

பாத்திரம் -03 :- வாடகை

பாத்திரம் -04 :- உழைப்பில்லை

பாத்திரம் -05 :- காசில்லை

பாத்திரம் -06 :- உழைக்கவேணும்.....

பாத்திரம் -07 :- காசுவேணும்.......

பாத்திரம் -08 :- தொழில் வேணும்.....

பாத்திரம் -09 :- காசு, வீடு, வாடகை

(பாத்திரங்கள் அனைத்தும் ஒரே குரலில்) சொந்த மண்ணில் நிம்மதி வேணும்.

(அவ்வேளையில் பாத்திரம் 8 அனைவரையும் பார்த்து சோக உணர்வுடன் பாடுகின்றது)

பாடல்:- ஆ.................. ஆ...........

உண்ணாமல் உறங்காமல் அலைகின்றோம்
எம் உலகை கண்ணீரால் நனைக்கின்றோம்
விளைகின்ற பொருள் எமக்கு உரிமையில்லை
நாம் பாடுகின்ற துயரிற்கு முடிவில்லை
இறைவா.... இறைவா.... இறைவா...

(பாடல் முடிய அனைவரும் சோகத்துடன் அமர்ந்திருக்க பாத்திரம் 02 எழுந்து அனைவரையும் பார்த்துவிட்டு பார்வையாளரை பார்த்து உரையாடுகின்றது)

பாத்திரம் -02 :- உங்களைத்தான்......இதுக்கெல்லாம் என்ன முடிவு...!
இது அரசியல் இல்லைப்பாருங்கோ!
எங்கட வாழ்வு! இருப்புப் பற்றிய பிரச்சனை
எங்களுக்கு மட்டும் தலைவிதியா?
எங்கட மண்ணில் அகதியாய் இருக்க!
எங்கடை வாழ்க்கையும் அகதி வாழ்க்கையோ!
(பாத்திரம் 2 இன் உரையாடல் முடிந்ததும் அசைவற்று நிற்கின்றது அவ்வேளையில்)

(மெல்லத்திரை மூடுகின்றது)

03.03.2010ல் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் யாழ் பல்கலைக்கழக வெளிவாரி நாடகமும் அரங்கியலும் மாணவர்களால் ஆற்றுகை செய்யப்பட்டது.

எழுத்துருவாக்கம் நெறியாள்கை
எஸ்.ரி.குமரன்
எஸ்.ரி.அருள்குமரன்



எஸ்.ரி.குமரன்
(ஆசிரியர்)

# மரணமும் அரச குதிரைப்படைத் தலைவனும் நாடகத்தில் சொயிங்கா அலசும் பிரச்சனைகள்

வோலே சொயிங்கா ஆபிரிக்காவைச் சேர்ந்த நாடகாசிரியராக விளங்கியவர். இவர் தனது பட்டப்படிப்பை Ibadan பல்கலைக்கழகத்தில் பெற்றார். இவர் ஜொரூப (Yoruba) நாடக தயாரிப்பாளராக B.B.C இல் சேர்ந்து பணியாற்றினார். 1960ம் ஆண்டளவில் நைஜீரியா சுதந்திரம் பெற்ற நிலையில் நாடகங்களை எழுதினார். இவருடைய நாடகங்களில் Dance of the Forest (வனங்களின் நர்த்தனம்), Death and the kings Horseman (மரணமும் அரச குதிரைப் படைத்தலைவனும்) என்னும் நாடகங்கள் குறிப்பிடத்தக்கன.

சொயிங்காவால் எழுதப்பட்ட மரணமும் அரச குதிரைப் படைத்தலைவனும் என்னும் நாடகம் ஜொரூப கலாச்சாரத்தையும் ஆபிரிக்க பண்பாட்டையும் அடிப்படையாக கொண்டது. இந் நாடகத்தின் ஊடாக சொயிங்கா குறிப்பிடும் பிரச்சனைகளை நோக்குவோம்.

***நாடக பாத்திரங்கள்***

எலிசின் (குதிரைப் படைத்தலைவன்), இயலோபா, சைமன் பில் கிங்ஸ் (ஆள்பதி), ஜேன்பில்கிங்ஸ் (ஆள்பதி மனைவி) சார்ஜன்ட் அமுசா, ஜோசெப் (பில்கிங்ஸ் இன் பாதுகாவலன்) பிறைட், ஒலண்டே (எலிசினின் மகன்)
எயிட்-டீ-காம் (Aide- De- Camp) புகழ்ச்சி பாடகர் (Praise Singer) வாசிப்போர் (The resident) அரசன் (H.R.H The Prince), Drumers, இளம் பெண்கள், நடனம் ஆடுவோர்

***கதைக்கரு***

எல்சின் (Elesin) என்ற ஆபிரிக்க சுதேசிய பாத்திரத்தை மையமாகக் கொண்டு கட்டமைக்கப்படுகின்றது. ஜொரூப பாரம்பரியத்தின்படி தலைவனுடைய (அரசன்) மரணத்தை அடுத்து குதிரைப் படைத்தலைவனின் சடங்கு ரீதியான தற்கொலை நடைபெறவேண்டும். இதனை மையமாக கொண்டு கதை வடிவமைக்கப்பட்டுள்ளது. இம் மரணத்தின் நோக்கம் தலைவனுக்கு இவ்வுலகில் எப்படி பணி செய்தானோ அதை போல ஆவியிலும் பணி செய்தல் வேண்டும் எனப்படுகின்றது.

நாடகம் 5 காட்சிகளை கொண்டுள்ளது. நாடகத்தின் முற்பகுதி சடங்கின் படிமுறைகளை ஆவணப்படுத்துகின்றது. வாழ்க்கையை நேசிக்கின்ற திடகாத்திரமுடைய எல்சின் தன்னுடைப் தற்கொலைக்கு முந்திய நாளை கொண்டாடல், புதிதாக மணம் முடித்தல், தற்கொலைக்கான சடங்கின் இறுதியில் உள்ளூர் ஆட்சியாளர் சைமன் பில்கிங்ஸ் (Simon pilkings) ஆல் தலையிடப்பட்டு கைதுசெய்யப்படுகின்றார். சைமனுடைய கருத்துப்படி எலிசினுடைய தற்கொலை காட்டு மிராண்டித்தனமானது. சட்டவிரோதமானது என்று தடைபோடுகிறான். ஆனால் இத்தடை இனத்துக்கு பேரிடரை கொண்டு வருகின்றது. பிரபஞ்ச நியதியை குழப்புகின்றது. இதனால் இனக்குழுமத்தின் நலன் பாதிக்கப்படுகிறது.

சமூகம் பில்கிங்சையும் எல்சினையும் குறை சொல்கின்றது. எல்சின் இவ்வுலக கடைமையை அதிகம் நேசித்து ஆன்மீக கடமையை தவறிவிட்டான் என்பது சமூகத்தவர் கருத்து. சம்பவமானது வேகமாக நகர்கின்றது. எல்சினுடைய மகன் ஓலின்டே (Olunde) ஐரோப்பாவில் மருத்துவக் கல்வி பெற்று வந்தவன் தன் தந்தைக்கு கடன் செலுத்த நாடு திரும்பிகின்றான் தந்தை தவறிய தார்மீக தற்கொலைக் கடனுக்கு பொறுப்பேற்று அவருக்கு பதிலாக சடங்குத் தற்கொலை செய்கின்றான். இதனால் குடும்பப்பெயர் பிரபஞ்ச ஒழுங்கு காப்பாற்றப்படுகின்றது.

எல்சின் தன்னுடைய செயலின் கொடுமை கண்டவனாக தன்னை மாய்க்கின்றான். அவனுடைய ஆத்மா அடுத்த உலகத்தில் இழிவுபடுத்தப்படுகின்றது. பில்கிங்ஸ் தன்னுடைய செயலுக்கு வருந்துபவனாக இறுதியில் காணப்படுகின்றான்.

*நாடக காட்சிக் கட்டமைப்பு*

காட்சி ஒன்று சந்தையில் இடம் பெறுகின்றது. இதில் ஜொருப பாரம்பரியம் வேரூண்றி உள்ளது. இங்கு வெள்ளையர் யாரும் இல்லை. பேசப்படும் உரையாடப்படும் விடயங்கள் பாரம்பரியமான விடயமாக உள்ளது.

இங்கு எல்சினுக்கு சமூகத்தில் இருக்கின்ற அந்தஸ்து மரியாதை மிக வலுவாக சொல்லப்படுகின்றது. இன்னொருவனுக்கு நிச்சயித்த பெண்ணையே மணம் முடித்து கொடுக்கும் அளவுக்கு செல்வாக்கு பெறுகின்றான். நொடி விடுகதைகளுக்கு, No+I பறவையின் கதையும் கூறப்படுகின்றது. உதாரணமாக குதிரையைத்தை குதிரை மணக்கேக்க அதன் கடிவானத்தை இழுக்காதோ? போன்ற உரையாடலை குறிப்பிடலாம்.

காட்சி இரண்டில் பில்கிங்குடைய வீடு களமாக அமைகின்றது. மில்கிங் காலணித்துவ அரசின் மாவட்ட அதிகாரியாக கடைமை ஆற்றுபவர் இங்கு பிரித்தானிய மாவட்ட அதிகாரியாக வருபவனுடைய பிரச்சனை கூறப்படுகின்றது. இவன் ஆபிரிக்க பண்பாடு பற்றிய பரிட்சயம் அற்றவனாக காணப்படுகின்றான்.

காட்சி மூன்று சந்தையில் நடக்கின்றது. உலகமே சந்தை, சொர்க்கம் தான் வீடு என்னும் ஜொருப பண்பாட்டுக் கொள்கை விளக்கப்படுகின்றது. இங்கு அமுசா ஓர் அலி அவனுக்கு சமூகத்தில் இருக்கும் பெறுமானம் காட்டப்படுகின்றது. எலிசின் புதிதாக ஒரு பெண்ணை மணம் முடிக்கின்றான். மாற்றம் தெரிகின்றது. அடுத்த உலகிற்கு போக முன்பு இவ்வுலக இன்பத்தை அனுபவித்து முடிக்கின்றான்.

காட்சி நான்கு ஆள்பதி மாளிகையில் நடக்கின்றது. முக்கியமான உரையாடலாக ஜேன்பில்கிங்ஸ்க்கும் ஒளின்டேக்கும் இடையில் நடக்கும் உரையாடல் சித்தரிக்கப்படுகின்றது.

காட்சி ஐந்தானது நாடகத்தின் இறுதிப்பகுதியை சித்திரிக்கின்றது. ஒலிண்டேயின் உடையதற் கொலை எல்சினுடைய தற்கொலை, ஆள்பதியின் தவறை உணரும் நிலை என்பன சித்தரிக்கப்பட்டுள்ளது.

*சொயிங்கா அலகும் பண்பாட்டு பிரச்சனைகள்*

இக்கதைக்கு ஊடாக காலனித்துவம் திணிக்க முயலுகின்ற பண்பாடும், சுதேசியப் பண்பாடும் இவை இரண்டிற்கும் இடையிலான முரண்பாடு சித்தரித்துக் காட்டப்படுகின்றது. முக்கியமான விடயமாக "மனிதவாழ்வு பற்றிய மரணமும் வாழ்வு பற்றிய சமயத்தின் (சடங்கின்) சக்தி பற்றிய ஓர் விசாரணையாக" அமைகின்றது. மனித வாழ்க்கை பற்றியும் வாழ்வு சாவு பற்றியும் சமயம் சடங்கு ஆத்மீகம் இவை மனித இருப்பில் ஏற்படுத்துகின்ற தாக்கம் பற்றிய ஒரு விசாரிப்பு ஓர் தேடலாக இதனை பார்க்கலாம்.

குதிரைப் படைத் தலைவன் இவ்வுலகில் அரசனுக்கு எவ்வாறு சேவகம் செய்தானோ அதே போன்று மறு உலகிலும் சேவகம் செய்யவேண்டும். அவ்வாறு போகத்தவறினால் தீமை ஏற்படும் என்ற நம்பிக்கை காரணமாக அரசன் இறந்தபின் அரசனுடைய குதிரைப் படைத்தலைவன் இறந்து அரசனுக்கு சேவகம் செய்யவேண்டும். குதிரைப் படைத்தலைவன் இறப்பதற்கு முன்னதாக நாய், குதிரை என்பன கொலை செய்யப்படவேண்டும் என்பது பண்பாட்டு நம்பிக்கையாகும்.

சாவைப்பற்றி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான நோக்கம் இருக்கும். இதனை எல்சின் இயலோயாவின் உரையாடலுக்கு ஊடாக காட்டுகின்றான். "மிஞ்சின எச்சங்களை நக்குறவன் உனக்கு வாழ்க்கையில் உள்ள எல்லாம் கிடைத்திருக்கும். ஆனால் நீ அதையெல்லாம் காட்டிக் கொடுத்து விட்டாய் நீ தாழ்ந்து போய்விட்டாய் உன் குடியேற்ற வாதிகளை கைவிட்டிட்டாய் உன்னுடைய திட சங்கத்தை அள்ளிக்கொண்டு போகவிட்டுவிட்டாய்" என எல்சின் தற்கொலை செய்ய தவறிய இடத்தில் இயலோயா கூறுகின்றார். இதனூடாக பண்பாட்டு தற்கொலையின் அவசியம் பற்றி கூறுகின்றார்.

பில்கிங்ஸ் புனித சடங்கு தற்கொலையை கேளிக்கையாக பார்க்கிறார். முக்கியமான உரையாடலாக ஜேன் பில்கிளிங்ஸ் ஒலின்டேக்கு (எலிசின்மகன்) இடையில் நடக்கின்ற உரையாடல் விளங்குகின்றது. ஒலிண்டே- நாலு வருடமாக உங்களுடைய ஆட்களோடு இருந்து வருகின்றேன். நீங்கள் விளங்காத விஷயத்துக்கு மதிப்பு கொடுக்கிறேலை என்கின்றார். ஜேன்பில்கிளிங்- உயிரை வேணும் எண்டு நாங்கள் துறக்கக்கூடாது என்கின்றார். அதற்கு ஒலின்டே- பெருங்கூட்டமாய் போய் தற்கொலை பண்ணுறதை விட இது மோசமா? நீங்கள் என்ன நினைக்கிறியள் இளைஞரை போருக்கு அனுப்புவதைப்பற்றி ஆனால் உங்களிட்டை கலை இருக்கு தற்கொலை என்டு இல்லாமல் களப்ப பழகி இருக்கிறியள், இது தான் உங்களிட்ட உள்ள இன்னொரு பிழை அறிவுள்ள விஷயம் உங்களிட்டை படிச்சுதான் வரவேண்டும் என்கின்றான். ஒலின்டே பிரித்தானியாவில் மருத்துவ கல்வி கற்றாலும் தனது ஆபிரிக்க பண்பாட்டு அம்சமான சடங்கு தற்கொலைக்காக வாதிடுகின்றான்.

இந்த சடங்கு தற்கொலையை பில்கிளிங்ஸ் தடுக்க போய் கடைசியில் இரண்டு உயிர் பறிக்கப்படுகின்றது. கடைசியில் தூதுவனாக போகும் மகனிடம் இரகசியம் கூட எலிசினால் சொல்லமுடியவில்லை. பாணர் குறிப்பிடுமிடத்து அன்னியர்கள் ஏற்படுத்திய தாக்கம் தலைகீழாக போயிற்று. இது பாணர் குறிப்பிடும்

சுதந்திர நைஜீரியாவுக்கு ஒத்ததாக காணப்படுகின்றது. ஆபிரிக்க நாடுகளின் வெற்றிடத்திற்குள் ஐரோப்பா புகுந்து கொள்கின்றது. இது சொயிங்கா அலசும் பிரச்சனையாகும்.

நாடகத்தின் உள்ளோட்டமாக சொயிங்க ஆபிரிக்க பண்பாட்டு பழமொழிகள், நாட்டார் கதைகள் என்பவற்றை பயன்படுத்துகிறார். உதாரணம்- குதிரை லயத்தை குதிரை மனக்கேக்க அதன் கடிவாளத்தை இழுக்காதோ என்பதாகும்.

காலணித்துவ வாதிகள் பண்பாட்டை மதியாத் தன்மையை அலசுகின்றார். பில்கிளிங்ஸ், ஜேம்ஸ் பில்கிளிங் நடனத்தின் போது ஆபிரிக்க பண்பாட்டின் ஆவிகளின் உடுப்புகளையும் முகமூடிகளையும் அணிந்திருக்கின்றார்கள். இது ஆபிரிக்க பண்பாட்டில் முக்கியமான விடயம் ஆனால் காலணித்துவ வாதிகளுக்கு கேளிக்கையாக இருக்கின்றது. சாஜனான அமுசா "உதையோன் அணிந்திருக்கிறீர்கள் மாற்றுங்கே"- என்கிறான். அமுசா ஆபிரிக்க பண்பாட்டில் உள்ள முஸ்லீம் அவன் பண்பாட்டை அனுசரித்து போகிறான். ஆனால் பில்கிங்ஸ் பாத்திரம் இதை புரியாதது மட்டுமல்ல அவன் ஆன்மீக பலம் இல்லாதவனாக காணப்படுகின்றான். இவனுக்கு தன்னுடைய மதமான கிறிஸ்தவத்திலும் நம்பிக்கை இல்லை. ஆபிரிக்க பண்பாட்டை மதிக்காது கேளிக்கைக்கு பயன்படுத்தி அரசனிடம் நல்ல பெயர் வாங்க பார்க்கிறான். இதனூடாக பண்பாட்டு அடையாளம் பற்றி அலசப்படுகின்றது.

சொயிங்கா நாடகத்தின் ஒவ்வொரு காட்சியிலும் தத்துவார்த்தமான முறையில் ஜொரூப பண்பாட்டை அலசுகின்றார். இந் நாடகத்திற்கான களம் ஜொரூப நாகரீகத்தின் மையம் 15-18ம் நூற்றாண்டுகள் ஜொரூப பண்பாட்டுக்கு களமாக விளங்கியது. அங்கு மன்னராட்சி இருந்தது மன்னர் என்ற சொல்லுக்கு பெயர் Olafin ஆகும். இவர் ஆளும் வர்க்கத்தில் இருந்து வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவார். இந் நாகரீகத்தின் சிறப்பாக இது விளங்கியது. இங்கு பெரிய குதிரைப்படை இருந்தது. இந்த குதிரைப்படை வேற இனக்குழுமத்தில் இருக்கும் சவான எனும் புல்வெளி குதிரைப்படை வைத்திருக்கும் இடம் இதனூடாக அரசனுடைய குதிரைப்படைத் தலைவன் முக்கியப்படுகின்றார்.


இக்கட்டமைப்பில் குதிரைப்படைத் தலைவன் மகன் அடுத்த குதிரைப்படைத் தலைவன் பாணனுடைய மகன் அடுத்த பாணன் இது பரம்பரையாய் வரும் இத்தகு ஒழுங்கு முறை ஜொரூப பண்பாட்டில் முக்கியம் பெற்றது.

ஆபிரிக்காவில் ஐரோப்பிய காலணித்துவம் செலுத்தும் பிரச்சனை பற்றி சொயிங்கா இந்த காலணித்துவ அம்சம் நாடகத்திற்கு அனுசரணையாக இருக்கிறதே தவிர அது முக்கியம் அல்ல என்கிறார். ஆனால் இங்குள்ள முரண்பாடு என்பது தத்துவ ரீதியான முரண்பாடு ஜொரூபமனம் என்ற மனிதனுக்கு ஏற்படும் அவலம் பற்றிய முரண்பாடு இங்கு சொயிங்கா காலணித்துவ ஆட்சியாளரை ஜொரூப மனத் தலைவருடன் மோதவிடுகின்றார். காரணம் சொயிங்கா பண்பாடுகளுக்கிடையிலான சமத்துவக் கொள்கையை நிராகரிக்கிறார். நாடக முன்னுரையில் சொயிங்கா காலணித்துவம் என்பது துணைக்காரணி மட்டுமே உண்மையான முரண்பாலின் என்ற மனித ஊடகத்துக்கும் ஜொரூப மனத்தின் பிரபஞ்சத்துக்கும் இடையே தான் ஏற்படுகிறது.

வாழ்வு ஒரு உலகம், இறந்தோர் உலகும், பிறப்போர் உலகும் இடையே உள்ள பிணைப்பு பற்றியது. உதாரணமாக ஆபிரிக்க பண்பாட்டில் இருந்து ஐரோப்பிய பண்பாட்டில் வாழ்ந்த ஒலிண்டே இறுதியில் தற்கொலை செய்து கொண்டது ஜொரூப பண்பாட்டின் நம்பிக்கை தளத்தையும் மக்கள் கொண்டுள்ள பற்றுதியையும் காட்டுகின்றது.

ஜொரூப பண்பாட்டில் காலனித்துவத்தால் வரும் தடை அத்தடையால் பண்பாட்டு கட்டமைப்பை மீறுவதனால் ஏற்படும் அவலத்தையும் பிரச்சனையையும் ஆராய்வதன் மூலம் ஜொரூபபண்பாட்டை உறுதியானதாக சொயிங்கா காட்டுகின்றார். இதன் மூலம் சடங்கு மனநிலையை மேம்படுத்தி காட்டுகின்றார்.

எஸ்ரி.குமரன்
B.A (Hons), Dip in Eng, Dip in Em



வி.யேசுதாசன்
(ஆசிரியர்)

# ஏன் பண் இந்துவை நோக்கிய பயணமதில் ஓர்பார்வை

இரண்டு ஆண்டுகள் பயிற்சிகள் முடித்தவுடன்
இடியோசை கேட்டது! - அது என்ன?
துயரில் துடித்தோம் விரைவில் கல்லூரி வாழ்வு நிறைவுற்றதென
துன்ப இருள் சூழ்ந்ததை உணர்ந்தேன் நான்
உள்ளகப் பயிற்சிக்கு பண் இந்துவுக்குச் செல்ல ஏற்ற ஓசை
உடனே ஏற்க மறுத்தது- என் உள்ளம்
விரைந்து ஓடினேன் அலுவலகம் நோக்கிய பார்வையுடன்
இதற்கு விடை கொடுப்பதற்கு - நான்
மற்றுமொரு ஒலி கேட்டது இடியோசை அல்ல- அது
மகிழ்வோசை ஒன்று - மலர்ந்தது திவாகரனால்
"கடினமான சூழலில் பணி செய் நல் அதிபர் ஆசிரியருடன்
துணிந்து செல்" என்ற அன்போசை
விரைந்து சென்றேன் நான் விடுதலையுடன்
பண் இந்துவை நோக்கிய பயணமதில்....

பாரெல்லாம் தேடி அலைந்தேன் தேவியல்ல
பண் இந்துவை- அனுமதிக்காய் நான்
சென்ற வேளை பண் இந்துவின் பெயரைக் கண்டேன்- இருப்பினும்
காணேன் பயன் வாயிலை- உணர்ந்தேன் என்ன
வாயில் ஒன்று மலர்ந்திருந்தது பிரதான வீதியிலே
விலங்கிடப்பட்டு இருந்தான் ஏன்? - அந்த வாயில்
கல்லூரி நேரத்தில் எல்லோரும் கலைந்திடுவார்கள் போலும்
கூறாமல் கூறுகின்றது- அந்த வாயில்
உன்னிப்பாக உற்று நோக்கினேன் உள்ளங்கவர் மங்கையை அல்ல
உள்ளிருப்போர் அசைவுகளை- உள்நுழைவுக்காய்
ஓட வைத்தது என்னை கல்லூரி வீதிக்கு
ஓடிய நேரம் - கண்டேன் பயன் வாயிலை
நுழைந்தேன் கல்லூரிக்கு பயன்படும் வாயிலால்
விரைந்தேன் அலுவலகத்தினை நோக்கி... அனுமதிக்காய் நான்

பண் இந்துவை நோக்கிய பயண மதில்..
வீற்றிருந்தது அலுவலக வாசலில் ஓர் செந்தாமரை
விளைத்தொடுத்தது - என்னை நோக்கி
எதற்காய் இங்கு என்று பொருள் பட வினாவினார்
உள்ளகப் பயிற்சிக்காய் அதிபரிடம்- விடையாய் நான்
உள்ளே சென்று அதிபரை சந்தியும் என்ற ஓசை
விடையாய் மலர- நுழைந்தேன் உள்ளே
அன்போடு அழைத்து அமர்த்தினார் என்னை
அலுவலக கதிரையில் -அது மட்டுமா
நத்தார் பரிசு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது என்பது மட்டுமல்ல
நகைச்சுவைகள் பல- பொழிந்தது வெள்ளமாக
இணைந்தார் சித்திரத்தின் சிகரம் எட்மனும் கூடவே
நகைச்சுவையை மெருகூட்ட- அதிபருடன் அவரும்
அனுமதி பெற்று விடை பெற்றுக்கொண்டேன் நான்
ஆனந்தமாய் வீட்டிற்கு- மனத்திருப்தியுடன்
கல்லூரியில் பண் இந்துவை நோக்கிய பயணம் மதில்
கல்லூரியில் காலடி எடுத்து வைத்தேன் உத்தியோகபூர்வமாய்
உள்ளக பயிற்சிக்காய் நான் - முதல் நாள்
உற்று நோக்கினேன் அதிபரை உள்ளங்கூறியது அது என்ன
தோற்றத்தில் கணித ஆசான்- பணியில் அதிபர்
காலைக் கூட்டத்துடன் கூடியது முதல் நாள் கல்லூரி
அறிமுகந்தான் அது பேசும் ஆறுமுகந்தான்
வினாக்கள் தொடுத்தனர்- கல்லூரி ஆசிரியர்கள் பலர்
விடை கொடுத்தேன்- அவர்களுக்கு நான்
முதலாம் பாடமாம் தரம் எட்டிற்கு விரைந்தேன் நான்
முந்த முடியவில்லை முதலாம் பாடத்தை- கணிதம் அதனை
ஆறுக்கு ஓடினேன் இரண்டாம் பாடம் கணிதம் தான்
ஆறாய் பாய்ந்தது என்ன- அங்கு தான்
ஏழுக்குப் பாய்ந்தேன விஞ்ஞானம் கற்பிக்க அங்கு என்ன
எழும்பியது விந்தைகள் பல- முதல் அனுபவம் இது
பண் இந்துவை நோக்கிய பயணம்- மதில்
காலங்கள் சில கழிந்த
காரியங்கள் மெல்ல மெல்ல- என்னிடந்தான்
கூட்டெரு கிடங்கை அல்லது குவியல் குப்பையா
சூழல் படையணியா சுற்றாடலா - என்னிடம்
மூலிகை தோட்டமா அல்லது விளையாடும் விவசாயம்
டெங்கு ஒழிப்பா பிரசாரமா - இது மட்டுமல்ல
வகுப்பாசிரியரா அல்லது வாண்மைத்துவ ஆசிரியரா
வடிவம் ஏது அதோ- நான் தான்
மண்புழு உரமா மாணவர் விசேட வகுப்பா
மண்ணோடு கலந்தது மண் வெட்டியும்
நூற்றுப்பத்துக்கு ஓர் அழைப்பு போல் என்னிடமும் தான்
நுட்பமான அழைப்பு- அதிபரும் கூட
நூற்று எட்டாய் வந்திடுவேன் நான் இங்கு

நுண்மதி சிதற- என்னவோ தெரியாது
பண் இந்துலை நோக்கிய பயணம்- மதில்
மார்கழி திங்கள் வருகி!ன்றது மாண்புடன் விடை கொடுக்கவோ
மகிழ்வோடு விளையாடிய - கல்லூரிக் காலம்
விதியுமல்ல விளையாட்டுமல்ல அது
விடைகொடுக்க வைக்கின்றது- உள்ளகப் பயிற்சி
விடைபெற முடியவில்லை எம் உறவுகளை மட்டுமா
விண்ணகம் போல் சூழலையும்- கல்லூரி

விடைபெற வேண்டியவன் நான் விடை
பெற வேண்டியது தான்
பண் இந்து நோக்கிய பயணம்- மதிலிருந்து

வி.யேசுதாசன்
உள்ளகப் பயிற்சி பண். இந்துக்கல்லூரி.
தமிழ்மொழி மூல கணிதத்துறை,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரி.



# பண்ணிசையின் சிறப்பும் பெருமையும்....

செல்வி.சி.நிர்மலா
(ஆசிரியர்)

இசை இறைவன் வடிவமாகும். கலைகள் யாவும் இறைவனிடமிருந்தே தோன்றியவை.மேலும் இறைவனை அடைவதற்கு ஏற்ற சிறந்த சாதனமும் இசையேயாகும். சுந்தர மூர்த்தி சுவாமிகள் "ஏழிசையாய் இசைப்பயனாய்" என இறைவனை விளிக்கின்றார் ஸ்ரீ தியாகராச சுவாமிகளும் "நாதத்தையே சரீரமாக உடையவன் இறைவன்!"என தமது கிருதியில் குறிப்பிடுவதோடு "ஏழு சப்தஸ்வரங்களும் இறைவனின் ஐந்து முகங்களிலிருந்தும் பிறந்தன எனவும் குறிப்பிடுகின்றார். இசைக்கு காந்தர்வ வேதம் எனவும் குறிப்பிடுகின்றார். இசைக்கு காந்தர்வ வேதம் எனவும் பெயருண்டு. காந்தர்வ வேதம் நான்கு உப வேதங்களில் ஒன்று . சிவபெருமான் கையில் டமருகமும், கண்ணபிரான் கையில் குழலும், சரஸ்வதி தேவியின் கையில் வீணையும் இருப்பது இசைக்கலையின் தெய்வீகத் தன்மையைப் புலப்படுத்தும்.

இத்துணைச் சிறப்புள்ளம் இசைக்கலையை மனிதன் தனது அறிவினாலும், புத்தி சாதுர்யத்தினாலும் இன்று வரை வளர்த்து வந்திருக்கின்றான். அக் கால பண்பட்ட சமுதாயத்தில் இருந்து எழுந்தவையே பண் இசை வடிவங்கள். மூங்கிற் கழனியினிடத்திலிருந்து வந்த இசையை உணர்ந்த மனிதன் நாளடைவில் அதையே ஓர் வாத்தியமாக அமைத்தான். அவ்வாத்தியமே இன்று வழங்கும் புல்லாங்குழல் வாத்தியமாகும். இது ஓர் இயற்கை வாத்தியமாக விளங்குகிறன்றது. குழலும், யாழும் சங்க காலத்தே சிறப்புற்றிருந்தமையை சங்கப் பாட்டால் அறியக் காணலாம். தெய்வப் புலவர் திருவள்ளுவரும் தமது திருக்குறளில் இவ்விரு வாத்தியங்களையும் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கதாகும். இன்று வெளி நாடுகளில் இசையைப் பற்றி ஆராய்ச்சி செய்து இசை மூலம் நோய்கள் தீருவதையும், பயிர்கள் வளர்வதையும் கண்டு பிடித்திருக்கிக்கிறார்கள்.

தமிழகத்தில் மிகப் பழங்காலத்தில் இருந்தே இராக முறையைப் பண்முறை என்றும், இராகங்களைப் பண் என்றும் அழைத்து வந்திருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் நெடுங்காலமாக வழங்கி வந்துள்ள இராகங்களின் ஒலி வரலாற்றை ஆராய்வோமாகில், தேவாரப் பாசுரங்கள் தோன்றிய காலத்திற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பண்கள் என்று அழைக்கப் பெற்ற இராகங்கள் தமிழ் நாட்டில் வளர்ந்து வந்தமையை அறியலாம். ஸ்ரீ தியாகராச சுவாமிகள், முத்துச் சுவாமி

தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் முதலான இசை மேதைகள் தமிழகத்தில் மரபு வழியாக வழங்கி வந்த இராக இசை மரபைக் கையாண்டே தங்கள் கிருதிகளை அமைத்துச் சங்கீத உலகிற்கு வழங்கினர். தேவாரப் பாடல்களும் திவ்விய பிரபந்த பாசுரங்களும் இந்த அடிப்படையிலேயே எழுந்தவையாகும்.

'பண்" எனும் பதம் பண்ணுதல் எனும் வினையடியாகப் பிறந்து பெருந்தானமாகிய நெஞ்சு, மிடறு நாக்கு, மூக்கு, அண்ணாக்கு, உதடு. பல், தலை ஆகிய எட்டினாலும், கிரியையாகிய எடுத்தல் (ஆரோகணம்) படுத்தல் (அவரோகணம்) நலிதல், கம்பிதம், குடிலம் ஒலி, உருட்டு, தாக்கு ஆகிய எட்டினாலும் பண்ணிப் படுத்தலாற் பண் என்று பெயராயிற்று. 'பண்" என்பது நிறைந்த நரம்புள்ளது எனவும், 7 சுரங்களுமுள்ள சம்பூர்ண இராகமெனவும் அழைக்கப்பெறும்.


இக்காலத்தே சங்கீத சம்பந்தமாக வடமொழியில் வழங்கும் ஸ்வரப் பெயர்களாகிய ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம். பஞ்சமம், தைவதம், நிஷாதம் எனும் 7 சுரங்களும் தமிழில் முறையே குரல் துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவற்றிற்குச் சமனானவையாகும். இவ் 7லிருந்து உண்டானவையே பண்களும், திறன்களும் ஆகும். பண்கள் ஏழு சுரங்களோடு கூடிய இராகங்கள் . இந்த இராகங்கள் சம்பூர்ண இராகங்களெனவும், ஜன இராகங்களெனவும் வடமொழியில் வழங்கப்பெறும்.

தமிழிசை மரபில் கீதத்தின் முதலெடுக்கும் ஸ்வரம் முதல் என்றும் கீதத்தை முடிக்கும் ஸ்வரம் முடிவு எனவும் வழங்கும். வடமொழி இசையாசிரியர் இராகங்களுக்குக் கூறிய 10 லட்சணங்களும் தமிழில் முதல், முடிவு, நிறை, குறை, கிழமை, வலிவு, மெலிவு எனும் ஏழினுள் அடங்கும்.

திருச்சிற்றம்பலத் தேசிகர் என்னும் பெரியார் தமது நாட்டில் பயிர்கள் அழிந்து மக்கள் உணவில்லாமல் வருந்துவதைக் கண்டு தமது பூசையில் மேகராகக் குறிஞ்சிப் பண்ணமைந்த திருப்பதிகத்தை ஓதுவிக்கச் செய்த பொழுது உடனே நாட்டில் மழைபெய்யத் தொடங்கி துன்பத்தை நீக்கியதென்று கூறப்படுகின்றது.

திருமுறை இசைப் பாடல்களைப் பண்ணோடு பாடினால் அவை கல் மனதையும் கரையச் செய்யும் என்பதற்கு சிறிதளவும் ஐயமில்லை. திருத்தரும புரத்தில் சம்பந்த சுவாமிகள் பாடியருளிய யாழ்முறி எனும் பண்ணைத் திருநீலகண்ட யாழ்பாண நாயனார் தமது யாழில் அமைத்து வாசிக்க இயலாது யாழை உடைக்கச் சென்றமை பண்ணின் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். எடுத்த இயலும் இசையும் இடையே முறிந்து மாறுபடுமியல்பு உடையதாய் அமைந்த இசைப் பாடல் "முறி" என அழைக்கப்படும். இத்தகைய முறிப்பாடலாக அமைந்து விளங்குவது 'மாதர் மடப்பிடி" எனும் முதற் குறிப்புடைய இத் திருப்பதிகமாகும். "எடுத்த இயலும் இசையும் தம்மின் முறித்துப் பாடுதல் முறியெனப் படுமே" என்பது சிலப்பதிகாரம்.

செல்வி.சி.நிர்மலா
உள்ளகப் பயிற்சி ஆசிரியர்
சங்கீதத்துறை
யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி.



# நுண்கலை

இ.ரமணன்
(ஆசிரியர்)

கலை என்றால் என்ன என்ற வினாவுக்கு விடை கூறுவது இலகுவான ஒன்றல்ல இதற்கு பலரும் பல்வேறுபட்ட விளக்கங்களை தந்துள்ளனர். கலை என்பது மனிதத் திறன் வெளிவருகின்ற அனைத்து வெளிப்பாடுகளையும் குறிக்கும் ஒரு சொல்லாக இருக்கின்றது. நெல்சன் குட்மன்" என்பவர் கலை என்றால் என்ன? கேட்பது தவறானது என்றும் ஒரு படைப்பு எப்போது கலையாகின்றது என்பதை வினாவுவதே ஏற்புடையது எனக்கூறுவதும் ஆராயத்தக்கது. கலை என்று கூறும் போது மனிதனால் படைக்கப்படுகின்ற படைப்புக்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. ஆடை நெய்வது தொடக்கம் அம்பலத்திகம் ஆடுவது வரைக்கும் சோதிடம் பார்ப்பதிலிருந்து சிற்பம் செதுக்கிற வரையும் சொல்லப்படுகிறது. இந்த நோக்கு நிலை காரணமாகத்தான் இந்திய இலக்கியங்கள் 64 கலைகள் பற்றி பேசுகின்றன லிவித விஸ்தரம் என்னும் மற்றுமொரு நூல் புத்தர் பயின்றதாக 72 கலைகள் பற்றி கூறுகின்றது. வர்ட்சாயனகாம சூத்திரம் கலைகளை அறிவிற்குரிய கலைகள் இன்பத்துக்குரிய கலைகள் பொழுது போக்கு நோக்கிற்குரிய கலைகள் பயன்பாட்டுக்கலைகள் விளையாட்டு, தேகப்பயிற்சிக்குரிய கலைகள் என வகைப்படுத்திக் கூறுகின்றன இதனால் கலைஎன்ற பதம் மனிதனின் பல்வேறு ஆற்றல்கள் திறன்களை குறித்து நிற்பதைக் காணலாம். இதனால் கலை என்ற சொல்லுக்கு விளக்கம் கூற முறிபடுவோமேயானால் பின்வருமாறு கூறலாம்.

கலை என்பது திறன் ஆற்றல் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப் படுகின்றது. மனித ஆக்கத்திறன் வெளியாக வருவதைக் குறிக்கும் திறன் குறிப்பாக மனிதத்திறன் இயற்கையாக உள்ளத்திற்கு எதிரிடையானது அதாவது மனிதனால் உண்டாக்கபடுவது.

ஒரு பொருளினை அதன் அமைப்பு நிலையினை அதாவது அதனைத் திறம்பட ஆக்கி நிறைவேற்றும் ஆற்றல் கலை எனப்பட்டது.

ஓவியம் கட்டிடம் சிற்பம் ஆகியவற்றில் காணப்படுவதான ஒன்றை பிரதி பண்ணும் அல்லது கற்பனை வளியாக ஆக்கும் ஆற்றல் கலை எனப்பட்டது. இவ்வாறு ஆக்கப்படுபவை எல்லாமே கலைகள் தான் அகப்பை முதல் சிமிக்கி வரை கைக்குட்டை மூகல் பூப்பாவாடைவரை அம்மி முதல் அம்மன்சிலை வரை யாவும்

கலைகளாக கொள்ளப்படுகிறது. இத்தகைய அர்த்தத்திலேயே கலாநிதி ஆனந்தகுமாரசாமி கலைஞன் பற்றிக் கூறுமிடத்து கலைஞன் என்பவன் மனிதர்களுள் பிரத்தியேகமான மனிதனல்ல எல்லமனிதர்களும் ஒருவகையில் கலைஞர்களே எனக்கூறுவது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் எல்லா மனிதர்களும் ஏதோ ஒன்றை படைக்கும் திறன் உள்ளவனாக ஆற்றலுடையவனாக காணப்படுகின்றான். இத்தகைய ஆற்றல் திறன் வளியாக படைக்கப்படும் படைப்புக்கள் கலை என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறு பொருட்பெருக்கையுடையதாக காணப்படும் கலை பொதுப்படையாக மனிதத்திறன் வெளிவருவதாக இருந்தாலும் கூட அதன் வெளிப்பாட்டு நிலையில் பேதங்களைக் கருத்தில் கொண்டு கலைகளை இரண்டு வகைப்படுத்தலாம்.

1. பயன்பாட்டுக்கலை
2. நுண்கலை

***நுண்கலை என்றால் என்ன?***

சிலவற்றை செய்யும் போது அவற்றின் பயன்பாட்டு நிலையுடன் நின்றுவிடால் அவற்றின் மேலே சென்று அவற்றை நுண்ணிதமாக்கும் தன்மை உண்டு. அந்த நுண்ணிதமாக்கும் ஆக்கத்தை ஆக்குபவர் தனது கற்பனையையும் தான் அழகு என்று கருதுபவையையும் அழகு என்று மற்றவரால் ஏற்றுக்கொள்பவரையும் அதற்குள் செலுத்தி தானே அதில் ஈடுபட்டும் அதனை ஆக்குகின்றார். அப்பொழுது அந்த ஆக்கித்திற்கு உருவும் உள்ளடக்கத்திற்கும் ஒன்றுடன் ஒன்று பிரித்துப் பார்க்முடியாத நிலையில் இணைந்து நிற்கும் இத்தகையவற்றை நுண்கலை என்று குறிப்பிடுவர்.

கவிதை
நடனம்
ஓவியம்
சிற்பம்
கட்டிடம்

போன்ற யாவும் நுண் கலையாகச் சொல்லப்படுகின்றது. நுண்கலைகளை Fine Arts என்று சொல்லுகின்றோம். Fine என்ற சொல் உயர்தரமானது, சுத்தமானது, மென்மையானது, பளிச்சென புலப்படும் வகையில் மோடி செய்யப்பட்டது, நுண்ணியதாக உணர்ச்சிகளைக் காட்டுவது உயர்நிலைப்பட்டது போன்ற கருத்துக்களைக் கொண்டது நுண்கலை என்பது ஓரளவிற்கு விளக்கம் தர முடிகின்றது.

எமது உள்ளத்தையும் அழகு உணர்ச்சிகளையும் கவர்பவையாக அவற்றை தொழிற்பட செய்வவையாக உள்ள திறன்களை நுண்கலை என்போம்? இத்தகைய நுண்கலைகள் மனிதனின் நுண்கலைகளின் வெளிப்பாடுகளாகவும், மனிதப் பண்பாடுகளின் வெளிப்பாடுகளாகவும் விளங்குகின்றன. இக்கலைகளின் மூலம் மனித நாகரிகங்கள் அறியப்படுகின்றன.

***கலை என்றால் என்ன?*** என்ற வினா ஏற்புடையதொன்றாகக் காணப்படவில்லை. இவ்வினாவிற்கு இலகுவான விடை கூறவும் முடியாது கலை என்ற பதத்திற்கு பலரும் பல்வேறுபட்ட விளக்கங்களை கொடுக்கின்றனர்.

***நெல்சன் குட்மான்*** என்பவர் கலை என்றால் என்ன என்பது ஏற்புடையதல்ல என்றும் ஒரு படைப்பு எப்போது கலையாகிறது என்யது கேட்பதே ஏற்புடையது என்பதற்கு காரணங்களை காட்டுகிறார். பயன்பாட்டு நோக்கத்திற்காக செய்யப்படும் எத்தனையோ பொருட்கள் பின்னொரு காலத்தில் கலைப்படைப்புக்களாக போற்றப்படுவதும் உண்டு. கலைக்கூடங்களிலும், காட்சியறைகளிலும் இத்தகைய பொருட்கள் பலவற்றினைப் பார்க்கின்றோம்.

உ + ம் :- வீட்டுப்பாவனைக்கு பயன்படுத்தப்படும் ஒரு தட்டம் அதனுடைய அழகிய வேலைப்பாடுகள் கலை நுட்பம் கருதி ஒரு சிறந்த கலைப்படைப்பாக போற்றப்படலாம். எனவே கலை என்றால் என்ன என்று வினாவுவதை விட ஒருபடைப்பு எப்போது கலையாகிறது எனப்பொருத்தமானதாகவுள்ளது.

***கலைகளின் பாகுபாடு என்றால் என்ன?***

கலைகளைப்பற்றி ஆழமாக அறிந்து கொள்வதற்காக அவற்றை நுண்கலைகள், பயன்பாட்டுக்கலைகள் என்று நோக்குகின்றோம். நுண்கலைகள் அழகை வெளிப்படுத்துவதை நோக்கமாகவும் பயன்பாட்டுக் கலைகள் பயன்பாடு என்ற அம்சத்தை நோக்கமாகவும் கொண்டுள்ளன. நுண்கலைகள் அழகாக இருக்கும் அதே நேரத்தில் பயன்பாடு உடையனவும் கூட இதே போன்று பயன்பாட்டுக்கலைகள் பயன்பாடுடையனவாக இருப்பதுடன் அழகாகவும் இருக்கின்றன. எனவே அழகு பயன்பாடு என்ற அடிப்படையில் கலைகளை பாகுபாடு செய்வது பொருத்தமான ஒன்றல்ல. ஒரு படைப்பின் கைவினைத்திறன் அழகு, பயன்பாடு ஆகிய யாவும் இணைந்திருப்பதைக் காணலாம்.

நுண்கலைகள் தமக்கே உரிய சில பண்புகளை உடையவையாக காணப்படுகின்றன.

1. மீளுருவாக்கம் செய்யமுடியாதவை
2. குறியீட்டுப்பாங்கானவை.
3. உருவமும் உள்ளடக்கமும் உடையவை
4. செய்திப் பரிமாற்றம் செய்பவை
5. அழகியல் அனுபவத்தை உடையவை கற்பனை

அரிஸ்ரோட்டில் கலை பற்றி கூறுமிடத்து ஒன்றைப் பிரதி பண்ணுவதே கலை என்று கூறுகிறார். ஆனால் இது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதன்று ஏதோ ஒன்றை பிரதிபண்ணக் கூடியது கலை அல்ல. கலைஞன் தான் கண்டதை அப்படியே உருவாக்கப்படுவது இல்லை. அவன் வாழ்வில் பார்த்து இரசித்தவற்றால் தனது மனதில் ஏற்பட்ட உள்ளக்கிளர்ச்சியினால் உந்தப்பட்டு தனது கற்பனையையும் இணைத்துத்தரும் புறவடிவமே கலை அது உருவப்பண்பு, குறியீட்டாக்கம், செய்திப்பரிமாற்றம் என்பது காரணமாக முன் உதாரணப்படுத்தப்படுகிறது. இந்நிலையில் அது கலை என்று அழைக்கப்படுகின்றது.

மிளுருவாக்கம் செய்யமுடியாத பண்பு கலையின் தனித்துவமான அம்சம் ஆகும். உதாரணமாக லியானாடோ டாவின்சியின் ஓவியத்தை ஒருவன் பிரதி உரு செய்தாலும் அதன் மூலத்திலிருந்து வேறுபட்டே காணப்படும் மூலத்திற்குரிய

தனிச்சிறப்பை அது பெற்றுவிட முடியாது கலைக்கு கலை கலைஞனுக்கு கலைஞன் உழைப்பும் முயற்சியும் கற்பனாசக்தியும் வேறுபடுகின்றது. கலைப்படைப்புக்கள் கலை அல்லாதனவற்றினில் இருந்து வேறுபட்டு நிற்பதைக் காணலாம். இந்தவகையில் இத்தகைய விளக்கங்களின் அடிப்படையில் நாம் கலைகளை விளங்கிக் கொள்ளமுடியும்.

கலை என்பது குறிப்பிட்ட ஒரு சமூகம் பெற்றுக் கொள்ளுகின்ற அக அனுபவங்களின் உணர்வு பூர்வமான வெளிப்பாடுகளை கலை காட்டி நிற்கின்றது.

R.G றோலிங் வூல்ட் என்பவர் கலை என்பது மனித உணர்வுகளின் வெளிப்பாடு என்கின்றார். அரவிந்த அழகைக் கண்டு பிடித்தலும் அதனை வெளிப்படுத்தலும் கலை என்கிறார் எறிக் நியூட்டன். தான் பெறுகின்ற அனுபவத்தை பிறரும் அனுபவிக்க வைப்பதே கலை என்கிறார். கொனிக்மன் என்பவர் இதை அழகாக வரைவிலக்கணப்படுத்துகிறார். கலை என்பது ஒரு உணர்வினை அல்லது அனுபவத்தை வெளிப்படுத்துவதிலும் தொடர்புபடுத்துவதிலும் மனிதத்திறன் வெளிப்படுத்தும் ஒருமுறையாகும்.

ஒரு வகையில் கலை என்பது ஒரு மீளுருவாக்கச் செயற்பாடு தான் அதாவது ஒரு அனுபவத்தின் மீளுருவாக்கம் அக அனுபவத்தின் பிற உருவாக்கம் அதாவது புற வாழ்க்கையில் பெறப்பட்ட அனுபவங்கள் அகத்தினுள் ஏற்படுத்திய அனுபவத்தின் மீளுருவாக்கமே கலையாகும்.

இவ்வாறு கலை உருவாகும் போது கலைஞர்கள் எமக்கு மிகப்பரீட்சயமான வடிவங்களின் ஊடாக அதனை வெளிப்படுத்துவர் அவர்கள் வெளிப்படுத்தும் வடிவமும் இந்த வடிவமும் தன்னுள் பொதிந்து வைத்திருக்கின்ற செய்தியை தனித்தனியே இருப்பவை ஆயினும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாதவை உருவமும் உள்ளடங்கும் தொழிற்படுகின்றன. கலை சமூகத்தில் ஆக்கச் சுட்டி என்ற வகையில் பண்பாட்டை வெளிப்படுத்தும் முக்கிய அளவுகளில் ஒன்றாக இருக்கும் பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் பௌதீக நிலைப்பட்டதுமான கருத்து நிலைப்பட்டதுமான வெளிப்பாடுகளின் தொகுதி என்ற வகையில் கலை பண்பாட்டை நோக்கிய வெளியாகும்.

பண்பாட்டிற்கு பண்பாடு அதன் இயல்புகளுக்கு ஏற்ப கலைகள் பயிலப்பட்டு வந்திருக்கின்றன. கலை இல்லாது எந்த சமூகமும் இருந்ததில்லை ஏனெனில் உணர்ச்சி வெளிப்பாடும் அழகியல் நாட்டமும் மனிதனின் அடிப்படையான இயல்பு ஊக்கங்களோடு சம்பந்தப்பட்டு இருந்தது தான் அடிப்படையில் கலை என்பது ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் பாலமாக இருக்கின்ற ஒரு அழகியல் வெளிப்பாடாகும் அதனால் கலை சமூக வெளிப்பாட்டிற்கு உதவும் ஒரு காரணியாக இருக்கின்றது.

**கலை வடிவங்கள்**

மொழி என்பது தொடர்பாடுகின்ற ஓர் ஊடகம் என்கின்ற வகையில் எல்லாக்கலை வடிவங்களையும் மொழி எனப்படலாம். ஓவிய மொழ எனவும் நடன மொழி எனவும் கூறிக்கொள்ளலாம்.

ஒவ்வொரு கலைவடிவமும் தன்னுடைய சாதனங்களை சாத்தியப்பாடுகளாலும் வரையறைகளாலும் தன்னுடைய மொழியை விருத்தி செய்து கொள்கின்றது இவ்வாறு ஒவ்வொரு கலை வடிவத்தினது மொழியும் காலம் காலமாக நிர்ணயிக்கப்பட்டு வந்திருக்கின்றது. நீண்டகால மனித குலத்தின் தேடுதல்களின் கண்டுபிடிப்புக்களாக கலையின் மொழியும் விருத்தியுற்றது.

கலை மொழி, இவ்வாறு காலம் காலமாக உருவாக்கப்பட்ட ஒரு குறியீட்டு மொழியாகும். விஞ்ஞானமும் தனக்கான குறியீட்டு மொழியினை விருத்தி செய்திருக்குதாயினும் அது அறிவு பூர்வமானது. உணர்ச்சி வெளியீட்டு அம்சமற்றது. ஆனால் கலையோ உணர்வின் நிலையை தோற்றி நிப்பது. இது தான் கலையின் மொழியின் சிறப்பம்சங்களின் பிரதானமானது. பொதுவாக எல்லாக்கலை வடிவங்களிலும் கலைவடிவங்களிலும் தம் சாதனைகளிலும் வெளிப்பட்ட உருவம் உள்ளடக்கம், வெளி, ஒத்திசைவு கொண்டிருக்கும்.

**ஓவியம்**

ஓவியம் என்பது நிறவெளிப்பட்ட கோடுகளின் ஒத்திசைவுகளால் உருவாக்கப்படுவது இருபரிமான வெளியில் வர்ணம் கோடுகள் அவை ஸ்தாபிக்கும் உருவங்கள் அவை இயங்கும் வெளி அதில் படர்ந்திருக்கின்ற ஒளியும் நிழலும் போன்ற விடயங்கள் ஓவியத்தின் மொழியை உருவாக்கின்றது. உ+ம் இந்த மொழியை உபயோகித்தலில் சமூகத்திற்கு சமூகம் தனிமனிதர்களுக்கிடையில் வேறுபாடு காணப்படுகின்றது. சீன ஓவியத்தில் படர்ந்திருக்கின்ற ஒளி அவர்களின் தத்துவக் கண்ணோட்டத்திலிருந்து வருகின்றது. அந்த ஓவியத்திலிருக்கின்ற சிறிய மனிதர்களும் பெரிய மலைகளும் மரங்களும் இயற்கையோடு ஒப்பிடும் பொழுது சிறிதாக இருக்கும் மனிதனைப் பற்றியும் பேசுகின்றது. இராஜபுத்தான ஓவியத்திலிருக்கின்ற வர்ணப் பிரயோகம் அவர்களின் கண்ணன் பற்றிய பிரமைகளிலிருந்து எழுவதாக அமைகின்றது.

இவ்வாறு மொழி உருவாக்கத்தில் சிந்தனை வேறுபாடு தொழிற்படும் அதே பட்சத்தில் அழகியல் பற்றிய நோக்கு நிலைகளும் தொழிற்படுகின்றது. உ+ம் மேலைப்புல ஓவியர்கள் மனித உடலை உடற் கூற்றியலின் சகல விதிகளோடும் படைப்பதன் மூலம் அழகு கொண்டு வரப்படும். ஒரு காலத்தில் நம்பினார்கள். ஆனால் இந்திய அழகு நோக்கு நிலையோ பௌதிக தோற்றம் பற்றி அலட்டிக் கொள்வதில்லை. பதிலாக உள்ளார்ந்த உறைந்து கிடக்கின்ற உண்மையை வெளிப்படுத்துதலே அழகு என்று கருதியது.

இதே வேளை தொழில்நுட்பவிருத்தி அல்லது தொழில்நுட்பத்தின் வரையறைகள் என்பனவும் ஓவியங்களில் வேறுபாடு உண்டாக்குகின்ற காரணங்களாகும்.

வர்ணமே ஓவியத்தின் மிக பிரதான இடத்தைப் பெறுகின்றது. வர்ணத்தை பொதுவாக பின்வருமாறு வகுத்துப்பார்ப்பார்கள்.

1. முதன்மை வர்ணம் மூலவர்ணம்

நீலம், சிவப்பு, மஞ்சள் இந்த மூன்று வர்ணங்களும் பெரும்பாலும் ஏனைய வர்ணங்களை கலப்பதனால் உருவாக்கப்பட்ட முடியாதவை.

2. துணை வர்ணங்கள்

செம்மஞ்சள், பச்சை, ஊதா

3. பொது வர்ணங்கள

கறுப்பு, வெள்ளை

4. வெப்பு வர்ணங்கள்

சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள்

இவை தன்னுடைய வரை பரப்பிலிருந்து முன்நோக்கி வரக்கூடிய தன்மையுடையன.

5. குளிர்வர்ணம்

பச்சை, நீலம், ஊதா தூரத்தை உருவாக்க இவை பெரிதும் உதவும் இவ்வாறு வர்ணம் பற்றிய சில விதிமுறைகள் சொல்லப்பட்டாலும் படைத்தலின் போது கலைஞர்கள் தமது நோக்குநிலையில் நின்று வருவதுண்டு.

கோடுகள் ஓவிய மொழியின் முக்கிய அம்சங்கள்களில் ஒன்றாக இருக்கின்றது. நிலைக்குத்தானகோடுகள், கிடையான கோடுகள், வளைகோடுகள் இன்னும் ஓவியதத்தின் தூரிகை வருகின்றகோடுகள், கூட்டுணைந்து உருவங்களை உருவாக்குகின்றது. மெல்லிய கோடுகள் ஒருவகையான உணர்வினையும் தடிப்பான கோடுகள் இன்னொரு வகையான உணர்வினையும் விளக்கும், தடிப்பான கோடுகள் முப்பரிமானத்தன்மையை உருவாக்ககூடியது. அதாவது சிற்ப வகையான உணர்வினை புலப்படுத்தக்கூடியது.

வர்ண வெளிப்பட்ட கோடுகள் உருவங்களை உருவாக்குகின்றன. இந்த உருவங்கள் ஓவிய வெளியினுள் நடமாடவிடப்படும். கோட்டின் இளைப்பொறுத்து அசைவுத்தன்மையைப் பெறும் அல்லது நிலையான தன்மையைப் பெற்றுக்கொள்ளும் இந்த உருவங்கள் கேத்திர கணித தன்மையுடையனவாக இருக்கும். அதேபடசத்தில் அதற்கு அப்பாலும் நகரக்கூடியன அவற்றின் ஒத்திசைவு ஓவியதத்தில் மிகவும் அவசியமாகும்.

ஆரம்பகால ஐரோப்பிய பாரம்பரியம் உடற் கூற்றியலின் சகல அம்சங்களையும் வெளிப்படுத்துமாறும் உருவங்களை சித்தரிக்கின்றது நவீன ஓவியங்களோ ஏற்கனவே சொல்லப்பட்ட உருவ ஒழுங்கை சிதைத்தார்கள். இந்த உருவச் சிதைப்பின் மூலம் வந்த முக்கியமான ஒரு மோடியே அரூபம் எனப்பட்டது ஏற்கனவே எங்களுக்கு தெரிந்த வடிவம் அற்றது அரூபம்.

நிறவெளிப்பட்ட கோடுகளால் உருவாக்கப்பட்ட வடிவங்கள் குறிப்பிட்ட ஒருவெளியில் சித்தரிக்கப்படுகின்றன. ஆகவே ஓவிய மொழியாக்கத்தில் வெளிபற்றிய சிந்தனை முக்கியமாகின்றது. இன்னொரு வகையில் சொன்னால் வெளியைக் கையாளுதல் ஓவியமாகும். வெளி தொலையை உருவாக்கக்கூடிய இந்த தொலைவு உருவாக்கத்திற்கு கட்புல மாயை ஏற்படுத்தக்கூடிய சில உத்திகள் உருவாக்கப்படுகின்றன. எனவே வெளிபற்றி உணர்வு வெறுமனவே வெளியினால் மட்டுமன்றி வெளியுள் இயங்கும் உருவங்களாலும் கொண்வரப்படுகின்றது. இவற்றின் ஒத்திசைவு வர்ணங்களில் விழுகின்ற ஒளி படர்திருக்கின்ற நிழல் இவையெல்லாம் சேர்ந்து ஒரு தொனியை உருவாக்குகின்றது. அந்தத் தொனிதான் அந்த ஓவியம் சொல்ல வந்த செய்தி (அலங்கார உத்திகள், மேற்பரப்பின் தன்மைதொனி, ஒழுங்கமைப்பு)

**நடனம்**

நடனம் என்பது வரையறுக்கப்பட்ட வெளியில் லய பூர்வமான உடலசைவுகளின் மூலம் உருவாக்கப்படுகின்ற ஒருகலை வடிவமாகும். மனித உடலே இதன் பிரதான சாதனம் என்ற வகையில் உடல் மொழி இதில் பிரதான இடம் பெறுகின்றது.

உடல் மொழி என்பது உடலுறுப்புக்களினால் உருவாக்கப்படுவது இதனைத் தான் பரதர், அங்கம், பிரத்தியங்கம், உபாங்கம் போன்ற சொற்களினால் குறிப்பிடுவர். இவற்றின் செயற்பாட்டினால் இந்த மொழி உருக்கொள்கிறது. பரத சொல்லுகின்ற அபிநயம் என்பது இந்த மொழியைத் தான் குறிப்பிடுகின்ற பரதர் அதனன் நான்காக வகுப்பர்.

ஆங்கீகம் - முத்திரைகள், அசைவு
அபிநயம் - குரலும் வார்த்தைகளும்
ஆவரார்யம - மேடை, உடை ஒப்பனை மேடைப்பொருட்கள்
சாத்வீகம் - அக உணர்வின் முக வெளிப்பாடு

இதேவேளை நடனப்பாரம்பரியத்தை இந்திய மரபு மூன்றாக பிரித்து பார்க்கிறது.

நாட்டியம் - நாடகம்
நிருத்தம் - பாவம் கலவாதா ஆடல்
நிருத்தியம் - பாவம், அசைவு

பாவம் கலந்த நடனம் உடல் மேடைப் பொருட்கள் ஆகிய முப்பரிமான இயல்புடையன. இந்த முப்பரிமான உருக்கள் தாமியங்கும் முப்பரிமான வெளியில் தொடர்பாவங்களால் தன்னுடைய உணர்ச்சியை பரிமாற்றுகின்றன. வெளியினுடைய அளவு (படிவம், பரப்பு) அதனுடைய வர்ணம் ஆகியன நடனத்தின் மொழி உருவாக்கத்தில் முக்கியமான பங்கெடுக்கின்றன. பங்கெடுப்பது மாத்திரமன்றி நடனத்தின் மொழியில் தாமும் அங்கமாகின்றது.

அசைவுகள் தமக்குள் சில நிலைகளையும் கொண்டிருக்கின்றது. அந்த நிலைகள் அளவுகளின் அழுத்தங்களாக இருக்கின்றது. இந்த அசைவில் உடல் முழுவதும் தொழில் பட்டாலுட் கால்களுக்கும் கைகளுக்குமே பிரதான இடமிருக்கின்றது. கால்கள்தான் அசைவின் லயத்தைப் பேணுகின்றது. இவ்வாறு அசையும் பொழுது மேடையினுடைய வெளியில் சில தளக்கோலங்கள் உருவாகும்.

இந்திய நடனத்தைப் பொறுத்தவரைக்கும் இந்த அசைவில் பங்கு கொள்ளுகின்ற நுண்ணிய விடயங்கள் வரை கவனம் செலுத்தப்படும் கண்கள், கண்ணில் இருக்கும். கருமணி புருவங்கள் நெற்றிச்சுருக்கங்கள் கவனிக்கப்படுகின்றது. இந்த மரபு மேலைத்தேயத்திற்கு அநேகமாகவில்லை. முகபாவம் என பெரியளவில் மேலை புல நடனங்களில் கவனிக்கப்படவில்லை. அவங்கள் உடலின் பெரிய உறுப்புக்களின் வழி வருகின்ற அசைவுகளிலே தங்கியிருக்கின்றது. பூமியிலிருந்து மேற்கிளம்பி அசைகின்ற மரபும் மேலைப்புலத்தில் அவதானிக்கக்கூடியது கீழைத்தேயத்திலும் சில செந்நெறி பாரம்பரிய நடனங்களிலும் சில கிராமிய நடனங்களிலும் காணலாம்.

அடுத்த கட்டத்தில் ஆடுபவனின் வேடப்புனைவுகள் மொழியாக்கத்தில் முக்கிய பங்கு கொள்கின்றன. அது நடன வகையைப் பொறுத்து அதன் தேவைகளை பொறுத்து கண்டெடுக்கப்படுகின்றது. கதகளியின் மொழியில் அதன் வேட உடை மிகப்பிரதான இடம் வகிக்கின்றது. அது ஒரு பாரிய தன்மையை ஒரு பொருட்காட்சியை உருவாக்குவதே கருத்தினில் பரிமாற்றுகின்ற தன்மையைக் கொண்டது. நீலம், பச்சை, கண்ணைக் குறிக்கும் கறுப்பு கொடிய பாத்திரத்தைக் குறிக்கும். வர்ணம் பற்றிய சிந்தனை மேடை வெளியிலும் கவனிக்கப்படும்.

இசை நடனத்தோடு உடன்பிறந்த பிரிக்கமுடியாத மற்றொரு மொழிக்கூறாக இருக்கின்றது. இசையே அசைதலின் ஊக்கியாக நடனத்திற்கு ஊக்கியாக தொழிற்படுகின்றது. இந்த இசை லயப்பிடிப்பு கூடுதலாக இருக்கின்றது. மேலைத்தேய நடனங்கள் முழுமையாக தூய இசையில் தங்கியுள்ளது. இந்திய மரபைப் பொறுத்த வரையில் இலக்கியம் இசையோடு சேர்ந்து கொள்கிறது. அதாவது இசை வெளிப்பட்ட பாடல்களும் இந்திய நடனத்தின் மொழியில் முக்கிய பங்கெடுக்கின்றது. அதேவேளை தூய இசை வெளிப்பட்ட நடனங்களையும் பார்க்கக்கூடியதாகவுள்ளது.

## நாடகம்

ஒருவர் இன்னொன்றாக செய்து காட்டுகின்ற உருமேற்கொள்ளுதலே அடிப்படையாகக் கொண்ட கலை வடிவங்களாக நாடகம் காணப்படுகின்றது. மேடை என்கின்ற வெளியில் (அரங்க வெளியில்) அசைவு, ஒலி, மொழி, மற்றும் காட்சி விதானிப்பு, வேட உடைப்புனைவு ஆகியவற்றினால் தன்னுடைய செய்தியை வெளிப்படுத்தும் வடிவமாக இது காணப்படுகிறது.

ஒரு செயலின் பாவனையே நாடகம் என்றார். அரிஸ்ரோட்டில் கண்ணுக்கும், காதுக்கும் உரிய ஒரு கவிதை என்கின்ற பொருளில் சமஸ்கிருதத்தில் (கிறவ்விய) கேட்டல் திருஸ்சிய (பார்த்தல்) காவி (காவியம்) பீற்றர் புறூக் என்பவர் ஒலி, மொழி, வெளி, அசைவு ஆகியன நாடகம் என்கிறார். இளம் பூரணர். சுவைபட வந்தனவெல்லாம் ஓரிடத்தை வந்தனவாக என்று தொகுத்து கூறுவது நாடகம் என்றார்.

நாடகம் என்னும் சொல்லிற்கு சமனாக ஆங்கிலத்தில் Drama என்னும் சொல் உபயோகிக்கப்படுகிறது. அதன் கிரேக்க மூலம் Dramenon நாடகத்திற்கு நிகழ்த்துவது என பிரயோகிக்கப்படுகிறது. நாடகம் ஆடப்படுகின்ற அரங்கை ஆங்கிலத்தில் தியேட்டர் என குறிப்பிடப்பட்டது. அதன் கிரேக்க மூலம் Theraton பார்க்கும் இடம் எனும் பொருளையுடையது இந்த வகையில் நாடகமென்பது நிகழ்த்தப்படுவது என்ற வகையில் அது நிகழ்த்துவதற்கான இடமென்ற ஒன்றை தன்னுள் கொண்டிருக்கின்றது.

அதனைப்போலவே அரங்கு என்பது பார்க்குமிடம் என்கின்ற வகையில் பார்ப்பதற்கான ஏதோ ஒன்றினை தன்னுள் கொண்டிருக்கின்றது. அதன்படி பார்த்தால் நாடகத்தால் அரங்கும் அரங்கால் நாடகமும் முழுமை பெறுகின்றது. அது ஒன்றையொன்று சாருவதால் தான் தம்முடைய முழுமை நிலைக்குச் செல்கின்றது.

எனவே நாடகமென்பது அரங்க வெளியில் நிகழ்வது தான் நாடகம் அது. தன்னுடைய சாதனமாக உயிருள்ள மனிதர்களை கொண்டுள்ளது. மேலும் நடனத்தைப் போலவே நாடகம் ஓர் ஆற்றுகைச் சுவையாகும். அதாவது பார்வையாளரை

உடனே எதிரே வைத்திருக்கின்ற கலைவடிவமாகும் என்றவகையில் அதற்கு கீழ்வருகின்ற சில இயல்புகள் இருக்கின்றது.

1. ஒரு சிறு குழு பெரும் குழுவினர் முன்னிலை ஆற்றுகை செய்கின்றனர்.
2. உருவாகும் கணத்திலே இல்லாதுபோகும்
   (உ+ம்) நடனம், சங்கீதம், பிறக்கும் கணத்திலே இறக்கும்)
3. பார்வையாளரின் எதிர்வினையை உடனடியாகப் பெறும்.
4. கட்புல, செவிப்புல கலையாக பெரிதும் இருக்கும்.
5. உயிருள்ள மனிதர்களின் முன்பே உயிருள்ள மனிதர்களின் (மனிதர்களே சாதனங்களாகும்)
6. வாழ்வைப் போன்ற தன்மையைக் கொண்டிருக்கும்.

இவ்வாறு உருமேற் கொள்ளுதலை எமயமாகக் கொண்ட இக்கலைவடிவம் அந்த உருமேற் கொள்ளுதலை அல்லது நடிப்பை முழுமைப்படுத்தலே நாடகத்தில் வருகின்ற பிற மூலகங்களைப் பயன்படுத்துகின்றது.

உதாரணம்:- வேட உடை ஒப்பனை

நடிகனை பௌதீக நிலையில் முழுமைப்படுத்தும் காட்சி விதானிப்பு

நடிகன் அல்லது உருமேற்கொள்பவர் வாழ்கின்ற சூழலை உருவாக்குகின்றது. இசை அவனது சூழலையும் உணர்வுகளையும் உருவாக்குகின்றது. என்ற வகையில் உருமேற் கொள்ளுதலே முழுமைப்படுத்துவதற்காக ஏனைய மூலகங்கள் இங்கு தொழிற்படுகின்றது. அதேவேளை அவை தம்முடைய மூலத்தின் வழிப்பட்ட வியாக்கியானத்தையும் கொண்டிருக்கும் என்ற வகையில் நாடகத்தில் பின்வரும் மூலகங் காணப்படுகின்றன.

- நடிப்பு
- வேட உடைப்புனைவு ஒப்பனை
- காட்சி விதானிப்பு
- இசையும் ஒலியும்
- ஒளி அமைப்பு
- அரங்க வெளி
- பார்வையாளர்

போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறு பல்வேறு கலைவடிவங்கள் இணைவதால் நாடகத்தை கூட்டுக்கலையென சொல்வதுண்டு. அது இசை, ஓவியத்தின் வர்ணங்கள் சிற்பத்தின் திணிவு என்ற வகையில் இது விளங்கப்படுத்தப்படும் ஆனால் இந்த கருத்தை மறுதலிப்பவர்களும் காணப்படுகின்றார்கள். அவர்கள் நாடகத்தை தனியொரு கலைவடிவமாகப் பார்பார்கள். அவர்கள் வர்ணமோ ஒலியோ அசைவோ இல்லாது தம்முடைய மூலத்தின் இயற்கையே தாய் நிலமாக கொண்டிருக்கின்றது என்னும் பொழுது இயற்கையிலிருந்தே அனைத்து கலை வடிவங்களும் தமக்கு தேவையானவற்றைப் பெற்று கொண்டன எனக்கூறுவர் மேலும் நாடகம் தன்னுடைய வெளிப்பாட்டின் தனியொரு கலைவடிவமாக இருக்கின்றது என்கின்ற வகையிலும் அது ஒரு தனிக்கலை தான் ஆனால் பல்வேறு கலைஞர்கள் கூட்டிணைகின்றார்கள் என்ற வகையில் நாடகம் கூட்டுக்கலை என்று சொல்லலாம். இங்கு அவதானிக்கவேண்டியது என்னவெனில் அவர்கள் கூட்டுணைந்து தனியொரு கலைவடிவத்தினை உருவாக்கி தருகின்றார்கள் என்பதாகும்.


நடிப்பு என்பதில் நடிகனின் உடலும், குரலும் முக்கிய பங்கேற்கின்றது. இவ்விரண்டும் தான் மிக முக்கியமாக நாடகத்தின் கட்புல செவிப்புல அம்சங்களைப் பூர்த்தி செய்கின்றது. உடல் என்பதுள் உடலின் நிலை, அசைவு உடலின் பாவம், நெகழ்வு, விறைப்பு ஆகிய முக்கிய இடம் பெறுகின்றது. அதேபோல் குரல், குரலின் தொனி, தன்மை, வீச்சு போன்றன முக்கிய இடம் பெறும். அடுத்து அவனுக்கு உதவும் காண்டியம் என்ற வகையில் வேட்டையினுடைய வர்ணம், அமைப்பு, தன்மை மற்றும் காட்சி விதானிப்பின் அமைவு அங்கு காணப்படுகின்ற வர்ணங்கள், மட்டங்கள், வெளி ஆகியன அது தவிர்ந்த மொழியாக காணப்படும் இவற்றோடு கூட்டிணையும் ஒளியும், வர்ணம், செறிவு ஆகியன காண்பீக மொழியில் முக்கிய இடம் பெறுகின்றது.

அவனது குரலைவிட தொழிற்படுகின்ற கேட்பியங்களில் இசை முக்கியமானது சிலவேளை அவனது குரல் இசை வெளிப்படுவதும் உண்டு. இந்த வகையில் இசையின் இராகம், தாளம் அவற்றின் ஊடாக வெளித்தெரிகின்ற தொனி, கருவிகளின் இசை ஒளி விளைவுகள் ஆகியன கேட்டிய மொழியில் இடம்பெறும் இவையாவும் ஏற்கனவே சொன்னபடி கூட்டுணைவதன் மூலம் அரங்க மொழி உருவாக்கப்படுகின்றது. அந்த மொழி நிகழ்த்திக் காட்டுவதை முதன்மைப்படுத்தியதாகக் காணப்படுகின்றது.

இ.றமணன்
(ஆசிரியர்)



பண் இந்துக்கல்லூரியின் ஆசிரியர் குழாம்



து. தனஞ்சயன்
(மாணவன்)

# நோய்களைக் குணப்படுத்த சிலவழிகள்

### *சிரிப்பு மருத்துவம்*

தினமும் கொஞ்ச நேரம் மனம் விட்டு வாய்விட்டு சிரித்து வரும் பழக்கத்தை நாம் மேற்கொண்டால் வைத்தியரை அனுக வேண்டிய தேவை இல்லை. மனதை மட்டுமன்றி உடலையும் சீராக்குவது சிரிப்பு ஆகும்.

ஆக்கிலோசிஸ் ஸ்பான்டிலைட்டிஸ் என்ற பயங்கர மூட்டு நோயால் பீடிக்கப்பட்டவர்கள் "சான்டர் டே ரிஷ்யூ" இதழாசிரியர் நார்மன் கசின்ஸ் இவர் பிழைக்க வாய்ப்பு 500ல் ஒன்று நான் தினமும் பத்து நிமிடம் வயிறு குலுங்க சிரித்தால் அதிரினல் சுரப்பிகளை ஊக்குவித்து உடம்பின் நோய் எதிர்ப்புச் சக்தியை பெருக்கி அன் நோயில் இருந்து குணமடைந்தார்.

மூளையின் அடிப்பாகத்தில் உள்ள பீட்யூட்டரி சுரப்பியைச் சிரிப்பு தூண்டுகிறது.இதனால் அதில் வளர்ச்சி உயிரணுக்கள் சரியான அளவு ஏற்படுத்துகின்றது. மூளையின் நுட்பமான இரத்தக் குழாய்களில் இரத்த ஓட்டத்தை விரைவுபடுத்தி மூளை தெளிவு பெறுகிறது.

சிரித்துக் கொண்டே சாப்பிடும் போது செரிமானம் சிறக்கின்றது. குடல் ஊக்கிவிக்கப்படுகின்றது. அதிகமாக சிரிப்பவர்களுக்கு மலச்சிக்கல் ஏற்படாது.

சிரிப்பு குரதியில் உள்ள கொழுப்பு சக்தியின் அளவை குறைத்து இதயநோக்கு மருந்தாகவும் அமைகிறது.

### *தண்ணீரில் மருத்துவம்*

நமது உடலில் 80% தண்ணீரால் ஆனது. 'உலகமும் சுமார் 71% நீரினால் ஆனது உடலில் 10% குறைந்தால் நலம் கெடுக்கிறது 20% குறைந்தால் உயிர் போகிறது.

தாகம் எடுத்தால் மட்டுமே நீர் அருந்த வேண்டும் என்பது சரியல்ல. ஒரு நாளைக்கு ஒருமனிதன் குறைந்தது 8 டம்ளர் நீராவது அருந்த வேண்டும். தண்ணீர் போதிய அளவு அருந்தாவிட்டால் சிறுநீரக இயக்கம் பாதிப்படையும் நீர் குறையும் போது சிறுநீரகத்தில் உள்ள உப்புக்கள் கல்லாகி தங்கும் இதனால் மலச்சிக்கல், தலைவலி, நரம்பு தளர்ச்சி ஏற்படும்.

தண்ணீர் அடிக்கடி பருகுவதால் ஏற்படும். நன்மைகளாக உணவு சரியாக செமிக்கும். சுரப்பிகள் தூண்டி விடப்பட்டு சீராகச் சுரக்கும் இரத்தம் உடலெங்கும் பரவும். உடலின் நச்சுப் பொருட்கள் கண்ணீர் வியர்வை சிறுநீரகம் வெளியேறும் மேனி பளபளக்கும். எலும்பு பலப்படும்.

கொலரா நோய் வந்து வாந்தி எடுப்பவர்கள் நீர் அளவு உடலில் குறைந்தே இறக்கிறார்கள். வயிற்றுப் போக்கால் இறப்பு ஏற்படுவதற்கும் இதுவே காரணம் இன் நிலையில் நிறைய நீர் பருகினால் மரணத்தில் இருந்து மீளலாம்.

### தேன் மருத்துவம்

ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு தேக்கரண்டி தேன் பருகினால் கீழ்கண்ட நோய்கள் வராமலும் வந்தால் குணப்படுத்தவும் முடியும்.

சீரணம் வயிற்று உறுப்புக்கள் சம்பந்தப்பட்ட நோய், இதயம் நுரையீரல் கோளாறுகள், நரம்புத் தளர்ச்சி, சிறுநீரகம் சம்பந்தப்பட்டவை, இரத்தச்சோகை, தூக்கமின்மை, பல், தொண்டை, காது, கண்ணோய், சருமத்தொல்லை, விஷக்கடி போன்றவற்றிற்கு நம்பகமான ஒரே ஒரு சர்வதேச நிவாரணி தேன்.

நூறு ஆண்டு வாழ வழிவகுக்கும் தேன் 123வயதில் 73 மைல் நடந்த ஒருவர் தான் தினமும் தேன் பருகுவதாகவும் இதனாலே தன்னால் இவ்வாறு நடக்க முடிந்தது என்று ஒரு நேர்காணலில் கூறினார். இவரது 98 வயதில் ஒரு குழந்தை கிடைத்தது..

உடலில் வலிமை அளிக்கும் ஒரே ஒரு பொருள் தேன். உடல் பருமனை குறைக்க ஒரே வழி தினமும் காலையில் வெறு வயிற்றில் இரண்டு தேக்கரண்டி தேன் அருந்துதல் வேண்டும்.

மிக்க களைப்பான நிலையில் ஒரு தேக்கரண்டி தேன் பருகினால் தேநீர் அருந்தி கிடைக்கும் சுறுசுறுப்பை விட பன்னிரண்டு செக்கனில் இருமடங்கு சக்தி கிடைக்கும்.

பிரசவ வேதனையின் போது இரு தேக்கரண்டி தேன் பருகினால் சுகப்பிரசவமாகும்.

### நெல்லிக்காய் மருத்துவம்

நெல்லிக்காய் எடுத்து சாறு பிழிக.. அதே அளவு எலுமிச்சம் பழச்சாறு கலந்து இரண்டு தேக்கரண்டி தேன் விட்டு அரைக்குவளை சுடுநீர் கலந்து காலையில் பருகினால் நோய் பக்கத்தில் வரநடுங்கும்."மல்டி விற்றமின் " மருந்துகளை விட சக்தி வாய்ந்தது.

பித்தக் கிறுகிறுப்பு, மயக்கம்,பைத்தியம் மனத்தடுமாற்றம் சோகை போன்றவற்றிற்கு நெல்லிச் சாறு அருமருந்து ஆகும்.

உடல் வலுவடைய வேண்டுமா நெல்லி சாறுடன் இரண்டு அவுன்ஸ் தேன் கலந்து பருகினால் (காலையில் மட்டும் )சீரான சக்தி அற்புதமாக விளங்கும்.

விடாத விக்கல் நிக்க நெல்லிச் சாற்றுடன் அரிசி திப்பிலிப் பொடியை கலந்து ஒரு கரண்டி நெல்லி சாற்றுடன் பசு நெய் சேர்த்துக் காலையில் சுவைத்தால் நரம்பு தளர்ச்சி நிற்கும். இளமை குன்றாமல் இருக்க வேண்டுமா? தேனில் நெல்லிக்காயை ஊறவிட்டு காலையும், மாலையும் உண்ணல்.

நெல்லிக்காயை அரைத்து மோரில் கலக்கி கொடுத்தால் மஞ்சள் காமாலை குணமாகும்.

*பூண்டு மருத்துவம்*

வெள்ளைப்பூண்டு உண்பவர்களை இழிலெத்தவர்களாகவும் தீண்டதகாதவர்களாகவும் நினைத்த காலம் மேற்கிலும் உள்ளது.

பூண்டின் முக்கிய மருத்துவப் பயன்கள் சீரணமின்மை, ஜலதோஷம் , காதுவலி, வாயுத்தொல்லை, முகப்பரு, இரத்த சுத்தமின்மை, இரத்த அழுத்தம் சம்மந்தமான நோய் போன்றவற்றை வராமல் தடுக்கவும் வந்தால் குணப்படுத்தவும் சிறந்தது பூண்டு.

கடும் காய்ச்சல் 102 க்கு மேல் காய்ச்சல் வந்து விட்டால் வெள்ளைப் பூண்டு சாற்றை உள்ளங்கையில் உள்ளங்காலிலும் நன்கு தேய்த்தால் குறையும்

விடாத இருமல் ⇒ நித்திரைக்கு முதல் பூண்டு விதைகளைப் போட்டு காய்ச்சி பூண்டையும் பாலையும் சாப்பிடுக.

*நச்சுக்கடி மருத்துவம்*

மருத்துவரை உடனடியாக அடைய முடியாத நிலையில் மட்டுமே கீழ்க்கண்ட அவசர மருத்தவ முறையை பின்பற்றவும்.

1. கண்ணாடி விரியன் ⇒பாகல் இலைச்சாற்றை அதிகமாக அருந்தி வாந்தி எடுத்தால் மாறும்.
2. நல்ல பாம்பு ⇒ வாழைப்பட்டைகளை பாய் போல் பரப்பி நோயாளியை படுக்க வைத்து வாழைப்பட்டை சாற்றைப் பருக கொடுத்தல்.
3. தேள் ⇒ கொட்டிய இடத்தில் வெங்காயத்தையும் சுண்ணாம்பையும் அரைத்து கடிவாயில் கட்டவும்.
4. வண்டு ⇒காரவெற்றிலை இரண்டு எடுத்து எட்டு மிளகு சேர்த்து உண்க.

5. சிலந்தி ⟹ ஆடாதோடைஇலை 1 பச்சை மஞ்சள் மிளகு சேர்த்து அரைத்து கடிவாயில் கட்டவும.

6. வெறிநாய் ⟹மஞ்சளையும் பிரண்டையையும் சமஅளவு எடுத்து மைபோல் அரைத்து நல்லெண்ணையில் வதக்கி கடிவாயில் கட்டவும்.

## மருத்துவக்குறிப்பு

***கண்நோவிற்கு***

கற்கண்டை பொடியாக்கி துணியில் முடிந்து புளிமாதுளம் பழச்சாற்றில் தேய்த்து கண்ணில் ஒற்றவும்.

***கண் சிவப்பிற்கும் அடிகாயத்திற்கும்***

ஊமத்தம் இலையை பிழிந்து மூன்று துளி மூன்று நாள் விடவும்.

***காதுக்குத்து***

தயிர்வளை இலையைப் பிழிந்து நான்கு ஐந்து துளி காதில் விடவும்.

***நெஞ்சு நோவிற்கு***

கோழி முட்டை சாராயம் எலுமிச்சம் சாறு வெந்நீர் கற்கண்டு சேர்த்து கலக்கி காலையில் மாத்திரம் குடிக்கவும்.

தடிமனுக்கு உலர்ந்த மஞ்சளை வேப்பெண்ணையில் தோய்த்து முகரவும்.

தொடர் சத்திக்கு விளா இலை, ஏலம், நெற்பொரி சமன் சூறணித்து முகரவும். இவை அனைத்தும் உடலை பாதிக்காது நோயை குணப்படுத்தும்.

து.தனஞ்சயன்
கலைப்பிரிவு A/L (2011)



# சிறுவர் அரங்கின் தோற்றமும் வளர்ச்சியும்

து. தனஞ்சயன்
(மாணவன்)

ஈழத்து தமிழ் அரங்க வரலாற்றில் சிறுவர் அரங்கு அல்லது சிறுவர் நாடகம் என்ற சிந்தனை இற்றைக்கு மூன்று தசாப்தங்களிற்கு முன்பே உருவெடுக்க ஆரம்பமாயிற்று. கலாநிதிகுழந்தை ம.சண்முகலிங்கம் பேராசிரியர் சி.மௌனகுரு அ.தாஸ்சியஸ் போன்றோரால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் எழுத்துருவில் அ.தாசியசின் நெறியாள்கையில் உருவான "கூடிவிளையாடு பாப்பா" என்ற நாடகத்தின் மூலம் சிறுவர் அரங்கு துளிர் விட ஆரம்பித்தது எனலாம்.

மேலும் ஆரம்ப காலத்தில் உருவான சிறுவர் நாடகங்களை சிறுவர்களுக்காக பெரியோர்களே மேடை ஏறி நடித்தனர் என அறியக் கூடியதாய் உள்ளது. உதாரணமாக கூடிவிளையாடு பாப்பா வளந்தவர்கள் சிறுவர்களிற்காக நடிக்கும் நாடகம் ஆகும். இன்நாடகம் ஏறக்குறைய பதினேழாயிரம் சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் பார்க்கக் கூடிய நாடகமாகும். எனினும் ஈழத்து சிறுவர் அரங்கின் பிதாமகன் எனப்படும் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகம் ஆரம்பத்தில் சிறுவர்களுக்காய் பெரியவர்களே நடித்தனர்.ஆனால் பிற்பட்ட இலக்கியத்தில் சிறுவர்களும் பெரியவர்களும் இணைந்து நடிக்கும் முறைமை காணப்பட்டது.

மேலும் சிறுவர் நாடகம் தவிர்ந்த இன்னும் சில நாடக விற்பனர்கள் சிறுவர் அரங்கின் வளர்ச்சிக்கு அடித்தளமாய் அமைந்தனர். உதாரணமாக பேராசியர் சி.மௌனகுரு போன்றவர்களை குறிப்பிடலாம்.இதற்கு சான்றாக நாம் நோக்குவோமானால் பேராசிரியர் சி.மௌனகுருவின் "தப்பி வந்த தாடி ஆடு" "வேடன் உச்சிய வெண்புறா" போன்ற சிறுவர் நாடகங்களை குறிப்பிடலாம். மேலும் இவற்றுக்கு துணையாக இவர்களது மாணவப் பரம்பரையும் மற்றும் நாடக ஆர்வலர்களும் சிறுவர் நாடகங்களை வளர்க்க உறுதுணையாக இருந்தது. இதற்கு உதாரணமாக திரு.மு.ராதாகிருஷ்ணன். தே.தேவானந்தா கோகிலா மகேந்திரன் ப.ரகுவரன் போன்றவர்களை குறிப்பிடலாம்.

இவ்வாறு 30 வருட காலவளர்ச்சியை சிறுவர் அரங்கானது பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது. சில இளைஞர்கள் சிறுவர் நாடகங்ளை உருவாக்கி தயாரிப்பதுடன் கல்வியலாளர்களின் பார்வையானது. இவ் சிறுவர் அரங்கின் பக்கம் தன் பார்வையை திசை திருப்பி உள்ளனர்.

இச்சிறுவர் அரங்கானது பாரிய பல நோக்கங்களை கொண்டுள்ளது. சிறுவர்களை மகிழ்விப்பதும் சிறுவர்களை அவர்களின் நெருக்கடிகள் துன்பங்களில் இருந்து மகிழ்வை ஊட்டலும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் சிறப்பாக

ஈடுபடவும் சிறுவர்களின் கற்பனை ஆற்றல் வளர்க்கவும் சிறுவர் அரங்கு பெரிதும் உதவி புரிகின்றது.

இன்று சிறுவர் அரங்க வளர்ச்சியில் முன்னின்று உழைக்கும் நிறுவனங்களில் யாழ்ப்பாண செயற்திறன் அரங்க இயக்கம், அரங்க செயற்பாட்டுக்குழு, திருமறைக் கலா மன்றம், நாடக அரங்க கல்லூரி போன்றன குறிப்பிடத்தக்கன. இது தவிர சிறுவர் அரங்கானது ஆரம்ப பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உறுதுணையாக நிற்கும் ஒரு சாதனமாக திகழ்கின்றமையும் காணலாம். இதன் விளைவாக இன்று கல்வி திணைக்களத்தால் நாடகப்போட்டிகள் வருடம் தோறும் நிகழ்த்தப்படுகிறது.

ஆனால் இவ்வாறு சிறுவர் நாடகப் போட்டிகள் மூலம் சிறுவர் அரங்கை வளர்க்க முற்படுவோமானால் சிறுவர்கள் மனதில் அரங்கை ஒரு போட்டி நிகழ்ச்சியாகவே கருதுவார். இதுதவிர மிகமுக்கியமாக சிறுவர்கள் வெற்றியையே இலக்காக நோக்குவார். இதன் போது போட்டியில் தோல்வியுறும் பிள்ளையின் மனநிலை பாதிக்கப்படலாம் இதனால் சிறுவர் அரங்கு என்ன நோக்கத்திற்காக ஆரம்பமானதோ அந்நிலையில் இருந்து பல்வேறுபட்ட ஆரம்பிக்கும் எனலாம். இதற்கு பதிலாக பாடசாலைகளுக்கு உள்ளேயே சிறுவர் அரங்கை கலை நிகழ்வாக நிகழ்த்த முடியும்.ஆகையால் போட்டியாக வைப்பதை குறைப்பது மிகச்சிறந்தது.


மற்றும் சிறுவர் அரங்கு பற்றி அறிவு பரவலாக ஆரம்பப் பாடசாலைகளில் வழங்கப்பட்டாலும் அது போதுமானதாகக் காணப்படுவதில்லை. இது தவிரச்சிறுவர் அரங்கு பற்றிய போதிய அறிவின்றி இன்னும் சில யாழ்ப்பாண மாவட்டத்தில் மிகக்குறைவாக கணப்பட்டாலும் ஏனைய மாவட்டங்களில் மிகக் கூடுதலாகவும் பரவலாகவும் காணப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் இன்நிலை குறைவாக இருக்க காரணம் செயல்திறன் அரங்க இயக்கத்தினர் மற்றும் யாழ்ப்பாண. தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளராகிய திரு.கைதிலகநாதன் அவர்களுக்கும் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களிற்கும் மாணவர்களிற்கும் சிறுவர் அரங்கு பற்றி களப்பயிற்சிகளையும் கருத்தரங்குகளையும் மேற்கொள்வதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுவர் அரங்கு பற்றிய அறிவு வளர்க்கப்பட்டு வருகிறது. இந்நிலை வடகிழக்கு மாகாணங்களிலுள்ள மாணவர்களிற்கும் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் சிறுவர் அரங்கு பற்றி அறிவு பரவலடையும்.

இதுதவிர நாடகமும் அரங்கியலும் பாடத்தைச் சிறப்புப் பாடமாகக் கற்று வெளியேறும் பல்கலைக்கழக மாணவர்களும் கல்வியற் கல்லூரி மாணவர்களின் ஆசிரியத்துவ வருகையும் தற்போது காணப்படுவதால் இந்நிலை எதிர்காலத்தில் குறைந்து செல்ல வாய்ப்பு இருக்கிறது.

இதைவிட மிக முக்கியமாக நிரந்தரமான பார்வையாளர்கள் உள்ள சிறுவர் அரங்கைத் தனித்தனியாக வளர்த்தெடுக்க வேண்டும் அதற்காகச் சிறுவர் அரங்கு பற்றிய .பட்டப்படிப்பு கற்கைநெறிகளையும் தனிக்கற்கை நெறிகளையும் ஆரம்பித்து நடாத்த வேண்டும். இத்துறையில் ஈடுபாடுடைய நிபுணத்துவம் உடையவர்கள் உருவாக்கப்பட வேண்டும். மேலும் இத்துறை வளர்ச்சிக்கு உதவும் வளவாளர் குழு மாவட்டத்திற்கு மாவட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வாறான செயற்பாடு தொடர்ந்து இடம் பெற்றால். சிறுவர் அரங்கு பெருவளர்ச்சி பெறும்.

கலைப்பிரிவு
து.தனஞ்சயன்
(2011) (A/L)



T.Thanan Sayan
(Student)


# Proverbs

1. Charily begins home.
2. Make hay while the sun shines.
3. Ask and it shall be given up to you.
4. A Face is the index of the mind.
5. After a tank comes a bank.
6. Great Engines turn on Small Pivots
7. Spare the rod and Spoil the Child.
8. Little Strokes fell great.
9. Christmas Comes but once a year.
10. As is the King So are the Subjects.
11. Every bird must hatch its own egg.
12. Too much of any ting is good for nothing.
13. No Smoke without fire.
14. Friend in need is a friend indeed.
15. Love is blind.
16. Necessity Knows no law.
17. All is well that ends well.
18. Time and tide wait for no man
19. Every tide has its ebb
20. East or west Home is best
21. Add fuel to the fire.
22. As clear as crystal.
23. Tit for tat.
24. Do in Rome as Romans do.
25. Make the best of a bad job.
26. Union is Strength.
27. Look before you leap.

28. Experience is the mother of Science.
29. Health is wealth.
30. Don't look a gift horses God dispose.
31. Blood is thicker than water.
32. Many a slip between the cup and the lip.
33. You can't have the cake and eat it too.
34. Deep rivers move in silence ,Shallow brooks are noisy.
35. Barking dogs Seldom bite.
36. Cut your coat according to the cloth.
37. A black hen can lay a white egg.
38. Art is long but life is short.
39. Casting pearl before swine.
40. Milk the cow out don't pull of the uder.
41. Don't rob peter to palay paul.
42. Penny wish and pound foolish.
43. All are not Saints that go to church.
44. Prevention is better than cure.
45. Knowledge is power.
46. Money makes many.
47. Haste makes wast.
48. Fools praise fools.
49. Style maks the man.
50. Silence is consent.

T.Thanan Sayan
A/L (2011)

***



T.Thanan Sayan
(Student)

# "Tell us Stories"

## I.Biter Bit

An old lady becomes blind. She Consults a doctor. She promises him a large fee if she is cured. If these is no cure the doctor will not get any fee. The docton calls on the lady daily. He covets the lady's furniture. He removers one picee after another. He delays the cure at last he cures her. He demands his fees .The lady refuses to pay. She says that the cure is not complet the doctor goes to the court . The judge asks the old lady why she refuses to pay the fees. The lady complains that her sight is not property restored. She says that she cannot see all her furniture .The judge findu the truth. He decides in her favour.

## II. Gold The Killer

A hermit was running fast in a jungle. None pursued him .Three thieves who were nearby were puzzled .They caught hold of the hermit. They asked him why he was running He said term bling with fear that death was pursuing him. They though that B hermit should be mad. They ordered him to show them the object of his fear.

The hermit led them to a cave. Then he fled. The cave was in a lonely place but was full of gold. The thieves wonted to share the gold but they were very hungry one thief was sent to a near by town to buy food the other two thieves who remained in the cave wanted to have the entire gold for themselves. They murdered him when he returned with food. The thief who brought the food had. already poisoned it. He had planned to have all the gold lor him elf the two thieves ate food and died immediately after. True to the hermit's words the gold was death itself.

**III.** A Court Jester

Once upon a time there was a jester in the court of a King. He become a favourite of the King He took advantage of the royal patronage and msulted even the highist r of ticis. He was hated by one and all. He carried his jests too for one day he insulted the kind too through his jests .The King got angry and Sentenced the jester to death. He knelt down be for the king and begged his pardon. The King refused to alter the sentence .But he gave the death. The jester to choose the mode of jester to told. The king that he should die for old age. The king granted his request. He escaped death by his shrewdness.

**IV.** An Elephant's Loyalty

Many years ago Alexander, the King of macedonia inveded india. At one stage he was opposed by the huge army of king porus . porus was six feet high and rode on the biggest elephant .The elephant bestowed the greatest care on its royal master while it was still strong it defended him aganist his enemy. It repulsed the enemy attacks time after time porus was severely wounded by the arrows .He was about to faint seeing that the royal master might fall off from its back the elephant lowered it self to the ground. Then it gently extracted the arrows from the body of porus with its trunk it was loyal to its last breath its valor and faithfulness de serve to be written in letters of gold.

T.Thanan Sayan
A/L (2011)



காா.காா்த்தீபன்
(மாணவன்)

நதியின் சுவை அது கடலில் சேரும் மட்டும்
கல்வியின் சுவை அதன் அர்த்தம் புரியும் மட்டும்
உள்ளே உள்ளவை உள்ளத்தின் உணர்வுகள் -அவை
ஊற்றாய்ப் பிறப்பவை உணர்த்திட விரும்புகிறேன்.

கற்று அறியனுண்டா - அது
வாழ்க்கைக் கல்வியடா
பட்டு அறியனுண்டா -அது
வாழ்க்கை அனுபவமடா

கற்று அறிந்ததையும்
பட்டு அறிந்ததையும்
எமக்கு உணர்த்திடும்
உன்னதமான உத்தமர்களே ஆசான்கள்

உன்னத தலைவர்களை
உலகிற்கு படைத்திடும் உயர்வான தொழிலினை
உண்மை நெறி நின்று கல்வியினை மாணவர்க்கு
ஊட்டி விடுபவர்கள் ஆசானே.

பள்ளியில் பயிலவரும் பிள்ளைகளை
பெண்ணென்றும் ஆணென்றும் பிரியாது
பெற்றெடுத்த பிள்ளைகள் போல்
பெருமையுடன் வளர்ந்திடும் குணம் படைத்தவர்கள் ஆசானே !

பள்ளியில் துள்ளி விளையாடும் பிள்ளைகள்
தோல்வி கண்டு துவண்டும் போதெல்லாம்
துன்பம் நெருக்கி வந்த போதும் - நாம்
துவண்டுவிடாலாகாதென துன்பக் கண்ணீர் துடைப்பவர் ஆசானே!

பிறந்த பயனடைவதற்கும் கல்விப் பேறடைவதற்கும்
ஒப்பில்லாத கல்விதனை நாம் பெறுவதற்கும் -தம்

நற்குணத்தால் நாம் நல்லவனாய் தரணியில் வாழ
நல்வழி காட்டுபவர் ஆசானே !
கொடியது கொடியது வறுமை அதுவும் இளமையில் வறுமைதனை
கொண்டொழிக்க கலைமகளின் கல்வியறிவினை ஊட்டி
கொடுமை தரும் வறுமையை ஞானச் சுடரினால் அழிப்பதற்கு வெற்றி
கொடியாய் விளங்குபவர் ஆசானே !

அன்னையாய் தந்தையாய் உன்னத தெய்வமாய்
அன்பு செய் நண்பனாய் ஆருயிர் தோழியாய்
அனைத்து மாணவர்களுக்கும் நல்வழி காட்டியாய்
அறிவு ஞானம் தருபவர் ஆசானே !

கல்லைக் கண்ட சிற்பியும் - மண்ணைக்
கண்டகுயவனும்-அவற்ற மதிப்பு மிக்க
பொருட்களாக்குவது போன்று
கல்வி கற்க வரும் மாணவர்ளை - தம்
கரங்களினால் நற்பிரஜை யாக்குபவர்கள் ஆசானே!

உடலாலே தான்பிரிவுண்டு -ஆனால்
உள்ளதால் நாம் யாவரும் ஒன்று- எனும்
உன்னத நிலையை உலகிற்கு எடுத்ததுக்காட்டும்
உத்தமர்கள் ஆசானே !

ஆக்கம் :-
காந்தராசா காத்தீபன்
A/L(2011)
கலைப்பிரிவு




உயர்தர வகுப்பாசிரியர் குழு



இந்து நாதத்தின் நிர்வாக உறுப்பினர்கள்







By.K.Karththipan
*(Student)*

# General Knowledge Questions and Answers

01. Who invented the magnetic tape Recorder?
    J.A.O Neil
02. What is the old name of Irag?
    Mesopatomia
03. What is the length of the standard Javelin?
    8 feet 6 inches
04. What is the real name of spiderman?
    Peter Parker
05. Which is known as American's playgrourd?
    California
06. Who introduced sanskrit as an official langvage? (long ago)
    Guptas
07. In which year the first round table conference was held?
    In 1930
08. Who is the author of the book tifled "Living History"?
    Hillary Clinton
09. In which year united Nations commission on Human rights was established?
    In 1946
10. How many teams will be qualified to play in the world cup football match?
    16 teams

11. What is the popular name for an official report?
    Blue Book
12. Which animal has three hearts?
    Cuttle fish
13. What is AIDS?
    Acquired Immuno Deficiency Syndrome
14. How many teeth does a horse have?
    40 teeth
15. Which is the land of midnight sun?
    Norway
16. In speech, what is hyperbole?
    Exaggeration
17. What is Nosology?
    Classification of diseases
18. Who is father of computer?
    Charles Babbage

*By.K.Karththipan*

*****



By. N.Vanitha
*(Student)*

# The Good Teacher

Tranquil and tireless
Helpful and humble
Enthusiastic and earnest
Gentle and generous in her work
Optimistic in her aut look
Obedient to her authority
Daring to do something beautiful for children
Truthful and trustworthy in her dealings
Eager and Enduring
Ardent to take up His/ her task
and approachable person
Creative in her thoughts and deeds
Hard worker and giving hope to others
Effective in her mission and Love
Ready and responsibility in her day today life.

*N. Vanitha*
*(2011) A/L*

****



ந.வனிதா
(மாணவி)

# கர்நாடக சங்கீதத்தின் சிறப்பும் பயனும்

சங்கீதம் என்பது செவிக்கும் மனதிற்கும் இன்பத்தைத் தரும் சிறந்த மேன்மையான கலையாகும். சங்கீதத்திற்கு 4 உபவேதங்களில் ஒன்றான காந்தர்வவேதம் என்று பெயர். மனிதன் தன் அறிவுக் கூர்மையினாலும், யுக்தியினாலும் வளர்த்த அருங்கலைகளில் சங்கீதமும் ஒன்றாகும். மனிதன் ஈசன் அருளிய குரலைப் பேசுவதற்கு மட்டுமல்லாமல் பாடவும் செய்வதால் அவன் தன் குரலின் பூரணத்துவத்தை அடைகிறான். கைவிரல்களும், இசைக்கருவிகளை இசைக்கப்பயன்படுகின்றன. இதனால் அளவிலா மகிழ்ச்சி அடைகின்றான்.

மனிதனுடைய தேகத்திலேயே இசைத்தத்துவம் அடங்கியிருக்கிறது என்று பெரியோர் கூறுவர். திருவள்ளுவர் வாக்குப்படி செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் இனிமை நிறைந்த சங்கீதத்தைக் காதாரக் கேட்டு, மனதார மகிழ்ச்சி கொள்கிறோம்.

ஏழிசை அதாவது ஸரிகமபதநி என்ற ஏழு ஸ்வரத்தை அதனின்று இனிமையான நாதத்தை எழுப்பி பலப்பல வாக்கயகாரர்கள் இனிமையான க்ருதி, கீர்த்தனைகள் போன்ற பல உருப்படிகளை அருளிச் செய்திருக்கிறார்கள். அவைகளைப் பாடவோ, வாசிக்கவோ, கேட்கவோ செய்தால் நாம் மெய்மறந்து உணர்ச்சி பூர்வமாக நினைக்கின்றோம். சங்கீதத்தையே தன் உயிர் மூச்சாகக் கொண்ட பல மகான்கள் பக்தி நிறைந்த காரணத்தினால் கடவுளின் தரிசனத்தை நேரிலேயே பெற்றிருக்கிறார்கள்.

சங்கீதத்தை முறைப்படி அப்பியாசித்து நன்றாக ஸாதகம் செய்து அருமை பெருமை வாய்ந்த சங்கீதத்தை முறையாக கானம் செய்யும் பொழுது அதைக் கேட்க நாம் நம்மையே மறந்து தெய்வீக உலகில் சஞ்சரிப்பது போன்ற இன்பக் கடலில் மூழ்குவோம். சங்கீதம் மனிதனின் துர்குணங்களைப் போக்கி நற்குணங்களை மேம்படுத்தி இவ்வுலகில் உயர்ந்தவனாக ஆக்கக்கூடிய சக்தி உடையது. பாட்டின் அர்த்தம் விளங்காவிடினும் சங்கீதத்தின் இசையில் எந்ததேசத்தவராயிருந்தாலும் கேட்டு மகிழ்வுறுகிறார்கள்.

ஆசியா கண்டத்தில் இந்தியாவில் மெலடிகல் சங்கீதமும் ஐரோப்பிய நாட்டில் பாலிபோனி சங்கீதத்தையும் கேட்கலாம். மேல்நாட்டவர் சங்கீதம் ஸம்வாத சங்கீதம் என்றும் அழைக்கப்படுகிறது.

சங்கீத தத்துவங்களை நன்கு அறிந்த நமது முன்னோர்கள் மற்ற சங்கீதத்தை விட மெலடிகல் சங்கீதத்தையே ராகத்தை வளர்க்கத் தேர்ந்தெடுத்தார்கள்.

கர்நாடக சங்கீதத்தில் பண்டைக் காலத்தில் தோன்றிய திவ்விய பிரபந்தங்கள், தேவாரம், திருப்புகழ் இவைகள் எல்லாம் சிறந்த பண்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. பின் ராகங்கள் நாளடைவில் பிரசித்தமாகி ஏராளமான கிருதிகள், கீர்த்தனை, தரு, தரங்கள், ராகமாலிகை, அஷ்டபதி, தில்லானா போன்ற பற்பல உருப்படி வகைகள் எல்லாம் சிறந்த மகான்களால் உருவாக்கப்பட்டன.

இந்திய சங்கீதத்திற்கு பொக்கிஷம் ஆக சங்கீதத்தில் கீதம், வாத்தியம், நிருத்யம் இவை மூன்றுமே சங்கீதம் என்று கருதப்பட்டு ஒன்றாக இசைக்கப்பட்டு வந்தன. சங்கீதக்கலை சிறிது அபிவிருத்தி அடைந்ததும் கீதமும் வாத்யமும் நிருத்யக் கலையினின்றும் பிரிக்கப்பட்டு தனிப்பெருமை கொண்டது. பல மகான்களின் முயற்சியாலும், கடவுளின் அனுக்கிரகத்தாலும் சங்கீதக்கலை வளர்ச்சியடைந்து சிறந்தக் கலையாகவும், பூரணக்கலையாகவும் முழுமை அடைந்து பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

வனிதா நகுலேஸ்வரன்
(2011) A/L கலைப்பிரிவு

****



ந.வனிதா
(மாணவி)

# என் விருப்பம்

பிடிக்க நான் விரும்புவது
பிஸ்டல் அல்ல பேனா
வடிக்க நான் விரும்புவது
கண்ணீர் அல்ல கவிதை
படிக்க நான் விரும்புவது
பாட்டு அல்ல பாடம்
கடிக்க நான் விரும்புவது
எறும்பு அல்ல கரும்பு
குடிக்க நான் விரும்புவது
குளிர்பானம் அல்ல குணம்
அடிக்க நான் விரும்புவது
அழுவதற்கு அல்ல ஒழுகுவதற்கு

இடிக்க நான் விரும்புவது
இதயம் அல்ல இமயம்
முடிக்க நான் விரும்புவது
கல்யாணம் அல்ல பொல்லாத யுத்தம்
அடைக்க நான் விரும்புவது
கதவை அல்ல கடனை
உடைக்க நான் விரும்புவது
உள்ளம் அல்ல அடிமை விலங்கு
படைக்க நான் விரும்புவது
சாப்பாடு அல்ல சமாதானம்
துடைக்க நான் விரும்புவது
புதையல் அல்ல சமாதானம்

# மறக்க முடியாதே

## கடவுள்

காலையும் மாலையும்
கைகூப்பி வணங்கும்
கணைக் கடலான
கணபதியை மறப்பேனா

## பெற்றோர்

பள்ளிக்கனுப்பி வைத்து
பரீட்சையில் சித்திபெற்று
கல்வியில் உயரவைத்த
பெற்றோரை நான் மறப்பேனா

## ஆசிரியர்

பாடம் தொடங்கி வைத்துப்
பள்ளியில் படிக்க வைத்துப்
பண்புகள் சொல்லித் தந்த
எம் ஆசானை மறப்பேனா

## நண்பி

நாளும் உடனிருந்து
நட்புறவைத் தான் வளர்த்து
நாளும் உதவி செய்த
நண்பியை நான் மறப்பேனா

வனிதா நகுலேஸ்வரன்
கலைப்பிரிவு A/L (2011)



ந.வனிதா
(மாணவி)

# வெற்றிக்கான நுழைவாயில்

"முடியும் என்பது நம்பிக்கையின் ஆரம்பம். முயற்சிக்கு முன்னுரை எழுச்சிக்கு வித்து" வெற்றிக்கு ஊன்று கோல்" என்பதற்கிணங்க மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் வாழ்க்கையிலே முன்னேற முயற்சி முக்கியம்.

வெற்றிகரமான வாழ்க்கைக்கு முன்னேற்றமுள்ள யோசனைகள் முக்கியமானதாகக் காணப்படுகின்றன. இந்த முற்போக்கான நினைவுகள் அநேகரிடம் காணப்படுகின்ற தாழ்வு மனப்பான்மையினால் மறைந்து விடுகின்றது. இவ்வாறான நினைவுகளினால் கிடைக்கும் வெற்றி இதனால் கிடைக்கும் தோல்வியிலும் பார்க்க பல மடங்கு வலுவானது.

மனிதனுக்கு பொறுமையும், விடாமுயற்சியும் நிச்சயமாக இருக்கவேண்டும். ஒரு செயலைச் செய்யும் போது அதனை அணுகவேண்டிய முறையையும் அதற்கான பொறுமையையும் நன்கு அறிந்திருந்தால் இலகுவாக வெற்றி பெறலாம்.

வெற்றி பெறுவதற்கு மற்றொரு காரணியாக தன்னம்பிக்கை வேண்டும். "உன்னை நீ அறியவேண்டும். நல்ல குணங்களை அங்கீகரிக்கவேண்டும். உயர்ந்த எண்ணங்களை மனதில் விதைக்க வேண்டும். மற்றவர்களுடன் கலந்து பழகும் போது உன்னுடைய உண்மையான நிலையை அறியவேண்டும். உன்னைத் திருத்துவதற்கு முதற்படி உணர்வு எந்த இலக்கை நோக்கி நகரும் போதும் தன்னம்பிக்கையை இழந்துவிடக்கூடாது. அது வெற்றியின் ரகசியம். வாழ்க்கை ஒரு போராட்டம். மனிதன் வாழ்க்கையோடு போராடும் போதே மனஉறுதி, தன்னம்பிக்கை அவனுக்கு ஊன்று கோலாகின்றது. மனிதன் வாழ்க்கையில் பல வெற்றிகளையும், தோல்விகளையும் எதிர் கொள்கின்றான். வெற்றியைக் கண்டு மகிழும் மனிதன் தோல்வியைக் கண்டு துவண்டு விடுகின்றான். "வாழ்க்கையே அலைபோல" என்று கவிஞன் பாடியது போல வாழ்கையில் வருகின்ற சவால்களை எதிர்நீச்சல் போடவேண்டும்.

தோமஸ் அல்வா எடிசன் 999 தடவைகள் தோல்வியைத் தழுவி ஆயிரமாவது தடவை வெற்றி பெற்றார். தோல்வி நிலையென நினைத்தால் முன்னேறியிருக்க முடியாது. அவமானங்களைத் தாங்காமல் வெகுமானங்கள் கிடையாது. தடைகளைத் தாண்டாது. தலைநிமிர முடியாது. தோல்விகளின்றி

வெற்றிகளைச் சாதிக்க முடியாது. எனவே வெற்றிக்கு முதற்படி தோல்வி. இதனை உணர்ந்து வாழ்க்கையில் நீங்களும் ஒரு நட்சத்திரமாக ஜொலியுங்கள். எதையும் தாங்கும் இதயமுடையவர்களாக வாழப்பழகிக் கொள்ளுங்கள்.

வெற்றியின் இரகசியமாய் வாசிப்பு விளங்குகின்றது. வாசிப்பு ஒரு மனிதனைப் பூரண மனிதனாக்குகின்றது. நேரம் பொன்னானது என்பது பொன்மொழி. வாழ்க்கையை நேசிப்பவராக இருந்தால் நேரத்தை வீணாக்காதீர்கள். நேரத்தை திட்டமிட்டு செயற்படவேண்டும். திட்டமிட்டு சரியாக பயன்படுத்தாமல் 90 வீதமான ஆற்றல்கள் வீணாக்கப்படுகின்றன. விளையாட்டு வீரர்கள் உட்பட அனைவரும் நேரத்தை சரியாகப் பயன்படுத்தாது இவற்றிற்கு ஒரு தடைக்கல்லாக அமைகின்றது.

எனவே வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு நாம் மன உறுதியை வளர்த்துக் கொள்ளவேண்டும். இந்த மன உறுதி மந்திர சக்திமிக்கது. மனிதனுக்கு இரும்பு போன்ற இதயம் இல்லாவிட்டால் இயங்கமுடியாது. பிறந்தோம், வளர்ந்தோம், இறந்தோம் என்றில்லாமல் பிறந்தோம், வாழ்ந்தோம், சாதித்தோம் என்றே வாழவேண்டும்.

## சிறுவர்களை சீரழிக்கும் சினிமா

“எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே...” என்பது சினிமாப் பாடல்வரிகள். அதன் உண்மைப் பொருளை இன்றைய நடைமுறையில் காணக்கூடியதாக உள்ளது. இன்று நாடளாவிய ரீதியில் இடம்பெறும் சில சிறுவர் துஸ்பிரயோகங்கள் சிறுவர் பாதுகாப்பில் அக்கறையுள்ள அமைப்புக்களால் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் மறைமுகமாக சிறுவர்களைப் பாதிக்கும் ஊடகங்களாக வெற்றித்திரைகளும், தொலைக்காட்சித் தொடர்களும் அமைந்து விடுகின்றன. அவை எவ்வாறு சிறுவர்களைப் பாதிக்கின்றது என நோக்குவோம்.

வெள்ளித்திரை எனக் கவர்ச்சியாகக் குறிப்பிடப்படும் சினிமா திரையரங்குகள் சிறுவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கின்றது. இன்று பெரும்பாலான குழந்தைகள் 5 வயதிலேயே படம் பார்க்கத் தொடங்கி நான் இந்தக் கதாநாயகன் என்று பெயரைச் சொல்லி சண்டை போடுவதும், அந்த வசனங்களைப் பேசுவதையும் பார்க்க முடிகின்றது. அதற்கேற்ப இன்றை படங்கள் வன்முறைகளையும் கலாசாரச் சீரழிவுகளையும் உள்ளடக்கியதாகவே வெளிவருகின்றன. வளர்கின்ற குழந்தையின் மனம் சினிமாப் படங்களைப் பார்த்து அதனையே வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க முயல்கின்றது. சினிமாப் படங்களில் கட்டவிழ்ந்து விடப்படும் வன்முறைகளும் அதற்கு மக்கள் கொடுக்கும் வரவேற்பும் சிறுவர்களின் மனத்திலே வன்முறை மூலம் மற்றவர்களைக் கவரலாம் எனும் எண்ணத்தை தோற்றுவிக்கிறது. இதன் விளைவே இன்று இளைஞர் குழுக்கள் படத்தின் பெயர்களுடன் வன்முறைகளில் ஈடுபடுவதற்கு காரணமாக உள்ளது.

சின்னத்திரையானது இன்று சிறுவர்களையும், சிறுமிகளையும் வெகுவாக பீடிக்கும் ஓர் நோயாக காணப்படுகின்றது. தாயுடன் அமர்ந்து தொலைக்காட்சித் தொடர் ஒன்றைப் பார்க்கும் சிறுமி அத்தொடரில் காட்டப்படும் உணர்வுகளுக்குள் ஆட்பட்டவர்களாக தம்மையும் மாற்றுகின்றார்கள். முன்பெல்லாம் எந்தத் தெருவிற்குச் சென்றாலும் கூட்டம் கூட்டமாக குழந்தைகள் விளையாடுவார்கள் ஆனால் இப்பொழுது பாடசாலையில் இருந்து வரும் பிள்ளைகள் நீண்ட நேரம் உட்கார்ந்து வீட்டுப்பாடம் செய்யவேண்டியுள்ளது. பின் தொலைக்காட்சியின் முன் அமர்ந்து ஒரு நாளின் எஞ்சிய நேரத்தைக் கழித்து விடுகிறார்கள். இதனால் உடலும் மனமும் சோர்வடைகின்றன. உறவினர்கள், நண்பர்கள் என்று வரும்போது அவர்களுடன் முழுமனத்துடன் பேசுவதில்லை. அய்யோ என்ற அலறல் கேட்டால் அடுத்த வீட்டுக்காரர்கள் ஓடி வரும் நாகரீகம் குறைந்து கொண்டு போவதற்கு தொலைக்காட்சியும் ஒரு காரணமாகும். குழந்தைகளின் மூளை பெரிதும் பாதிக்கப்படுகின்றது. அவர்களுடைய நினைவுத்திறன் உணர்ச்சிக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வுத்திறனையும் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கின்றது என்று வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

பெற்றோர்கள் சிறுவர்களை தொலைக்காட்சித் தொடர்களைப் பார்க்க அனுமதிப்பது பெரும் தவறாகும். தொடர்களின் கதைகளை முக்கிய திருப்பத்தில் நிறுத்திவிட்டு பாடசாலை செல்லும் சிறுவனின் எண்ணம் அடுத்தநாள் நடக்க இருக்கும் தொடர் பற்றியே வட்டமிடும். இப்பரீட்சைப் பெறுபேறுகள் வீழ்ச்சியுற இதுவும் ஒரு காரணமாக அமைகின்றது.

சரி இவற்றுக்கு தீர்வு தான் என்ன? ரீ வியை முழுமையாக தவிர்க்க முடியுமா? என்ற கேள்வி மனத்தில் எழலாம். முழுமையாக முடியாவிட்டாலும் ரீ.வி பார்க்கும் நேரத்தின் அளவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவேண்டும். அதற்காக சிறுவர்களைக் கட்டுப்படுத்தாமல் சிறுவர் நிகழ்ச்சிகளைப் பார்க்க விட்டு அறிவு சார்ந்த சமயம் சார்ந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கவிட்டு அவர்களுடைய திறன்களை வளர்த்துக் கொள்ளலாம்.

எனவே பெற்றோர்கள் இது பற்றி தீவிர கவனம் செலுத்தவேண்டும். இல்லையேல் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும் என்பது நிச்சயம். பிள்ளைகளிற்கு தொலைக்காட்சித் தொடர், சினிமாப்படங்கள் காண்பிப்பதை மிகக் கூடுதலாகத் தவிர்த்து குழந்தைகளுக்கான கதைகள், துணுக்குகள், வர்ணம் தீட்டுதல், அறிவு சார்ந்த நூல்கள், புதிய விளையாட்டுக்கள், நண்பர்களுடன் சேர்ந்து ஒற்றுமையாக விளையாட விடுவதன் மூலம் அவர்கள் நாளைய உலகில் இல்லை. அவர்களுடைய எதிர்காலம் சுபீட்சமாக மாறப் பெற்றோர்கள் சிறந்த வழிகாட்டியாக விளங்கவேண்டும்.

வனிதா நகுலேஸ்வரன்
கலைப்பிரிவு A/L (2011)

****



அ.அமலதாஸ்
(மாணவன்)

# வணக்கத்துக்குரிய பெண்கள்

"பெண்கள் நாட்டின் கண்கள்" என்று போற்றப்பட வேண்டியவர்கள் இன்றைய பெண்கள் பல்வேறு இன்னல்களுக்கும் இடர்பாடுகளுக்கும் மத்தியில் பாரதியின் புதுமைப் பெண்ணாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அன்றைய சமுதாயம் பெண்களை அடக்கி ஒடுக்கி கீழ்மைப்படுத்தியது. எனினும் அவற்றுள் பல பெண்கள் அன்று முதல் இன்று வரை மதிக்கப்படுகின்றார்கள். போற்றப்படுகிறார்கள். அந்த வகையில் இந்தப் பெண்களின் பூதவுடல் மறைந்த போதும் புகழுடல் மறையாது அவர்கள் இன்றும் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

***கண்ணகி***

கற்பிற் சிறந்தவராகவும், கோவலன் துணைவியாகவும் இருந்த இவர் தன் கணவனுக்கு நேர்ந்த அநீதிக்காக மதுரை மாநகரையே தீக்கரையாக்கினார். கற்பிற் சிறந்த மங்கையாகிய இவருக்கு வஞ்சினாநகரில் ஒரு கோயில் எழுப்பப்பட்டுள்ளது.

***சாவித்திரி***

சத்தியவானைக் கணவனாக அடைந்த இவர் தனது கணவனின் தீர்க்க ஆயுளிற்காக இயமனுடன் போராடி ஈற்றில் வெற்றி கண்டார்.

***சந்திரமதி***

வாய்மையிற் சிறந்த மன்னனாகிய அரிச்சந்திரனின் மனைவியாவர். அவர் விஷ்வாமித்திரர் செய்த சோதனையால் கணவரைப் பிரிந்து இருந்தும், தன் ஒரே மகனை இழந்தும் கற்பை பாதுகாத்து இறுதியில் கணவனுடன் சேர்ந்தார்.

***சாரதாதேவி அம்மையார்***

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் துணைவியாரான சாரதாதேவி அம்மையார் தனது கணவரின் ஆன்மீக வாழ்வின் உற்ற துணையாக இருந்ததுடன் அவரது மறைவிற்குப் பின்னர் அவரின் சீடர் பரம்பரையின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக வாழ்ந்தவர்.

***தெரிந்து கொள்ளுங்கள்***

1. ஒட்டகங்களை விட அதிக காலம் தண்ணீரில்லாமல் வாழும் சக்தி எலிகளுக்கு உண்டு.
2. முதலையின் முதுகிலுள்ள செதில்களை வைத்து வயதை கண்டுபிடிக்க முடியும்.
3. டொல்பின்கள் கண்களை திறந்தபடியே தூங்கும்.
4. ஆண் குதிரைக்கு 40 பற்கள் உண்டு.
5. மீன்கள் தண்ணீர் குடிப்பதில்லை.
6. நத்தை மணிக்கு பதினேழரை அடிகள் செல்கிறது.
7. கொரிலாக்கள் குறட்டை விடுவதில்லை
8. மிகப்பெரிய வாயுள்ள விலங்கு நீர்யானை
9. முதலைகளால் தங்கள் நாக்கை அசைக்கமுடியாது.
10. ஓநாய்கள் மணிக்கு 40 கிலோமீட்டர் வேகத்தில் ஓடக்கூடியவை.

அ.அமலதாஸ்
A/L (2012) கலைப்பிரிவு
J.P.H.C

*****



ம.மயூரன்
(மாணவன்)

# சர்வதேச அமைப்புக்கள்

சர்வதேச ரீதியாக அனைத்து நாடுகளும் பல்வேறு பிரச்சினைகளை அனுபவித்து வருகின்றன. குறிப்பாக வர்த்தக ரீதியான பிரச்சனை சமூகச் சிக்கல்கள் மற்றும் இயற்கை, செயற்கை அனர்த்தப் பாதிப்புக்கள் போன்ற பலதரப்பட்ட பிரச்சினைகளை உலகநாடுகள் பலவும் சந்தித்து வருகின்றன.

சர்வதேச வர்த்தகத்தில் மிகப் பெருமளவிலான பிரச்சினைகள் வர்த்தக ஆதிக்கங்களினால் அனுபவித்து வருகின்றன. இவ்வாறான நிலையில் உலக நாடுகள் பிரச்சினைகளை இலகுவான முறையில் எதிர்கொள்ளத்தக்க வகையில் தமக்கிடையே பொதுவான அமைப்புக்களை உருவாக்கிக் கொள்கின்றன. இதனால் சர்வதேச அமைப்புக்களின் எண்ணிக்கை அண்மைக்காலங்களில் அதிகரித்து வந்துள்ளது. அவ்வாறான அமைப்புக்கள் சில வருமாறு.

1. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் (U.N.O)
2. ஐரோப்பிய பொதுச்சந்தை சமூகம் (E.E.C)
3. பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு (O.P.E.C)
4. உலக வர்த்தக அமையம் (W.T.O)
5. சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (I.D.A)
6. ஆசிய அபிவிருத்தி வங்கி (A.D.B)
7. கொழும்புத்திட்டம் (Colombo plan)
8. தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பிற்கான கூட்டமைப்பு (Sarac)
9. பொது நலவாயம்
10. ஐக்கிய நாடுகளுடன் இணைந்த ஸ்தாபனங்கள்
    1. UNHCR
    2. UNHESCO
    3. UNICEF
    4. WHO
    5. IBRD
    6. ILO
    7. UNCTAD
    8. UNDP
    9. UNEFA
    10. IMF
    11. WFP
    12. UNEP
    13. INIDO

# தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பு

## (South Association for Regional Co-operation (Saarc)


- இவ் அமைப்பு 1985ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ம் திகதி பங்களாதேசத்தின் தலைநகரான டாக்காலில் ஆரம்பித்தது வைக்கப்பட்டது.
- சார்க் அமைப்பின் தலைமையகம் நேபளாத்தலை நகரம் காத்மண்டுவில் அமைந்துள்ளது.
- சார்க் அமைப்பின் அங்கத்துவ நாடுகள் அந்தந்த தலைநகரங்களில் அமைந்துள்ளது.

| நாடுகள் | | தலைநகரங்கள் |
|---|---|---|
| இலங்கை | - | கொழும்பு |
| இந்தியா | - | புதுடெல்லி |
| பாகிஸ்தான் | - | இஸ்லாமாபாத் |
| பங்களதேஸ் | - | டாக்கா |
| நேபாளம் | - | காத்மண்டு |
| பூட்டான் | - | தீம்பு |
| மாலைதீவு | - | மாபல் |
| ஆப்கானிஸ்த்தான் | - | காபூல் |

- சார்க் சபையின் உச்சிமகா நாடு இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறும்.
- 10 வது சாராக உச்சி மகாநாடு 1998ம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையின் தலைநகர் கொழும்பில் இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க தலைமையில் நடைபெற்றது.
- தலைமைப் பொறுப்பை மாலைதீவு ஜனாதிபதி அப்துல்கையும் என்பவரிமிருந்து பெற்றுக் கொண்டார். ஒவ்வொரு உச்சி மகாநாடும் ஒவ்வொரு நாட்டின் தலைநகரிலும் அந்நாட்டின் தலைவரது தலைமையில் சுழற்சி முறையில் இடம்பெறுவதுண்டு.
- 11வது மகாநாடு நேபாளத்தின் தலைநகர் "இஸ்லாமாபர்"இல் நடைபெற்றது.
- 13வது மகாநாடு (2006 மார்ச்) பங்களாதேஸ் தலைநகர் டக்காவில் நடைபெற்றது. இம் மகாநாடு கடந்த வருட ஆரம்பத்தில் (2005 ஜனவரி) நடைபெறவிருந்த போதும் 2004.12.26 அன்று நடைபெற்ற "சுனாமி" அனர்தத்தினால் 2005 பெப்ரவரியில் நடைபெற உத்தேசிக்கப்பட்ட போதும், நேபாளத்தில் நடைபெற்ற மன்னராட்சிக்கு எதிர்பு தெரிவித்து இந்தியா அம்மகாநாட்டில் நேபாள மன்னர் கலந்து கொள்வதால் தான் கலந்து கொள்ளவில்லை என அறிவித்தமையால் இம்மகாநாடு இவ்வருடம் வரை நடைபெறாதுள்ளது.

### சார்க் அமைப்பின் குறிக்கோள்கள்

- பிராந்திய பாதுகாப்பை கூட்டாக பலப்படுத்தல்.
- தெற்காசிய பிராந்திய நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்தல், அன்றாட வாழ்க்கை வசதிகளை முன்னேற்றுதல்.
- பொருளாதாரத் துறையில் துரித வளர்ச்சி காணுதல், சமூக முன்னேற்றத்தில் பிராந்திய கலாசாரத்தைப் பேணுதல்.
- பிராந்திய நாடுகள் தமக்கிடையில் ஏற்படும் பிணக்குகளை ஒருவெருக்கொருவர் விட்டுக்கொடுப்புடனும் புரிந்துணர்வுடனும் செயற்பட்டு நம்பிக்கையுடனும் விளங்குதல், முடிவெடுத்தல்.
- விஞ்ஞானம், தொழில்நுட்பம், கலாசாரம், தொழில், பொருளாதாரம் என்பவற்றினைக் கூட்டாக இணைந்து ஒருவருக் கொருவர் உதவி செய்தல்.
- ஏனைய அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடன் இணைந்து தங்களது இயற்கை வளங்களைப் பகிர்ந்து கொள்ளுதல். அபிவிருத்தியடைய முயற்சித்தல்.
- சர்வதேச பொது நியாயத் தீர்வுகளில் கூட்டாக சேர்ந்து ஆதரவு தெரிவித்தல் அல்லது எதிர்ப்புத் தெரிவித்தல்.
- சர்வதேச தாபனங்களிலும் பிராந்திய தாபனங்களிலும் ஒன்றுபட்ட கருத்தை வெளிப்படுத்தல்.




ம.மயூரன்
2012 (A/L)

****



ந.பகீரதி
(மாணவன்)

# பண்ணிசை

இந்திய சங்கீத வரலாற்றை நோக்கின் நமக்குக் கிடைத்துள்ள இராக தாள அமைப்புடன் கூடிய உருப்படிகளில் மிகப் பழமையானது தேவாரம் என்பது புலனாகும். தற்காலத்தில் வழங்கும் பல இராகங்களுக்குத் தேவாரப் பண்களே ஆதி லட்சியங்களாகும்.

சைவசமயம் நலிவுற்றுச் சமண சமயம் ஓங்கி வளர்ந்த காலகட்டத்திற் தேவார முதலிகள் தோன்றிப் பண்ணினை வளர்த்ததன் மூலம் சைவசமயத்தை ஓங்கி வளர செய்தனர்.

தேவாரத்தைத் திருவாய் மலர்ந்தருளிய திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் கிபி 7ம் ஆம் நூற்றாண்டிலும், சுந்தரமூர்த்திநாயனர் கிபி 9ம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்களாவர். தேவாரப் பதிகங்கள் தோன்றும் போதே இசைவடிவங்களுடன் மூவர் வாக்கில் இருந்தும் தோன்றிய சிறப்பை உடையன. இக்காரணத்தினாலே தான் தேவாரப் பதிகங்களுக்குத் தனிச் சுவையும் பிரகாரமும் இருப்பதோடு கேட்போருக்குப் பக்தி உணர்வும் உண்டாகின்றது. தேவாரப் பண்களின் வர்ண மெட்டுக்கள் ஓதுவார்கள் மூலமாகவும், குருசிஷ்ய பரம்பரை மூலமாகவும் காப்பாற்றப்பட்டு வந்துள்ளன.

தேவாரம் என்பது தெய்வத்தன்மை வாய்ந்த "வாரப்" பாடல்களாகும். இசைத் தமிழைச் சேர்ந்த முதனடை, வாரம், கூடை, திரள் என்னும் நான்கு வகைகளில் ஒன்றாகிய "வாரம்" என்பது சங்கீதத்திலும் சாகித்தியத்திலும் சிறந்து விளங்குகின்றது.

திருஞான சம்பந்தருக்கு பொற்றாளம் கிடைத்த வரலாற்றில் இருந்து தேவாரம் தாளத்துடன் பாடப்பட்டது என்பது தெளிவாகின்றது.

பண் என்பது இராகம் ஆகும். பண் என்ற பதத்திற்கு பாட்டு, சம்பூர்ண இராகம் என வேறு இரு பொருள்களும் உண்டு. பண்களுக்கு இராகங்களைப் போல் ஸ்வரங்கள் ஜீவ ஸ்வரங்கள், நியாச ஸ்வரங்கள் அந்நிய ஸ்வரங்கள் ரத்திப் பிரயோகங்கள், சொரூபத்தை விளக்கும் நுட்ப சுருதிகள் கமகங்கள் முதலியன உண்டு. பண்களின் சொரூபங்களை அறியத் தேவாரங்களே சிறந்த லஷியமாகும். இராகங்களை ஒளடவ, ஷாடவ, சம்பூர்ணம் என்ற பிரிப்பதற்கும் பண்களே காரணமாய் இருந்தன.

இந்திய சங்கீத சரித்திர பாஷாங்க இராகம் என்பதை முதன் முதலாகத் தேவாரப் பண்களிலேயே காண்கின்றோம். பாஷாங்க இராகம் என்பது ரத்தியின் பொருட்டுத் தனது தாய் இராகத்தில் வராத ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று ஸ்வரங்களைக் குறிப்பிட்ட பிரயோகங்களில் எடுத்துக் கொள்ளும் இராகம் ஆகும். கௌசிகம் (பைரவி) வியாழக்குறிஞ்சி (சௌராஷ்டிரம்) போன்ற பண்கள் இதற்கு நல்ல உதாரணங்களாகும்.

மேலும் காந்தார பஞ்சமம் (கேதாரகௌளை) செந்துருத்தி (மத்தியமாவதி) போன்ற பண்கள் உபாங்க இராகத்திற்கு உதாரணங்களாகும். செந்துருத்திப் பண்ணினைச் சுந்தரமூர்த்தி நாயனாரின் ஒரு பதிகத்திலேயே காணக்கூடியதாயுள்ளது. பந்துவாரானி என்ற பிரதிமத்திம இராகத்திற்கு ஒப்பானவை சாதாரி நட்டராகப் பண்கள் ஆகும்.

திருஞான சம்பந்தர் பாடி "மாதா" மடப்பிடியும் என்ற பதிகத்திற்கு திருநீல கண்ட யாழ்ப்பாணர் யாழ்வாசிக்க முடியாது வருந்திய சம்பவத்திலிருந்தும் தேவாரம் பாடுகையில் யாழ் பயன்படுத்தப்பட்டமை தெளிவாகின்றது.

பிற்காலத்தில் இராகங்களின் வளர்ச்சிக்குத் தேவாரம் பண்கள் மிக்க உதவியாக இருந்தன. தேவாரப் பண்களில் ரத்தி இராகங்களே முக்கியமாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு பண்ணிற்கும் உற்ற சுருதிகள், கமகங்கள், வக்ரப் பிரயோகங்கள், இராக இரஞ்சகப் பிரயோகங்கள் அந்நிய ஸ்வரப் பிரயோகங்கள் தாட்டுப் பிரயோகங்கள் உருப்படிகள், ஆரம்பிப்பதற்குத் தகுதியான ஸ்வரங்கள் முதலிய விடயங்களை அந்தந்தப் பண்களில் அமைந்துள்ள தேவாரப் பதிகங்களிற் காணலாம்.

***24 பண்களும், பண்களுக்கு சமமான கர்நாடக இராகங்களும் பின்வருமாறு***

| பண் | இராகம் |
|---|---|
| பஞ்சமம் | ஆஹிரி |
| சிகாமரம் | நாதநாமக்கிரிய |
| புறநீர்மை | பூபாளம் |
| வியாழக் குறிஞ்சி | சௌராஷ்டிரம் |
| கௌசிகம் | பைரவி |
| செந்துருத்தி | மத்தியமாவதி |
| காந்தார பஞ்சமம் | கேதாரகௌளை |
| அந்தாளிக் குறிஞ்சி | ஸாமா |
| தக்கேசி, தக்கராகம் | காம்போதி |
| செவ்வழி | யதுகுலகாம்போஜி |
| பழம்பஞ்சுரம் | சங்கராபரணம் |
| கொல்லி, கொல்லிக் கௌவாணம் | |
| காந்தாரம், பியந்தைக்காந்தம் | நவரோஜ் |

| | |
|---|---|
| மோகராகக் குறிஞ்சி | நீலம்பரி |
| நட்டபாடை | கம்பீரநாட்டை |
| ஸாதாரி, நாட்டராகம் | பந்துவராளி |
| யாழ்முரி | அடானா |
| இந்தளம் | மயாமாளவ கௌளை |
| பழந்தக்கராகம் | ஆரபி |
| குறிஞ்சி | ஹரிகாம்போஜி |

திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம், ஹரிகாம்போதி இராகத்திலும் திருவாசகம் மோகன இராகத்திலும் பாடப்பட்டு வருவது மரபாகும். பண் என்பதை தாய் இராகம் என்றும், திறன் என்பதை ஜன்யராகம் என்றும் கூறுவர்.

தேவாரப் பதிகங்கள் தற்போது 24 பண்களில் அமைந்துள்ளன. பண்கள் பாடப்பட வேண்டியகான காலத்தை கொண்டு பகற்பண், இராப்பண், பொதுப்பண் எனப் பிரிக்கப்பட்டுள்ளது.

பண்– சம்பூர்ண ராகம்
பண்ணியம் – ஷாடவ இராகம்
திறத்திறம் – ஸ்வராந்த இராகம்
திறம் – ஔடவ இராகம் என்று கூறுவர்.

| பகற்பண்கள் | இராகப்பண்கள் | பொதுப்பண்கள் |
|---|---|---|
| புறநீர்மை | சீகாமரம் | செந்துருத்தி |
| பஞ்சமம் | வியாழக்குறிஞ்சி | செவ்வழி |
| இந்தளம் | அந்தாளிக்குறிஞ்சி | |
| காந்தாரபஞ்சமம் | கொல்லி | |
| தக்கேசி | மேகராகக் குறிஞ்சி | |
| பழம் பஞ்சுரம் | பழந்தக்கராகம் | |
| சாதாரி | | |
| நட்டபாடை | | |

தேவாரப் பதிகங்கள் பாடப்பட்ட காலத்தில் இந்தியா முழுவதும் ஒரே வகையான சங்கீதமே இருந்தது. இக்காலத்தில் ஹிந்துஸ்தானி சங்கீதம், கர்நாடக சங்கீதம் என்னும் பிரிவுகள் ஏற்பட வில்லை.

7ம், 8ம் நூற்றாண்டுகளில் நாயன்மார்களாற் பாடப்பட்ட தேவாரத் திருப்பதிகங்கள் சோழ மன்னரது ஆட்சிக்காலத்திலே மக்களிடையே பரப்பப்பட்டன. சோழ அரசர்கள் சிவநெறிச் செல்வர்களாக இருந்து ஆலயங்களில் ஓதுவார்களை அமர்த்தி அவர்கள் மூலம் தேவாரப் பதிகங்களை நாடு முழுவதும் பரப்பும் பணியில் ஈடுபட்டனர். சோழன் காலத்தில் நம்பியாண்டார் நம்பியினால் 12 திருமுறைகளாக வகுத்துத் தொகுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

நடபகீரதி
A/L (2012)

உசாத்துணை நூல்– சங்கீதம்– பொன்.ஸ்ரீவாமதேவன்



ந.பகீரதி
(மாணவன்)

# மாகாண விடயம் சம்பந்தமான பொது அறிவு

01. மாகாண பிரதான செயலாளரின் நியமன அதிகாரி யார்?
ஜனாதிபதி

02. மாகாண பிரதான செயலாளரின் நியமனம் எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது?
மாகாண பிரதான அமைச்சரின் சம்மதத்துடன் ஜனாதிபதியினால் நியமனம் செய்யப்படுகின்றது.

03. மாகாண சபையின் ஆளுனர் யாரால் நியமிக்கப்படுவர்?
நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினால் அவரது கைப்பட எழுதப்பட்ட ஆணை மூலம் நியமிக்கப்படுவர்.

04. மாகாண பகிரங்க சேவை உத்தியோகத்தரின் நியமனம் இடமாற்றம், பதவிநீக்கம், ஒழுக்காற்று கட்டுப்பாடு என்பவற்றுக்குப் பொறுப்பான அதிகாரி யார்?
மாகாண ஆளுனர்

05. மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அங்கத்தவர் தொகை யாது?
மூன்று பேருக்குக் குறையாத அங்கத்தவர் ஒருவர் தவிசாளராக கடமையாற்றுவர்

06. மாகாண சபையின் அமைச்சர்களின் எண்ணிக்கை யாது?
பிரதான அமைச்சர் ஒருவரும் நாலுக்கு மேற்படாத அமைச்சர்கள் மொத்தம் 5 பேர்.

07. மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு யாரால் உருவாக்கப்படுகின்றது?
மாகாண ஆளுனரினால்

08. மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரின் பதவிகாலம் யாது?
நியமனத் திகதியிருந்து ஐந்து ஆண்டு காலம்

09. மாகாண சபையின் ஆட்சிக்காலம் எவ்வளவு?
மாகாண சபையின் முதலாவது கூட்டத்திகதியிலிருந்து 5 ஆண்டு காலப்பகுதி வரை.

10. மாகாண நிதியத்தின் கட்டுக்கோப்பு எவ்வாறு ஒழுங்குபடுத்தப்படுகின்றது?
மாகாண ஆளுனரால் ஆக்கப்படுகின்ற நிதி ஒழுங்கு விதிகளினால் (P.F.R)

11. மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை என்ன அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது?
குறிப்பிட்ட மாகாணத்தின் பரப்பளவையும் சனத்தொகையையும் கவனத்தில் கொண்டு சட்டத்தின் மூலம் உறுப்பினர்கள் தொகை தீர்மானிக்கப்படுகின்றது.
12. ஆளுனர் மாகாண சபையைக் கூட்டுமாறு அழைப்புவிடுக்கும் காலம் யாது?
குறைந்தது 2 மாதங்களுக்கு ஒருமுறை
13. மாகாணசபை ஆளுனரின் பதவிக்காலம் யாது?
பதவியேற்ற திகதியிலிருந்து ஐந்து ஆண்டு காலம்
14. கணக்காய்வாளர் நாயகம் யாரால் நியமிக்கப்படுவார்?
ஜனாதிபதியினால்
15. கணக்காய்வு அதிபதி அரசியலமைப்பின் சரத்து 153 இன்படி சகல அரச் நிறுவனங்களின் கணக்கறிக்கையை எங்கு சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப் படுகின்றார்.
பாராளுமன்றத்திற்கு

***

நபகீரதி
A/L (2012)
கலைப்பிரிவு



பா.பாலகுமார்
(மாணவன்)

# நாட்டார் நாடகத்தின் தோற்றம்

மனித இனம் தோன்றிய அன்றே நாடகக்கலை தோன்றிவிட்டது. மனிதன் கண்டறிந்த கலை நாடகக் கலை என்பர். நாடகத்தின் தோற்றம் பற்றிப் பல்வேறு நாடகவியலாளரது கருத்தினை நாம் நோக்குவோமானால் நாடக சமயக் காரணங்களின் அடியாகத் தோன்றியது எனவும் போலச் செய்தலாகிய மரபின் அடியாகத் தோன்றியது என்றும், ஆட்டத்திலிருந்து தோன்றியது எனவும், பொய்முகம் அணிவதிலிருந்து தோன்றியது என்றும், பாவனை செய்வதிலிருந்து தோன்றியது என்றும் இயல்பூக்கத்தின் அடியாகத் தோன்றியது எனவும், இறைவனே நாடகத்தை தோற்றுவித்தான் எனவும், இவ்வாறான கருத்துக்கள் காணப்படுகின்றது. இக்கருத்துகளில் நாடகத்தின் தோற்றத்துக்குரிய அடிப்படை இயல்புகளையே காணக்கூடியதாக உள்ளது. ஆனாலும் நாடகத்தின் தோற்றம் சமயக் காரணங்களின் அடியாகத் தோன்றியது என்பதே பல்வேறு நாடக ஆய்வாளர்களினதும் சமூகவியலாளரினது கருத்துக்களாகும்.

சமயக் காரணங்களின் அடியாகத் தோற்றம் பெற்றதே நாடகக் கலை என்று ஏற்றுக் கொண்டதற்கு உரிய ஆதாரங்களை நோக்கும் பொழுது ஓசிரியஸ்சின் மரணத்தைக் கொண்டாடிய அபிடொஸ்பாஸ்க்கு நாடகங்கள், மத்தியகால நாடகங்களுக்கு வித்திட்ட ஈஸ்டர் வழிபாடு கிரேக்கநாட்டு டயோனியஸ் விழா, யப்பான் நாட்டு சம்போசா நடனம், இந்தியாவின் இந்துமதக் காரணங்கள் (சூரன் போர்) இலங்கையின் கண்டிய நடனம் தமிழ் நாடகங்களுக்கு வித்திட்ட களவேள்வி வெறியாட்ட நிகழ்ச்சி போன்றனவற்றைக் குறிப்பிடலாம். இக்கருத்துக்களில் அடியாக நாடகம் சமயக் காரணங்களின் அடியாகத் தோன்றியது எனக் கூறத்தோன்றினும் வேறுபல கருத்துக்களையும் நாம் ஆராய்ந்து கொள்வது அவசியமாகும்.

இதன் அடிப்படையில் சமயக் காரணங்களை நோக்குவோமானால் சமயக்கரணம் என்பது சமயம் சார்ந்த கிரியைகளையே கருத்தில் கொள்ளவேண்டும். அதாவது அகவயமான கருத்துக்களுக்கு செயல்வடிவம் கொடுப்பதாகும். அதுபோலவே அருவமாக உள்ள கதைப்பொருளுக்கு அல்லது ஐதீகத்திற்கு செயல்வடிவம் கொடுக்கின்றான் நடிகன்.

புராதன மனிதனுடைய சமயச் சடங்குகளில் தான் நாடகத்தின் மூலவேர் உள்ளது என பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கூறுகின்றார். தென்ஸ் மக்கள் தங்கள் கருவளத்தெய்வமான டனோனியஸ் தெய்வத்திடம் ஊர்வலமாகச் சென்று ஆடிப்பாடி விழா எடுப்பார்கள் எனவே இதிலிருந்து கிரேக்கத்தில் நாடகம் தோன்றியது எனலாம்.

அதாவது டயோனிய புகழ்பாடும் டித்திராம் பாடலைப்பாடிய கோறஸ்சில் இருந்தே அங்கு நாடகம் தோன்றியது சமயக்காரணங்கள் நாடக அம்சங்களைக் கொண்டுள்ளன. இதிலிருந்து மக்கள் அரங்கு தோன்றியிருக்க வேண்டும் என்கிறார் ஜோன் ஹறீசன் அனைத்துக் கரணங்களும் நாடகமாவது இல்லை. ஒரு சமயக் கரணம் நாடகமாவதற்கு சமூகப் பின்னணி காரணமாக இருக்கும். ஒரு குறிப்பிட்ட சமயச்சடங்கு சகல சமூகத்தினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டமையால் அங்கு நாடகம் தோற்றம் பெற்றது.

ஐரோப்பா முழுவதும் கிறிஸ்துவின் அற்புதங்கள் நன்மை, தீமைப் போராட்டங்களின் ஊடாக நாடகம் பிறந்தது. அதாவது கிறிஸ்துவின் பாடுகளைச் சித்தரிக்கின்ற நாடகம் பிறந்தது என்பர். சீனாவில் இயற்கையை வழிபடுவதில் இருந்தும் மூதாதையர்களை வழிபடுவதில் இருந்தும் நடனத்தை ஆடினர் என்றும் அவை நாடகமாகப் பின்னர் முகிழ்ந்தன என்றும் சௌவுட் (Scort) என்பவர் கூறுகிறார். இந்திய நாடகம், சமயத்தொடர்புடையது. இதற்கான மூலவேர்களை இருக்கு வேதங்களில் காணலாம் என்பர். கீத் (Keeth) இலங்கை நாட்டார் நாடகங்களும், சமயச் சடங்கின் அடியாகத் தோன்றியது என்கின்றனர். பேராசியர் எதிரிவீர சரச்சந்திரா, A.J.குணவர்த்தனா வடக்கு, கிழக்கு நாட்டுக் கூத்துக்கள் ஈழத்துக்குரிய தனித்துவம் கொண்டவை. இவை சமயத் தொடர்பு உடையன என்கிறார் கலாநிதி.சி.மௌனகுரு அவர்கள்.

சமயக்கரணங்கள் இருவேறு அம்சங்களை உடையன.

- ஐதீகம்
- நம்பிக்கை

**1. ஐதிகம் :–** இது எப்படி நடந்தது என்கிற கதை (கட்டுக்கதை) இது மீளவும் செய்யப்படாமல் பலன் ஏற்படும் என நம்பினர்.

**2. நம்பிக்கை :–**

நம்பிக்கை மந்திரம் தந்திரத்தின் பாடப்பட்டது நாடகத்தின் மூலவேர் மந்திரத்தில் உள்ளது என்கிறார். பேராசிரியர் J.ஜோர்ச் தொம்சன்

ஐதிகத்தை அடிப்படையாகக் கொண்டு நாடகங்களில் பிரதான நடிகன் தன்னைக் கடவுளாக அல்லது கதாநாயகனாக பாவனை செய்கின்றான் என்று ராகுலன் பிரபு (Rukulan) கூறுகிறார். புராதன மனிதன் வேட்டைக்குச் சென்றான். வேட்டைக்குச் செல்லும் போதும், மழை பெய்கின்ற போதும், வயலை உழுது பயிர் செய்கின்ற போதும், விளைச்சல் அற்றுப்போகும் பொழுதும் மந்திரங்களை உச்சரித்து நடனங்களை மேற்கொண்டான். அப்போது அவனது உறவினர்களும், அயலவர்களும் இணைவர். இதனால் அங்கு பார்வையாளர் அப்போது இணைந்த மக்கள் அரங்கு உருவாகியது என்பார். மல்கிறே ஆனந்த் (Mullcrai Anand) புராதன மக்களின் மந்திரம் சார்ந்த நடனங்களிற்தான் அரங்கக் கலையின் சாரம் பொதிந்து உள்ளது. ஆகவே சமயச்

சடங்கிலிருந்து நாடகம் தோன்றியது. இதன் வளர்ச்சிக்கு மந்திரங்களும், புராணக் கதைகளும் உதவின.

கிரேக்க அறிஞரான அரிஸ்ரோட்டில் நடிப்பில் ஆர்வமும் பாவனை செய்யும் ஆற்றலும் மனித இயல்பு எனக்கூறினார். ஆகவே நாடகத்தின் மூலவேர் இப்பாவனை செய்தலிற்தான் உண்டு. இந்த அம்சத்தை மனித வளர்ச்சிக் கட்டத்தின் ஆரம்பக் கட்டமான குழந்தைப் பருவத்திலேயே காணலாம். குழந்தையின் பொதுவான இயல்பு பறவைகள் போலவும், விலங்குகள் போலவும், முதியோரைப் போலவும், பாவனை பண்ணுதல் ஆகும். இப்பாவனை பண்ணுதல் என்பது ஒரு பரப்பந்த பொருளின் வாழ்க்கையை, உலகைப் பாவனை பண்ணுதல் எனக்கூறப்படும்.

மொழி தோன்ற முன்னரே மனிதன் சைகைகள் மூலமும் குறிப்புகள் மூலமும் தம் சமூகத்துடன் தொடர்பு கொண்டான். இந்தப் பண்பு நாடகத்தில் மிளிர்வைக் காணலாம். இந்திய நாட்டிய சாஸ்திரமும் நாடகத்தின் தோற்றம் பற்றிக் கூறும் போது பாவனை செய்தலையே குறிப்பிடுகிறது. உதாரணமாக நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடும் முத்திரைகள் பாவனைகள் ஆகும். இதனை அனுகிருதி என்பர். ஆரம்பகாலத்தில் புராதன மனிதன் இயற்கை அதீத சக்திகளுக்குப் பயந்தான். இதனால் அவற்றை மகிழ்ச்சிப்படுத்த விரும்பி அவற்றைப் பாவனை செய்தான் ஆறுபோலப் பாய்ந்தான். காற்றுப்போல அசைந்தான். இடி, இடிப்பது போல பாவனை செய்தான். வேட்டைக்குப் புறப்படும் போது வேட்டையாடலைப் பாவனை செய்தான். வேட்டையில் பிடிக்கப் போகும் மிருகங்களைப் பிடிக்க இயலுமென நம்பினான். இந்த நம்பிக்கை காரணமாக இவை மீள, மீளச் செய்யப்பட்டன. இதனால் பாவனை செய்தலும் ஒரு வகைச் சடங்காகியது. இதுவும் சமயத்துடன் தொடர்புபட்டது.

மகிழ்ச்சி மேலீட்டால் ஆடிப்பாடுதல் மனித இயல்பு வாழ்வின் வேகம், சுறுசுறுப்பு, இயல்பூக்கம், மனவெழுச்சி என்பவற்றை ஒத்திசைவுடன் கூடிய வெளிப்பாடு ஆகியன. உடல் இயக்கங்களை ஏற்படுத்தும். உதாரணமாக மிருகங்கள், பறவைகள் கூட ஒத்திசைவுடன் கூடிய உடல் இயக்கங்களில் ஈடுபடுகின்றன. சேவலின் காதல் நடனம் போர் நடனம். கோழி குஞ்சைக் காக்க ஆடும் ஒத்திசைவு, மயிலின் ஆட்டம் உணர்ச்சியின் போது ஆண், பெண் சிலந்திகள் கால்களைச் சேர்த்து ஆடும் ஆட்டம், எருது, கடா சண்டையில் உள்ள ஒத்திசைவுகளாகும். மிருகங்கள், பறவைகளுக்கு பேசும் ஆற்றல் இல்லை ஆகையால் அவைகளிடம் ஒத்திசைவுகளுக்கு மேற்பட்ட கலை நுணுக்கங்களை ஆட்டங்களில் காணமுடியாது. ஆனால் பேசும் ஆற்றல் உள்ள மனிதனிடம் இருந்து தாள, லயம் பிசகாத ஆட்டங்களும் மேலாக நாடகங்களும் தோன்ற முடியும். அவ்வாறு தோன்றியுமுள்ளன. எனவே நடனங்களில் இருந்து நாடகம் தோன்றியது என்ற கருத்தை கென்றி வால்ப்ஸ் (Hentryy Wells) குறிப்பிடுகின்றார்.

இந்திய அரங்கக்கலை வரலாற்றை ஆராயும் போது நடனக்கலை, நாடகக்கலையுடன் தொடர்புபட்டது என்கிறார். A.N.பெருமாள் சீனாவிலும் நாடகங்களில் இருந்தே நாடகம் தோன்றியது. ஜப்பான் நாடக வகைகள் அவர்கள் எரிமலைக்கு முன்பு ஆடிய சம்போசா நடனங்களில் இருந்தே தோன்றியது என்பார் செளட் (Scort)

எனவே நடனமும் பாவனை செய்வதில் இருந்தே தோன்றியது இப்பாவனை செய்தலை மீளச் செய்வதன் மூலம் பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை

காணப்பட்டது. எனவே இது சடங்கின் அடிப்படையுடன் தொடர்புடையது. இரண்டையும் பிரித்துப் பார்க்கமுடியாது. இது சீனா, ஐப்பான். இந்தியா போன்ற கீழைத்தேச நடனவகைகளுக்கும் பொருந்தும்.

நாட்டிய சாஸ்திரம் நாடக இலக்கணம் கூறும் நூல் "நட்" என்கிற வடமொழியின் அடியாக நாடகம் என்ற கருத்து பெறப்படுகிறது. இது கூறுவதாவது திரேதாயுகத்தில் இந்திரன் தலைமையில் தேவர்கள் பிரம்மாவிடம் சென்று மக்கள் ஆசை, சுயநலம், பெறாமை போன்ற உணர்வுகளுடன் உள்ளார்கள். ஆகவே அவர்கள் கண்களுக்கு விருந்தளிக்க காட்சியைப் படைத்து அளியுங்கள். நால் வேதங்களைச் சூத்திரர் அனுகமுடியாது ஆகவே ஐந்தாவது வேதம் படையுங்கள் என்றனர். பிரம்மா, தியானத்தில் இருந்தார். விஸ்வகர்மா என்ற தேவதச்சன் அரங்கைப்படைத்தான். அவ் அரங்கில் சிவன் ஆடினார். அத்தெய்வீக நடனத்தை பரதமுனிவர் உலகிற்குக் கொண்டு வந்தார்.

பரதர் ரிக் வேதத்திலிருந்து நாடக இலக்கியத்தையும் சாமவேதத்திலிருந்து பாடல்களையும் யசுர் வேதத்திலிருந்து அபிநயங்களையும், அதர்வவேதத்திலிருந்து ரசங்களையும் பெற்று, நாடகம் எனும் கலை வடிவம் தோற்றுவிக்கப்பட்டது எனும் கருத்தினை நாட்டிய சாஸ்திரத்தில் காணலாம். இக்கருத்தினை நோக்கும் போது நாடகம் சமயத்தின் கருப்பையிலிருந்து தோற்றுவிக்கப்பட்டது எனலாம். வேட்டுவரி, குன்றக்குரவை, ஆச்சியர் குரவை ஆகியன சமயத் தொடர்புடையன. மாதவி ஆடிய பதினோர் ஆடல்களும் சமய ஐதீகங்களை அடிப்படையாகக் கொண்ட ஆட்டங்கள். எனவே இங்கு பெறப்படுகின்ற கருத்துக்களின்படி இவ் ஆட்டங்கள் தெய்வீக தன்மையைப் பெற்றுள்ளன. இதனாலேயே எமது கடவுளர்கள் நடராஜர், அரங்கக் கூத்தர், அரங்கநாதர், அம்பலவாணர் என நாமம் பெற்றுள்ளனர். இவற்றைத் தொகுத்து நோக்கும் போது சமயக் கரணத்தினடியாக நாடக தோற்றம் பெற்றது என்பது பெறப்படுகின்றது.

பா.பாலகுமார்
A/L (2011) கலைப்பிரிவு
J.P.H.C



B.Balakumar
(Student)

# HINDU FESTIVALS

## THAI PONGAL

The Thaipongal fastival generally falls on the 14th or 15th of January. It heralds the harvest festival when farmers after their year long toil enjoy a well earned holiday feasting themselves on the golden grain so generously returned by mother Earth. The rich landlords and the poor workers alike find happiness in the new prosperity around them.

On Thaipongal day people are awakened by the din of crackers which is heard every where Afther the ceremonial bath they start preparing sweet rice with milk and jaggery it is boiled in the yard itsele in a new pot before the rising sun the yard is decorated with "kolam" or beautiful patterns laid out using rice flour or holy ashes and a temporary hearth is set upin the middle people use new pots and pans because it is believed that fresh hopes and new ideas will dawn with the dawn of the pongalday.

The offering of milk rice is the most important part of the celebration. It is offered to the sun god in banana leaves along with various fruits, betel and are canuts. Comphor is burnt and coconuts are split holy hymns are sung. After prayers the milk rice is served to all.

Not only men and women but also the animals that are part and parcel of farm life have a share in the merriment. Tha day following Thai pongalday is called paddippongal or madduppongal on this day farmers bathe their cows and bulls and put garlands round their necks. They thus show their gratitude to these animals that have helped them in their farm work.

****

By.B.Balakumar
A/L (2011)



# New Year

B.Balakumar
(Student)

The Hindu and Buddhist New year ganerally falls on the 15th of April. It is a day of great joy and feasting to all. About a couple of days prior to the festival, people set about mating preparations for the dawn of the New year. Houses are colour washed and compounds well swept parents go shopping in order to buy new clothes and all the things necessary to prepare special meals on that day oil cakes and sweet meats are made for the grand occasion. Greeting cards are sent to friends and relatives. The elders in the family look up the almanac and make a note of the auspicious hour for the giving of cash present called kaivisesham.

The new yers is usherd in by the lighting of crackers. All the members of the family have a ceremonial bath in the early morning clad in their new clothes they then goto the temples and take part in the special poojas there. After prayers they return home and enjoy a delicious breakfast of milk rice which is the special meal for the occasion. Then the head of the family gives cash presents wrapped in betel leaves to all the members of the household and to friends and relations as well.

On the festival day the grown ups play cards or enjoy a chat with their friends. The youngsters have a jolly good time lighting crackers or playing national games like "thatchy" and "kiddy" At noon friends and relations are entertained to a grand lunch in the evening people visit their friends and relations. The New year festival is thus a day of great rejoicing for both the young and the old.

**

By.B.Balakumar
A/L (2011)



B.Balakumar
(Student)

# Deepavali

Deepavali is the festival of lights. It is one of the oldest and most beautiful of the festivals celebrated by Hindus all over the world. It generally falls in the month of November. The festival is associated with the popular legend of God Krishna's victory over Narakasura, a haughty demon. The story goes on that Narakasura had, by the practice of rigorous austerities, gained the Strength to molest the gods and send them out of the celestial kingdom. The gods in despair appealed to God krishna to Save them from his atrocities. Krishna answered their Prayers by slaying Narakasura. The demon king who was on his deathbed asked a boon from God krishna that all the people on earth should celebrate his death anniversary by wearing new clothes and making offerings at the temples. His boon was granted and thus the Deepavali festival came to be celebrated unto this day. This festival signifies the ultimate triumph of good over evil, light over darkness.

Two or three days prior to the festival, new clothes are bought for all the members of the family oil cakes and sweetmeats are made beforehand. Greeting cards are sent to friends and relations on the day of the festival people wake up early in the morning and have a ceremonial oil bath. clad in their new clothes they then go to the temples where special poojahs are performed. At noon friends and relations are entertained to a sumptuous lunch. Children have a jolly god time playing various games or firing crackers and lighting fire works. Brigh and beautiful lamps are lit in every Hindu home.

By.B.Balakumar
A/L (2011)



நா.கஜசாந்தன்
(மாணவன்)

# எதிர்காலம் நம் பிள்ளைகள் கையில்

வளர்ந்த மேலைநாடுகளைப் பார்க்கும் போது எனக்கு ஆச்சரியமாக இருக்கும். எப்படி இந்நாடுகளில் பெரும்பாண்மை மக்களுக்கு வேண்டிய எல்லாம் கிடைக்கின்றன? சாலைகள் நன்றாகப் போடப்பட்டு, வண்டிகள் வழுக்கிச் செல்கின்றன. வீடுகள் பெரும்பாலும் பார்க்க அழகாக இருக்கின்றன. சிறு பிள்ளைகளுக்கும், பெரியவர்களுக்கும் வேண்டிய அளவு உணவு கிடைக்கின்றது. அவர்கள் நன்கு உண்டு நன்கு வளர்ந்து மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடுகின்றனர். வீடுகளில் குழாயைத் திருகினால் நீர் கொட்டுகிறது. பள்ளிக்கூடங்களில் அனைவருக்கும் கல்வி கிடைக்கின்றது. பொதுச் சுகாதார வசதிகள் எங்கும் கிடைக்கின்றன. சிறு சிறு ஊர்களிலும் மருத்துவமனைகள் உள்ளன. பல நாடுகளில் அரசு மருத்துவ வசதிகளைத் தருகிறது. பிறநாடுகளில் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் மருத்துவச் செலவுகளை சிக்கப்படுகின்றது. மனமகிழ்ச்சிக்கு என்று இலட்சம் விஷயங்கள் உள்ளன. கொண்டாட்டங்களில் மக்கள் கூட்டமாகக் கலந்து கொள்கின்றனர். தொலைக்காட்சி பார்க்கின்றனர். புத்தகங்களைப் படிக்கின்றனர். இணையத்தைப்பயன்படுத்துகின்றனர்.

ஆனால் நம் நாடுகளில் நிலைமை அப்படி இல்லையே ஏழ்மை உள்ளது. படிப்பறிவின்மை உள்ளது. உணவுக்குத் திண்டாட்டம் உள்ளது. நாட்டின் உள்கட்டமைப்புகளில் எக்கச்சக்க குறைபாடுகள் உள்ளன. இன்னும் எண்ணற்ற பிரச்சினைகள் அடிப்படையில் எல்லாமே பணம் சார்ந்த பிரச்சினைகள் தான். இந்தப் பிரச்சினைகளைப் பற்றி ஆராய விருப்பமில்லாத பலரும் பேசாமல், நாம் வசதி படைத்த இந்த மேலைநாடுகளிற்க்குச் சென்றுவிட்டால் என்ன என்றுகூட யோசிக்கிறார்கள். நம் உறவினர்கள் பலரும் பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன், சுவிற்சலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற இடங்களில் இருப்பதை நாம் அறிவோம்.

ஆனால் இது ஒன்றுதான் இந்தப்பிரச்சினைக்குத் தீர்வா? அப்படியே எத்தனை பேர்தான் வேறு ஒரு நாட்டில் போய் வசித்துவிட முடியும்? அப்படிப் போகமுடியாதவர்கள், காலகாலத்துக்கும் ஏழ்மையில் சிக்கி, மோசமான உட்கட்டமைப்புகளுடன் போராடிக் கொண்டே இருக்கவேண்டுமா?......... தெளிவான தீர்வு, நம் நாட்டையே வளப்படுத்துவதுதான் அல்லவா? அப்படித்தானே அந்த மேலை நாட்டைச் சேர்ந்தவர்களும் ஒரு காலத்தில் செய்துள்ளனர்? அவர்கள் நாடும் ஏழ்மையில், உள்நாட்டுச் சிக்கல்களில், மோசமான உள்கட்டமைப்புக்களில் உழன்ற ஒன்றுதானே?

அவர்களில் தங்கள் நாட்டை மீட்டெடுக்க முடிந்த போது, நம்மால் முடியாதா? முடியும் என்றால் எப்படி முடியும்? என் கருத்தில் இந்த முடியும் என்ற மனப்பான்மையை நமக்குத் தருவது புத்தகங்களே. வரலாற்றுப் புத்தகங்களைப் படிக்கும் போதுதான் பிறப்பட்டுள்ள துயரங்களும் அதிலிருந்து அவர்கள் எப்படி மீண்டுள்ளனர் என்பதும் நமக்குத் தெரிகிறது. அறிவியல், தொழில்நுட்ப புத்தகங்களைப் படிக்கும் போதுதான், நம் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு அறிவியல், தொழில்நுட்பம் கொண்டு தீர்வுகளை எப்படி உருவாக்குவது என்று நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

நமக்குத் தேவையான தன்னம்பிக்கையை, தலைமைப் பண்பை, விடாமுயற்சியை, பொறுமையை, வீரத்தை, மன உரத்தை பல தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளிலிருந்தே தெரிந்து கொள்கிறோம். நமக்குத் தேவையான நற்பண்புகளை, நற்செயல்களை, நல் அறத்தை பல புத்தகங்களிலிருந்துதான் தெரிந்து கொள்கிறோம். உலக மக்களை அவர்களது கலாச்சாரத்தை, அவர்களது சாதனைகளை, அவர்களது போராட்டங்களை, அவர்களது உயிர்த்துடிப்பை, அவர்களது இலக்கியப் புத்தகங்கள் நம்மிடம் கொண்டு வந்து சேர்க்கிறது. நம் தமிழில், நம்மொழியில் இது போன்ற புத்தகங்களைக் கொண்டுவந்துள்ளேன்.

பள்ளி மாணவர்கள் தான் நாளைய உலகின் நம்பிக்கை என்பதை நாங்கள் தீர்மானமாக நம்புகிறோம். நம் லட்சியத்திற்கும் நம் இன்றைய நிதர்சனத்துக்கும் இடையில் பெரும் இடைவெளி இருப்பது உண்மையே ஆனால் இந்த இடைவெளியை யார் நிரப்பப் போகிறார்கள்? நம் இளைய சமுதாயம் தான் அவர்களது நம்பிக்கைக்கு உரம்போட, அவர்களது அடங்கா ஆர்வத்துக்கு வழிகாட்ட எங்கள் புத்தகங்களால் முடிந்தது என்றால், நாங்கள் உள்ளார மகிழ்வோம். எங்கள் நோக்கம் நிறைவேறிவிட்டது என சந்தோஷப்படுவோம்

உலகில் உள்ள முன்னேறிய நாடுகள் எல்லாம் அறிவு வளர்ச்சி மூலமாகவே முன்னேறின. படிப்பறிவு தவிர பள்ளிக்கூடங்கள், அந்தப்பள்ளிக் கூடங்களில் எண்ணற்ற புத்தகங்கள், ஊரெங்கும் நூலகம், அந்த நூலகம் முழுக்க நிறைந்திருக்கும் அறிவுக் கருவூலங்கள் இவையே. அந்த நாடுகளின் முன்னேற்றத்திற்குக் காரணங்கள் அதே காரணங்களை நாம் அப்படியே நகல் எடுத்தாலே போதும். நம் நாட்டையும் உயர்த்தி விடலாம்.

நா.கஜசாந்தன்
கலைப்பிரிவு (A/L) 2011



இ.ஷ்ராலினி
(மாணவி)

# நிம்மதி தேடும் உள்ளம்

வானில் நட்சத்திரங்கள் மினுங்குகின்றன. ஒவ்வொரு உடுக்களும் தமது இடங்களில் நின்று தம் அழகை உலகிற்கு காட்டுகின்றன. இவற்றுக்கு நடுவே வெள்ளித்தட்டுப் போன்ற திங்களவன் புவிமீது வெள்ளிப் போர்வையினை போர்க்கின்றான். அனைத்து ஜீவன்களும் உறங்குகின்றன. நிலவின் ஒளியில் மாடியின் வெளியான இடத்தில் சாய்வுக் கதிரையில் ஓர் பெண்மணி ஆழ்ந்த சோகத்தின் மத்தியில் அவளது மனம் சோகத்தின் காரணமாக இரவு பகல் இரண்டும் ஒன்றாகவே தென்படுகின்றன. எனவே கண்விழித்த வண்ணமே இருந்தாள். தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கோ ஓடியாடி வேலை செய்வதற்கும் ஒரு கால் இல்லை. இரண்டு கைகளும் தோல்மூட்டுடன் துண்டிக்கப்பட்டுள்ளது. காயமடைந்த கால் புண் ஆறவில்லை. புண்ணினுள்ளே ஈ மொய்க்கின்றது. கலைப்பதற்கும் பொல்லுப் பிடிப்பதற்கும் கையில்லை. புண்ணில் மொய்க்கும் ஈயினைக் கலைப்பதற்காக காலை மெதுவாக ஆட்டுகின்றாள். கால் வலிக்கின்றது. அந்த வலியினூடே பழைய நினைவுகள் அவளின் மனதைத் தொட்டன.

அன்று ஓர் நாள் வீட்டில் எல்லோரும் குதூகலத்துடன் இருந்தார்கள். அன்று தம்பி வேணுவின் பிறந்தநாள். தம்பி துயில்நின்று எழும்ப முன்னே அவனின் தாயும் தந்தையும் மகனின் அருகே சென்று அவனைத்தட்டி எழுப்பி அவனைக் கட்டித் தழுவினார்கள். அவனை ஆசீர்வதித்தனர். அவன் பெற்றோரின் ஆசீர்வாதத்துடன் எழும்பிய வேணு தன் பிறந்த நாளிற்கு என்ன செய்வதென்று எண்ணியபடி வெளியே வந்தான். அதேநாளில் மகப்பேற்றிற்காக வைத்தியசாலையில் இருக்கும் அக்காவிற்கு உணவு தயாரித்துக் கொண்டிருந்த வேணுவின் சின்னக்கா வேணுவைக் கண்டதும் அவனிடம் வந்து முத்தமிட்டு அணைத்துக் கொண்டாள். இவ்வாறு வீட்டிலுள்ள பாட்டி, மாமா, மாமி எல்லோருமே வேணுவை வாழ்த்தினார்கள். பின் அனைவரும் தங்கள் வேலைகளை பரபரப்புடன் செய்தார்கள். வேணு தனது வேலைகளை முடித்து விட்டு பக்கத்திலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு சென்றான். இவ்வாறு காலைப் பொழுது அனைவருக்குமே கலகலப்பாக அமைந்தது. மாலை நேரம் எல்லோருமாக சேர்ந்து வைத்தியசாலையிலுள்ள அக்காவைப் பார்க்கச் சென்றனர்.

அக்காவின் வைத்தியத்திற்காக மருந்துகள் தேவைப்பட்டது. வேணுவின் சின்னக்கா மருந்து வாங்குவதற்காக வெளியே சென்றுவிட்டாள். கடையில் மருந்துகள் வாங்கி விரைவாக ஓடிவந்தாள். வரும் வழியில் கல் ஒன்று தடக்கி கீழே

விழுந்துவிட்டாள். (அம்மா...) மருந்துகள் யாவும் கைநழுவி அங்கும் இங்கும் சிதறிக் கிடந்தன. சின்னவள் மெதுவாக எழும்பி மருந்துகளை ஒவ்வொன்று சேகரித்து வைத்தியசாலையை வந்தடைந்தாள். அக்காவின் பிரசவம் நன்றாக முடிந்தது. அனைவரும் அக்காவையும், குழந்தையையும் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். வேணுவின் சின்னக்கா பொருட்கள் வாங்க கடைக்குச் சென்றுவிட்டாள்.

சென்ற ½ நொடிப் பொழுதினில் பெரியவொரு சத்தம் அனைவருமே பொசுங்கிச் சாம்பலாகி விட்டனர். சத்தம்கேட்டு மக்கள் எல்லோரும் நாலா திசைகளிலும் சிதறி ஓடினார்கள். தாய் எங்கோ, தந்தை எங்கோ! பிள்ளை எங்கோ! என திக்குத் தடுமாறு ஓடித்திரிந்தார்கள். பார்க்கும் இடமெல்லாம் குண்டு மழை பொலிந்தது. எங்கு பார்த்தாலும் சடலங்கள் உதிரம் ஆறாக ஓடியது. கடைக்குச் சென்ற பெண்மணி காயப்பட்டு கால் இழந்து, கையிழந்து தன் உறவுகளைத் தேடியலைந்தாள். கண்ணெதிரே காட்சி தந்த அழகான வீடு சாம்பலாகிக் கிடந்தது. அப்பெண்மணி கதறி அழுதாள். கூக்குரலிட்டு தன் உறவுகளை அழைத்தாள். அழைத்தும் பயனில்லை. அனைத்தும் அழிந்து போயின.

ஆய்வுக் கதிரையில் சாய்ந்திருந்த பெண்ணின் கண்ணால் கண்ணீர் அருவியாக பெருக்கெடுத்து ஓடியது. அன்று சாபத்தின் விமோசனமாக அகழிகை கல்லாகினாள். ஆனால் இன்று சோகத்தின் காரணமாக உயிருள்ள கல்லாகினாள். இப் பெண்மணியின் மனசு இழந்தவற்றை எண்ணிர் துடித்து எதிர்காலத்தை எண்ணித் தவிக்கின்றது. சண்டையற்ற சமாதான உலகை நாடுகின்றது.

இ.ஸ்ராலினி
கலைப்பிரிவு 2011 (A/L)

****



By.R.Stalini
(Student)

# Country Before self

Everyone in the world belonged to a certain country and called by the name of the country such as India. Indian, Japan- Japanese Uk.English. Every citizens should love their Nations. You the younger generation, are the pillars of future for Sri Lanka are protected to contribute more rather than us inorder to face the newly arising problems, such as climatical, Changes, Economical growth and especially on " Green growth"

From your childhood our country provides many facilities to generate good citizens. For the purpose of this, the free books free uniforms and even free education facilities are being conducted by the state. Children! Think a minute! How much we spending for our day to day fulfillment? The government of Sri Lanka bearing an amount as the burden for the benifit of you. But what we are doing? We never earn or do something for our country. During the period of king parakramabahu the Geat, our country was known as the "Granary of East" but now we are expecting from the other countries, for even the basic infrastructure. This paves the way to betray our country to the others. We never love our Lanka. What we are doing is.

After finishing the degree or schooling we escape to the abroad in order to earn. If is called "Brain grain". Now it has become a mayor problem. What is the usage of spending such amount of money for your education by the state? We should think of it. After leaving the country they send few amount of money for their relations. It is too minor portion, while comparing the amount which being spent by the state. After their settlements in foreing they marry and stay there so, totally they forget the country and are being called by the residing country.

How do we overcome to this problem? Children! You have to realize, how you are treated by your mother Lanka and how you are going to

response for your nation infuture. Before considering your own benifits and will just think the nation. For its valuable service you have to pay it before your own willing. Many of us never think of this the great persons in the world had become famous in their field because of the loving of their nation and they did some thiny for their Nation. Magathma, Gandhi fought against English in order to achieve freedom. He never thought about himself and even his soul. He had the courage to achieve something for his country. Thus he brought freedom. Even in our country too, Anagarika Dharmapala, Sri Ponnambalam Ramanathan. Dr. T.B.Jeyah and Sir D.B Jeyathilake are being recognized by all in order to their work towards the country But we...

Contribution for the development of your nation is a gratful achievement. But we are doing against the nation, Damaging and Destructing of public properties, deforestation, smuggling valuable goods from our country etc... are the activities are done by us for the benifit of self satisfaction. These actions never bring peace, calm, for the nation. By the name of "Modern colonization" our resources are being betrayed by us. The foreigners easily getting our natural resources. But we never thing of these kinds of actions. Actually it is not against our nation against us! we consider our own profit. It is actually a curse for us. We are destroying us due to the bile in our heart and mind. It will be caused for the emergency of terrorism full of economy and bitter experience to our nation. If the nation gets such recognition, the people who live in that country also to be treated as bad by the moving world.

We have no one to guide towards the welfare of nation while blaming on others, we feel that we are escaping from it. We forget that we all are Sri Lankan while barking and bawling, we escape from a certain problem. This happen within the country. In ancient history of Sri Lanka during the period of king Elara there was a harmony and the people earned for their nation Even king Dutugemuny too brought the country in a single flay and worked for the nation. So, look back! what have we done for our mother Lanka? The answer will be zero. I hope this will be a barbinger for you to work towards the country before your own willing.

Come Let's wipe the tears of our country and create a peaceful Lanka before self concentration!

Love Sri Lanka! Work for Lanka.

By.R.Stalini
2011 (A/L)

*****



# சிறுவர் உரிமைகள்


ஜோ.ஜோன்ஷன்
(மாணவன்)

ஒவ்வொரு பிள்ளையும் தன் கருத்தை வெளியிடுவதற்கு தன்னை பாதிக்கக் கூடிய எந்த விடையம் அல்லது நடைமுறைபற்றி அதன் அபிப்பிராயத்தை தெரிவிக்கவும் உரிமை உடையதாகவும் அத்துடன் வளர்ந்தோரால் அது கருத்திற்கு கொள்ளப்படும் உரிமை ஆகும். பிறரின் உரிமை மீறலில்லாமல் மற்றும்படி தகவல்களை பெறவும் மற்றவர்களுக்கு பரிமாறவும் தன் கருத்துக்களை வெளியிடவும் பிள்ளைகளுக்கு உரிமை உண்டு. ஒவ்வொரு பிள்ளையும் பெற்றோரின் வழிநடத்தலுக்கும், தேசிய சட்டத்திற்கும் அமைந்த முறையில் சிந்தனை, மனட்சாட்சி, சமயம் ஆகிய விடையங்களில் சுதந்திரமாக இயங்க உரிமை உடையவர். பிள்ளைகள் மற்றவர்களைச் சந்திக்க அல்லது சங்கங்களை அமைக்க உரிமை உடையவர்கள் ஆனால் இது பிறரின் உரிமைகளுக்குப் பாதகமாய் அமைதலாகாது. வெகுசன ஊடகங்கள் ஆற்றும் பணியின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து விசேடமாக அதன் சேம நலனுக்கும் பண்பாட்டுப் பின்னணிக்கும் ஏற்ற தகவல்களையும் தகவற் சாதனங்களையும் பெறுவதற்குரிய வாய்ப்புக்களை உறுதி செய்தல் வேண்டும்.

பிள்ளைகள் ஓய்வாக இருக்க விளையாட, கலாசார மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்குபெற உரிமை உரியவர்களாவர். பிள்ளைகள் தொடர்பான சகல செயற்பாடுகளும் முடிவுகளும் அவர்களின் சிறந்த நலன்களைக் கருத்திற் கொண்டதாக இருத்தல் வேண்டும். பிள்ளைகளின் பரிணாம வளர்ச்சித் திறனுக்கு ஏற்றவாறான நெறிமுறைகளைப் புகட்டுவதில் பெற்றோருக்கும், குடும்பத்தினருக்கும் உள்ள உரிமைகளையும், பொறுப்புக்களையும் அரசாங்கம் மதித்தல் வேண்டும். பிள்ளைகள் உயிர்வாழும் உரிமை உடையவர்கள் என்பதை ஒவ்வொருவரும் அங்கீகரித்தல் வேண்டும். பிள்ளைகளின் உய்வையும் வளர்சியையும் அரசாங்கம் உறுதி செய்தல் வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் பிறப்பிலிருந்து தனக்கென ஒரு பெயரைப் பெறும் உரிமையுடையது. இது ஒரு தேசியத்தில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். அரசாங்கம் குழந்தைகளின் ஆளடையாளத்தை பாதுகாத்தல் வேண்டும். அவசியமானால் அரசாங்கம் குழந்தையின் ஆளடையாளம் தொடர்பான அடிப்படை அம்சங்களை (பெயர், தேசியம், குடும்ப உறவுகள் ஆகியவற்றை) மீள நிரூபித்தல் வேண்டும்.

தம் பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர் இருவரும் கூட்டாகப் பொறுப்பேற்றல் வேண்டும். பெற்றோர் இதனை நிறைவேற்றுவதற்கும், அரசு ஆதரவளித்தல் வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் தகுந்த தரம் வாய்ந்த வாழ்க்கையை அனுபவிக்கும் உரிமையுடையதாகும். இதனை வழங்குதல் பெற்றோரின் முதற் கடப்பாடாகும். பெற்றோரால் அது முடியாத பட்சத்தில் அரசாங்கம் உதவுதல் வேண்டும். எல்லாப் பிள்ளைகளும் கல்வி பயிலும் உரிமையுடையவராவர். அரசு ஆரம்பக்கல்வியேனும் கட்டாயமாகவும், இலவசமாகவும் கிடைப்பதனை உறுதி செய்தல் வேண்டும். ஒரு பிள்ளை கல்வி கற்பதன் நோக்கம் அதன் ஆளுமை, திறன்கள், உடல் மற்றும் உள வகையான ஆற்றல்கள் என்பன முற்றுமுழுதாய் விருத்தி அடையச் செய்தலாகும். சுதந்திரமான சமுதாயத்திலே அடிப்படை மனித உரிமைகளுக்கும் தம் சொந்த கலாசார தேசிய விழுமியங்களுக்கும் மதிப்பளித்து பொறுப்புடனும், சமாதானமாகவும் வளர்வதற்கும் அவர்களை தயாரித்தல் அவசியம் ஆகும். பிள்ளைகள் ஒய்வாக விளையாட, கலாசார மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்குபெற உரிமையுடையவர்களாவர். ஆயுதப் பிணக்குகளில் சித்திரவதை, புறக்கணிப்பு, துர்நடத்தை அல்லது சுரண்டலுக்கு உள்ளான பிள்ளைகள் குணமாகி சமுதாயத்தில் மீண்டும் சேர்ந்து கொள்வதற்கான உதவிகளை உறுதி செய்யும் கடப்பாடு அரசாங்கத்திற்குரியதாகும். பிள்ளைகள் ஒரு குற்றம் புரிந்ததாகப் பழி சுமத்தப்பட்டால் சட்ட ரீதியாகவும் வேறுவகையாகவும் உதவி பெற அவர்களுக்கு உரிமை உண்டு. சட்ட நடவடிக்கைகள் பராமரிப்பு நிலையங்களில் சேர்த்தல் முதலியன முடியுமான வேளையிலும் தகுந்த சந்தர்ப்பத்திலும் தவிர்க்கப்படல் வேண்டும். பிள்ளைகளின் உயிர்வாழும் உரிமையுடையவர்கள் என்பதை ஒவ்வொருவரும் அங்கீகரித்தல் வேண்டும். பிள்ளைகளின் உய்வையும் வளர்ச்சியையும் அரசாங்கம் உறுதி செய்தல் வேண்டும். பிள்ளைகளின் கூடுமானளவு உயரிய சுகாதார வசதிகளைப் பெறும் உரிமையுடையவர்களாவர். சுகாதாரம் மற்றும் வைத்திய சேவைகளைப் பெறும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தல் வேண்டும். விடேசமாக சிசுமரணம், நோய், போசாக்கின்மை ஆகியவற்றைக் குறைக்கும் வகையிலான ஆரம்ப மற்றும் தடுப்பு ரீதியான சுகாதார பராமரிப்பு, பொது சுகாதாரக் கல்வி அவை தொடர்பான செயற்திட்டங்கள் ஆகியவற்றை பெறும் வாய்ப்பு சிறுவர்களாகிய எமக்கு கிடைத்தல் அவசியம் ஆகும்.

**சிறுவர் தொடர்பாக செயற்படும்**
**அமைப்புக்களும் அதன் விபரங்களும்**




லோ.லோன்ஷன்
கலைப்பிரிவு (A/L) (2012)



சி.வேன்சன்
(மாணவன்)

# இயற்கைச் சீற்றங்களும் பாதுகாப்பு முறைகளும்

இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் உயிர்ச் சேதங்களும், பொருட் சேதங்களும் ஏராளம். முக்கியமாக

| | |
|---|---|
| புயல் | (Cyclone) |
| வெள்ளம் | (Flood) |
| வறட்சி | (Drought) |
| காட்டுத்தீ | (Forest fire) |
| நிலச்சரிவு | (Landslides) |
| நிலநடுக்கம் | (Earth Quakes) |
| எரிமலை | (Volcanoes) |

ஆகியனவற்றால் ஏற்படும் அழிவுகள் உலகத்தின் பல பகுதிகளில் அவ்வப்பொழுது நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. புயலும் வெள்ளமும் தான் அடிக்கடி நம் நாட்டில் பெரும் சீரழிவை உண்டாக்கி வருவதை அறிய முடிகின்றது.

இவ்விரண்டும் ஒன்றோடு ஒன்று பிணைந்தவை புயலோடு பெருமழையும் சேர்ந்தே வருகிறது. தமிழ்நாடு, ஆந்திரம், ஒரிஸ்ஸா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் கடலோரப் பகுதிகளில் அடிக்கடியும் மேற்குக் கடலோரப் பகுதிகளில் அவ்வப்போதும் புயலும் வெள்ளமும் ஒவ்வோராண்டும் ஏற்பட்டுப் பெருஞ் சேதங்களை விளைவிக்கின்றன.

நாட்டின் பல பகுதிகளில் அவ்வப்பொழுது வரட்சி ஏற்பட்டு அங்குவாழும் மக்கள் பெருந்துன்பங்களுக்கு ஆளாவதையும் அறிவோம். நமது தேசத்தின் பெரும் பகுதி மழை வெப்பம் நிறைந்த பகுதியில் (Tropical Region) அமைந்திருப்பதால் பயிர் விளைச்சலுக்கு ஏற்றதாக உள்ளது.

மேற்கூறிய இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் அழிவுகளை அறிவியல் அடிப்படையில் இவைகள் வரப்போவதை முன்கூட்டியே அறிந்து (Forecast) அதற்கேற்பத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தால் அவைகளால் ஏற்படும்

அழிவுகளை ஓரளவு குறைக்கமுடியும். முன்னெச்சரிக்கை (Forewarning) மூலமாக உயிர்ச் சேதங்களை முழுவதுமாகத் தவிர்த்து விடலாம்.

நிலச்சரிவை பொறுத்தவரை நிலத்தின் தன்மையை புவியியல் அடிப்படையில் (Geologically) ஆய்வு செய்து இந்தெந்தப் பகுதிகள் நிலச்சரிவுக்கு உட்பட்டவை என்பதை வரைபடங்களில் (Maps) வரைந்து, முன்கூட்டியே நடவடிக்கை எடுத்தால் இதனால் ஏற்படும் சேதங்களைக் குறைத்துவிடலாம்.

அதேபோல் நிலநடுக்கம் பாதிக்கக்கூடிய பகுதிகளை புவியியக்கங்கள் (Global Tectonics) மற்றும் பாறை அமைப்புக்கள் (Structure) ஆகியவைகளை ஆய்வு செய்து இந்தெந்தப் பகுதிகள் இந்தெந்த அளவுகளில் பாதிப்புக்குள்ளாகக் கூடியவை என்று பிரிக்கப்பட்டிருக்கின்றன. (Seismic zoning) அதற்கேற்பக் கட்டங்களை அமைத்தால் நிலநடுக்கங்களால் ஏற்படும் சேதங்களை ஓரளவு குறைக்கலாம்.

இயற்கையின் சீற்றங்களைச் சமாளிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை நான்கு படிகளில் செயல்படுத்த வேண்டும். முதல்படி, முன்னெச்சரிக்கை செய்தல் (Fore warning) இரண்டாவது தயார் நிலையில் இருத்தல் (Preparedness) மூன்றாவதாக உடன் நடவடிக்கை எடுத்தல் (Immediate Acion) நான்காவது மீட்புப்பணி (Relief measures)

## புயல், வெள்ளம்

புயல் என்பது பெரும் மழையுடன் கூடிய ஒரு கடும் சுழல்காற்று. இது வெப்ப வேறுபாட்டால் அதிக அழுத்தத்தில் இருக்கும் காற்று குறைந்த அழுத்தமுள்ள பகுதிகளை நோக்கி வீசுவதால் உருவாகிறது. புயலில் இருவகை உண்டு. ஒன்று, அதிகக் காற்றழுத்தத்தில் இருக்கும் மையப் பகுதிகயை நோக்கிச் சுருள் வட்டப்பாதையில் (Spiral) வீசுவது (Cyclone)

இவ்வகைப்புயல், புவியின் வடபாதியில் (Northern Hemisphere) வலமிருந்து இடமாகவும் (Anticlockwise) புவியின் தென்பாதியில் (southern Hemis) இடமிருந்து வலமாகவும் (Clockwise) வீசுகிறது.

மற்றொன்று, எதிர்மறை புயல் (Anti- Cyclone) எனப்படும். அதாவது, அதிகக் காற்றழுத்தத்திலிருக்கும் மையப்பகுதியில் இருந்து குறைந்த காற்றழுத்தமுள்ள வெளிப்புறத்தை நோக்கி வீசுவது முதலில் குறிப்பிட்ட புயல்தான் மழையைப் பெருமளவில் கொண்டு வருகின்றது.

இந்தியா மற்றும் பாகிஸ்தானில் புயல் என்றும் சீனா மற்றும் ஜப்பான் நாடுகளில் டைஃபூன் (Typhoon) என்றும் ஆஸ்திரேலியாவில் வில்லி வில்லீஸ் என்றும் ஃபிலிபைன்ஸ் நாட்டில் போஸிக்குவில் என்றும் அழைக்கப்படுகிறது போன்ற டொரான்டோ (Toranto) என்பது நீண்ட புனல் போன்ற அமைப்புடைய கருமேகங்களைக் கொண்டு உருவாகிய ஒருவகை சூறாவளிப்புயல் பொதுவாக

இந்தப்புனல் வடிவத்தின் அகலம் தரைக்கு அருகாமையில் ஒரு சில மீட்டர்களும், மேலே போகப் போக விரிந்து மேகத்திற்கு அருகில் 1km வரை இருக்கும். சராசரியாக சில 100m அகலம் கொண்டதாக இருக்கும். இவ்வகைப்புயல் பயங்கர சுழல்காற்றுடன் மெதுவாக நகர்ந்து சென்று செல்லும் பாதையில் பெருத்த சேதங்களை விளைவிக்கும் ஆற்றல் கொண்டது. சுழல்காற்றின் வேகம் சராசரி 480km என்று கணிக்கப்பட்டிருக்கிறது.

சில சமயங்களில் இதன் வேகம் 800kg வரை சென்றுள்ளதாகப் பதிவு செய்திருக்கிறார்கள். அமெரிக்காவின் வளைகுடாப் பகுதிகளில் இது அடிக்கடி ஏற்படுகிறது. இது நிலப்பகுதியிருந்து கடல் பகுதிக்குள் செல்லும் பொழுது கடல் நீரை மேலே இழுத்துக் கடலுக்கும் வானத்திற்கும் இடையே ஒரு புனல் வடிவ நீர்க்குழாய்ப் போன்ற அமைப்பை உருவாக்குகிறது. ஹரிகேன் எனப்படும் கடும் புயல் பூமத்திய ரேகையை ஒட்டியுள்ள போல்ட்ரம் என்றழைக்கப்படும் புயலும், அமைதியும் மாறி மாறி ஏற்படும் குறைந்த காற்றழுத்தப் பகுதியில் உருவாகிறது. இதனால் மெக்ஸிகோ வளைகுடா மற்றும் கரிபியன் கடலோரப் பகுதிகள் இவ்வகைப் புயலால் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகின்றன. இப்புயலால் உண்டாகும் சூழல் காற்றின் வேகம் மணிக்கு 120km-250km வரை இருக்கும் இவ்வகைப் புயலின் கண் எனப்படும் மையப்பகுதியில் காற்றின் வேகம் மிகவும் குறைந்து அமைதியாகக் காணப்படும். இம்மையப் பகுதி சராசரியாக 25km அகலம் கொண்டதாகும்.

புயலோடு சேர்ந்தோ அல்லது தனித்தோ, தொடர்ந்து பெய்யும் பெரும் மழையால் சில சமயங்களில் ஆறுகள் மற்றும் ஏரிகளின் கரைகள் உடைந்தும் கொள்ளளவுக்கு மேல் அணைகளில் வெள்ளநீர் நிரம்புவதால் அவைகளைத் திறந்து விடுவதாலும் கரையோரங்களிலுள்ள ஊர்கள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கபடுகின்றன. உலகிலேயே 20ம் நூற்றாண்டில் நடந்த மிகப்பெரும் புயல் 1938ம் ஆண்டு ஜமைக்கா (Jamical) மற்றும் மெக்ஸிகோ (Mexico) நாடுகளில் சில பகுதிகளை அடியோடு அழித்த கில்பெர்ட் (Gilbert) என்றழைக்கப்பட்ட ஹரிகேன் வகைப்புயல் தான்.

நம் நாட்டில் சென்ற 20 வருடமாக தாக்கிய புயல்களிலேயே மிகக் கடுமையாக தாக்கியபுயல் 1977ம் ஆண்டு தெற்கு ஆந்திரக் கடலோரப் பகுதிகளில் வீசிய புயல்தான். இந்தக் கடும் புயலால் பெரும் பொருள் சேதங்களுடன் 20,000 பேர் உயிரிழந்தனர். 230,000 கால் நடைகள் கொல்லப்பட்டன. இப்புயல் காற்றின் வேகம் மணிக்கு 200km. இருந்தது.

1977 புயலுக்கு பின் 740 புயல் பாதுகாப்புக் கட்டங்கள் (Cyclone Shelters) சாதகமான முக்கிய இடங்களில் கட்டப்பட்டன. புயல் வருவதற்கு முன் 1998 உதவி முகாம்கள் (Relief camps) ஏற்படுத்தி 650,000 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தின. 2000 மீட்புப்பணிக் குழுக்களும் (Rescue Teams) 543 மருத்துவக் குழுக்களும் (Health Teams) ஏற்படுத்தப்பட்டன.

1977 மற்றும் 1990 ஆண்டுகளில் புயல் மற்றும் வெள்ளத்தால் கிடைத்த படிப்பினையால் புயல் வருவதை முன்கூட்டியே துல்லியமாகக் கணிப்பதற்குச் சிறந்த தொழில் நுட்பங்களோடு உருவான நவீன கருவிகள் நிறுவப்பட்டன. அடிப்படை

வசதிகள் மேம்படுத்தப்பட்டன. பேரழிவுகளைச் சமாளிப்பதற்கான விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டது. அரசும் மக்களினமும் (சமுதாயமும்) ஒருங்கிணைந்து செயல்படத் தொடங்கின. மேலும் செயற்கைக் கோள்கள் மூலம் எடுக்கப்படும். நிலப்படங்கள் மற்றும் விமானத்திலிருந்து பிரத்தியோகப் புகைப்படக் கருவிகள் மூலம் எடுக்கப்படும். புகைப்படங்கள் வான் வெளிப் புகைப்படங்கள் வாயிலாகப் புதைந்து கிடைக்கும் இயற்கை வளங்களைக் கண்டறியவும், பலவகைப் புவியியல் வரைபடங்கள் தயாரிப்பதற்கும் இயற்கைச் சூழல் பற்றி ஆய்வு செய்வதற்கும் விவசாய வளர்ச்சிக்கும் பெரிதும் பயன்படுகின்றன. செய்கைக்கோள் அறிவியல் உலகம் மனித சமுதாயத்திற்குப் படைத்த ஒரு மாபெரும் கொடை என்றே கூறலாம்.

அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள், மக்கள் சார்பற்ற அமைப்புக்களும், அரசுக்குமிடையே ஒரு பாலமாகச் செயற்பட்டால் சீற்றாருகளால் ஏற்படும் பேரழிவுகளைப் பெரிதும் குறைக்கமுடியும்.

## வறட்சி

வறட்சி என்பது மழை பெய்யும் பகுதிகளில் வழக்கத்திற்கு மாறாக மழை பெய்யாமல் அப்பகுதியின் நீரியல் விபரித ஏற்றத்தாழ்வை உண்டாக்கி நீரை வற்றச் செய்வது இதனால் நீர்த்தேக்கங்கள் வறண்டு, கிணறுகள் உலர்ந்து, நீர் இல்லாமல் பயிர்கள் அழிந்து போகின்றன. சில சமயங்களில் குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லாமல் உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டுப் பஞ்சத்தை உண்டாக்குகிறது.

## நிலச்சரவு

மலைப் பிரதேசங்களிலுள்ள சரிவான் பகுதிகள் பொதுவாகப் பெருமழை பெய்யும் சமயங்களில் நிலச் சரிவுக்குள்ளாகின்றன. படுக்கை பாறைக்கு மேலுள்ள சிதைந்த பாறை மற்றும் அதற்கு மேலுள்ள மண் இவைகளுக்கிடையேயுள்ள பிடிப்புத் தன்மை மற்றும் உராய்வுத் தன்மை புவிஈர்ப்புச் சக்தியை விடக் குறையும் பொழுது நிலச்சரிவு ஏற்படுகிறது. அதாவது அவைகளின் மொத்த எடை அவைகளுக் கிடையேயுள்ள ஈர்ப்பு விசையை விட அதிகமாவதால் சரிந்து விடுகிறது. இவை ஏற்படுவதற்கான காரணங்கள் பல. அவற்றில் முக்கியமானவை 3 அவையாவன.

1. மழை அதிகமாகப் பெய்யும் பொழுது இயற்கை அல்லது மனிதனின் செயல்களால் வடிகால் வசதிகள் தடைப்பட்டு, நீர்கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள்ளும், பாறைத் துகள்களுக்குள்ளும் உட்புகுவதால் அவைகளுக் கிடையேயுள்ள நுண் துளைகளின் நீர் அழுத்தம் (Pore water pressure) அதிகமாகி அவைகளுக்கிடையேயுள்ள பிடிப்புத் தன்மையைத் தளர்த்தி விடுவது ஒரு காரணம்.
2. சரிவுப் பகுதியைத் தாங்கி நிற்கும் அதன் அடிப்பகுதியிலுள்ள சிதைந்த பாறைப்படிவுகள் (Rock Debris) நீரின் வேகத்தால் அரித்து அகற்றப்படுவதால், தாங்கி நிற்கும் ஆதாரம் இல்லாமல் போவது மற்றொரு காரணம்.
3. சரிவுப் பகுதிக்கு மேலுள்ள பகுதிகளில் எடைநிறைந்த கட்டங்கள் கட்டுவதால் ஏற்படும் அழுத்தம் 3வது காரணம்.

நீல கிரி மலைப்பகுதிகளில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் 1978, 79ம் ஆண்டுகளில் நிகழ்ந்த நிலச்சரிவுகளும் 1990

அக்டோபர் 5ம் திகதி குந்தா நிர்மின் நிலையத்திற்கு அருகிலுள்ள குடியிருப்புப் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவும் 1993 நவம்பர் 11ம் திகதி மரப்பாலம் அருகே ஏற்பட்ட நிலச்சரிவும் குறிப்பிடத்தகுந்தவை. 1978, 79ல் நிகழ்ந்த நிலச்சரிவுகளினால் 81 பேரும், 1990ல் நடந்த நிலச்சரிவினால் 11பேரும் உயிரிழந்தனர். 1993ல் உதக மண்டலத்திற்கும் குன்னூருக்குமிடையே மாநிலநெடுஞ்சாலையில் மரப்பாலம் என்ற இடத்தில் நிலச்சரிவினால் நெடுஞ்சாலையின் ஒரு பகுதி அடித்துச் செல்லப்பட்டதுடன் அப்பகுதியிலிருந்த குன்னூர், உதக மண்டலம் இருப்புப்பாதையும் சேதத்திற்குள்ளாயின் மேட்டுப் பாளையத்திலிருந்து உதக மண்டலம் செல்லும் ரயில் போக்குவரத்து முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. பொதுவாக ஏற்கனவே நிலச்சரிவு நிகழ்ந்த இடங்களுக்கு அருகில்தான் மேலும் மேலும் நிலச்சரிவுகள் ஏற்படுகின்றன.

எனவே பழைய நிலச்சரிவு வடுக்களை (Palaeo Scars) கண்டறிவது மிகவும் அவசியம். இதற்கு விமானத்திலிருந்து எடுக்கப்படும் வான்வெளிப் புகைப்படங்கள் (Aerial Photographs) பெரிதும் பயன்படுகின்றன. முதலில் இப்புகைப்படங்களை புவியியல் அடிப்படையில் ஆய்வு செய்து நிலச்சரிவினால் ஏற்பட்ட வடுக்களை உள்ள பகுதிகள் வரையறுக்கப்பட வேண்டும். பிறகு நில அமைப்பு வரைபடங்களில் (To pogra phics maps) இப் பகுதிகளை வரைந்து அதன் பின் நேரிடையாக அவ்விடங்களுக்கு சென்று ஆய்வு நடத்தி நிலச்சரிவு ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிந்து அதற்கேற்றாற் போல் நடவடிக்கை எடுத்தால் நிச்சயமாக நிலச்சரிவினால் ஏற்படும் அழிவுகளை கட்டுப்படுத்தலாம்.

ஆகவே புவியியல் நிலத்தை தேர்ந்தெடுத்து நிலத்தின் அமைப்புக் கேற்ப பயன்படுத்தினால் சுற்றுச் சூழலைக் காப்பதோடு நிலச்சரிவுகள் ஏற்படுவதையும் தவிர்க்கலாம்.

**நில நடுக்கம்** Earth quakes

புவிக்கடியிலுள்ள பாறைகள் பலவிதமான புவியியக்கங்களால் (Global Tectonics) தொடர்ந்து அழுத்தப்பட்டு ஒரு நிலைக்கு மேல் அழுத்தம் தாங்காமல் அவைகள் உடைந்து மீள்வதால் ஏற்படும் அதிர்வினால் நில நடுக்கம் உண்டாகிறது. இதனால் ஏற்படும் அதிர்வலைகள் (Tremor Waves) நிலநடுக்கம் மையத்திலிருந்து முதல்நிலை அலைகள் (Primary Waves) இரண்டாம் நிலை அலைகள் (Secondary Waves) மேல் பரப்பலைகள் (Surface Waves) என மூன்று வகை முக்கிய அலைகளாகப் பரவுகின்றன.

- முதல்நிலை அலைகள் இழுத்து விடப்பட்ட சுருள் கம்பி எப்படி முன்னும் பின்னும் அசைகிறதோ, அது போல் அசைந்து நேர்க்கோட்டில் ஊடுருவுவதால் இது இறுக்கும் சக்தியைக் கொண்டதாகவும் (Compressional Strength) இரண்டாம் நிலை அலைகள் சுருள் கம்பியின் ஒரு முனையைப் பிடித்துக் கொண்டு மேலும் கீழும் அசைத்தால் எப்படி அலைகள் போல் அசைகிறதே அத்தகைய அசைவுடன்

ஊடுருவுவதால் இவைகள் உராய்ந்து உடைக்கும் சக்தியைக் கொண்டும் (Shear stregth) இருக்கின்றன.

இரண்டு அலைகளும் புவியின் மேல் பரப்பை அடையும் பொழுது இரண்டு அலைகளும் ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்து உருவாவதுதான் மேல் பரப்பலைகள். அதனால் இவ்வலைகள் பரவும் விதத்தை அவ்வளவு எளிதாக விளக்கமுடியாது நிலநடுக்கத்தினால் பேரழிவுகள் ஏற்படுவதற்கு இவ்வலைகள் தான் பெரும் பங்கு வகிக்கின்றன. நில நடுக்கங்களினால் ஏற்படும் அதிர்வலைகளின் ஆற்றலை ஸீஸ்மோகிராஃப் (Seismograph) எனப்படும் நிலநடுக்கப் பதிவுக் கருவியின் மூலம் கணிக்கப்படுகிறது. நில நடுக்கக் கண்காணிப்பு மையங்களில் (Seimologicals) நிறுவப்பட்டிருக்கும் நில நடுக்கப்பதிவு கருவியில் இவ்வதிரி அலைகள் பதிவாகின்றன. பதிவாகும் அதிர்வலைகளின் ஆற்றலை "ரிக்டர் அளவு" (Richter Scale) என்ற அளவு முறையில் வரையறுக்கப்படுகிறது.

இது எண் 1 லிருந்து 10 வரை வரையறுக்கப்பட்டிருக்கிறது. 1ல் பதிவாகும். நிலநடுக்கங்கள் மிகக்குறைந்த சற்றே உணரக்கூடிய ஆற்றலையும் 10ல் பதிவாகும் நில நடுக்கங்கள் நடுக்கம் ஏற்பட்ட பகுதிகளை அடியோடு அழித்துவிடும். ஒவ்வோர் எண்ணிலும் வரையறுக்கப்பட்டிருக்கும் அதிர்வலைகளின் ஆற்றல் அதற்கு முந்திய எண்ணில் பதிவாகும் ஆற்றலை விடப் 10 மடங்கு அதிகம்.

நில நடுக்கங்கள் ஏற்படுவதற்கான காரணங்களை வைத்து 3 வகைப்படுத்தலாம்.

1. புவியியக்கங்களால் ஏற்படும் நில நடுக்கம்
2. எரிமலை வெடிப்பதால் ஏற்படும் நில நடுக்கம்
3. செயற்கையாக உண்டாக்கப்படும் நில நடுக்கம்

நிலநடுக்கங்களுக்கு அடிப்படை காரணம் புவியின் புறப்பாறை (Earth Crust) பலவிதப் புவிவிசைகளால் துண்டுகளாக உடைக்கப்பட்டு ஒவ்வொன்றும் தனித்தனிப் பாறைத் தட்டுக்களாக (Litho plates) உள்ளன.

இப்பாறைத் தட்டுக்கள் புவியியக்கங்களால் (Global Tectonics) நகர்த்தப்பட்டு ஒன்றோடொன்று தொடர்ந்து அழுத்தும் பொழுது உண்டாகும். மீள்சக்தி விசையால் (Elastic Strain) பாறைகள் உடைந்து மீள்வதாலோ அல்லது நகர்த்தப்படுவதாலோ ஏற்படும் அதிர்வுதான் நிலநடுக்கம் ஏற்படுவதற்கு முக்கியகாரணம். பல நில நடுக்கங்கள் இப்பாறைத் தட்டுகளின் எல்லை ஓரமாக ஒன்றின் மேல் ஒன்று நகர்ந்து அழுத்திக் கொண்டிருக்கும் பகுதிகளில் தான் (Subduction zones) ஏற்படுகின்றன.

புவியியல் முக்கியமாக "நெருப்பு வளையம்" (Ring of fire) என்றழைக்கப்படும் சுமார் 38,600 km. நீளத்திற்கு பசிபிக் பெருங்கடலின் கிழக்குக் கரையோரமாக அமைந்துள்ள குறுகலான பகுதியில் தான் நிலநடுக்கங்கள் அதிகமாக ஏற்படுகின்றன. மத்திய தரைக்கடலின் வடக்குக் கரையோரத்திலிருந்து இமயமலை வழியாக வங்காள விரிகுடா வரையிலுள்ள பகுதிகள் இவ்வகை நில நடுக்கங்களினால் உண்டாகும் வெடிப்புக்கள் பொதுவாக குறைந்த ஆழத்திலிருந்தே தோன்றுகின்றன. புவிக்கடியில் சுமார் 645Km ஆழத்திலிருந்து தோன்றுவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. பெருங்கடல்களின் நடுவில் அமைந்துள்ள நீண்ட மலைத் தொடர்களின் (Mid oceanic Ridges) மையப் பகுதிகளில் புவியின் அடி ஆழத்திலிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் கற்குழம்பால் (Magma) இருபுறமுள்ள பாறைத்தட்டுகள் இரண்டு பக்கங்களிலும் தள்ளப்படுகின்றன. இதனால் கடல்தரை விரிந்து கொண்டேயிருக்கிறது.

இரு பக்கங்களிலும் நகர்ந்து கொண்டிருக்கும் பாறைத்தட்டுகள் அவற்றின் மறு விளிம்புகளில் அமைந்துள்ள பாறைத்தட்டுகளை தொடர்ந்து அழுத்துவதால் அப்பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்படுகின்றன. கடல் தரை விரிவு மையங்களுக்கு (Sea floor spreading centres) அருகாமையிலும் நில நடுக்கங்கள் ஏற்படுகின்றன. நிலநடுக்கம் குறைந்த ஆழத்திலே தோன்றுகின்றன.

பாறைத்தட்டுகளின் எல்லைகளில் மட்டுமல்லாமல் பாறைத்தட்டுகளின் மையப் பகுதிகளிலும் கடுமையான நில நடுக்கங்கள் ஏற்படுகின்றன. இவ்வகை நிலநடுக்கங்கள் ஏற்படுவதற்கு ஏற்கனவே பாறைகளில் பிளவுகள் (Faults) உள்ள பகுதிகள் பல புவியியக்கச் செயல்களால் தொடர்ந்து அழுத்தத்திற்குள்ளாகும் போது ஒரு நிலைக்கு மேல் அழுத்தம் தாங்காமல் அப்பிளவுக்கு இரு பக்கங்களிலுமுள்ள பகுதிகள் அசைந்து கொடுத்து சரி செய்யப்படுவதால் ஏற்படுகின்றன. நில நடுக்கத்தில் குறிப்பிடத்தக்கவை 1811-12ம் ஆண்டுகளில் அமெரிக்காவின் மிஸ்ஸௌரி (Missouri) மாநிலத்தில் நியூமேட்ரிட் (New madrid) பகுதியில் நடந்த ஒரு பயங்கர நிலநடுக்கமும் 1886ம் ஆண்டு தென் கரோலினா (South carolina) மாநிலத்தில் சார்ல்ஸ்டன் (Charleston) இடத்தில் நடந்த நில நடுக்கமாகும்.

நியூமேட்ரிட் பகுதியில் நடந்த நிலநடுக்கமும் 1600km தூரம் வரை உணரப்படுகிறது. 1993ம் ஆண்டு மஹாராஷ்ட்ர மாநிலத்தில் லாட்டூரில் (Latur) ஏற்பட்ட நிலநடுக்கமும் அண்மையில் மத்தியப் பிரதேச மாநிலம் ஜபல் பூர்ப்பகுதியில் நிகழ்ந்த சில நடுக்கமும் இவ் வகையைச் சார்ந்தவை காஸ்மீரிலிருந்து அஸ்ஸாம் வரையிலுள்ள இமயமலைத்தொடர் இந்தியப்பாறைத் தட்டின் (Indian Plate) எல்லைப் பகுதியில் அமைந்திருப்பதால் இப்பகுதியில் நிலநடுக்கம் ஏற்படுகிறது. இந்தியப் பாறைத்தட்டு ஆசியா பாறைத்தட்டோடு மோதியதால் உருவானதுதான் இமயமலைத்தொடர்.

இமயமலைத் தொடர் உருவாவதற்கு முன் அந்தப்பகுதி "டெதிஸ்" என்ற பெருங்கடலாக இருந்தது. 650 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் புவியின் தென் துருவப் பகுதியிலிருந்த இந்தியப்பாறைத் தட்டு ஆசியப்பாறைத்தட்டை நோக்கி வடக்காக நகர்ந்து இவ்விரண்டு பாறைத்தட்டுகளுக்கு இடைப்பட்ட டெதிஸ் கடலில் படிந்து உருவாகியிருந்த படிவுப்பாறைகளை கிட்டத்தட்ட 500 இலட்சம் ஆண்டுகளாக அழுத்திப் பாறைகளை மடித்து மேல் நோக்கி எழச்செய்தன.

இதனால் இயற்கைச் சீற்றங்களின் பாதிப்புகள் பெருமளவில் நடைபெறுவதைப் பல்வேறு சம்பவங்கள் மெய்ப்பித்துள்ளன. இத்தகைய நிகழ்வுகள் நடைபெறாமல் தடுப்பது நமது கடமையல்லவா?

சி.வேன்சன்
2012 (A/L)

****



# Enviramental Pollution

V.Jesintha
(Student)

The environment has drawn the attentine of all the scientists and thinkers of the world today. Special branches of study and research have been set up in countries to deal with the menace of environmental pollution.

Pollution of the environment arises chiefly from heavy industrialition and other human activities such pollution renders the environment unsuitable and dangerous for human habituation. There fore it has become hecessary for all humans to take remedial measures to fight pollution in many countries governments have set up separate minitsries to deal with environment and pollution it is the duty of each one of as to keep our environment deal and fee from pollution Healthy growth free from diseases and starvation requires a healthy environment our atmosphere, land and water have to be maintained free of pollution our scientists and technicians have to devote a lot of attention and take extra ordinary measures to ensure maximum safety and frevent the leakage of poisonous chemicals and radio- active materials into our Environment. The in cidehts of Bhopal and Chernobyl of the recent past are glaring examples of the dangers of pollution.

At hopal nearly three million people were affected and at chernoby the entire population had to be evacuated to safer places it becomes necessary human beings have to even change their pattern of life- style to preserve our environment.

V.Jesintha
A/L(2012)



ஜெ.நிரோஜன்
(மாணவன்)

# வளமான வாழ்க்கைக்கு வாசிப்பு அவசியம்

இன்றைய 21ம் நூற்றாண்டில் மாணவர்களிடையே வாசிப்பு பழக்கம் அருகி வருவதை கண்ணூடாக பார்க்கக்கூடியதாய் உள்ளது. இது எப்பொழுதும் தகாது ஏனெனில் நவீனமயப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளும், நடைமுறைகளும் ஆகும். உண்மையில் வாசிப்பானது மனிதனை பூரண மனிதனாக்கும் இதனால் தான் வாசிகசாலைகள் உதயமாகின்றது. அறிவை விரிவாக்கவும் அறியாதவற்றை அறிந்து கொள்ளுவதற்கும், அறிந்தவற்றை அறியாதவர்களுக்கும் எடுத்துச் சொல்லவும் வளமான வாழ்க்கைக்கு வாசிப்பு அவசியமாகின்றது.

ஆனால்! இன்றைக்கு இவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதிலேயே தனது தமது நேரத்தின் பெரும்பாண்மையை செலவிடுகிறார்கள். சில மாணவர்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் கிறிக்கெட் மற்றும் திரைப்படங்களை பார்ப்பதற்காகவே பாடசாலைக்கு செல்லாது விடுகின்றனர். இதனால் இவர்களது கல்வி பெரிதும் பாதிப்படைகின்றது. கற்கவேண்டிய நேரம் வீணாகுவதுடன் கல்வித்தரமே குன்றிவிடுகின்றது.

மாணவர்கள் தமது பொழுதைப் போக்குவதற்காக இப்போது தொலைக்காட்சியை நாடுகின்றனர். அதேவேளை நல்ல நண்பர்கள் என கருதப்படும் நூல்களை வாசிக்க தவறிவிடுகின்றனர். இன்றைய மாணவ சமுதாயம் வாசிப்பதற்காக செலவிடும் நேரம் மிகக் குறைவாகவுள்ளது. **"நூல் பல கல்"** என்றார் ஒளவைப்பாட்டி. நாம் எவ்வளவு நூல்களை வாசிக்கின்றோமோ அவ்வளவுக்கு எமது அறிவு விரிவடையும். நானுமறிந்த ஒரு பொன்மொழி வாயிலாக "மனிதன் ஆறடியானால் அவன் அறிவு பன்னிரண்டு அடியாக இருக்கவேண்டும்." அதாவது இருமடங்காக வேண்டும். ரஸ்கீன் என்ற ஆங்கில அறிஞர் "புத்தகங்களை போன்ற சிறந்த கருவூலம் வேறேதும் மனிதனுக்கு இருக்கமுடியாது" எனக்கூறியுள்ளார். வேறு செல்வங்களை கள்வர்கள் களவாடி விட்டாலும் புத்தகங்களால் கிடைத்த அறிவை எவராலும் களவாட முடியாது.

புத்தகங்களை வாசிப்பதன் மூலம் ஒருவன் பெற்ற இன்பங்களை மற்றவர்கள் பறித்துவிட முடியாது. வாசிப்பு பழக்கம் இல்லாவதர்களின் வாழ்க்கை



தமிழ் மன்றம்



கணித விஞ்ஞான மன்றம்



சமூக விஞ்ஞான மன்றம்



ஆங்கில மன்றம்

இருண்டதாகவே என்றும் காணப்படும். வாசிப்பதன் மூலம் அறிவு விரிவடைவதுடன் எமது அறிவை நாளுக்கு நாளாக தினந்தோறும் விருத்தி செய்து கொள்ளக்கூடியதாய் உள்ளது. நூல்களை வாசிக்கும் போது நல்ல பயன் தரும் நூல்களை தேர்ந்தெடுத்து வாசிக்க வேண்டும். அப்போது தான் நாம் விரும்பிய மனநிறைவை அடையமுடியும்.

"கண்ணுடையார் ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதவர்" என்றார் திருவள்ளுவர்
ஊனக்கண்ணிலும் ஞானக் கண்ணே- அறிவுக்

கண்ணே சிறந்தது என்பதை இக்குறள் புலப்படுத்தியுள்ளது. கல்வி எனும் பெருஞ்செல்வத்தை வழங்குவன நூல்களேயாகும். இவற்றை நாம் வாசிப்பது எமது வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானது. நூல்களை வாசிக்கும் பழக்கம் உடையவர்கள் ஒரு போதும் தனிமை உணர்வை பெறுவதில்லை. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நூல்களையே அவர்களை நாடிச்சென்றுவிட முடியும். வாழ்வில் சலிப்போ, சோர்வோ ஏற்படுகின்ற போதெல்லாம் விரும்பிய நூல்களை படிப்பதன் மூலம் திருப்திகரமான மனநிலையை அடைந்து கொள்ளலாம்.

"என்னை எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே எனக்கூறினார் ஆங்கில கவிஞர் ஒருவர். புத்தகங்களைப் போன்ற இனிய நண்பர்கள் கிடைப்பது அரிது. நமக்கு அறிவூட்டும் ஆசான்களாக புத்தகங்கள் இருக்கின்றன. அவற்றை நாம் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

வாசிகசாலைகள் ⟶ நூல்கள் ⟶ மாணவர்கள் ⟶ வாசிப்பு என்பன பிணைக்கப்பட்ட கூட்டுக்கள். அக்கூட்டிலிருந்து மாணவர்கள் விலகமுடியாது. புத்தகங்கள் வாசிக்கும் பழக்கமிருந்தால் எமது வாழ்வை பலவழிகளில் விரித்தி செய்து கொள்ளலாம்.

கல்வி ஒரு வெகுமதி
அதை ஏற்றுக்கொள்
கல்வி ஒரு போராட்டம்
அதை வென்று காட்டு
கல்வி ஒரு கடமை
அதை நிறைவேற்று
கல்வி ஒரு சந்தர்ப்பம்
அதை நழுவவிடாதே
கல்வி ஒரு விளையாட்டு
அதில் ஈடுபடு
கல்வி ஒரு பயணம்
அதில் சென்று முடி.

ஆகவே நாம் கல்வியை கற்க வேண்டுமானால் வாசிப்பு முக்கியமாகின்றது. மாணவர்கள் கல்வி அறிவை பெற்றுக்கொள்ளும் மிக முக்கிய வழிகளில் ஒன்று ஆசிரியர்களுடன் பரஸ்பர உறவாடுதல் ஆகும். பெற்றோர்களே, பாதுகாவலர்களே உமது பிள்ளைகளுடன் உறவாடி, உரையாடி அவர்களது கேள்விகளுக்கு ஈடுபாட்டுடன் பதிலளித்தல் போன்ற செயற்பாடுகள் கல்வி கற்றலை செம்மையாக்க உதவுகின்றது. மாணவர்கள் நூல்களை வாசிப்பதன் மூலம் எமது பரீட்சைகளில் மிகக்கூடிய பெறுபேற்றை பெற்றுக்கொள்ளக் கூடியதாய் உள்ளது.

எனவே வாசிப்பு மனிதனை பூரணமாக்குகின்றது" என்றார் பேக்கன் எனும் அறிஞர் அவரது கூற்றுசரியே. நாம் ஓய்வு நேரத்தை பயனுள்ள புத்தகங்கள் வாசிப்பதிலே செலவிட வேண்டும். நாம் சிறுவயது முதல் வாசிப்பு பழக்கத்தை வளர்த்துக் கொண்டால் அது நாளடைவில் அறிவும், ஆற்றலும், உயர்ந்த பண்பும் மிக்கவர்களாக நாம் வாழ்வதற்கு வழிகாட்டும். வாசிப்பதனால் மனிதன் வாழ்வாங்கு வாழும் நெறியினை அறிந்து கொள்ளமுடியும் என்பதே இதன் உண்மைக்கருத்தாகும்.

"நீ படிக்காவிட்டாலும் பக்கத்தில் நல்ல புத்தகங்களையாவது வைத்திருநேரு"

***

நன்றி

ஜெ.நிரோயன்
A/L- 2011
கலைப்பிரிவு



அ.சுபர்சன்
(மாணவன்)

# இலக்கியமும் வாழ்க்கையும்

இயற்கை அன்னை மனிதனை அறிவு வார்த்தைக்குரிய மூளையோடும், உணர்ச்சிக், கற்பனையும் ஊற்றெடுக்கும் உள்ளத்தோடும் படைத்துள்ளார். ஆகவே மனிதனின் முழுமையான வாழ்விற்கு அறிவும் வேண்டும். உணர்வும் வேண்டும். ஒன்றைமட்டும் போற்றி மற்றொன்றைப் புறக்கணிப்பதால் மனிதன் இயந்திரம் போன்றவனாகின்றான் உணர்ச்சிகளை அடக்கியாளும் வல்லமையற்றவனாகின்றான். உணர்ச்சியை மாத்திரம் வளர்த்து அறிவினைப் புறக்கணிக்கும் போது மனிதன் நல்லன தீயனவற்றைப் பகுத்துணரும் பண்பை இழக்கின்றான். நடுநிலையினின்று எதனையும் ஆயும் ஆற்றலை அழிக்கின்றான். இந்நிலை அறிவியலை விஞ்ஞானமென்றும் உணர்ச்சியுங் கற்பனையுங் கொண்ட படைப்புக்களைக் கலையென்றும் கவின்கலை என்றும் பாகுபாடு செய்பவர் அறிஞர். கலையை நுண்கலை என்றும், கவின்கலை என்றும், அழகுக்கலை என்றும் கூறுவர். அது ஓவியம், சிற்பம், நாடகம், நாட்டியம், இசை, இலக்கியம் எனப்பல பகுப்புடையது. இவை அனைத்தினைக்கும் உணர்ச்சி வெளிப்பாடே உயிராக விளங்கும். இக்கலைகளனைத்தினும் இலக்கியஞ் சிறப்புடையது. அது மொழியினைக் கருவியாகக் கொண்டு பிறப்பது காலத்தினால் அழிவின்றி நிலைப்பதனையே அளவு கருவியாகக் கொண்டு வாழ்வது, உணர்ச்சியுங் கற்பனையுங் கூடிய அனுபவ வெளிப்பாட்டின பிரதிபலிப்பாக அமைவது இக்காரணங்களால் அது ஏனைய கவின்கலைகளிலும் சிறப்புடையதாகின்றது.

இத்தகைய இலக்கியத்தின் பயன்கள் மிகப்பல அவற்றுள் பிரதானமானது உலக வரலாற்றையே மாற்றி அமைக்கும் தன்மை. அறிவியல் வளர்ச்சியினால் ஏற்படும் மாற்றங்களிலும் பார்க்க, மனவளர்ச்சியினால் ஏற்படும் மாற்றங்களே வரலாற்றை மாற்றும் ஆற்றலுடையன. அதாவது மனித சமுதாயத்தின் மனவளர்ச்சிக்கூறுகளான விருப்பு, வெறுப்பு, நம்பிக்கை போன்றவற்றைப் பண்படுத்துவதனாலேயே வரலாறு பெருமளவில் மாற்றம் அடைகின்றது. கொடுமையும், வற்புறுத்தலும் கொண்ட அரசியல் அமைப்பினாலுஞ் சட்டதிட்டங்களினாலும் நிலையான சீர்திருத்தம் உண்டாகாது. உள்ளத்தின் ஆழத்திலே முளைவிட்டு வளர்கின்றது. செழிக்கும் அன்பு, அருள், தியாகம், தன்னலமறுப்பு முதலிய நல்லுணர்வுகளால் உண்டாக்கும் சீர்திருத்தமே நிலையானதும் பயனுள்ளதுமாகும். இந்நல்லுணர்வுகளை உண்டாக்கும் சீர்திருத்தமே நிலையானதும்

பயனுள்ளதுமாகும். இன்னல் உணர்வுகளை மனிதனிடத்தே பயிர் செய்ய வல்லது இலக்கியம். எனவே உயரிய சமுதாய மலர்ச்சியை உண்டாக்கவல்லது இலக்கியம். எனவே உயரிய சமுதாய மலர்ச்சியை உண்டாக்கவல்லது. இலக்கியம் வரலாற்றுக் கண்கொண்டு நோக்குவதற்கு இவ்வுண்மை புலனாகும். அதனாலேதான் சட்டம், அறிவியல், தத்துவத்துறை முதலியனவற்றை ஆக்குவோரிலும் பார்க்க இலக்கியம் படைக்கும் புலவர்கள் ஆற்றலும், செல்வாக்கும் உடையவர்களாய் மனித உள்ளங்களை ஆள்கிறார்கள் என ஆங்கில இலக்கிய விமர்சகர்கள் கூறுகின்றனர்.

வாழ்க்கை என்னும் நறுங்கனியின் தீஞ்சுவைச்சாறே இலக்கியமெனில் அது முற்றும் பொருத்தமுடைந்து உலக மாந்தர் இயல்புகள் பெருங்கடல் போல ஆழமும், அகலமும் உடையன. அவைகள் அனைத்தையும் அளவிட்டுக்காணுதல் சில வாழ்நாட் பால் பிணிச்சிற்றறிவுடைய மாந்தர்க்கு இயலாததொன்று. ஆனாலும் பொய்யில் புலமைச் சான்றோர்கள் ஆக்கித்தந்த இலக்கியங்கள், மாந்தரியல்பின் ஆழ அகலத்தையும் நன்மை, தீமைகளையும் விருப்பு, வெறுப்பின்றி ஆராய்ந்து கூற வல்லன அன்றியும் பல கோணங்களிற் கிளைத்துச் செல்லும் உணர்வோட்டங்களையும் மன எண்ணங்களையும் ஆசாபாசங்களையும், நம்பிக்கைகளையும் வாழ்க்கை முறைகளையுந் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டவல்லன. சங்க இலக்கியத்து அகத்துறைப் பாடல்களும் புறத்துறைப் பாடல்களும், இவ்வுண்மையை தெளிவாகவும், ஆழமாகவும், நுட்பமாகவும் புலப்படுத்துகின்றன. வாழ்க்கைத் தத்துவங்களையும், பண்டைத் தமிழர் வாழ்வு முறையும் வைரமணிகளாய் ஒளி விடுகின்றன. அகத்தைறப் பாடல்களிலே மாந்தரின் துள்ளிய உணர்வோட்டங்கள் துடிக்கின்றன. அதனால் இலக்கியம் கற்போர், மனவளர்ச்சியுடையவர்களாய், ஒழுக்கநெறி போற்றிச் சீரிய உலகியல்நிலை பெறமுடிகிறது.

வரலாற்று முறையில் ஆராயும் போது உலகில் மனிதன் தோன்றிய நாள் தொடக்கம் இன்று வரை பலவகைப்பட்ட புதிய புதிய சிக்கல்கள் கிளைத்தெழுந்தமையை அறிதல் இயலும். தேசங்களோடு தேசங்களும், நாடுகளோடு நாடுகளும் பகைத்தெழுந்து சீர்குலைந்து உள்ளன. மக்கள் ஒருவரோடு ஒருவர் பழகும் போதும் குடும்பமாக வாழும் போதும் பிணக்குகள் பல தோன்றியுள்ளன. இத்தகைய சீர்கேடுகளுக்கும், பிணக்குகளுக்கும் காரணமாக அமைவது மக்கள் மனத்திலே கலையுணர்வும், சார்ப்புணர்வும் வேர் கொள்ளாமையே. இளங்கோவின் சிலப்பும் கம்பனின் காவியமும் வில்லியன் பாரதமும் பாரதியாரின் கவிதைப் பூந்துணரும் இவ்விருவகை இயல்புகளையும் வெளிப்படுத்தும் தகைமையாகும். எனவே இவ்விருவகை உணர்வுகளையும் மக்கள் மனதில் ஆழப்படுத்தல் விருந்தகையன. இலக்கியங்கள் அதனால் இலக்கியங்கள் கற்றவர்கள் பூசல்களையும் பிணக்குகளையும் தக்கவகையிற் புறங்கண்டு தோல்வியும், துன்பமுற்ற நல்வாழ்வு வாழமுடிகிறது.

மக்கள் எல்லோரிடத்தும் குறையும் நிறைவும் கலந்தே காணப்படும். குற்றங்குறைகளின்றி முழுநிறைவு பெற்ற மனிதன் எவனுமே இவ்வுலகில் இருத்தல் இயலாது. அங்ஙனம் இருப்பானேயாயின் அவன் மனித நிலையைக் கடந்து உயரிய அமரநிலை எய்தியவனாகக் கருதப்படுவான். அந்நிலையடைவதற்குத் தன்னிடமுள்ள குற்றங்குறைகளை உணர்ந்து நீக்கும் வழிவகைகளையறிந்து அவற்றை நீக்க வேண்டும்.

அதற்குச் சிறந்த கருவிகளாய் அமைவன இலக்கியங்களாம். இலக்கியங்கள் புலவனது உணர்ச்சியையும், கற்பனையையும் மாத்திரமன்றி அவனது அனுபவங்களையும் புலப்படுத்தும் இயல்பு கொண்டன. அவ்வனுபவங்கள் உருக்கொடுத்துப் பாத்திரங்களாக நடமாட விடுகின்றனர். புலவர்கள் இராமாயணத்திலே உயர் பண்புகளின் சிகரமாய் இராமன் வருகின்றான். கள்ளங் கபடமற்ற அன்பின் வடிவமாய் குகன் வருகிறான். வீரமும், கலையுணர்வும் கொண்டிருந்தும் பிறன் மனைவியை நயந்தமையால் அழிவுறும் இராவணன் வருகிறான். வஞ்சனையின் வடிவான கூனி வருகிறாள். இவ்வாறே பாரதத்திலும் பலவகை இயல்பு கொண்டோர் உலாவுகின்றனர். இப்பத்திரங்களின் இயல்புகளை ஆழ்ந்து கற்பதனால் நல்லுணர்வுகளைப் பெருக்கமுடியும். தீய உணர்வுகளைப் போக்கமுடியும். அதனால் அனுபவக் களஞ்சியங்களான இலக்கியங்கள் ஒவ்வொரு மனிதனையுஞ் சீர்திருத்த் வல்லனவாகின்றன. அதனாலேதான் கவலையடைந்தோரும், உலகவாழ்வில் பொறுப்படைந்தோரும் எவற்றை வெறுத்தொதுக்கத் துணியிலும் உயர்ந்த இலக்கியங்களை வெறுத்தொதுக்கத் துணிவதில்லை.

பண்டைத் தமிழரின் பெருமை சிறுமைகளையும், பிறவற்றையும் அறிதற்குக் காலவரையறையோடொட்டிய வரலாறில்லை எனப்பலர் கவலையுறுவர். வரலாறென்பது ஆண்டுத் தேறியும், அரசர் பெயர்களும் வரிசைப்படவமைந்த அட்டவணையன்று. மக்களது சிந்தனையில் வளர்ந்த எண்ணங்களையும், வாழ்க்கை முறையையும் காட்டுவதே உண்மை வரலாறு. இந்நிலையிலே தமிழிலக்கியங்கள் உண்மைச் சரித்திரங்களாகத் தமிழினத்தின் எண்ணப்போக்கையும் வாழ்க்கை முறையையும் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறே வெவ்வேறின மக்களின் உண்மை வரலாற்றை அவர்களது இலக்கியங்கள் மூலமாகக் காணுதல் வேண்டும்.

உலக மக்களிடையே ஒற்றுமையுணர்வை வளர்ப்பதற்குப் புலவர்பலர் படைத்தளித்த இலக்கியங்கள் பேருதவி செய்கின்றன. உலகநாடுகளிடையே பல்வேறு வகைப்பட்ட கோட்பாடுகள் காரணமாகக் காலத்துக்குக் காலம் அவை பகைமை பூண்டு பேரொலி கொட்டலாம். ஆனால் எவரும் இலக்கியங்களையோ அவற்றினை ஆக்கித்தந்த புலவர் பெருமக்களையோ பகைப்பதில்லை அன்றியும், இடைறு வேற்று மொழி இலக்கியங்கள் சொந்த மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு மக்களிடையே பரப்பப்படுகின்றன. இவ்வாறு உலக இலக்கியங்கள் எங்கும் பரப்பப்படுமானால் உலகப் பொது மனித உணர்வு வளரும் ஒரே உலகம் என்ற சீரிய பொதுநோக்கு மலரும்.

அ.சுபர்சன்
A/L 2011
கலைப்பிரிவு

****



அ.சுபர்சன்
(மாணவன்)

# நாட்டார் பாடல்களின் தனிச் சிறப்பு

கிராமங்கள் இயற்கைத்தேவி எழுந்தருளியிருக்கும் கோயில்கள் என்றாள் கிராம மக்கள் அத்தேவியை வழிபடும் அன்பர்கள் அவர்கள் எளிமை, வாழ்வு வாழ்பவர்கள் உழைப்பென்றே பெரும் செல்வம் எனக் கருதுபவர்கள் இயற்கை அறிவும், கலையுணர்வும் கொண்ட அவர்களின் உள்ளத்திலே பல பல காரணங்களினாள் உணர்ச்சிகள் தோன்றி கரைபுரண்டெழும் போது அவை பாடல்களாக வெளிவருகின்றன. அவை ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதப்படுவன அல்ல. பரம்பரை பரம்பரையாகச் செவி வழியாகக் கேட்கப்பட்டு வாழ்பவை இலக்கண வரம்புக்குட்பட்டுச் சொற்காலங்காட்டி, மயக்குவன அல்ல. பாமரமக்களின் உள்ளத்துணர்ச்சியை உயிராகக் கொண்டு கருத்தைத் தெற்றனவிளக்கும். எளிமையோடு கூடிய் நடப்பவை நாட்டு மக்களின் உள்ளத்திலிருந்து வெளிப்படும் ஆகையினாள் அவை நாட்டார் பாடல்கள் எனப்பொருள்படும்.

நாகரிகம் மேம்பட்ட சமுதாயத்தினர் இசை, இலக்கண அமைவோடு கூடிய் சங்கீதத்தினை பண்பட்டதொரு கலையாகப் போற்றுவது போல நாட்டுப் பாடல்களையும், போற்றிக் காக்கின்றனர். ஆதிமனிதன் மன எழுச்சிகளை வெளிப்படுத்தி இன்பம் பெறுவதற்காக ஆடலையும் அதற்கேற்ற பாடலையும் கருவிகளாகக் கொண்டான். எழுத்தும், ஏடும் தோன்றுவதற்கு முன்னரே உண்டான அப்பாடல்கள் வாய்முறையாக எங்கும் பரவல் ஆயின. நாகரிகம் வளர்ந்தபோது புலவர்களும், இசைவல்லோரும் அவற்றை பின்பற்றி இசை அமைப்புத் தாளக்கட்டுங், கற்பனைச் செறிவும், சொல்நயமும் கொண்ட பாடல்களை இயற்றினர். வரையறை வாய்ந்த இலக்கண நெறிகண்டு உயரிய இசைக்கலையை வளர்த்தனர். எனவே நாட்டார் பாடல்கள் சமுதாயத்தின் மிக மூத்ததொரு கலையாவதோடு பண்பட்ட இசை வளர்ச்சிக்கு மூலாதாரமாகவும் விளங்குகின்றன. இவற்றை விட இவை யாவும் பொது மக்களின் இதயப்போக்கு பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், ஆசைகள் என்பனவற்றை அளவிடக்கூடிய அளவு கோல்களாகவும் விளங்குகின்றன. எனவே ஒரு நாட்டின் பண்பாட்டை அறிவதற்கு நாட்டார் பாடல்களின் உன்னதமான ஆன்ம தத்துவம், சிருட்டித் தத்துவம் என்பன வியக்கத்தக்க கற்பனை வளத்தோடு உவமைச் சிறப்போடும் வெளிப்படுதலைக்காணலாம். எளிமையோடு கூடியவற்றை விளங்கிக் கொள்வதற்கு உரை ஆசிரியர் எவருமே தேவையில்லை. இவ்வகை இயல்புகள் எல்லாவற்றிலும் மேலாக உலக மக்கள் அனைவரின் உள்ளங்கள் ஒரே வகையாக இன்பத்திலும் துன்பத்திலும் இயங்குகின்றன என்பதை நாட்டார்பாடல்கள் உணர்த்துகின்றன.

நாட்டார் பாடல்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு வெளிப்படும் உணர்ச்சிகளைப் பொறுத்து பல்வகையினவாக பிரிக்கப்படுகின்றன. உயரிய கருத்துக்களும், தத்துவங்களும் கொண்டனவாய் பாமரர் அல்லாத சிறிது நாகரிகம் படைத்தோரிடையே வழங்கிவரும் பாடல்கள் ஒருவகையின் விழாக்காலங்களில் ஆனந்தக்களிப்போடு பெண்கள் வாயிலினின்று சமயோசி தமாகப் பிறக்கும் பாடல்கள் பலவுண்டு. இவை இன்னொரு வகையின் கதைகளையும், சரித்திர சம்பந்தமான வீரர்களின் தீரச் செயல்களையும் அடிப்படையாகக் கொண்டு உணர்ச்சிப் பெருக்கோடு பாடப்படுவன. இன்னொரு வகையின் தாய்மார், அருமருந்தன்ன தமது பச்சிளங்குழந்தைகளைக் கண் வளரச் செய்வதற்காக மெல்லிசையோடு பாடும் தாலாட்டுப் பாடல்கள், பிறிதொரு வகையின. காதற்சுவையும், நகைச்சுவையும், உயிரோட்டமாக மிளிர நெஞ்சை அள்ளும் திறன் கொண்டனவாய் பாடல்களும் வழக்கில் உள்ளன. பொழுது போக்குக்காகவும், தெய்வ வழிபாட்டுக்காகவும் பாடப்படும் பாடல்கள் அநேகம் கும்மி, கோலாட்டம், அம்மானை, காவடிச் சிந்து, தெம்மாங்கு, மாரியம்மன் பாட்டு, வில்லுப்பாட்டு என்பன அவ்வகையைச் சேர்ந்த நாட்டார் பாடல்கள் இவை தவிர்ந்த இடையர், உழவர், குறவர், மீனவர், வண்டிக்காரர் முதலிய தொழிலாளர்கள் தொழிலைச் செய்யும் போது சோர்வு தோன்றா வகையில் பாடப்படும். இன்னொரு வகையில் இறந்தவரை நினைத்து நெஞ்சில் நிறைந்த துயரத்தை வெளிப்படுத்தும் முறையிலே கிராமப் பெண்கள் கூட்டமாகச் சேர்ந்து புலம்பும் ஒப்பாரியும், நாட்டார் பாடல்களில் ஒரு தனிவகையினர்.

மருத நிலத்தைச் சேர்ந்த கிராமங்களிலே பரந்த களனிகளிலே, பாடல்களிலே வேலை நடைபெறும் போது உழவர், உழத்தியர் வாயினின்றும், வெளிவரும் பாடல்களிளே காதல் கொஞ்சும் நகைச்சுவை விஞ்சும் அது ஐப்பசி மாதக் கடைசிப்பகுதி, வயல்வரம்பை மேவி நிற்கும் வெள்ளக்காட்டின் மேலே பசிய நெற்பயிர்கள் வாடைக்காற்றிலே அசைந்து நிற்கின்றன. அங்கே பெண்கள் பலரும், ஆண்கள் சிலருமாக களை எடுக்கின்றனர். அவர்களோடு சேர்ந்துழைக்காது வயல்வரம்பிளே நின்று பெண்ணொருத்தியை சுற்றி வேடிக்கை செய்கின்றான்.

கட்டிளங்காளை ஒருவன் அவன் பெயர் பொன்னுச்சாமி அவன்
"கண்ணாடி வளையல் போட்டு
களை யெடுக்க வந்த புள்ளே
கண்ணாடி மின்னலிலே- உன்
களை யெடுப்புப் பிந்துதடி"
என்று பாடுகிறான்.

உடனே அவள்

"வாய்க்கால் வரம்புச்சாமி வயற்காட்டுப் பொன்னுச்சாமி
களையெடுக்கும் பெண்களுக்குக் காவலுக்கு வந்தசாமி"

என்று பதில் சொல்லுகின்றாள். அந்தப் பதிலிலே கேலியுங் கிண்டலும் இழையோடிக் கிடக்கின்றன. இதனோடு அறுவடைக்காட்சி, ஒன்றுணையும். சனல் நன்று, நெற்பயிர்க் கதிர் சுமந்து, கல்வியில் வல்ல சான்றோர் போலத் தலைவணங்கிக் கிடக்கிறது. கணபதியையும், முருகனையும் வணங்கி அரிவாள் எடுத்து அரிவு வெட்டத் தொடங்கி விட்டனர். உழவர் அவர்களின் ஒருவர்

'மட்டுருக்காளே அரிவாழுஞ் செய்து
மாவிலங்கம்பிடி தன்னிலிறுக்கி"

என்று குரல் கொடுக்கிறான். உடனே மற்றவர்கள் எல்லோரும் சேர்ந்து அரக்கண்ணியைப் பாடுகிறார்கள். தொடர்ந்து "தெந்தன தெந்தன தென்ன" என்ற தாளக்கட்டு ஒரே குரலில் ஒலிக்கிறது.

தாலாட்டுப் பாடல்கள், கிராமத்துக்கு கிராமம், வேறுபட்டுப் பலபல பொருள் உடையனவாகக் காணப்படுகின்றன. தாய் ஒருத்தி ஊரார்- தன்னை மலடியென ஏசாமல் வந்துதித்த தன் மகனைத் தாலாட்டுகிறாள்.

'மலடி மலடி யென்று மானிலத்தோர் ஏசாமல்
மலடிக் கொரு குழந்தை மாயவனார் தந்தபிச்சை
இருளி இருளி யென்று இருநிலத்தோ ரேசாமல்
இருளிக்கொரு குழந்தை ஈஸ்வரனார் தந்தபிச்சை"

என்று தன்னுள்ளத்து உணர்ச்சிகளை எல்லாம் சேர்த்துப்பாடுகிறாள். கிராமங்களிளே திருமண வைபவங்கள் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது வழக்கம். அவ் வைபவங்களில் மணமக்களுக்கு அறுகரிசி இடுவது குறிப்பிடத்தக்கதொன்று. அச்சம்பவத்தையொட்டி

"அறுகரிசி தானிடுங்கோ அதற்குரிய பேர்களெல்லாம்
வாரியிறை யுங்கோ, கிளிமொழியாள் பைங்கிளிக்கு
ஆலபோல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
மூங்கில்போல் சுற்றம் புரியாமல் வாழ்ந்திடுங்கோ"

என்று மிக மகிழப்பாடுங்குரல் கேட்கிறது. ஒரு வீட்டில் அவ்வீட்டுத் தலைவன் இறந்துவிட ஊர்ப்பெண்டீர் அனைவரும் அங்குகூடி ஒப்பாரி சொல்லிப் புலம்புகின்றனர். அவர்களுள் ஒருத்தியின் குரல் எடுப்பாக ஒலிக்கிறது.

'பொழுதாய் இலங்குவாயே- நீயும்
பொழுதுபட்டால்- மங்காயே
நிலவாய் இலங்குவாயே- நீயும்
நிலவு பட்டால் மங்காயே"

இவ்வித நாட்டார் பாடல்கள் இலக்கியத்துறையில் பெருமளவு ஆதிக்கம் பெற்றுள்ளன. புலவர்களும், இசை வல்லோர்களும் பக்தர்களும், நாட்டுப்பாடல் இசைமுறையை தழுவிப் பல பாடல்களை இயற்றியுள்ளார்கள். சிலப்பதிகாரத்திலே காணப்படும் வரிப்பாடல்களும் பலவகைக் குரவைகளும், நாட்டுப்பாடல்களை தழுவியனவே. மாணிக்க சுவாமிகள் அருளிய திருவாசகத் தேனில்வரும் அம்மானையும் அத்தகையதே கோபாலகிஸ்ண பாரதியாரும், சுப்பிரமணிய பாரதியாரும், நாட்டுப்பாடல்களில் பெருகி வழங்கிவரும் சிந்துகளாற் கவரப்பட்டு அவ்விசையமைப்பைப் பின்பற்றினார். சுருங்கக்கூறின் வாய்மொழி இலக்கியமாகிய நாட்டுப்பாடல்கள் பாமர மக்களின் உணர்ச்சியிலுதித்து எளிமையோடும், இசையமைப்போடும், தாள வறுதியோடும் கூடி உலவுகின்றன. அன்றியும் இலக்கண நுற்பம் கொண்ட இசைக்கலை வளர்ச்சிக்கும் அடித்தளமாக கொண்டுள்ளன. எனவே இத்தகைய சிறப்புடைய நாட்டார் பாடல்களைப் பேணிக் காப்பது கலையார்வம் கொண்டவர்கள் அனைவரதும் பெருங்கடனாகும்.

அ.சுபர்சன்
கலைப்பிரிவு A/L 2011



V.றஜிதா
(மாணவி)

# பொது அறிவு

- மனித உடலில் உள்ள என்புகள் எத்தனை?
  206 என்புகள்
- ஒரு கலத்திலான நுண்ணங்கி எது?
  அமீபா
- நவீன விண்வெளி யுகத்தின் தந்தை யார்?
  சியோல் கோப்ஸ்கி
- உலகில் கூடுதலான வென்னீர் ஊற்றுக்கள் காணப்படும் நாடு?
  ஐஸ்லாந்து
- கணனியின் தந்தை எனப்போற்றப்படுபவர் யார்?
  சாள்ஸ் பாபேஜ்
- கிரிக்கெட்டின் தாயகம் எது?
  இங்கிலாந்து
- ஐ.நா.சபையின் சர்வதேச நீதிமன்றத்தில் பணியாற்றிய இலங்கை நீதிபதி யார்?
  வீரமந்திரி
- இலங்கையில் இயற்றப்பட்ட முதலாவது தமிழ்த் திரைப்படம் எது? இயற்றியவர் யார்?
  இயற்றியவர்- ஹென்றி சந்திரவன்ஸ்
  படம்- சமுதாயம்
- மண்டையோடும் அலகும் ஒரே எலும்பான பறவை எது?
  மரங்கொத்தி
- பறக்கும் போதே தூங்கும் ஒரே பறவை எது?
  ஆல்பட்றால் பறவை ஆகும்.
- பென்சிலின் மருந்தைக் கண்டுபிடித்தவர் யார்?
  அலெஸ்சான்டர் பிளேமிங் (1928)
- தமிழில் முதன் முதலில் வெளியாகிய முப்பரிமான (31) படம் எது?
  மைடியர் இட்டி சாத்தான்
- உலகிலேயே நாத்திகர் அதிகமாகவுள்ள நாடு எது?
  அல்பேனியா

- உலகிலே எரிமலை அதிகமுள்ள நாடு எது?
  இந்தோனேசியா
- இந்தியாவின் இரும்புப் பெண்மணி என அழைக்கப்பட்டவர் யார்?
  இந்திராகாந்தி
- மனிதனைப் போன்று நிமிர்ந்து இரண்டு கால்களினாலும் நடந்து செல்லும் பறவை எது?
  பென்குயின்
- பிளேக் நோய் எதனால் பரவுகிறது?
  எலி
- உலகில் சக்கரைக் கிண்ணம் என்று அழைக்கப்படும் நாடு எது?
  கியூபா
- உலகிலுள்ள ஒரே இந்து இராஜ்ஜியம் எது?
  நேபாளம்
- பறக்கும் போது தூங்கும் ஒரே பறவை எது?
  ஆல்பட்றால் பறவை
- இலங்கையின் முதலாவது ஆங்கில செய்தித்தாளின் பெயர் எது?
  தகொழும்போ ஜேர்னல்
- உலகப்புகழ் பெற்ற நடிகர் யார்?
  சார்லி சப்ளின்
- இலங்கையின் ரூபாய் சத நாணய முறை எப்போது பழக்கத்திற்கு வந்தது?
  1872ம் ஆண்டு ஜனவரி - 01
- உலகப் புகழ்பெற்ற ஈடில் கோபுரத்தில் எத்தனை படிக்கற்கள் உள்ளன?
  729
- கரப்பான் பூச்சியின் இரத்தம் என்ன நிறம்?
  வெள்ளை
- மிருகங்களில் மிக வேகமாக ஓடக்கூடிய மிருகம் எது?
  சிறுத்தை
- நீரில் வாழக்கூடிய மிகப்பெரிய பாலூட்டி எது?
  திமிங்கலம்
- பறக்கமுடியாத பறவைகள் எவை?
  பென்குயின் எமு தீக்கோழி
- மலேரியாக் காச்சலை பரப்பும் நுளம்பு எது?
  கியூலெக்ஸ் நுளம்பு
- உலகிலேயே மிகப்பெரிய காடு எங்குள்ளது?
  தென்னாபிரிக்காவில்
- உலகிலேயே மிகப்பெரிய பூ எது?
  ராம்வீசியா
- நீரினுள் பறக்கும் பறவை எது?
  பென்குயின்
- உலகிலேயே வாழும் மிகப்பெரிய பறவை?
  தீக்கோழி

- குரைக்காத நாய் எது?
  அவுஸ்ரேலியாவிலுள்ள டிங்கோ நாய்
- உலகிலே மிகப்பெரிய நன்னீர் மீன் எது?
  அறபய்மா (Arapaima)
- விண்வெளிக்கு முதலில் சென்ற பெண் நாயின் பெயர் என்ன?
  லைகா
- உலகில் அதிக இரத்ததானம் செய்பவர்கள்?
  சீனர்கள்
- முதன் முதலில் அதிஷ்டலாபச் சீட்டை அறிமுகப்படுத்தியவர்கள்?
  சோமானியர்கள்
- உலகில் உள்ள 44 ஏழை நாடுகளில் 3வதாக உள்ள இடம்?
  ஆபிரிக்கா
- சராசரி மனிதனுடைய இதயம் எத்தனை கிராம் நிறை உடையது?
  340 கிராம்
- உலகிலேயே எந்தவொரு நாடுடனும் போரிடாத நாடு?
  சுவிற்சர்லாந்து
- உலகில் எத்தனை வகைத் தாவரங்கள் உள்ளன?
  350000
- மூக்குக் கண்ணாடியை முதன் முதலில் அறிமுகப்படுத்திய நாடு?
  இத்தாலி
- நின்றவாறே முட்டைபோடும் பறவை எது?
  பென்குயின்
- கிரிக்கட் பந்தின் நிறை எவ்வளவு?
  150 கிராம்
- மிக நீளமான புராணம் என்ற பெருமைக்குரியது?
  மகாபாரதம்
- 32 நாட்கள் மட்டுமே அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர்?
  வில்லியம் ஹென்றி ஹரிசன்
- கிளிகளை மேற்கத்தைய நாடுகளுக்கு அனுப்பிய நாடு?
  நெதர்லாந்து
- உலகிலேயே மிக விரைந்து வளரும் பயிரினம்?
  மூங்கில்
- இரும்பை விட கடினமான வாயு எது?
  ரேடான்
- மண்புழுக்கு எத்தனை இதயங்கள் உண்டு?
  5 கோடி
- ஆப்கானிஸ்தானில் வழங்கப்படும் மொழி?
  புஷ்டு
- ஒரு கிலோ தேனில் உள்ள சத்து எவ்வளவு?
  65 முட்டைகளில் உள்ள சத்து

- போக்குவரத்து காவலர்களே இல்லாத நாடு எது?
  நியூசிலாந்து
- மனித உடம்பிலுள்ள எலும்புகளின் எடை எவ்வளவு?
  9 கிலோ கிராம்
- உலகம் முழுவதும் எத்தனை வகை ஒக் மரம் உள்ளன?
  360 வகை
- சீனாவின் பிரதான மொழி எது?
  சீனம்
- சிகிரியாவைக் கட்டிய மன்னன்?
  காசியப்பன்
- மின் கலத்தைக் கண்டு பிடித்தவர்?
  அலெப்ஸ்ஸன்றோ வோல்டா
- எவரஸ்ட் சிகரமுள்ள இடம் எது?
  நேபாளம்
- உலகில் புகழ்பெற்ற நீர்வீழ்ச்சி எது?
  நயாகரா
- அகந்தையைக் குறிக்கும் பறவை எது?
  மயில்
- கணிப்பானை கண்டு பிடித்தவர்?
  கொற்பீறிட் லைப்நிற்ஸ்
- மோட்டாரை கண்டு பிடித்தவர்?
  புல்மன்
- செல்போனை கண்டுபிடித்தவர்?
  பெர்கர்
- விமானத்தைக் கண்டுபிடித்தவர்?
  ஓர்வில் ரைட் சகோதரர்கள்
- தொலை நோக்கியைக் கண்டு பிடித்தவர்?
  கலிலியோ கலிலி
- வானொலியைக் கண்டு பிடித்தவர்?
  மார்க்கோணி
- இசைத்தட்டை கண்டுபிடித்தவர்?
  பீட்டர் கோல்ட் மார்ட்
- தொலைபேசியை கண்டுபிடித்தவர்?
  அலெக்ஸ் சாண்டர் கிரகம்பெல்
- மின்குமிழை கண்டுபிடித்தவர்?
  தோமஸ் அல்வா எடிசன்
- கூடிய பற்களை கொண்ட விலங்கு?
  நத்தை
- நாக்கு இல்லாத பிராணி எது?
  முதலை

- தூங்காத பறவை எது?
புறா
- தமிழில் முதலில் வந்த அகராதி எது?
சதுரகராதி
- மிகப்பெரிய கொம்புள்ள காட்டு மிருகம்?
காட்டுமான்
- உலகிலே மிக நீளமான சுரங்கப்பாதை எங்கு உள்ள?
ஐப்பானில் உள்ளது
- முதன் முதலில் காகிதத்தை உருவாக்கியவர் யார்?
சீனாவைச் சேர்ந்த சால்லுன் என்ற அறிஞராவர்
- யானைக்கு எத்தனை பற்கள் உள்ளன?
4 பற்கள் உள்ளன
- இலங்கையில் உள்ள உப தபால்களின் எண்ணிக்கை?
3.330
- சார்க் அமைப்பில் இராணுவ ஆட்சி நடத்தும் நாடு?
பாகிஸ்தான்
- 1910ஆம் ஆண்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட யாப்பு எது?
மக்கலம் யாப்பாகும்
- சார்க் அமைப்பு எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
1985ஆம் ஆண்டு
- இரண்டாம் கண்டங்களுக்கிடையிலான கால்வாய் எது?
பனாமா கால்வாய்
- நகர்புற சனத்தொகை 100% கொண்ட நாடு எது?
ஐப்பான்
- கடலில் மூழ்கும் ஆபத்தை எதிர் நோக்கும் நாடு எது?
மாலைதீவு
- 5 வடிவில் அமைந்துள்ள சமுத்திரம் எது?
அத்திலாந்துச் சமுத்திரம்
- வியர்வை நரம்பு இல்லாத மிருகம் எது?
நாய்
- பாம்பு இனத்தில் மிகப் பெரிய பாம்பு இனம் எது?
அணகொண்டா
- தாவரத்தில் ஊனுண்ணித் தாவரம் எது?
றெப்பற்தசு
- சிங்கம் மிருகத்தை கொன்று முதலில் எதை உண்கிறது?
மிருகத்தினுடைய ஈரலை உண்கிறது
- இந்தியாவின் நீண்ட பாதை எது?
இராமேஸ்வரம் கோயில் நடைபாதை
- கண்ணகி பிறந்த ஊர் எது?
காவிரிப் பூம்பட்டிணம்

- பிறந்த ஒரு மாதமே ஆன குழந்தை ஒரு நாளில் எத்தனை மணி நேரம் தூங்கும்?
  சுமார் 22 மணி நேரம்
- பூகம்பத்தை பதிவு செய்யும் இயந்திரத்தின் பெயர் என்ன?
  சிஸ்மோகிராப்
- உலகிலே நீளமான கிரிக்கெட்பிட்ச் எங்கு உள்ளது?
  இந்தியாவில் இமாசல பிரதேசத்தில் உள்ளது
- அமெரிக்க தேசிய கொடியில் எத்தனை நட்சத்திரங்கள் உள்ளன?
  50 நட்சத்திரங்கள்
- பிரான்சிஸ் தேசிய மலர் எது?
  லில்லி
- மிகப்பெரிய தேசிய கீதமுள்ள நாடு எது?
  அதன் வரிகைகள் எது?
  கிரேக்க நாடு 128 வரி
- அஞ்சல் அட்டையை கண்டுபிடித்த நாடு?
  ஆஸ்திரியா
- உலகிலேயே மிகப்பெரிய அரண்மனை கொண்ட நாடு எங்கு உள்ளது?
  பீஜிங் (சீனா)
- உலகிலேயே அடிக்கடி பாடப்படும் பாடல்?
  Happy Birthday to you என்ற பாடல்
- ஆசியாவில் கிறிஸ்தவர்கள் அதிகம் உள்ள நாடு எது?
  பிலிப்பைன்ஸ்
- வெந்நீர் ஊற்றுக்கள் அதிகம் உள்ள நாடு எது?
  பின்லாந்து
- தேயிலையின் அறிவியல் பெயர் என்ன?
  கமேலியா சினேசிங்
- உலகில் மிகப்பெரிய பூ எது?
  ராம்லிசியா
- ஐ.நா.சபை எத்தனை மாடிகளைக் கொண்டது?
  35 மாடிகள்
- வெள்ளை பூண்டின் மணத்தை கொண்ட கணியம் எது?
  வெண் பொஸ்பரஸ்
- 2004ல் சர்வதேச விளையாட்டு வீரராக தெரிவு செய்யப்பட்டவர் யாது?
  இர்பான் தான்
- இலங்கையின் பீங்கான் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?
  நீர்கொழும்பு, பிலியந்தலை
- மிக உயரத்தில் பறக்கும் பறவை எது?
  டொன்
- உலகில் முதலாவது எயிட்ஸ் நோயாளி எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
  அமெரிக்கா

- உலகில் மிகப்பெரிய குடாநாடு எது?
  சவுதிஅரேபியா
- இயக்கம் தொடர்பான விதிகளை கண்டறிந்தவர் யார்?
  நீயூட்டன்
- அங்கிகளின் கலத்தை கண்டு பிடித்தவர் யார்?
  றொபேர்ட்டுக்
- மூலகங்களில் நியூற்றனை கண்டுபிடித்தவர் யார்?
  ஜேம்ஸ் சட்விக்
- மூலகத்தின் இலத்திரனை கண்டுபிடித்தவர் யார்?
  ஒ. ஒ. தொம்சன்
- இறப்பர் வால்களைப் பயன்படுத்தல் முறையை கண்டு பிடித்தவர் யார்?
  சால்ஸ் குட்இயர்
- அங்கிகளின் கருவை கண்டு பிடித்தவர் யார்?
  றொபேர்ட்குக்
- விலங்குகளின் உடலிலிருந்து மின்னோட்டத்தை பெற முடியுமென கண்டறிந்தவர் யார்?
  லூயிகி கல்வானி
- தங்கம் அதிகம் உற்பத்தி செய்யும் நாடு?
  தென் ஆபிரிக்கா
- தனி நாடாகவும் தனிக் கண்டமாகவும் உள்ள நாடு?
  அவுஸ்ரேலியா
- மரியானா ஆழியின் நீளம் என்ன?
  11880km
- எலும்பின் உடம்பில் காணப்படும் அமிலத்தின் பெயர் என்ன?
  போமிக் அமிலம்
- உலகில் செம்பு அதிகம் கிடைக்கும் நாடு?
  சிலி
- உலகிலே அதிக நூல்களை எழுதியவர் ?
  அலெக்சாண்டார் டுமாஸ்
- செந்நிற மழை பெய்யும் நாடு எது?
  இத்தாலி
- உலகில் பெண்களுக்கு கட்டாய இராணுவ பயிற்சி அளிப்பது?
  இஸ்ரேல்
- இறக்கை இல்லாத பறவை?
  கிவி

V.றஜிதா
கலைப்பிரிவு 2011 (A/L)



V.றஜிதா
(மாணவி)

# மாணவர் கல்வியில் இடைவிலகலுக்கான காரணமும் தீர்வுகளும்

உலகில் எல்லா நாடுகளிலும் இன்றும் கல்வியானது போதிக்கப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு இலவச சீருடை. இலவசப் புத்தகம் என்பன வழங்கி எல்லா குழந்தைகளுக்கும் கல்வி கற்கவேண்டும் என்ற நோக்குடன் வழங்குகின்றன. கட்டாயக் கல்வி என்ற பெயரில் எல்லா மக்களுக்கும் கல்வி வழங்குகின்றனர். உலகத்தில் எல்லா மக்களும் கல்வியறிவு உள்ளவராக வாழவேண்டும். இன்று எழுத்தறிவு வீதம் எல்லா நாட்டிலும் அதிகரித்து வருகிறது. இலங்கையில் எழுத்தறிவு வீதம் 89% காணப்படுகிறது.

இவ்வாறு எல்லோரும் கல்வி கற்க வேண்டுமென்று அரசாங்கம் பல உதவிகளையும், ஊக்கங்களையும் வழங்கி வரும் நேரம் சில மாணவர்கள் சில காரணங்களினால் தமது கல்வியை இடைநிறுத்தி விடுகின்றார்கள். இதனால் அவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுகின்றது. வளர்ந்து வரும் இவ் விஞ்ஞான உலகில் அவர்களின் மனோ நிலை பாதிக்கப்படுகிறது. இதனால் அவர்கள் சமூகத்தால் தள்ளப்படுகின்றனர். அவர்களை பார்த்து சமூகம் ஏளனம் செய்வார்கள். இதற்கெல்லாம் காரணம் யாது?

இதற்கு காரணம் மாணவர்கள் தான். அவர்கள் கல்வியை இடை நிறுத்தி விடுவதுதான் காரணம். மாணவர்கள் தமது கல்வியை இடைநிறுத்துவதற்கு முக்கியமான காரணமாக அவர்களுடைய குடும்ப கஸ்ரம் முக்கியமானது. குடும்ப கஸ்ரம் என்பது அக் குடும்பத்தில் பொருளாதாரம் காணப்படாமை, பெற்றோர் வேலைக்குச் சென்று பணம் ஈட்டாமை, அக்குடும்பத்தலைவர் வேலை செய்து சம்பாதித்த பணத்தை வீட்டில் கொடுக்காது தான் வைத்து செலவழித்தல், அவர்கள் உழைக்கின்ற பணம் அவர்களுடைய செலவிற்கு போதுமானதாக இல்லாமை போன்றவையாகும்.

ஒரு குடும்பத்தில் பெற்றோர் வேலைக்கு செல்லாவிடில் அங்கு பசி, பட்டினி காரணமாக அவர்கள் துடிப்பார்கள். அலறுவார்கள். சாப்பிடுவதற்கு பணம் இல்லாத குடும்பத்தில் தம் பிள்ளைகளை வேலைக்கு அனுப்புவார்களே தவிர பாடசாலைக்கு கல்வி கற்க அனுப்பமாட்டார்கள்.

ஒரு குடும்பத்தில் குடும்பத்தலைவன் வேலைக்கு சென்று பணம் சம்பாதித்து வந்து அப் பணத்தை வீட்டில் கொடுக்காமை தான் வைத்து செலவு செய்தல் இதனால் குடும்பத்தில் ஏற்படும் கஸ்ரம் காரணமாக அந்த மாணவன் பாடசாலைக்கு செல்வதை விடுத்து வேலை செய்யப்போகிறான். இதனால் அவனது படிப்பு சீர் குலைகிறது. குடும்பத்தில் உழைத்துக் கொண்டு வருகின்ற பணம் அவர்கள் செலவிற்கு போதுமானதாக இல்லாமை Eg:- ஒரு கூலி வேலை செய்யும் குடும்பத்தால் அவர்கள் செலவிற்கு போதுமானதாக இல்லை. இப்படியான காரணங்களினால் மாணவர்கள் இடை விலக வேண்டியுள்ளது.

இதைவிட முக்கியமான காரணமாக ஒரு குடும்பத்தில் குடும்பத் தலைவன் இல்லாமை தேருக்கு எவ்வாறு அச்சாணி முக்கியமோ அது போல ஒரு குடும்பத்திற்கு குடும்பத்தலைவன் அவசியமாகும். இவ்வாறான குடும்பத்தலைவன் இல்லாத வீடானது அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாமல் எவ்வாறு வீதியில் நின்று வருகிறதோ அதே போல் குடும்பத்தலைவன் இல்லாத வீரம் இடையில் நின்று வீரம் ஆகவே அக் குடும்பத்தில் மூத்த மகனோ அல்லது மூத்த மகளோ வேலைக்குச் செல்வார்கள் ஆகவே அவ்வாறு வேலைக்கு செல்வதனால் அவர்களுடைய கல்வி பாதிக்கப்படுகிறது. உதாரணமாக குடும்பத்தலைவன் இல்லாத ஒரு வீட்டில் சென்று பார்த்தால் அங்கு பிள்ளைகள் வேலைக்குச் செல்வார்கள். அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். எமது தந்தையர் இறந்துவிட்டார் அதனால் எங்களுக்கு பொருளாதாரம் தேடித் தருவதற்கோ, எங்களை கல்வி கற்க வழி செய்வதற்கோ ஒருவரும் இல்லை. ஆகவே நாங்கள் எங்கள் குடும்ப கஸ்ரத்தை போக்குவதற்காக வேலைக்கு செல்கிறோம் என்று கூறினார்கள். அத்துடன் அவர்கள் தங்களுக்கு கல்வி கற்பதற்கு ஆசையாக இருக்கின்றது நாங்கள் கல்வி கற்றால் கண்டிப்பாக ஏதாவது தொழில் செய்வோம். நாங்கள் நன்றாக படிப்போம் என்று கூறினார்கள்.

அடுத்து குடும்பத்தலைவன் வேலைக்குச் செல்லாமல் வீட்டில் இருந்து அரட்டை செய்து கொண்டிருத்தல் அதாவது குடித்தல் போன்ற தீய பண்புகள் இருப்பதனால் அங்கு செலவு இன்னும் அதிகரித்து விடுகிறது. வேலைக்குச் செல்லாமல் வீட்டில் இருந்து கொண்டு சாப்பிடுவதற்கு பணம் ஏது? ஆகவே இதற்காக பணம் சம்பாதிக்க பிள்ளைகள் வேலைக்குச் செல்கிறார்கள். இதனால் அப்பிள்ளைகளின் கல்வி சீர்குலைகின்றது. இப்படியான குழப்ப சூழ்நிலைகளும் மாணவர்கள் கல்வியை பாதிக்கும் முக்கியமான காரணிகளில் ஒன்றாகின்றது.

மாணவர்களுக்கு பெற்றோர் அளிக்கும் ஊக்கம் முக்கியமான ஒரு காரணமாகும். வீடுகளில் ஒவ்வொரு மாணவனையும் அல்லது மாணவியையும் பாடசாலைகளுக்குச் சென்று நன்றாக படிக்கும்படி அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பெற்றோர் காணப்பட வேண்டும். பாடசாலையிலிருந்து வந்த பின் ஒவ்வொரு நாளும் அவர்களுடன் குறைந்தளவு ஒரு மணி நேரமாவது கலந்து ஆலோசிக்கவேண்டும். அவர்கள் படித்த பாடங்களை மீள படிக்க வழி செய்யவேண்டும். சந்தேகங்களுக்கு தெளிவாக விளக்கமளிக்க வேண்டும். அவர்களுக்கு தெரியாத பகுதிகளையும் விளங்காத பாடங்களையும் சொல்லிக் கொடுக்க வேண்டும். அத்துடன் பொது அறிவையும் முக்கியமாக வளர்க்க வேண்டும். இவ்வாறு செய்தால் அவர்கள் நிச்சயமாக நன்றாக படிப்பார்கள். அவர்களுக்கு கல்வியிலே ஊக்கமும் ஏற்படும் எந்த நேரமும்

படிப்பார்கள். வேறு எந்த சிந்தனைகளும் ஏற்படமாட்டாது. ஆகவே மாணவர்களுக்கு பெற்றோரினால் கிடைக்கும் ஊக்கம் முக்கியமானது. இவ் ஊக்கம் கிடைக்காவிடின் அவர்களுக்கு கல்வியில் உள்ள நாட்டம் குறைந்து அவர்கள் கல்வியில் இடைவிலகும் துப்பாக்கிய நிலைக்கு ஆளாக வேண்டி நேரிடுகின்றது.

மாணவர்கள் வசிக்கும் சூழ்நிலை மாணவர்களின் இடைவிலகலுக்கு காரணமாகும். ஒரு சமூகத்தில் குடிகாரர்கள், சீட்டாடுவோர் என பலர் வசிக்கின்றனர். எவ்வாறாயினும் அவர்கள் குடும்பத்தலைவனாகவும், குழந்தைகளுக்கு தந்தையாகவும் காணப்படுகின்றான். இவ்வாறு பொறுப்புள்ள பெற்றோர்களாக இருக்காமல் குடித்து விட்டு சமூகத்துடன் சேர்ந்து சமூகத்தையே சீரழியச் செய்கிறார்கள். பல குடும்பங்களை ஒன்று சேர்த்து சமூகம் என அழைக்கிறோம். எனவே பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து தான் சமூகம் உருவாகின்றது. அச் சமூகத்தில் சில குடும்பத்தலைவர்களின் தீய செயல்களால் அச் சமூகமானது பல்வேறு இன்னல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றது. அதனால் அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் தமது கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ள முடிவதில்லை. ஆகவே அவர்களின் கல்வி பாழ்படுகின்றது. இச் சமூகத்திலுள்ள ஒரு மாணவன் கடைசி வரையும் முன்னேற முடியாது என்ற சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றான். இதற்கு உதாரணமாக ஒரு கதை கூறுகின்றேன்.

ஒரு கிராமத்தில் ஒரு சிறுவன் கல்லூரிக்கு படிக்க செல்கிறான், அவர்கள் குடும்பம் மிகவும் ஏழ்மையான குடும்பம் இவனுக்கு கீழே 5 சகோதரர்கள் இவனுடைய தந்தையார் தோட்ட வேலை செய்பவர். அத்துடன் அவர் நல்ல குடிகாரர் உழைக்கிற பணம் முழுவதையும் குடித்து விட்டு வருவார். இக் கஸ்ரங்களுக்கு மத்தியில் அவன் படித்து வருகின்றான்.

இவனுடைய தகப்பனார் கொடுக்கும் இன்னொரு கஸ்ரம் மிகவும் ஈடு கொடுக்க முடியாது. இவன் பாடசாலைக்கு சென்று வந்தபின் வேலைகள் பல செய்கிறான். செய்து முடித்து விட்டு படிக்க ஆரம்பிக்கின்றான். அப்பொழுது இவனுடைய தகப்பனார் நெடு நேரமாக ஊர் சுற்றி வந்து சேருகிறார். அப்பொழுது பக்கத்து வீட்டுக் காரனும் வந்து குடித்துவிட்டு கும்மாளமடிக்கிறார்கள். இதனால் அவனுடைய படிப்பில் தடங்கல் ஏற்பட்டு அவனால் படிக்க முடியவில்லை. ஆகவே மாணவர்கள் இடை விலகளுக்கு அவர்கள் வசிக்கும் சூழலும் முக்கிய காரணமாகும். பாடசாலைச் சமூகமும் கல்வியில் இடை விலகலுக்கு ஒரு காரணமாகும். பாடசாலைகளிலே மாணவர்கள் நடாத்தப்படும் விதம் ஒவ்வொரு மாணவர்களும் ஒவ்வொரு விதமாக மதிக்கப்படுகிறார்கள். இதைவிட மாணவர்கள் தங்களுக்கிடையே காணப்படும் பிரச்சனைகள் காரணமாகவும் ஒவ்வொரு மாணவர்களுக்கிடையேயும் பிரிவுகள் ஏற்படுகின்றது. இதனால் அவர்களது மனோ நிலை பாதிக்கப்படுகிறது. பாடசாலைகளில் மானவர்களுடன் அடிபடுதல் போன்ற காரணங்களினால் மாணவர்கள் பாடசாலைச் சூழலை வெறுக்கிறார்கள். நன்றாக படித்து நல்ல நிலைக்கு வரவேண்டும் என்ற எண்ணத்துடன் பாடசாலைக்கு வருகின்றார்கள் இப்படியான பாடசாலைச் சூழலினால், அழிந்து போய் விடுகிறார்கள்.

நன்றாக படிக்க கூடிய மாணவர்கள் படிக்க தெரியாத மாணவர்களுக்கு ஓய்வான நேரங்களில் அவர்களுக்கு தம்மால் இயன்றளவு பாடங்களை சொல்லிக் கொடுக்கவேண்டும். அவ்வாறு செய்தால் அவர்களுக்கு எழுத்தறிவும், அறிவாற்றலும் வளர்ச்சி அடைகிறது. ஆகவே மாணவர்களுக்கிடையே வேற்றுமை என்பது ஒரு நாளும் ஏற்படக்கூடாது.

மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே காணப்படும் இடைத் தொடர்பு, ஆசிரியர் என்பவர் எல்லா மாணவர்களையும் தமது கண்போல் பாதுகாக்க வேண்டும். அவர்களை நல்லவழியில் செல்ல வழி செய்யவேண்டும். அவர்கள் செய்யும் தீய பழக்க வழக்கங்களை சுட்டிக்காட்டி திருத்த முயற்சி செய்யவேண்டும். அவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களை சொல்லிக் கொடுத்தல். ஏழை, பணக்காரர், சாதி, மதம் பாராமல் எல்லா மாணவர்களையும் சமமாக கவனித்தல் போன்றவற்றாலும் ஆசிரியருடைய அறிவுரைகளை பின்பற்றும் மாணவர்கள் உருவாயின் கல்வி, ஒழுக்கம் இரண்டிலும் முன்னேற இடமுண்டு.

இது போலவே வீரர்களிலும் பிள்ளைகள் மீது வேற்றுமை காட்டாமல் எல்லாப் பிள்ளைகளையும் வளர்க்கவேண்டும். சமூகத்திலும் வேற்றுமை காட்டாமல் ஒற்றுமையாய் பழகவேண்டும். ஏழை, பணக்காரன், சாதி, மதம், அந்தஸ்து, கௌரவம் பார்க்காமல் ஒற்றுமையாக பழகவிடவேண்டும். அப்படியாயின் மாணவர்கள் சந்தோசமாகவும் மன ஆறுதலுடனும் கல்வி பயில்வார்கள். அதனால் அவர்களுடைய மனம் தவறான காரியங்களை செய்ய எண்ணாது அவர்கள் தீயவற்றை சிந்திக்கமாட்டார்கள். சமூகத்தில் சீரழிவுகளும் ஏற்படமாட்டாது. ஆகவே சமூகம் இல்லை இந்த உலகமே பாதிப்புகளிலிருந்து விடுபட்டு அழியாது எதிர்வரும் சந்ததியினரையும் இருகரம் கூப்பி அன்போடு வரவேற்று அவர்கள் நன்றாக வாழ வழி செய்யும்.

"கல்வி என்றும் அழியாச் செல்வம்"

வே.றஜிதா
A/L 2011



# சிந்தனை துளிகள்

வே.றஜிதா
(மாணவி)

- நேற்று நீ செய்த தவறை ஒப்பு கொண்டால் இன்று நீ அறிவாளி என்பதை உணர்த்தும்.
- இதயத்தில் தூய்மை இல்லாதவன் இறைவனை அடைய முடியாது.
- திருப்பிப்பார் என்னையல்ல உன் எதிர் காலத்தை
- இனிய உள்ளத்தின் அடையாளம் மலர்ந்த முகம்
- முதியோர் எவரையும் இகழாதே நாமும் முதுமை அடைந்தே வருகின்றோம் என்பதை உணர்.
- ஒரு நல்ல தாய் நூறு ஆசிரியர்களுக்கு ஒப்பானவள்.
- அறிவை மிகவும் மேலும் கூர்மையாக்கிக் கொள்ளப்படும் கருவி கல்வி.
- கல்வியை, நீ தேடு கல்வி உன்னை தேடாது.
- கல்வி எனும் பாதையில் கள்ளுண்டு முள்ளுண்டு அதை கடந்து சென்றால் முன்னேற இடமுண்டு.
- பள்ளிக் கதவை திறப்பவன் சிறைச்சாலை கதவை மூடுவான்.
- வீண் பேச்சிலும் அரட்டையிலும் ஈடுபடாதே அவை உன்னை திசை திருப்பிவிடும்.
- தன்னம்பிக்கை உள்ளவன் எதிலும் வெற்றி பெறுவான்.
- வரட்டு கௌரவம் வாழ்க்கைக்கு உதவாது முரட்டு பிடிவாதம் முன்னேற உதவாது.
- எல்லாம் போய்விட்டதென்று கவலைப்படாதே எவராலும் வெல்ல முடியாத இதயம் இருக்கிறது.
- வார்த்தைகள் பூப்போன்றவை அதை தொடுக்கும் விதத்தில் தொடுத்தால் தான் மதிப்பை பெறமுடியும்.
- கால் இடறினால் காயம் ஏற்படும் வார்த்தை தவறினால் வாழ்க்கை தவறிவிடும்
- எவர் எது சொன்னாலும் கேட்டுக் கொள்
உனக்கு சரியென்று பட்டதை செய்.
- உன் நண்பனை ரகசியமாக திருத்தி வெளிப்படையாக புகழ்
- ஒரு மனிதனை தெரிந்து கொள்வது என்பது அதன் வதனத்தையல்ல இதயத்தை
- நற் பெயரை இழந்தவர் வாழ்பவர் மத்தியில் இழந்தவராவார்.
- ஏழை போல் வாழ் செல்வத்தில் பெருமை கொள்ளாதே
- நம்பிக்கையும் தைரியமும் வெற்றி கீரிடத்தில் ஒளிமிக்க வைரங்கள்

- தக்க வேளையில் சொன்ன சொல் வெள்ளித்தட்டில் வைத்த பொற்கனிக்குச் சமனாகும்.
- பொன்னையும் முத்துக்களையும் விட அறிவுள்ள பேச்சே விலையுயர்ந்த அணிகலன்.
- உன் கௌரவம் உன் நாக்கின் நுனியில் உள்ளது.
- நல்ல ஆரம்பத்தை கண்டறிந்தவன் நல்ல முடிவையும் கண்டறிவான்
- அன்பு தானாக வருவது விலைக்கு வாங்க முடியாது
- அன்பே மிகச் சிறந்த தர்மம் மனச் சாட்சியே மிகச் சிறந்த வழிகாட்டி
- தன்னால் முடியும் என்று எவர் எண்ணுகிறாரோ அவர்களே வெற்றி பெறுவார்..
- புன்னகை கடினமான செயல்களை கூட எளிமையாக்கும்.
- உண்மையான மகிழ்ச்சி காலத்தோடு தொடர்புடையதல்ல.
- அவசரப்பட்டு அதிகம் சிந்திப்பதை விட ஆழ்ந்து சிந்திப்பதே மேல்.
- வறுமை வரும் போது தான் உண்மையான நண்பர்களை மனிதன் அறிகிறான்.
- நல்ல நூலை விட சிறந்த மனிதன் கிடையாது
- தொடர்ந்து முயல்வதே வெற்றிக்கு வழி
- அதிகம் சொல்ல விரும்புகிறவன் குறைவான வார்த்தைகளையே பிரயோகிப்பான்.
- பெற்றவர் மகிழ நடப்பது நன்மை மற்றவர் வாழ்த்துவர் உம்மை.
- தவறு செய்வது இயல்பு திருத்திக் கொள்வது உயர்வு.
- நல்ல மனதால் யாருக்கும் நன்மை தீமை என்றால் விலகிச் செல்.
- அன்பு ஆசையும் அளவாய் இருக்கவேண்டும் காலம் அறிந்து கடமை செய்ய வேண்டும்.
- அன்பும் கொள்ளுதல் ஆணுக்கு அழகு, புரிந்து கொள்வது பெண்ணுக்கு அழகு
- எதையும் பணிவுடன் அனுசரித்து நடப்பவர் மிகவும் பெரும் தன்மை கொண்டவராவார்.

வே.றஜிதா
கலைப்பிரிவு 2011 (A/L)



செல்வரகு லசிகன் (மாணவன்)

# சேக்ஸ்பியரின் யூலியசீசர் நாடகம் ஓர் பார்வை

உலகப் புகழ் பெற்ற நாடகாசிரியரான சேக்ஸ்பியரால் ஆக்கப்பட்ட நாடகங்களில் ஒன்றாக யூலியசீசர் விளங்குகின்றது. சேக்ஸ்பியரின் அவல நாடகங்களின் சிறப்பிற்குரியதாக இந்த நாடகம் விளங்குகிறது.

**கதை:-** இந்தநாடகம் உரோமில் வாழ்ந்த சீசரின் கதையினை மையமாகக் கொண்டு இந் நாடகம் எழுதப்பட்டுள்ளது. வழமையான சேக்ஸ்பியரது நாடகங்களில் அவல நாயகன் இறுதியில் தற்கொலை புரிவான் இந்நாடகத்தில் பாதி நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது சீசர் கொலை செய்யப்படுகிறார். மார்ச் 15ம் திகதி உரோமின் பேரரசாக முடிசூடுவதற்கு வெனிஸ்நகர மண்டபத்திற்குச் சீசர் செல்லும் போது மண்டபத்தினுள்ளே அவர் கொலை செய்யப்படுகிறார். சீசரின் கொலைக்கு டெசிசியஸ், மெட்டலஸ்கிம்பர், காஸ்கா, காஷிபஸ், புருட்டஸ் போன்றவர்கள் காரணமாக அமைகின்றனர்.

அன்ரோனியோ சீசரின் கொலைக்கு எவ்வாறு பழிவாங்குகிறான் என்பதே மீதி நிகழ்வாக அமைகின்றது. சேக்ஸ்பியர் நாடகத்தை ஆக்கியதால் இத்தகைய ஒரு நாடகக் கதை அமைப்பு இங்கு ஏற்படுகின்றது.

**ஏனைய அவல நாடகத்தில் இருந்து யூலியசீசர் வேறுபடும் தன்மை:** இந்த வகையில் சேக்ஸ்பியரின் ஏனைய அவலச்சுவை நாடகங்களில் இருந்து சீசர் கொலை செய்யப்படுவதன் மூலம் யூலியசீசர் நாடகம் வேறுபடுகின்றதை நாம் அவதானிக்கலாம். சேக்ஸ்பியரின் அவல நாயக்கர்கள் பெரு வீழ்ச்சி அடைவதற்கு அவர்களிடமுள்ள ஒரு தீய பண்பே காரணமாக அமைகிறது. எல்லா வகையான நற்குணங்களும் பொருந்தியுள்ள போதும் அவல நாயகனிடம் ஒரு தீய குணம் அவனுக்கு வீழ்ச்சியினை ஏற்படுத்துவதும் என்பதை எடுத்துக் காட்டாக "ஒதெல்லோவின் வீழ்ச்சிக்கு சந்தேகமும் மக்பெத்தின் வீழ்ச்சிக்கு பேராசையும், கம்லட் என்ற நாயகனின் வீழ்ச்சிக்குப் பழிக்குப்பழி வாங்கும் குணமும், அன்ரனி கிறியோப்பற்றா நாடகத்தில் வரும் அன்ரனியின் வீழ்ச்சிக்கு காமமும்" காணமாக அமைகின்றது. ஆனால் சீசரின் வீழ்ச்சிக்கு சீசரின் நற்குணமே காரணமாக அமைந்துள்ளது. முடிவுகளை

மேற்கொண்டால் சீசர் அதனை மாற்றுவதில்லை" "ஒளிம்பஸ் மலையை உன்னால் அமைக்கமுடியுமா? அது போன்று தான் நானும்" என்று சீசர் கூறுகின்றார். இக் கூற்றிலிருந்து சீசரிடம் காணப்பட்ட முடிவெடுத்தால் மாற்றாத பண்பே அவனுக்கு வீழ்ச்சியினை உருவாக்கியது என நாம் அறிகின்றோம்.

யூலியசீசர் உட்பகைகளால் சூழப்பெற்ற ஒருவராக காணப்படுகின்றார். இவ் நாடகத்தின் ஆரம்பத்தில் நாம் இதனைக் கண்டு கொள்கின்றோம். பிளாவியில் மருளஸ் எனும் இரண்டு அதிகாரிகளும் நாடகத்தின் ஆரம்பத்தில் தோன்றுகின்றார்கள். பாம்பேயின் புதல்வர்களைக் கொன்று வெற்றிவீரனாக சீசர் திரும்ப உள்ளார் அவரை வரவேற்பதற்காக மக்கள் கூட்டம் காத்திருக்கிறது. ஆனால் இந்த இரு அதிகாரிகளும் அங்குள்ள அலங்காரங்களைக் களைந்து மக்களைத் திரும்பிப் போகுமாறு கூறுகின்றார். இச் செயலானது சீசர் உட்பகைகளால் சூழப்பட்டிருப்பதனை நாம் காணக்கூடியதாக உள்ளது.

## யூலியசீசரின் பாத்திர இயல்பு

யூலியசீசரின் நாடகத்தில் சீசரின் அழிவிற்குப் பலர் காரணமாக அமைகின்றனர். மிகப்பெரிய சூழ்ச்சியில் சீசர் கொலை செய்யப்படுகின்றான். எனவே தன்னைச் சுற்றி நிகழும் சூழ்ச்சிகளைப் புரிந்து கொள்ளத் தெரியாத ஒருவனாகச் சீசர் காணப்படுவதை அறிந்து கொள்கின்றோம். காசியஸ் பற்றி சீசர் குறிப்பிடும் வேளை அதே காசியஸ் ஆழ்ந்து சிந்திக்கின்றன. அமைதியாகப் பார்க்கின்றான் என்னைப் பார்த்து சிரிக்கும் போது இப்படி சிரிக்க நேரத் தற்காகத் தன்னுள் வெட்கப்படுகிறான். இத்தகைய நபர்கள் ஆபத்தானவர்கள்" என்று அன்ரோனியோவிற்குக் குறிப்பிடும் சீசர் கசியசின் விடயத்தில் கவலையீனமாக இருந்து விடுகின்றான். இத்தகைய ஒரு சீசரின் அலட்சியப் போக்கே அவரது வீழ்ச்சிக்கு அவரது கொலைக்குக் காரணமாக அமைந்துள்ளது.

சீசர் குழந்தைப் பேறற்ற ஒருவனாவான். அவனது மனைவியின் பெயர் கல்பூர்னியா ஆகும். லூபர்கால் திருவிழாவில் நிர்வாணமாக ஓடுபவர் எதிரில் வருவரைத் தொட்டார். அவர்களுக்கு குழந்தைப் பேறு உண்டாகும் என்பதை உரோமரின் நம்பிக்கையாகும். இத்திருவிழாவில் ஓடுவதற்கு அன்ரோனியோ ஆயத்தமாகக் காணப்படுகின்றான். "ஓடும் வேளையில் என் மனைவியைத் தொட மறந்து விடாதே அன்ரோனியோ" என்று சீசர் கூறுகின்றான். இதிலிருந்து சீசர் குழந்தைப் பேறுக்காக ஆசைப்படும் ஒருவனாக சீசர் காணப்படுவதை நாம் அறிகின்றோம்.

யூலியசீசர் வாக்குக் கேட்பதில் நம்பிக்கை அற்றவனாக காணப்படுகின்றான். மார்ச் 15ம் திகதி கவனமாக இருங்கள் என்று குறி சொல்பவன் குறி சொன்ன போதும் சீசர் இவன் கனவு காண்பவன். இவனை விட்டுவிடுங்கள் என்று கூறி அலட்சியப்படுத்துகிறார்" இவ்வாறு வருவது உரைப்பதில் நம்பிக்கை அற்ற ஒருவராக சீசர் திகழ்கின்றார்.

இவரது ஒரு பக்கக்காது கேட்கும் சக்தியை இழந்திருக்கிறது" எது பேசுவதென்றாலும் இப்புறம் வா ஏனெனில் மற்றைய காது செவிடு" என்று கூறுகிறான். இவ்வாறு கேட்கும் குறைபாடு உள்ளவராக சீசர் காணப்படுகின்றார். காசியசின் கூற்றிலிருந்து சீசர் காக்காய் வலிப்புவரும் ஒருவனாகக் காணப்படுகின்றார். இவ்வாறு உடல் ரீதியாகப் பலவீனமாகக் காணப்பட்ட போதிலும் உறுதியான உள்ளம்

படைத்தவராக சீசர் திகழ்வதனை நாம் கண்டு கொள்கின்றோம். அவர் சிதறுண்டு காணப்பட்ட உரோமசாம்ராஜ்ஜியத்தை ஒன்றுபடுத்தினார். பெரும் வீரனாகவும் உரோமைப் பேரராக உருவாக்கிய தலைவனாகவும் யூலியசீசர் திகழ்கின்றார்.

யூலியசீசர் நாடகம் நட்பின் துரோகம் பற்றி எடுத்துக் கூறும் ஒரு நாடகமாகும். சீசரின் இரு நண்பர்களை நாம் இந்த நாடகத்தில் காண்கின்றோம். ஒருவர் புருட்டஸ் மற்றையவர் அன்ரோனியோ ஆவார். புருட்டஸ் சதிகாரர்களுடன் இணைந்து சீசரைக் கொலை செய்ய திட்டம் தீட்டுகின்றனர். வெனிஸின் செனட் மண்டபத்தில் உரோமப் பேரரசின் முடியைச் சூடுவதற்காகச் சீசர் சென்றவேளை அவர் எதிரிகளால் குத்தப்படுகிறார். இவ்வேளையில் சீசர் தனது புருட்டனிடம் தஞ்சமடைய ஓடி வருகின்றார். இவ்வேளையில் சீசரின் மிகவும் நம்பிக்கைக்குரிய புருட்டசும் சீசரைக் குத்துகிறான்"

"நீயுமா புருட்டஸ்"? என்று சீசர் புருட்டசைப் பார்த்து வினாவுகின்றார்.

இது மிகவும் உலகப் புகழ்பெற்ற சேக்ஸ்பியரால் ஆக்கப்பட்ட யூலியசீசர் நாடகம் சிறப்பு வாய்ந்த அவல நாடகமாக யூலியசீசர் எனும் பாத்திரப்படைப்பு மூலம் நகர்த்தி செல்லப்படுவது மிகவும் சிறப்பம்சமாக விளங்குகின்றது.

செல்வரகு வசிகன்
A/L 2012
கலைப்பிரிவு


பெண்கள் சாரணியம்


மாணவர் மன்றம்


மாணவத் தலைவர்கள்


இந்துமா மன்றம்


சுகாதார மன்றம்



செல்வராகு ஸசிகன்
(மாணவன்)

# புவிக் கோளத்தை அச்சுறுத்தும் அமில மழை

இன்று உலகில் பெரும் பிரச்சனையான அமில மழை காணப்படுகின்றது. இது எல்லாச் சூழ்ல்களையும் பாதிப்பதால் அது இன்று மிகப்பெரிய சூழல் அச்சுறுத்தலாகவுள்ளது. மழை, மழைப்பனி, புகார் என்பவற்றுடன் கலந்து அமிலப்படிவானது புவி மேற்பரப்பில் ஈரத்தன்மையான வண்டலாகப்படுகின்றது. அதிகமான அமிலமாகப் பொருட்கள், எரிபொருட்கள் தகனமாவதால் ஏற்படுகின்றது. சூழலை மாசடையவிடாது அவ்தானமாக இருக்கின்) ஒரு நாடு அயற்புற நாட்டின் வளி மாசடைய வைத்த நிகழ்வில் அமில மழைக்குள்ளாகிப் பிரச்சனை வசப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் மாசடைந்த வளி கனடாவில் மக்கள் வாழ்கின்ற பகுதிகளை அமில மழையாகப் பாதிக்கப்படுகின்றது. கந்த கவீரொட்சைட், நைதரசன் ஓர் ஒக்சைட், நைதரனீரொக்சைட அமிலத்துகள் என்பன வளி மண்டலத்தில் சேர்வதால் அமிலமழை தோற்றம் பெறுகிறது.

அமில மழை என்பது என்ன? வளி மண்டலத்தில் கூடுதலாகச் சேர்கின்ற கந்தகமும் நைதரசனும் அமில மழைக்கு காரணமாகின்றன. கந்தக வீரொட்சைட்டும் ($So_2$) நைதரசன் ஒட்சைட்டும் ($No_2$) வளிமண்டலத்தில் சேர்ந்து நீராவியுடனும், ஒட்சிசனுடனும் கலந்து அமிலத்தன்மையை ($H_2So_2$ உம் $HNo_3$) உருவாக்குகின்றன. இவை புவியின் மேற்பரப்பை மழை, பனி கலந்த மழை, மழைப்பனி, உறைபனி, புகார் முதலான படிவு வீழ்ச்சி வடிவங்களாக வந்தடைகின்றன. கந்தகமும் நைதரசனும் வளி மண்டலத்தில் மிகக் கூடுதலாக எவ்வாறு சென்றடைந்தன என்பதற்கு விளக்கம் இதுவாக அமைகிறது.

- புகை கக்குகின்ற தொழிற்சாலைகள் உயிர்ச்சுவட்டுெரி பொருட்கள் எரிதல், மோட்டார் வாகனங்கள் என்பன எளிதாக வளிமண்டலத்தில் அழிலத் தன்மைகளைச் சேர்த்து விடுகின்றன.
- நிலக்கரி, பெற்றோலியம் ஆகிய எரிபொருட்களைப் பல்வேறு தேவைகளுக்கு எரிப்பதால் காபனீரொட்சைட்டும், நைதரசன் ஒட்சைட்டும் வளி மண்டலத்தில் சேர்கின்றன.

- மின்சக்தி உற்பத்திக்காக அதிகளவில் உயிர்சுவட்டெரி பொருட்கள் எரியூட்டப்படுகின்றன.
- வாகனங்கள் நாளாந்தம் கக்குகின்ற பெற்றோலிய எரிபொருட் புகை வளி மண்டலத்தில் சேர்கின்றன.
- இயற்கையாகவே எரிமலை மூலமும் மின்னலின் மூலமும் கந்தகவீரொட்சைட் தேற்றுவிக்கப்படுகின்றது.
- வளிமண்டலத்தில் அமிலமழைத் தோற்றத்திற்கு காரணமாக நைதரசனை அதிகரிப்பதில் விவசாயத்திற்கு உதவுகின்ற நைதரசன் உரம் பங்குவகிக்கின்றது. இதன் உபயோகத்தினால் வளிமண்டலத்தில் வருடாவருடம் 0.25% நைதரசன் ஒட்சைட்டு சேர்ந்து வருகின்றது.

உலகின் கைத்தொழில் பிரதேசங்கள் அமிலமழை வீழ்ச்சியால் பாதிப்புற்று வருகின்றன. சாதாரண மழையிலும் அமிலத் தன்மையுள்ளது. மழை நீரில் காணப்படும் அமிலத்தன்மையை PH அலகொன்றால் அளவிடுவர். இந்த அலகு அதிகமாகவிருக்கில் அந்த மழையில் அமிலத்தன்மை குறைவு என்பதாகும். சாதாரண மழைநீரில் PH அளவு 5.6 ஆகும். மழைநீதில் மிகமிக அதிக அமிலத் தன்மையிருக்கில் அதன் PH அளவு பூச்சியமாகும். மழை நீரில் அமிலத்தன்மை முற்றாகவில்லை என்றால் அதன் PH அளவு 14 ஆகும் 7ல் நடுத்தரமானது எனலாம்.

அமெரிக்காவின் பேரேறிப் பிரதேசம், நியூஇங்கிலாந்துப் பிரதேசம் டென்மார்க் பிரதேசம் என்பனவற்றின் மழைநீரின் PH பெறுமானம் 4.0 இலும் குறைவாகும். இப் பிரதேசம் அமில மழையில் அதிகம் பாதிக்கப்படும் பிரதேசமாக நாம் கண்டுகொள்ளமுடியும்.

மேற்கு ஐரோப்பா, கிழக்கு அமெரிக்கா என்பவற்றில் பெய்கின்ற மழைநீரின் PH அளவு 4.0-4.5 ஆகும். இக்குறித்த பிரதேசங்களிலும் சுற்றடாலிலும் கிழக்கு சீனாவிலும் மழைநீரின் PH அளவு 4.5-5.0 ஆகும். எனவே போதுமான அமில மழையால் தாக்கப்படும் பிரதேசம் அமெரிக்கா ஐரோப்பிய பகுதிகள் காணப்படுகின்றன.

**அமிலமழை காரணமாக ஏற்பட்டு வருகின்ற பாதிப்புக்கள் பலவாகும் அவை வருமாறு**

- ஏரி, குளம், ஆறு முதலியன நீரில் சேரும் அமில மழைநீரி அவற்றில் வாழ்கின்ற மீன்களைக் கணிசமானவளவு அழித்து விடும்.
- மண்ணிலுள்ள தாது ஊட்டத்தை அமிலமழை தாக்குகின்றது. இதனால் மண்வளத்தை இழக்கப்பயிர்ச் செய்கை பாதிப்புறும் தாவரங்களின் வளர்ச்சி குன்றி அழிவுற நேரிடும்.
- சுண்ணாம்புக் கற்கள், சலவைக் கற்கள் என்பவற்றினால் கட்டிய கட்டடங்கள் உரிவுக்குள்ளாகின்றன.

**வளிமண்டத்தில் சேர்கின்ற $SO_2$யும்$NO_2$யும் எவ்வாறு கட்டுப்படுத்துவது சிக்கலான பிரச்சனையாகும்.**

- கந்தவீரொட்சைட்டும் நைதரசன் ஒட்சைட்டும் எவ்வாறு அமிலமழையாக மாறுகின்றன என்பது குறித்து இரசாயனப் பரிசோதனை பல நிகழ்த்த சரிவர விடை கிடைக்கவில்லை. எனினும் அமிலமழைக் காரணமான $SO_2$ $NO_2$ என்பன கலப்பதை கூடியவரை கலக்கவேண்டும்.
- அமில மழையை எதிர்த்துத் தாக்குப் பிடிக்கக்கூடிய பயிர்கள், மரங்கள், மீன்கள் என்பவற்றைக் கண்டறிய வேண்டும் என வழிவகை கூறுகிறேன்.
- சூரியசக்தி, நீர்சக்தி போன்ற மாற்றீட்டு சக்தி முதல்களைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்த வேண்டும்.
- உயிர் வாயு போன்ற மாற்றீட்டு எரிபொருள் முதல்களைக் கண்டு பிடித்துப் பயன்படுத்தவேண்டும்.

ஒரு நாடு தனக்குரிய சக்தி, சூழல் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் போது இன்னொரு அயல்நாடு அதன் விளைவாக மாசடைவுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. புவிப்பந்து ஓரிடத்தில் மாசடையில் அது படிப்படியாகப் புவியெங்கும் பரவிவிடக்கூடிய நிகழ்வாகி விட்டது. ஐக்கிய அமெரிக்கா, கனடாவுக்குமிடையிலான பிரச்சனையாக இத்தகு செயற்பாடு இன்றுள்ளது. ஐக்கிய அமெரிக்கா வளிமண்டலத்தில் சேர்கின்ற $SO_2$யும்$NO_2$ உம் கனடாவில் அமில மழையாகப் பொழிகின்றது. தேசிய விஞ்ஞானக் கழகம், வளி மண்டலத்தில் $SO_2$வும்$NO_2$யும் சேர்ப்பதைக் குறைக்கும் வரை இந்த பிரச்சனைக்குத் தீர்வில்லை என்கிறது.

இலங்கையில் அமில மழைத்தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது என்பது தெரியவந்துள்ளது. தென்மேற்கு பிரதேசத் தொழிற்சாலைகளும் அளவுக்கு அதிகமாகி விட்ட வாகனங்கள் வளிமண்டலத்தில் $SO_2$யும்$NO_2$யும் சேர்த்து வருகின்றன. இலங்கை வாகனங்களின் எண்ணிக்கை வருடா வருடம் அதிகரித்து வருகின்றது. இந்தியாவின் கோயம்புத்தூர் பகுதியில் விரைவாக அதிகரிக்கும் அலைகள் இலங்கையின் வளிமண்டலத்திற்கு அச்சுறுத்தலாகி வருகின்றன. எனவே இலங்கைக்கும் எதிர்காலத்தில் அமிலமழை வரக்கூடும். எனவே நாம் இதைத் தவிர்ந்து மகிழ்ச்சியாக வாழ்வோம்.

தொகுப்பு
செல்வரகு லசிகரன்
A/L 2012
கலைப்பிரிவு



கமிலன் மாணவன்

# வாசிப்பின் பயன்கள்

இன்று மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது. தொலைக்காட்சி பார்த்தலில் அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். சில மாணவர்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் கிரிக்கெட் போட்டிகளையும், திரைப்படங்களையும் பார்ப்பதற்காக பாடசாலைக்கே செல்லாது நின்று விடுகின்றனர். மாணவர்கள் தமது பொழுதைப் போக்குவதற்காக தொலைக்காட்சியை நம்பி உள்ளனர். அதேவேளை நல்ல நண்பர்கள் எனக் கருதத்தகும் நூல்களை வாசிக்கத் தவறி விடுகின்றனர்.

இதை உணர்த்தும் வகையில் நூல்கள் பல கற்கவேண்டும் என்றார் ஔவையார். நல்ல நூல்களைக் கற்பது நல்ல பழக்கம். நல்ல நூல்களே நமது நல்ல நண்பர்கள். வாசிப்புப் பழக்கம் உள்ளவர்கள் ஒரு போதும் தனிமை உணர்வைக் கொண்டிருக்க மாட்டார்கள். ஓய்வு நேரம் கிடைக்கும் போது நூல்களை நாடிச் செல்வார்கள். சோர்வு வரும் போது நூல்களை வாசித்தால் அவை அனைத்தும் இல்லாமைப் போகும் நூல்கள் எமது அறிவை வளர்க்கின்றன. மென்மேலும் திறன்களையும் ஆற்றல்களையும் வளர்க்கின்றன. நூல்களைப் போன்ற ஒரு சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்கமுடியாது என்றொரு ஆங்கிலக் கவிஞர் குறிப்பிட்டுள்ளார். வாசிப்புப் பழக்கம் இல்லாதவர்களின் வாழ்க்கை இருண்டதாகவே காணப்படும். வாசிப்பின் மூலமே நாம் எதனையும் வெற்றிகரமாக எமது முயற்சியாலே அறிந்து செயற்படமுடியும். அனைவருமே வாசிப்பால் பயன் பெறலாம். நாம் எமது பொழுதைப் போக்க நல்ல பயன் தரக்கூடிய புத்தகங்களை வாசித்தல் வேண்டும்.

அன்னப்பறவை நீரை அகற்றி விட்டு பாலைக்குடிப்பது போல நாமும் எமது வாழ்க்கைக்கு பயன்தரக்கூடியதாக எமது கற்றலை உயர்த்தக் கூடியதாக உள்ள நூல்களை வாசிப்பதே நன்மை தரும். "எம்மை எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பன் புத்தகமே என்றொரு அறிஞர் கூறினார். நாங்கள் நல்ல நண்பர்கள் எனக்கூறும் எமது நண்பர்கள் மனமாற்றம் அடைந்து எம்மை விட்டு பிரிந்து விடலாம். ஆனால் புத்தகங்கள் ஒரு போதும் எம்மை விட்டுப் பிரிவதில்லை. அவை எம்மோடு கலந்து உரையாட என்றும் காத்திருப்பவை. புத்தகங்கள் எமது இரு கண்களைப் போன்றவை. அவற்றை பாதுகாத்துப் படிப்பது எமது கடமை. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான். மற்றவர்கள் மதிக்கும் அளவிற்கு உயர்ந்திருப்பவன் வாசிக்கக் கூடியவனே. வாசிப்பதால் நாம் எதையும் சாதித்துக் கொள்ளமுடியும்.

மேலும் நோக்கினால் ஒருவர் பெற்ற வாசிப்பின் இன்பங்களை மற்றவர்கள் தட்டிப் பறித்துவிட முடியாது. வேறு செல்வங்களை கள்வர்கள் களவாடிச் சென்று விடலாம். ஆனால் கல்விப் பெருஞ் செல்வத்தை யாரும் களவாட மாட்டார்கள். வாசிப்பு ஒரு உயர்ந்த செல்வமாகும். இது அனைவராலும் விரும்பக்கூடிய ஒன்றாகும். நாம் எமது ஓய்வு நேரத்தை பயனுள்ளதாகக் கழிக்க வேண்டும். வாசிப்பின் பின்னணியில் விடா முயற்சியோடு வெற்றியும் உள்ளடங்கி உள்ளது. இந்த உண்மையை நாம் நன்கு மனதில் நிறுத்திக் கொண்டு செயற்பட வேண்டும். வாசிப்பின் மூலம் மனிதன் எதையும் இழந்துவிட முடியாது. இதற்கு வள்ளுவர்

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு" என்றார் நாம்

நன்மை எது தீமை எது என்பதை வாசிப்பு என்னும் அறிவின் மூலமே பெற்றுக்கொள்ள முடியும். மனித குலத்தின் மாண்பிற்கும் வெற்றிக்கும் எழுச்சிக்கும் உரிய மார்க்கம் வாசித்தலே ஆகும். வாசித்தல் சிறந்த ஒரு ஆதாயமாகும் என்றால் அது மிகையல்ல சிறுவர்களுக்கு வாசிப்பின் பயன் பற்றி அறிவூட்டுதல் வேண்டும். இறந்தாலும் நாம் வாசிப்பை நிறுத்தி விடக்கூடாது. நம்பிக்கை வைத்தால் நாம் நிச்சயம் வாசிப்பில் முன்னேறலாம். வாசிப்பே எமது வாழ்க்கைக்கு நிச்சயம் வழிகோலும். எமது உள்ளத்து உணர்ச்சிகளை வாசிப்பின் மூலம் வெளிப்படுத்த முடியும். எனவே வாசிக்க முயற்சிக்க வேண்டும். வாசிப்பதால் நன்மை பெறுபவர்கள் மாணவர்களே.

நாங்கள் வாசித்துப் பயன்பெற புத்தகம் அவசியம். எனவே நாம் புத்தகத்தைப் பாதுகாக்க வேண்டும். ஒவ்வொரு மாணவர்களாகப் பிறந்த நாங்கள் ஒவ்வொருவரும் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவேண்டும். எமது வாழ்வு சிறக்க வேண்டுமாயின் வாசிப்பை இலக்காக்க வேண்டும். வாசிப்பதால் அறிவு விருத்தியும் மேலதிக அறிவும் கிடைக்கும். நல்ல நண்பர்கள் எனக்கருதத்தகும். நூல்களை நாம் தேர்ந்தெடுத்துக் கற்றல் வேண்டும். நூல்களில் பல வகையான நூல்கள் உண்டு. வாழ்க்கை வரலாறு தத்துவம், இலக்கியம் என்பன உண்டு. எனவே நாம் அவற்றில் நல்லது எது தீயது எது என அறிந்து கற்றல் வாசித்தல் வேண்டும். வாசிப்பதையே எமது குறிக்கோளாக்க வேண்டும். கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்பது நமது ஆன்றோர் வாக்கு. அவர்களின் வாக்கிற்கு இணங்க நாம் கற்கவேண்டும். வாசிப்பதால் அறிவு பெருகும். வளர்ச்சி, பெருகும், ஆற்றல் பெருகும், திறன்கள் பெருகும், வெற்றி பெருகும் இவை அனைத்திற்கும் நாம் பாடு பட்டு உழைக்க வேண்டும். அனைத்து நாட்டவரும் வாசிப்பின் பயன் அறிந்து அவற்றிற்காகப் பாடுபட்டு உழைக்கின்றனர். நாம் ஏன் சோம்பி இருக்கவேண்டும். அன்பும் அறனும் இல் வாழ்க்கையும் நன்றாய் அமைய நாம் வாசிக்க வேண்டும்.

நாம் அனைவரும் கற்பதிலேயே கண்ணாயிருக்க வேண்டும். கல்வியே எமது இரு கண்கள் எனக் கொள்ளுதல் வேண்டும். நாம் அனைவரும் புத்தகத்தின் குழந்தைகள் நாம ஏன் வாசிக்கத் தவறுவான்? எமக்கென எவ்வளவோ புத்தகங்கள் இருக்கின்றனவே பின்பு எதற்காகப் பார்த்துக் கொண்டிருக்கவேண்டும். இதற்கு வள்ளுவரும் வாசிப்பின் பயன்கள் பற்றி எவ்வளவோ கூறியிருக்கின்றார். அவரும் வாசிப்பிலேயே தான் இவ்வாறு உயர்வடைந்தார். இப்படித்தான் ஒவ்வொரு அறிஞர்களும் பெரியவர்களும் உயர்ந்துள்ளனர். நாம் விரும்பிய அனைத்தையும்

பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் வாசிப்பின் மூலமே ஆகும். இல்லாவிடில் மற்றவர்கள் எம்மை ஏமாற்றி விடுவார்கள். எமது வாழ்வில் நம்பிக்கை அவசியம். நம்பிக்கையுடன் வாழ்ந்தால் தான் எதனையும் சாதித்துக் கொள்ளமுடியும். வாசிப்பின் மூலமே மனிதன் பூரண மனிதனாக மாறுகின்றான். வாசிப்பதனால் பயன் உண்டு என்பதை மாணவர்கள் அனைவரும் மறந்துவிடக்கூடாது. ஓய்வுள்ள பொழுதில் புத்தகம் வாசிப்போம். அந்த வாசிப்பின் மூலமே பயன் அடைவோம். இவை அனைத்தும் வாசிப்பினால் அடையும் பயன்கள் ஆகும்.

"நல்ல நூல்களை வாசித்து பயன் அடைவோம்"

செல்வன் கமிலன்
A/L (2012 கலைப்பிரிவு)
J.P.H.C



த.கேதினி
(மாணவி)

# Anger Management
## (கோப முகாமைத்துவம்/ கோபத்தை கையாளுதல்

## கோபம்

ஒரு இலக்கை அடைவதில் தடை/தாமதம் ஏற்படில் அந்த நபருக்கு கோபம் ஏற்படுகின்றது. ஒருவருக்கு கோபம் ஏற்படின் பின்வரும் உடல் தொழில்பாட்டில் மாற்றம் ஏற்படும்.

- கண்கள் சிவந்திருக்கும்
- நிலை தடுமாறும்
- கை, கால் நடுங்கும்
- பற்களைக் கடித்தல்
- குரல் தடுதடுக்கும்
- அதிக சத்தமாக கதைத்தல்
- நெட்டி முறித்தல்

அதிக ஏமாற்றம், வெறுப்பு, விரக்தி, இழப்பு, களவு கொடுத்தல் இவை இருந்தாலும் கோபம் வரும்

***கோபத்தை கையாளுதல்***

- உடன்பாடாக கையாளுதல்
- வெளியான தனிமையான இடத்தில் நின்று பேசல்
- தளர்வுப்பயிற்சி
- கடவுள் எல்லாத்தையும் பார்த்துக் கொள்வார் என்னும் எண்ணத்தை வலுப்படுத்தல்.
- கோபமானவரின் முகத்தை பார்ப்பதை தடுத்தல்.
- 100 இல் இருந்து பின்னோக்கி எண்ணாவிடல்.
- கதை எழுதல், Diary எழுதல்.
- ஏதாவது பாட்டு கேட்டல்.
- பிடித்த நண்பர்களுடன் கதைத்தல்.
- நல்ல உடற்பயிற்சி செய்தல்.
- கலைகள், விளையாட்டுக்களில் உங்கள் கவனத்தை செலுத்தல்.
- கோபத்தை தூண்டிய நபரை மன்னித்தல்.

*அறிந்து கொள்ளுங்கள்*

01. உடலில் உள்ள இரத்தம் ஒரு நாளில் உடலைச் சுற்றி பிரயாணம் செய்யும் தூரம் எவ்வளவு? 2700km

02. உடலில் எதுவித பிரயோசனமும் இல்லாத 108 உறுப்புக்கள் உள்ளன. இவை எச்ச உறுப்பு எனப்படும்.

03. எமது உடை எடை வீதம் பின்வருமாறு

தசைகள் 42 % மூளை 2% மார்பு 2%

எலும்பு 16 % வயிறு 7% தோல் 7%

கொழுப்பு (சாதாரணம்) 19%

04. மனித உடலில் தொண்டையில் 7 துவாரம் தொடர்புபடும் இடம் உண்டு.
நடுச் செவிக்குழாய் துவாரங்கள், மூக்குத் துவாரங்கள்
உணவுக்குழல் துவாரங்கள், காற்றுக்குழல் துவாரங்கள்
வாய்துவாரம் ஆக ஏழு துவார சந்திப்பு உண்டு.

05. ஒருவனின் இருமல் வேகம் 400 km/h

06. ஒரு பெண்ணின் கருப்பையின் அளவு என்ன தெரியுமா?
3 அங்குலம் நீளமும், 2 அங்குல அகலமுமே குழந்தையை தாங்கி வளரும் போது அதன் அளவிற்கேற்ப விரிவடைகின்றது.

07.உலகில் உள்ள ஜீவராசிகளில் முதுகெலும்பு தரையில் படும்படி படுக்கும் ஒரே உயிரினம் மனிதன் தான்.

08. வாயில் இருந்து மலவாசல்வரை உள்ள உணவுக் கால்வாயின் நீளம் 30 அடியாகும்.

09. மூளையானது உறுப்புகளிற்கு செய்திகளை அனுப்பி கட்டளை பிறப்பிக்கின்றது. அல்லவா, இந்த செய்தி செல்லும் நேரம்? 300km/h

10. ஒரு மனித உடல் ஒரு நாளைக்கு உற்பத்தி செய்யும் சக்தி எவ்வளவு?
70000000 பவுண்ட் அடியாகும் அதாவது 1 பவுண்ட் அடி என்பது 1 பவுண்ட் அடி எடையை 1 அடி உயரத்திற்கு தூக்கத் தேவையான சக்தியாகும்.

03. தெரிந்த உயிரினம் பற்றி தெரியாத சில விடயங்கள்

- எறும்புகளில் 5037 இனம் உண்டு
- உலகில் மனித இனம் தோன்ற முன்பே எறும்புகள் தோன்றிவிட்டன.
- எறும்புகளுக்கு 38 பற்கள் உள்ளன.
- ஒரு புற்றில் ஒரு ராணி எறும்புதான் இருக்கும்.
- காவல் எறும்பின் வாயில் பார்மிக் அமிலம் இருக்கும். இவைதான் மனிதர்களை கடிக்கும்.
- எறும்பு தன் எடையைப்போல் 20 மடங்கு எடையை தூக்கும்.
- எறும்பின் சராசரி வாழ்நாள் 55 நாள் மட்டும்.
- எறும்புக்கு நுரையீரல் இல்லை. சிறு துளாய் மூலம் சுவாசிக்கும்.
- நிலத்தடியில் வாழும் எறும்புகளுக்கு சிவப்பு நிறம் மட்டுமே தெரியும்.
- ராணி எறும்பு ஆயுள்காலம் வரை முட்டையிடும்.

த.கேதினி
A/L 2012



சி.துஷியந்தன்
(மாணவன்)

# மனத்தால் உயர்ந்த உத்தமிக்கு மனம் நெகிழ ஓர் மடல்.....

இறைபணிக்கே வாழ்வென்றே நம்பிக்கை
கொண்டு
நிறை பணியில் எந்நாளும்
நின்ற பெரியோர்
எண்ணியதை எண்ணியாங்கு
செய்து முடிக்கும்
ஏற்றமிகு செயலின் நாயகி
சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
என்னும் நாம முடையோர்

மக்கள் சேவையே மகேசன சேவையென
சிக்கல் பல வந்த போதும்
சிறிதும் மணங்கோணாமல்
ஒப்புவித்த உள்ளத்துணர்வினர்
சீர்பெருக சைவநீதி தழைத்தோங்க
தீந்தமிழர் சமய வாழ்வு செழிப்பு எய்த

சீதக் கமல முகச் செந்தமிழ்ச் செல்வி
திக்கெட்டும் புகழ் பரப்பி
செய்த பணிகள் எத்தனை?
அன்புக்கு இலக்கணமாய் வாழ்ந்து
அகிலத்தில்
அறிவிற்கு நல்ல ஆசானாய்
அகத்தினில் நிறைந்தீர் !
அரும் பெரும் சைவசீலம்
அழுவது கண்டு அகமகிழ
அங்கெல்லாம் திருப்பணிகள்
ஆற்றி நின்ற அன்னையே !
அன்பொழுக பண்பொழுக
அவனியிலே நீங்கள் செய்த சேவை
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளானாலும்
அழியாது நிலைத்து நிற்கும்

அருமையான சேவையே
சித்தமதில் என்றுமே சிறப்பான
சிந்தனை கொண்டு
சிவப்பணியை மிகவும்
திறம்படச் செய்து காட்டியவரே !
சமூக மக்களின் பாரட்டையும் பெற்றவரே !
பண்பினிலே உயர்ந்த பெரும் பேரறிஞையே !
பார் போற்ற வாழ்ந்த தேசாபிமானியே !
இந்து சமயத்தின் இமைய விளக்காய்
எத்தனை எத்தனையோ இயற்பணி ஆற்றினீர்
இந்து பணிக்காய் செல்வங்களை
இல்லையெனாது ஈந்திட்டீர் !
துர்க்கா புரத்தின் நாயகியாய் இருந்த
நாற்றிசையும் புகழ்ந்திடவே
நற் தொண்டுகள் பல புரிந்தீர்
இல்லையெனாது ஈர்ந்திடும் குணமும்
இன்முகமும் இன்மொழியும்
இன்ன பல பெருமைகளுடன்
எமக்கென நீண்ட சேவை செய்தீர்
உங்களை எப்படி மறப்போம்?
சிறுவர் அநாதைகளின் திருத்தாயாய் இருந்து
மகளிர் வாழ் இல்லச் சிறார்கள்
மகிழ்வுடன் வாழ மாபெரும் பணிகளாற்றி
மண்ணில் நல்ல வணணம் வாழ்ந்த அம்மையே !
சைவத் தமிழ் மேன்மையுறச்
சாற்றிய பண்களோ பற்பல
ஊரெல்லாம் நின்று கூடி
உன் திருவுருவைக் காண
நீரெல்லாம் கண்கள்மல்க
நிற்ப்பதை அறியாய் தானே
சித்தமதில் என்றுமே சிறப்பான
சிந்தனை கொண்டு
சிவப்பணியை மிகவும்
திறம்படச் செய்து காட்டியவரே !
சமூக மக்களின் பாராட்டையும் பெற்றவரே !
பண்பினிலே உயர்ந்த பெரும் பேரறிஞையே !
பார் போற்ற வாழ்ந்த தேசாபிமானியே !

கண்ணின் கருமணியாய்த் திகழ்ந்து
காலமெல்லாம் கருத்தான சேவை புரிந்து
மாண்புக் கோர் அச்சாணியாய் !
வாழ்ந்து காட்டிய அன்னையே !
சொல்லாமற் போனதெங்கே
சீரணி புகழ் விளக்காய்
சீமாட்டியேவாழ்வீர்
நீவீர் ! கண்ணுதலான சிவன் கழலில்
உமது ஆத்மா கருத்தொன்றிச்
சிவ பதத்தில் பெற்றிடுக சாந்தி

ஆக்கம் :-
சி.துஷியந்தன் A/L (2011)
கலைப்பிரிவு



S.Jeevakaran
*(Student)*

# DEATH

Now it is the final journey of my life
Fighting with death
He is waiting at the door
I don't want to open the door
But he will open it.

Oh where will i go
To haven or hell?
My body will be burnt
All will cry
Except the enemies

Who will join with me
No one not join
But only one man waits for me
That's my "Good deeds"
He will join until the end.

By: S.Jeevakaran



S.ஜீவகரன்
(மாணவன்)

# மாற்று ஆற்றல் உடையோர் சம உரிமை உடையோர்....

மனிதனில் எத்தனை மாற்றங்கள்
மாறிவரும் உலகில் எத்தனை மாற்றங்கள்

புதுமைகள் உயர் தொழி நுட்பங்கள்
விஞ்ஞான விந்தைகள் அணு ஆயுதங்கள்

அடடா ஆயிரம் கோடி மாற்றங்கள்
ஆயினும் மனித இனத்தில் எத்தனை மாற்றங்கள்

மண்ணில் இருந்து விண்ணைத்தொடும்வரை
புதுமைகள் படைத்தாலும்

குழந்தைப் பருவம் முதல் முதியோர் பருவம் வரை
பருவங்கள் ஒன்றே தான்

காலங்கள் மாறும் காட்சிகள் மாறும்
ஆனால் உரிமைகள் மட்டும் மாறாது

மண்ணிலே பிறந்திட்ட மானிட ஜென்மங்கள்
மாட்சிமையாய் வாழ மாற்று ஆற்றலுள்ளோர் சளைத்தவர்கள் அல்ல

எத்தனையோர் புதுப்புது புதுமைகள் படைத்து
பாரினில் மார் தட்டிப் போற்றும்மாட்சிமை உடையோர்கள் மாறறாற்றல்உடையோர்கள்
சம உரிமை உடையோர்

ஆக்கம் :-
செல்வன் S.ஜீவகரன்
A/L(2011)



மு.தர்மினி
மாணவி

# 20ம் நூற்றாண்டில் இலங்கையின் இசை வளர்ச்சி....

இலங்கைத் தமிழ் மக்களின் கர்நாடக சங்கீத இசையை உயர்பாரம் பரிய இசை, உப பாரம்பரிய இசை என இரண்டாகப் பிரிக்கலாம். பெரும் கோயில்களையும் வசதிபடைத்தோரையும் சார்ந்தது உயர் பாரம்பரிய இசை சிறு கோயில்களையும், கிராமங்களையும் சார்ந்தது. உப பாரதம் பரிய கோயில் சார்ந்த இசையைத் தவிர வாழ்க்கை நிகழ்ச்சிகள் மற்றும் தொழில் சம்பந்தமான இசை விழாக்களும் உண்டு. இவை அனைத்தும் சேர்ந்ததே இலங்கைத் தமிழ் மக்களின் இசைப்பாரம் பரிய ஆகும். இராவணன் காலத்தில் இருந்தே இலங்கையில் கர்நாடக இசை மரபு இருந்தது என்பதற்கு ஆதாரமாக இராவணன் சாமகாணம் பாடி மகிழ்வித்ததும் ஆகும். இந்தியாவில் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்கள் வளர்ச்சி என்பன இலங்கையிலும் பிரதிபலித்து பின் இலங்கை சோழராட்சியின் கீழ் இருந்த போது ஆலயங்களில் திருமுறைகள் ஓதும் பாரம்பரியம் ஆரம்பமானது பக்தி மேலீட்டால் மக்கள் ஆனந்தக் கூத்தாடியதைத் தொடர்ந்தே கூத்து ஆரம்பமானது ஒல்லாந்தர், போத்துகேயர் தம் மதத்தை பரப்புவதற்காக நாடகப்பாடல்களை இசையுடன் பாடினார்கள். சைவ சமயத்ததைப் பாதுகாக்க பள்ளு முதலிய பிரபந்தங்களையும் இயற்றினார்.

19ம் நூற்றாண்டில் வாணிபத்தால் வளம் சேர்க்கப்வைசிகர் குலத்தோரால் பெரும் கோயில் கட்டப்பட்டது.அங்கு மங்கள வாதியங்கள் இசைக்க இசைக் கலைஞர்களை இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டு வண்ணார் பண்ணை சிவன் ஆலயத்தின் சுற்றுப் புறங்களில் குடி அமர்த்தப்பட்டனர். இவர்கள் தவில், நாதஸ்வரம் வாசிப்பதில் வல்லவர்கள். இவர்களே இன்றைய பாரம் பரிய இசையின் முன்னோடிகள் ஆவார். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விபுலானந்த அடிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசிரியராக இருந்த பொன்னையாப் பிள்ளையுடன் சேர்ந்து இசை ஆராச்சியின் பயனாக யாழ் நூல் என்ற நூலையும் விபுலானந்தர் எழுதினார். விபுலானந்த ரின் இசைத் தொண்டு இலங்கைக்கு பெருமதிப்பைத் தேடித் தந்தது. யாழ் நூலைத் தொடர்ந்தே பல அறிஞர்களால் இசை இலக்கண நூல்களும் எழுதப் பட்டன.

இதில் கார்நாடக இசையின் உயிர்த்துடிப்பு காணப்படுகின்றது. ஈழத்தில் நாதஸ்வரம்,தவில் ஆகிய இரண்டும் உன்னத நிலை அடைந்துள்ளது. இந் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் இருந்த கலாசாலை நிலையம் ஒன்றில் பிரபல தென்னிந்திய கலைஞர்கள் அங்கு பாடல் பாடுவது வழக்கம். பாடசாலைக் காலகட்டத்தில் மத்திய வகுப்பினர் இடையே கர்நாடக இசை இல்லாத போதும் அதை சாதாரண மக்களால் ஆதரிக்கப்பட்டு வந்து 1931ல் வட இலங்கை சங்கீதசபை தோற்றுவிக்கப்பட்ட இசை வளர்ச்சி பெற்றது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் பாடசாலைக் கலைத் திட்டத்தில் இசை ஒரு பாடமாக சேர்க்கப்பட்டது. பின்னர் 1972ம் ஆண்டு தொடக்கம் அழகியல் கல்வி கட்டாயமாக சேர்க்கப்பட்டது. இதன் மூலம் இலங்கைப் பாடசாலைகளிலும் வேறு இடங்களிலும் சிறுவர் சிறுமியர் ஆடும் ஆடல் பாடல்களில் நாட்டம் கொண்ட பெற்றோர் தமது பிள்ளைகளிற்கு இசையை புகட்ட நாட்டம் கொண்டனர். பின் உயர் கல்வியிலும் இசை ஒரு பாடமாக சேர்க்கப்பட்டது. கர்நாடக இசையுடன் பண்ணிசைக்கு அரும் பணியாற்றியவர்கள் தாவடிஇராசையா ,செல்லத்துரை,குமாரசிங்கம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர். இவர்கள் சங்கீத கதாப் பிரசங்கங்களை உச்ச நிலைக்கு கொண்டு வந்தார்கள்.

வட இலங்கை சங்கீத சபையோடு இலங்கை இசை ஆசிரியர் சங்கம் இசைக் கலைஞர் சம்மேளனம் சங்கீத வித்துவ சபை போன்றனவும் அண்ணாமலை தமிழ்ச்சங்கம், இளம் கலைஞர் மன்றம், மட்டக்களப்பு சங்கீத சபை, திருகோணமலை தட்சனகானசபா, கண்டி நுண்கலை மன்றம், கொழும்பு சைவ மங்கையர் கழகம் போன்றன.இசை வளர்ச்சி பெரும் பங்காற்றின.

20ம் நூற்றாண்டில் இலங்கையில் மெல்லிசை வளர்ச்சி பெற்றது. அவை வானொலியில் இடம் பெறச் செய்து துள்ளல் இசையோடு கூடிய பாடல்கள் எல்லோராலும் கவரப்பட்டது. இலங்கையில் காத்தான் கூத்து, வடமோடிக்கூத்து, தென் மோடிக்கூத்து,காமன் கூத்து, வடபாங்கு நாடகம் தெம்பாங்கு நாடகம் என பல நாடகங்கள் கூத்துக்கள் களத்தில் உள்ளன. இவை யாவும் கர்நாடக இசை சார்ந்த புதிய மரபினை ஆதரித்து வந்தன இக்காலத்தில் பல தரப்பினர் தென்னிந்தியா சென்று இசையைப் பயின்று இசைக் கச்சேரி செய்யும் முறை உருவாகியது. இவ் இசையே இலங்கையின் உயர் பாரம் பரிய இசைக்கு தற்போது பாடசாலைகளில் மட்டுமின்றி பல்கலைக் கழகங்களிலும் பட்டப் படிப்பிற்குரிய உயர் அந்தஸ்தைப் பெற்றுள்ளது. இத்துடன் வெகுசனத் தொடர்பு சாதனங்களான வானொலி, TV, கணனி, ஒளிப்பதிவு நாடா என்பன இசைக்கு பெரும் பங்கு ஆற்றி வருகின்றன.

ஆக்கம் :-
செல்வி K.தாமினி
A/L(2011) கலைப்பிரிவு
J/P/H/C



தர்மினி
(மாணவி)

# விஞ்ஞானமும் மனித வாழ்வும் ....

விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் உலகம் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உலகில் நடைபெறும் நிகழ்வுகள் மூலமாக அறியக்கூடியதாக உள்ளது. கணனி, இணையம், உலகமயமாக்கல் எனப்பல புரட்சி மிகு நிலைகள் உண்டாக்கப் பட்டதன் விளைவாய் உலகமே ஒரு உக்கிராமமாய் உருவெடுத்துள்ளது என்பதை எவருமே புரிந்து கொள்வார்.

ஆரம்ப காலங்களில் மனிதன் காடுகளிலும் மலைகளிலும் தன்னுடைய வாழ்விடங்களை அமைத்துக் கொண்டான். இவ்வாறு வாழ்ந்தவன் படிப்படியாக தன்னுடைய அறிவுக் கூர்மையைக் கொண்டு சிந்திக்கத் தொடங்கினான். ஆற்றங்கரைகளில் குடியேற்றங்களை அமைத்துக் கொண்ட மனிதன் காலப் போக்கில் விவசாயம், கைத்தொழில் என தன்னுடைய சிந்தனையை நடைமுறைகளில் செயற்படுத்தத் தொடங்கினான். குகைகளில் வாழ்ந்த மனிதன் இன்று தொடர் மாடி மனை வாழ்வு மற்றும் விவசாயம்,கைத்தொழில் என்ற பாரம் பரிய புரட்சிகளுடனும் செயற்பட்டு வருகின்றான்.

இம்மனிதனுடைய நாகரிக வளர்ச்சிக்கு விஞ்ஞான விருத்தியே பெரிதும் உயிர் நாடியாக விளங்குகின்றது. குண்டூசி தொடக்கம் அணுகுண்டு வரை மனித குலத்தின் மகத்தான சாதனைகள் தொடர்கின்றன. சில நேரம் இந்த சாதனைகளுக்கு அவலம் நேரத்தான் செய்கிறது. மனித குலத்தின் சக்தித் தேவையை பூர்த்தி செய்யக் கூடிய அரிய கண்டுபிடிப்பான அணுச்சக்தியை ஹிரோசிமா,நாகசீமா என்ற இரண்டு நகரங்களின் அழிவுக்கு பயன் படுத்திய மனித புத்திக்காக அந்த சாதனையை நொந்து பயனில்லை.

மனிதனுடைய வாழ்வு இன்று விஞ்ஞானத்தோடு பின்னிப் பிணைந்ததாகக் காணப்படுகிறது. விஞ்ஞானம் இன்று மனிதனுடைய வாழ்க்கை என்பது இல்லை என்ற அளவுக்கு உலகம் உருண்டோடிக் கொண்டிருக்கிறது. யப்பானில் ஒரு மனிதனுடைய மூளையைக் கூடகுரங்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. மருத்தவத் துறையானது இன்று பாரிய அளவில் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கின்றது. மனிதன் செய்ய முடியாத பல வேலைகளை இயந்திரத்தின் . உதவி கொண்டு மனிதன் சாத்தியப் படுத்திக் கொண்டிருக்கின்றான் இருதய மாற்றுச் சத்திர சிகிச்சைகள்,

ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகளைப் பிரித்தல், கண் மாற்றுச் சிகிச்சை போன்றன இன்று விஞ்ஞானத்தின் வளர்ச்சியில் வெற்றியளித்துக் கொண்டிருக்கின்றன.

உலகத்தில் விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் பல ஆக்கப் பாடான நிகழ்வுகள இடம் பெற்றாலும் அழிவை நோக்கி செல்கின்ற நிகழ்வுகளும் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. மாபெரும் விஞ்ஞான வளர்ச்சியை நோக்கி இன்று உலகம் செயற்பட்டாலும் பாரிய அழிவுகளை தடுக்கவும் முடியாமல் இருக்கின்றது. அதாவது கடந்த 2004 ஆம் ஆண்டு தென்னாசியாவைத் தாக்கிய சுனாமி அனர்த்தத்தை விஞ்ஞானத்தால் எதிர்வு கூறமுடியாமல் போய்விட்டது. இவ் விஞ்ஞான மறுமலர்ச்சி முதல் முதல் ஐரோப்பிய மாநாடுகளிலும் அதைத் தொடர்ந்து அமெரிக்கா, ஆசிய நாடுகளிலும் ஏற்பட்டதன் விளைவாக பல அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும்,விஞ்ஞானிகளும் பல கொள்கைகளையும், கருத்துக்களையும் ஆராய்ந்து பல கண்டு பிடிப்புக்களை கண்டறிந்தனர். இதன் விளைவாக தொலைத் தொடர்பு சாதனங்கள், போக்குவரத்து ஊடகங்கள் தைத்தொழிற் சாலைகள், மருத்தவ சாலைகள், எரிபொருட்கள் போன்ற எண்ணற்கரிய சாதனங்களும் கைத்தொழில்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

இதன் உச்ச வளர்ச்சியாக சந்திரன், செவ்வாய் போன்றவற்றிற்கு விண்கலங்களை அனுப்பி அது பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டிருக்கின்றான். சந்திரனுக்கு விண்கலங்கள் ஏவுவதன் மூலம் விஞ்ஞானத்தின் உச்ச வளர்ச்சி வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மனிதனுடைய அன்றாட வாழ்வில் கூட விஞ்ஞானத்தின் உச்ச வளர்ச்சி வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மனிதனுடைய அரிய பங்களிப்பை ஆற்றுகின்றன. தொலைத் தொடர்பு சாதனங்கள் முதல் போக்குவரத்து ஊடகங்கள் வரை விஞ்ஞான வளர்ச்சியானது மனிதனுக்கு அதிகமாக நல்ல விடயங்களையே அளிக்கின்றன எனலாம். தொலைத்தொடர்பு சாதனங்களைப் பொறுத்தவரை இன்று உலகின் எந்த மூலையில் என்னென்ன விடயங்கள் இடம் பெற்றாலும் அதனை நேரடியாகவே எம்மால் பார்க்கக் கூடியதாக உள்ளது. ஆரம்ப காலத்தில் தொலைத்தொடர்பு சாதனங்கள் தோற்றம் பெற்ற காலகட்டங்களில் எந்தவொரு நிகழ்ச்சியாக இருந்தாலும் அவை பதிவு செய்யப்பட்டு ஒலி, ஒளி பரப்பப்பட்டு வந்தன. ஆனால் காலப்போக்கில் பல மணித்தியால நிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள் என்பனவும் எங்கு இடம் பெற்றாலும் உலகளாவிய ரீதியில் குறிப்பிட்ட ஏதோவொரு அலை வரிசையின் ஊடாக ஒலி, ஒளி பரப்பி வருகின்றனர்.

மனிதனுடைய விஞ்ஞானப் புரட்சியில் மிக முக்கியம் வகிப்பது கணனி ஆகும். இந்த கணனி மூலம் இன்று பல விடயங்கள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றில் நல்ல பல விடயங்கள் இடம்பெற்றாலும் நிராகரிக்கப் படக்கூடிய சில நிகழ்வுகளும் இடம் பெறத்தான் செய்கின்றன. இணையத்தினை எடுத்துக் நோக்குகின்ற பொழுது இணையத் தளங்கள் வாயிலாக தகவல்களைப் பெறவும், மின்வர்த்தகம் செய்யவும், மின்னஞ்சல் வாயிலாக தகவல் பரிமாற்றம் மேற்கொள்ளலாம் என்ற நிலைகளை எல்லாம் தாண்டி மரங்களும் சில வேளை இணையத்தளங்களூடாக நிச்சயிக்கப்படுகின்றன. அமெரிக்க நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படுகின்ற இணையத்தளமொன்று மரணச் சடங்குகளை தனது தளத்தின் ஊடாக ஒலி-ஒளிபரப்பு செய்கின்றது.

இணையத்தின் மூலம் பல அழிவுகரமான விடயங்களும் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இணையத்தளத்தில் தீய அல்லது பார்க்கக் கூடாத இணையப் பகுதிகளைப் பார்வையிடுவதன் மூலம் முற்று முழுதாக அவர்கள் அதற்கு அடிமைகளாகவே மாறிவிடுகின்றனர். இதனால் இவர்களுடைய திசைமாறிச் செல்கின்ற ஒரு நிலை ஏற்படுகின்றது.

குறிப்பாக இன்றைய காலகட்டத்திலே மாணவர்களை அதிகமாக தன்பக்கம் தீய விடயங்களுக்காக சுண்டி இழுக்கும் விடயங்கள் இணையத்தில் ஆங்காங்கே காணப்படுகின்ற நிராகரிக்கப்பட்ட நீலப்படங்கள் வீடியோக்கள் போன்றவையாகும். இவற்றாலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்பட்டு அவர்களுடைய சமூக நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டு வாழ்க்கையே திசை மாறிச் செல்கின்ற ஒரு நிலைப்பாடு காணப்படுகின்றது எனலாம்.

விஞ்ஞானத்தில் விருத்தி என்பன ஏற்படாவிட்டால் மனிதன் பல விடயங்களை சாதித்திருக்கவும் முடியாது அதைச் செயற்படுத்தவும் முடியாது. ரைட் சகோதரர்களால் விமானம் கண்டுபிடிக்கப் படாவிட்டால் வெளியூர் பயணங்கள் வெளிநாட்டுப் பயணங்கள், தொடர்புகள் என்பவை மட்டுபடுத்தப்பட்டதாகவே இருந்திருக்கும் இதனால் பல செயற்பாடுகள் ஒரு வரையறைக்குள் உள்ளடங்கி யிருக்கும். விமானத்தின் தோற்றம் பல நல்ல விடயங்களை நெறிப்படுத்திக் கொண்டிருக்கும். சில அரசாங்கம் தம் எதிர் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு விமானம் மூலம் குண்டுகளை பொழியும் செயற்பாட்டை நெறிப்படுத்திக் கொண்டிருக் கின்றனர். இதன் மூலம் இலக்குகள் தவறுகின்றன. இதனால் எதிர்பாராத மக்களே அதிகமாக இறந்து போகின்றனர்.

குதிரை, மாட்டு வண்டிகளில் போக்குவரத்துச் செய்த மனிதன் இன்று கார்களில் சௌகரிமான முறையில் செல்கின்றான். இதன் மூலம் நாம் விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் காரணமாக மனிதன் முன்னேறி விட்டான். இதன்மூலம் பல போக்கு வரத்து சாதனங்கள், போர்ஆயுதங்கள் உற்பத்தி போன்றனவும் மிகவும் அதிகரித்துச் செல்லுகின்ற ஒன்றாகவே காணப்படுகின்றன. இது மட்டுமல்ல தொலைக்காட்சி, தொலைபேசி, வானொலி போன்ற பல கருவிகள் மூலம் நல்ல செயற்பாடுகள் இடம்பெற்றாலும் சில மனித ஜீவன்கள் இதனை தவறான ஊடகங்களுக்கு செயற்படுத்துகின்றனர். தொலைக்காட்சியைப் பொறுத்தவரை தவறான சில விடயங் களைத் தாமும் கைக்கொள்ள முயற்சிக்கின்றனர்

எனவே மனிதனுடைய வாழ்வானது விஞ்ஞானத்தின் விருத்தியோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. எது எப்படியிருந்தாலும் நல்ல விடயங்கள் அல்லது சில நிகழ்வுகள் தீய விடயங்களை முற்று முழுதாக தவிர்ப்பது என்பது கடினமான காரியமாகும்.

ஆக்கம் :-
தர்மினி
A/L.(2011) கலைப்பிரிவு



தர்மினி
(மாணவி)

# மூன்றின் பெருமை ....

| | |
|---|---|
| முத்தமிழ் | : இயற்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் |
| முக்கனி | : மா, பலா, வாழை |
| முச்சித்தர் | : பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் |
| முத்தொழில் | : படைத்தல், காத்தல், அழித்தல் |
| முக்காலம் | : நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம |
| முப்பால் | : அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் |
| முப்பொறி | : மனம், வாக்கு, காயம் |
| மும்முரசு | : வீரமுரசு, கொடையரசு, மங்கஅரசு |
| மூவேந்தர் | : சேரன், சோழன், பாண்டியன் |
| மூவிடம் | : தன்மை, முன்னிலை, படர்க்கை |
| முப்பொருள் | : பதி, பசு,பாசம் |
| முப்படை | : தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை |
| மும்மலம் | : ஆணவம், கன்மம், மாயை |
| மூவுலகு | : விண்ணுலகு, மண்ணுலகு, பாதாளஉலகு |

**ஒருவருக்கு தேவையான ஏழுகுணங்கள்**

1. தைரியமாக எந்த ஒரு காரியத்தையும் தொடங்கும் குணம்.
2. கற்பனைத் திறமையுடன் எதையும் பார்க்கும் குணம்.
3. ஆழ்ந்து சிந்தித்து வேலைகளை ஒழுங்குபடுத்தி நடத்தல்.
4. நேரத்தையும், பணத்தையும் திட்டமிட்டு செலவழிப்பது.
5. எப்பொதும் சுறுசுறுப்புடனும் ஊக்கத்துடனும் இருத்தல்.
6. சிந்தனையை சிதறவிடாது ஒருமுகப்படுத்தி கவனமாகக் செயற்படல்.
7. தன்னை அடக்கித் திருத்திக் கொள்ளல்.

**எல்லாம் இரண்டு**

| | |
|---|---|
| வருவதும் போவதும் | - இன்பமும், துன்பமும் |
| வந்தால் போகாதது | - புகழ், பழி |
| போனால் வராதது | - மானம், உயிர் |
| தானாக வருவது | - இளமை, முதுமை |
| நம்முடன் வருவது | - பாவம், புண்ணியம் |
| அடக்கமுடியாதது | - ஆசை, துக்கம் |
| சகிக்க முடியாதது | - பசி, தாகம் |
| எம்மால் பிரிக்க முடியாதது | - பந்தம், பாசம் |
| எல்லோக்கும் சமமானது | - பிறப்பு, இறப்பு |

- இலங்கை வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
  1939ம் ஆண்டு
- இலங்கை மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
  1961ம் ஆண்டு
- வரையறுத்த இலங்கை வணிக வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
  1970ம் ஆண்டு
- அரச போக்குவரத்து துறையில் தனியாருக்கு அனுமதி வழங்கிய ஆண்டு
  1979ம் ஆண்டு
- தனியார் பேருந்து சேவை திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
  1983ம் ஆண்டு
- இலங்கை நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
  1979ம் ஆண்டு
- இலங்கை சுதந்திர வர்த்தக வலயம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
  1977ம் ஆண்டு
- இலங்கை அரசின் எத்தனையாம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் கம்பனிகள் உருவாக்கப்படுகிறது
  1982ம் ஆண்டு

## சொத்து கவிதை

தாயின் சொத்து அரவணைப்பு
பெண்ணின் சொத்து கற்பு
சகோதரர்களின் சொத்து ஒற்றுமை
பெரியோரின் சொத்து அனுபவம்
சுற்றத்தாரின் சொத்து உதவி
உழைப்பவரின் சொத்து நேர்மை
ஏழைகளின் சொத்து கல்வி
பக்தரின் சொத்து முத்தி

## பொன் மொழிகள்

உண்மையான நண்பனே உண்மைச் சொத்து
மௌனம் இதயத்தின் இனிய மருந்து
உயர்ந்த நேர்மையில் தான் அதிக பணிவு இருக்கும்
அறிவுரை கொடுப்பதிலும் பார்க்க கேட்பது நல்லது
இதயத் தூய்மையே உண்மை அழகு
குற்றத்தை ஒப்புக் கொள்வது நேர்மையின் முதற்படி
சுறுசுறுப்பு அதிஷ்டத்தின் தாய் போன்றது
உன் கௌரவம் நாக்கின் நுனியில் இருக்கிறது.
புன்னகை கடுமையான செயல்களைக் கூட எளிமையாக்கும்

ஆக்கம் :- தர்மினி
A/L(2011) கலைப்பிரிவு



கார்த்திகா
(மாணவி)

# நேரம்....

மனிதனாய் பிறப்பது சரி. நல்ல மனிதனாய் வாழ்வதே மிகச் சரி. ஒரு மனிதன் பிறப்பது முதல் இறப்பதுவரை அவனது வாழ்வில் ஒரு முக்கிய விடயமாக நேரம் விளங்குகின்றது. உதாரணமாக சாப்பாடு உறக்கம், கல்வி,விளையாட்டு,ஓய்வு போன்ற மனிதனின் அன்றாட செயற்பாடுகளில் நேரத்தை சரியான முறையில் பின்பற்றுவது அவசியம்.

எமது நாட்டிலும் பார்க்க மேலைத்தேய நாடுகளில் நேரம் என்பது சரியாகப் பின்பற்றப்படுகிறது. அவர்களின் அனைத்து செயற்பாடுகளும் திட்டமிட்டு செயற்படுகிறது. அவர்களின் வெற்றிக்கு மிகப்பிரதான காரணி இதுவேயாகும்.அந்நாட்டு மக்களின் ஆயுட்காலத்தை ஒப்பிடுமிடத்து எமது ஆயுட்காலம் குறைவாகவே உள்ளது. இதற்கு நேரத்தை சரியாக பின்பற்றாமையே ஆகும்.

"ஆறின கஞ்சி பழங்கஞ்சி" எந்த வேலையாயினும் அதனை அதற்குரிய நேரத்தில் செய்து முடிக்க வேண்டும். நாம் வீணாக்கும் ஒவ்வொரு நொடியும் நமது வெற்றிப் பாதைக்கு தடைக் கல்லாக மாறுகிறது. நேரத்தை சரியான முறையில் பின்பற்றி நடந்தவர்களே வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களாவர். இவர்கள் நமது பொன்னான நேரத்தை சிறிதும் வீணாக்க மாட்டார்கள்.

ஒரு மனிதனின் நடத்தையைப் பார்த்தே அவன் பண்புள்ளவனா? அற்றவனா? என தீர்மானிக்கப்படுகிறது. ஒருவன் தனது கடமையை சரியான நேரத்திற்கு செய்து முடிக்கும் போது ,அவன் பண்புள்ளவனாக கருதப்படுகிறான். மற்றவர்களால் மதிக்கப்படுகிறான்.

சிலர் ஓயாது உழைப்பதே நேரத்தை சரியாக பின்பற்றுவது என்று தீர்மானிக்கப்படுகின்றார்கள். அவ்வாறில்லை மனிதனுக்கு ஓய்வு என்பது மிக முக்கியமான ஒன்றாகும். உடம்பால் வேலை செய்பவனிற்கு தனது உடம்பிற்கும் மூளையைப் பாவித்து வேலை செய்பவனிற்கு மூளைக்கும் ஓய்வு அவசியம். அப்பொழுது தான் அவன் தனது வேலையை தொடர்ந்து செய்யவும் சரியான தீர்மானங்களை மேற்கொள்ளவும் முடியும்.

அகமும் புறமும் தூய மாணவரே! நாளை இந்நாட்டை தாங்கி நிற்கப் போகும் சமுதாயத் தலைவர்கள் மாணவர்களே என்பதை நாம் உணர வேண்டும். கல்வி கற்கும் வயதில் சோம்பிக் கிடக்காது முயன்று படிக்க வேண்டும். இன்று நாம் குனிந்து எழுதும் எழுத்து நாளைஎம்மை நிமிர்ந்து நடக்க வைக்கும்.நேரத்தை வீணாக்கி கூடி அரட்டை அடிப்பதனாலேயோ தேவையற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பத னாலேயோ? எப்பயனும் கிடைக்கப் போவது இல்லை. ஒரு மாணவன் எவ்வளவு

நேரம் உண்மையாகப் படிக்கிறானோ அதற்கேற்பவே அவனது பெறுபேறும் அமையும். நாம் நேரத்தை வீணடிக்கும் போது ஒரே நேரத்தில் மூன்று பேருக்கு துரோகம் செய்கிறோம். நம்மை இவ்வுலகிற் பிறக்கச் செய்துபசியாற்றி நமக்காகவே வாழும் பெற்றோர்கள், நம்மை மேல் நிலைக்கு கொண்டு வருவதற்காக அயராது பாடுபடும் சுயநலமற்ற ஆசிரியர்கள், நம்மை ஆறறிவு உள்ள மனிதனாகப் படைத்த கடவுள் போன்றோரே அவர்களாவர்.

தலைசிறந்த சாதனைகள் பெரும்பாலும் இளமையின் சாதனைகளே. எனவே மாணவர்களாகிய நாம் சிறு பராயத்திலிருந்தே நேரத்தைச் சரியான முறையில் பின்பற்றி பெற்றோர்,ஆசிரியர்,கடவுளின் ஆசியைப் பெற்று வாழ்க்கையில் வெற்றிவாகை சூடுவோமாக.

## சிந்தனைத் துளிகள்

- ஒரு ஆண்டின் பெறுமதியை ஒரு பரீட்சையில் தோல்வியுற்ற மாணவனிடம் கேட்கலாம்.
- ஒரு மாதத்தின் பெறுமதியை ஒரு சிசுவை ஈன்ற தாயிடம் கேட்கலாம்.
- ஒரு வாரத்தின பெறுமதியை வாராந்த பத்திரிகை பதிப்பாளரிடம் கேட்கலாம்.
- ஒரு நாளின் பெறுமதியைப் பிள்ளைக்காக உழைக்கும் ஒரு கூலித் தொழிலாளியிடம் கேட்கலாம்.
- ஒரு மணித்தியாலத்தின் பெறுமதியை காதலியைச் சந்திக்க காத்திருக்கும் காதலனிடம் கேட்கலாம்.
- ஒரு நிமிடத்தின் பெறுமதியை இரயிலை தவறிவிட்ட ஒருவரிடம் கேட்கலாம்.
- ஒரு விநாடியின் பெறுமதியை ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் பெற்ற ஒருவரிடம் கேட்கலாம்.
- நேற்று என்பது வரலாறு நாளை என்பது மாயை இன்று என்பது மட்டும் நிஜம்.

## உழைத்து வாழ்வோம்

வாழ்வில் நீ எதை தொலைத்தாய்
இப்படிக் கவலைப்படுவதற்கு
துடிக்கும் திறமையை ஏன்
சிறையில் அடைக்கிறாய்
வாழ்வதற்காக வழியில்லை
உழைப்பதற்காக நேரமில்லை
நீ சிந்தித்து திட்டமிடு - உனக்காக
ஒரு தொழில் காத்திருக்குமல்லவா?
உனக்குள் இருக்கும் தூக்கத்தை விரட்டி
வியர்வையை சிந்தி பாடுபடு
துள்ளிஎழு மனிதா மனதில்
உழைத்து வாழ்வோம் என்று
உறுதி கொள் வெற்றி பெறுவோம்.

ஆக்கம் :-
T. கார்த்திகா
A/L (2012) கலைப்பிரிவு



T.கார்த்திகா
(மாணவி)

# இலக்கியமும் மொழியும்..........

இலக்கியத்துக்கு மொழியே ஊடகம். இலக்கியங்களின் கருத்து விளக்கத்தில் முதன்மையான இடத்தைப் பெறுவது மொழி. மொழி சார்ந்த கருத்து விளக்கத்தில் மரபு சிறப்பிடம் பெறுகிறது. ஒவ்வொரு மொழியும் அவற்றின் பண்பாட்டு வரலாற்றோடு இணைந்த மரபுடன் இணைந்துள்ளது. இதனால் ஒரு மொழி கூறப்பட்ட கருத்தை இன்னொரு மொழியில் கருத்தாக்கம் செய்வது கடினம். ஒவ்வொரு சொல்லுக்கும் வெளிப்படையான கருத்து இருத்தல் போன்று உள்ளார்ந்த கருத்தும் உண்டு. மனித இனத்தின் படிப்படியான வளர்ச்சியில் மொழியின் பயன்பாடு முக்கியமான கருத்தைக் குறிக்கிறது. மனிதன் விலங்குகளைக் காட்டிலும் மிகஉயர்ந்த நிலையை அடைந்திருப்பதற்கு மொழிப்பயன்பாடே காரணமாகும். கருத்துப் பரிமாற்றம் நடைபெறுவதற்கு இன்றியமையாத அடிப்படைச் சாதனம் மொழியாகும். மனித வாழ்க்கையே இலக்கியத்தின் ஊற்று இலக்கியம் வாழ்க்கையில் மலர்வது வாழ்க்கையை விளக்குவது வாழ்க்கைக்கு வழிகாட்டுவது. தனி ஒருவரின் அனுபவத்தை மனித சமுதாயத்தின் அனுபவத்தோடு சங்கமிக்கச் செய்வது வாழ்க்கை அனுபவத்தை ஆழமும் அகலமும் நுணுக்கமும் உடையதாக்குவதாகும்.

ஒரு காலத்தில் செந்தமிழ் கொடுந்தமிழ் என தமிழை இரு வகைப்படுத்தினார் பேச்சு வழக்கை கொடுந்தமிழ் எனக் கருதினார். "பழையவை கழிதலும் புதியன புகுதலும் வழவலகால வகையினானே" எனவே காலத்துக்கு ஏற்ப புதியன புகுதல் இலக்கண மரபுக்கு சாலப் பொருத்தமானதே. பேச்சு மொழியிலே சொற்களுக்கு அடிப்படையாக அமையும் மூல ஒலிகளை ஒலியன்கள் என்று மொழியியலாளர் கூறுவார். ஒலியன் என்பது வெறுங்குரல் ஒலியே அதற்கு அண்ணளவிற்பொருள் இல்லை ஓர் ஒலியன் ஒலியன்களோடு இணைந்த வகையில் பொருள் உணர்த்தும் சொல் பிறக்கின்றது. இவ்வாறு ஒலியன்களின் சேர்க்கையால் உண்டாவன உருபன்கள் எனப்படும். ஒலியன்களுக்கு வரிவடிவம் கொடுத்த எழுத்து மொழியில் அவை நிலை பேறு உடையதாகின்றது. ஆனால் பேச்சு வழக்கில் ஒலியன வேறுபடுவது இயல்பே.

இலக்கிய நயமும் மொழியும் ஒன்றுடன் ஒன்று இயல்புடையது. இலக்கிய நயத்தில் உணர்ச்சிப் பெருக்கு பொருள் யாப்பு அமைதி உள்ளுறை உவமம் இறைச்சிப் பொருள் என்பன உவமை பெறும் கவிதையின் உயர் நிலைக்கு கருத்து கவிஞனின் உணர்ச்சி பூர்வமானது. ஆகவே தான் கவிதை நரம்பில் உணர்ச்சி

முதலிடம் பெறுகிறது. நகை உவகை இனிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் முதலில் சுவைகள் உணர்ச்சி வெளிப்பாடுகளாகும். ஒழுகிய ஓசையுடைய சொற்களால் விழுமிய பொருள் சேர்ப்புது கவிதை. அணி என்பது அழகு செய்யுகளுள் அழகு சேர்ப்பது அணி செய்யுள் அமைப்பிலே காணப்படுகின்ற சிறப்பு யாப்பமைதி ஆகும்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக் காலத்தில் அறிவிற் சிறந்தோராகிய சான்றோர் மொழி வழக்கே ஏனையோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்தகைய சான்றோர் தமது கருத்துக்களை செய்யுள்களாகவும் வெளிப்படுத்தினர், உரையாகவும் வெளிப்படுத்தினர். அவர்களுடைய மொழி ஆட்சியை ஆதாரமாக வைத்தே இலக்கணம் என்ற வரம்பு அமைக்கப்பட்டது. இலக்கணம் அமைக்கப்பட்டது. இலக்கிய மொழிக்கும் இயல்பு மொழிக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன.

## நம்பிக்கைதான் வாழ்க்கை....

நம்பிக்கைதான் நம் வாழ்கையை உயர்த்துகிறது. நம்பிக்கை நம் வாழ்வில் இனிமை சேர்க்கிறது. நம்பிக்கை ஐந்து எழுத்து வார்த்தை தான் ஆனால் அது இல்லையே வாழ்க்கையே இல்லை. நம்பிக்கையில் தான் உலகமே இயங்குகிறது.

நம்பிக்கையில் சிறந்தது. தன்நம்பிக்கை தான் முதலில் ஒவ்வொருவரும் தன்னை நம்ப வேண்டும். உதையும் சாதிக்க என்னால் முடியும் என்பதே தன்னம்பிக்கை. அந்த நம்பிக்கை எங்களிடம் இருந்தால் எதையும்" சாதித்து விட எம்மால் முடியும். நம்பிக்கைக்கு உள்ள ஆற்றலை அளவிட முடியாது. தன்னம்பிக்கை இருந்து விட்டால் இமயத்தை கூட கடந்து விடலாம்.

சிறுவயது முதலே ஒரு இலட்சியத்தை வகுத்துக் ௌள்ளுங்கள். கிடைத்த வாய்பை அது எவ்வளவு சிறிதாக இருந்தாலும் அதை நழுவ விடக் கூடாது. ஆனால் பொறுமையாகஇருக்கிறோம் என நினைத்துக் கொண்டு வெட்டிப் பொழுது போக்காதீர்கள். அந்த நேரத்தில் செயல் திட்டங்களை தீட்டுங்கள். தீட்டிய திட்டங்களைச் செயல்ப்படுத்துங்கள். எதையும் புதுமையாக செய்ய முயற்சியுங்கள்.

ஒரு காரியாலயத்தில் ஒன்றிப் போவது அவசியம்.வெற்றியின் இரகசியம் ஈடுபட்ட காரியத்தில் ஒன்றிப் போவதுதான். அது எந்தக் காரியமாக இருந்தாலும் அதில் முழு ஈடுபாடு உங்களுககு இருக்க வேண்டும். வீட்டு வேலையாக இருக்கட்டும் படிப்பாக அல்லது விளையாட்டாக இருக்கட்டும் எடுத்த காரியத்தில் உங்களை முற்று முழுதாக ஈடுபடுத்திக் கொண்டால் வெற்றி நிச்சயம் .

வெற்றி என்பது வாழ்வில் நாம் எவ்வளவு உயர்ந்திருக்கிறோம் என்பதை கொண்டு அளவிடப்படுவதில்லை. ஆனால் நாம் விழும் போது எத்தனை முறை மீண்டும் எழுந்து நிற்கிறோம் என்பதைக் கொண்டே அளவிடப்படுகின்றது. மீண்டும் மீண்டும் எழுந் திறமையே எமது வெற்றியைத் தீர்மானிக்கின்றது.

ஆக்கம் :-
T. கார்த்திகா
A/L(2012) கலைப்பிரிவு



P.இதயராணி
(மாணவி)

# விடியலைத் தேடி....

அன்று திங்கட்கிழமை படுக்கையை விட்டெழுந்த ரவியின் மனம் அமைதி குலைந்து சஞ்சலப்பட்டது. இன்றுநான் பள்ளிக்கூடம் போகவேணுமா? ஒருகணம் சிந்தித்தான். முதல் நாள் நிகழ்வு அவன் மனத்தை நன்கு வாட்டியது. அம்மா நோய் ஒருபுறம் பட்டினி ஒருபுறமாக நொந்து போய் இருக்கிறா. நான் படிக்கப் போய்த்தான் என்னத்தைச் காணப்போறன். அண்ணையைப் போல் நானும் இருக்கக் கூடாது. நானும் கவனிக்காட்டி அம்மாவிற்கு ஆர்துணை. இண்றைக்கு ஒருமுடிவு எடுக்க வேணும் என்று எண்ணியபடியே எழுந்து வெளியே வந்தான். அம்மாவைப் போய் பார்த்தான். மெலிந்து வாடிச்சுருண்டு படுத்திருந்தாள். பாவம் ஆருக்குத் சொல்வாள் மறுபுறம் அக்கா ஏதோ அடுப்பை மூட்டி என்னவோ செய்கிறாள். ஆண்டவனிற்கு கண்ணில்லை என்று முணுமுணுத்தபடி தன் கடமைகளைக் கவனித்தான். பள்ளிக்கூடம் போகவில்லையெண்டா அம்மாவும் விடமாட்டா. எல்லாம் பார்ப்பம் என்றபடி புத்தகங்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். அக்கா கமலா கொடுத்த வெறுந்தேத்தண்ணிதான் வயிற்றுக்கு.

தம்பி புறப்பட்டதைக் கண்ட கமலா **"தம்பி... தம்பி..."** என மெல்ல அழைத்தாள். திரும்பிப்பார்த்தான் ரவி "இண்டைக்கு என்ன காச்ச? அம்மா பாவம் எத்தினை நாளாப் பட்டினி எனக்கும் வயிறு கிள்ளுது தம்பி" என்று மில்லாதவாறு அக்காளின் வேதனை வெளிப்பட்டது.

சற்று நின்று அக்காவை உற்று நோக்கினான். கண்ணில் நீர் அரும்ப அக்கா நின்றாள். இதற்கு மேலும் நிற்கமாட்டாத ரவி **"அக்கா படைச்சவன் படியளப்பான் .நீ பயப்படாதே அக்கா. உன்ர தம்பி ரவி இருக்கிறான். நீ போய் அம்மாவுக்குத் தண்ணியைக்குடு."** என்று கூறித்தான் வேதனை யை வெளிக்காட்டாமல் சென்றான். புத்தகங்களை ஒருபுறம் மறைத்துவைச்சான். வீதியோரமாக நடந்தான். அவன் மனதிலே எண்ணியவீடும் வந்தது. படலையில் நின்று பார்த்தான். வீட்டுக்கார அம்மா ஏதோ படித்துக் கொண்டிருந்தா.

**"அம்மா ...... அம்மா....."** என்று மெல்ல அழைத்தான ரவி. நிமிர்ந்து பர்ாத்த வீடடுக்காரி **"என்ன தம்பி என்ன வேணும்"** என்று கேட்டான். **"அம்மா ஏதாச்சு அம்மா வேலை இருந்தா செய்யலாமெண்டு......"** என இழுத்தான். **"இஞ்சை வா தம்பி நீ எங்க இருக்கிறனி?"** நான் பக்கத்து வீதியில் தான் இருக்கிறனான். பயப்படாதேங்கோ அம்மா நான் அப்படி ஒன்றும் பிரச்சினை கொடுக்கமாட்டன். **"சரி சரி தம்பி இந்தக் காலம் எல்லாரையும் நம்ப முடியாதெல்லே." "ஓம்மா எனக்கும் தெரியும் " "தம்பி உன்னைப்பார்த்தால் நல்ல பிள்ளை போல தான் கிடக்கு சரிவா தம்பி "** வீட்டுக்கார அம்மா வளவுப்பக்கம் அழைத்துச் சென்று.

**"இஞ்சை பார் தம்பி விறகு தடியெல்லாம் கண்டபடி கிடக்கு. இதுகளைப் பொறுக்கி அதிலை அடுக்கி உந்தப் பெரிய தடியைக் கொத்தி விடு"**என்றாள். அடுத்த கணமே ரவி வேலைகளை ஆரம்பித்தான். பசி வயிற்றைக் கிள்ளியது. அம்மாவின் கோலம் எல்லாத்தையும் மறக்க வைத்தது.

"தம்பி ........தம்பி உன்ர பேர்என்ன? "
"ரவி அம்மா"
"ஆ............. ரவி இதை சாப்பிட்டு தேத்தண்ணியைக்குடி"
என்றாள்.

ரவிக்கு சாப்பிடவே மனமில்லை. அம்மாவும்அக்காவும் கண்முன்னே நின்றார்கள்.வேலை செய்ய வேண்டுமேயெண்டு கொஞ்சம் சாப்பிட்டு தேத்தண்ணியையும் குடிச்சான். மிச்சத்தை சுத்திப்பத்திரமாய் வைச்சுவிட்டு மறுபடியும் வேலையைத் தொடங்கினான். இடைக்கிடை வீட்டுக்கார அம்மாவும் வந்து பார்த்தா .ரவியை நன்றாக பிடித்துக் கொண்டது. மத்தியானம் இரண்டு மணியிருக்கும்.

**"தம்பி — இனிக்காணும் வெய்யில் கொழுத்துது வா, கையை கழுவிப்போட்டு சாப்பிடு இனி நாளைக்குச் செய்யலாம்"** என்றாள். என்ன அன்பு என்ன மனம் என்று எண்ணிய ரவி **"வேண்டாமம்மா இன்னும் கொஞ்சம் செய்து போட்டு வாறன்" "இல்லை தம்பி இனிக்காணும் வா"** இதற்கு மேல் அவனால் மறுக்கவும் முடியவில்லை . வீட்டிற்குப் போகும் ஆசையும் வந்தது. **"அம்மா குறைநினையாதையுங்கோ" "ஏன் ரவி என்னத்துக்கு " "இல்லை —" "என்ன சொல்லு பயப்படாமச் சொல்லு" " நான் வீட்டை போய் குளிச்சுப் போட்டுச் சாப்பிடப் போறன். கட்டித் தாங்கோ" "அதுக்கென்ன தாறன்"** ஏதோ ரவியின் வீட்டு நிலைமை தெரிந்தது போல நிறையைக் கட்டிச் கொடுத்துச் சம்பளத்தையும் கூட்டிக் கொடுத்தாள். ரவிக்குக் கடவுளைக் கண்டமாதிரி இருந்தது மனதுக்குள்ளே அந்த அம்மாவை வாழ்த்தியபடி வீடு நோக்கிப் புறப்பட்டான். அவனை அறியாமலே ஓடிப்போனான். இண்டைக் கெண்டாலும் அம்மா வயிராறச் சாப்பிடட்டும். அண்ணனைப் படிப்பிச்சு என்ன கண்டவ .அண்டைக்குச் சமைக்க ஒன்றும் இல்லை எண்டு கேட்டதுக்கு அவன் அம்மாவைப் பேசின பேச்சு அம்மா அப்பம் சுட்டு நெருப்பிலகாஞ்சு படிப்பிச்சு பெரிய உத்தியோகம் பாக்கிறானாம். அவன்ர மனிசிக்கு வெட்கமாம். எப்ப கண்டவன் மனிசியை அவன்ர கதை ஏன்? நான் பார்க்கிறன் அம்மாவையும் அக்காவையும் படிச்சால் உப்பிடித்தானாகும். எனக்குப் படிப்பே வேண்டாம்.பெத்த அம்மாவுக்கு மேலே படிப்பென்ன படிப்பு .என்றெல்லாம் நினைத்தபடி சென்றவன் வாசலில் போனதும்

**"அக்கா...... அக்கா"**

என்று கத்திக் கூப்பிட்டபடி உள்ளே சென்றான் அம்மாவை மடியில் வைத்தபடி இருந்த காட்சியைப் பார்த்தவன் எல்லாவற்றையும் எறிந்து விட்டு ஓடிச் சென்று அம்மாவைக் கட்டித் தூக்கிப் போனான். **"என்னக்கா என்ன நடந்தது என்ன நடந்தது என்னெண்டு சொல்லன் எனக்கு"** கத்தினான் ரவி **"தம்பி படுத்திருந்தவ ஏதோ எழும்பி வந்திருக்கறா மயங்கி விழுந்து போனாகப் போ அடிபட்டுப் போனா"** என்று அழுதபடி சொன்னாள் அக்கா.

**"என்னக்கா நீ எங்கை போனி நான் ஆசையோடு அம்மாவுக்கு சாப்பாடு கொண்டு வந்தன்" "தம்பி ......தம்பி .....அம்மா கண்முழிக்கிறா பார் தம்பி பார்"** என்று சந்தோஷத்தோடு கூறினாள் கமலா ரவியும் அம்மாவைத் தடவியபடி **"அம்மா "** என்று அன்போடு அழைத்தான். **"ஒண்டும் இல்லைப் பிள்ளைகள் பயப்பட வேண்டாம் "**

என்று கூறினான் தாய் **"சரி அக்கா சுடு தண்ணிகொண்டா அம்மாவுக்கு"** அக்கா கொண்டு வந்த தேநீரைப் பருக்கினான் ரவி. அம்மா எழுப்பி விட்டான். ரவியின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. திரும்பித்தான் கொண்டு வந்த சாப்பாட்டைப் பார்த்தான் அப்படியே. அவனைப் பார்த்துச் சிரித்தது பாசல்.

அம்மா உன்ர பிள்ளை ரவி இருக்கிறான். நீ பயப்படாதே அண்ணை ஒரு நாளைக்கு யோசிப்பான். ஏதோ அவன் நல்லாய் இருக்கட்டும். எண்டு சொல்லியபடி. சாப்பாட்டை எடுத்து வந்து அக்காளிடம் கொடுத்துச் சாப்பிடுவோம் என்றான். பின்னர் அம்மாவுக்கு குடு நான் குளிச்சிட்டு வாறன் எண்டு ஓடினான். கமலா தாயைச் சாப்பிட அழைத்தான் அவள் ரவியும் வரட்டும் என்று இருக்க மூவருமாக நீண்ட நாட்களின் பின் நல்ல சாப்பாடு சாப்பிட்டார்கள சாப்பிட்ட படி அம்மா மெதுவாகக் கேட்டாள் **"சாப்பாடு ஆர் கொடுத்தது தம்பி. எப்படி வந்தது"** ரவியும் நடந்த வற்றைச் கூறினான் ரவி கூறியதைக் கேட்ட தாய் **"தம்பி நாங்க தான் படிக்கேல்லை நீயும் உப்படி வெண்டாத் தம்பி "**

என்று இழுக்க அவன் ஆறுதலாக தாய்க்கு விளக்கம் அளித்தான். எதுவும் கதைக்க முடியாமல் ரவியின் அம்மா மௌனியாள்ச் இப்படிச் சில நாட்கள் கழிய ரவியின் திறமையறிந்த வாத்தியாம் ஏன் பாடசாலைக்கு வரவில்லை என்று பலரிடம் கேட்ட செய்தி ரவியின் அம்மாவிற்கு எட்டியது. அவளின் வேதனைக்கு அளவில்லை இந்தப் பாவியின் வயிற்றில் பிறந்ததால் பிள்ளைக்கு இந்நிலை என்று கருதினாள். ஆனால் அன்று ரவி வந்து கூறிய செய்தி தாயின் வேதனைக்குப் பால் வார்த்தது. அன்று ரவியிடம் கதைக்க போது அவனின் நிலைமையுணர்ந்த அந்த வீட்டு எசமாளி மிகவும் வேதனைப்பட்டான்.

"கவலைப்படாதே தம்பி நானும் சிறுவயதில் அப்பாவை இழந்தேன் அம்மாவும் வருத்தக்காரி ஆனால் நான் நல்ல கெட்டிக்காரி. காசில்லை எண்டு வீட்டில் நின்ற போது ஆசிரியர் வந்து அம்மாவுடன் கதைத்து என்னைக்கூட்டிக் கொண்டு போய் தனது செலவில் படிப்பித்து ஆசிரியராக்கினார். அவர் எனக்குக் கூறியது இன்னும் என் காதில் ஒலிக்கிறது." ஏழையின் கல்விக்கு உதவுவது தான் பெருந்தருமம் சந்தர்ப்பம் கிடைத்தால் விட்டுவிடாதே என்றாள்".

அவருடைய புண்ணியத்தால் நான் இன்று ராசாத்தியாக இருக்கிறன். அவரது சொல்லைக் காப்பாற்றுவது தான் அவருக்கு நான் நன்றிக்கடன் ஆனபடியால் மாலை நேரத்தில் வந்து எனக்கு உதவி செய்தால் போதும்" என்றாள் இவ்விடயத்தைத் தாயிடம் கூறினான் இதனைக் கேட்ட ரவியின் அம்மாவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

"ரவி படிக்கப் போறான் என்ர பிள்ளையின் எதிர்காலமும் ஒளிவீசப் போகுது. எனக்கு இனி என்ன கவலை " என்று கூறினாள். "என்ர அம்மாவின் ஆசி தான் எனக்கு உதவி"

என்று கூறிய ரவி புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான். இருண்ட குடும்பத்தின் விளக்கை ஏற்றி வைத்தான் விளக்கின் ஒளி எங்கும் பரவியது. இன்று அந்த ரவியின குடும்பம் பலரை வாழ வைக்கிறது.

ஆக்கம் :-
P. இதயராணி
A/L (2011) கலைப்பிரிவு



P.இதயராணி
(மாணவி)

# கிரேக்க திரெஜடி நாடகமான அன்ரிக்கனி....

கிரேக்க திரெஜடி நாடகங்களில் ஒன்றாக அன்ரிக்கனி நாடகம் காணப்படுகிறது. அன்ரிக்கனி நாடகத்தை "சோபோகிளிக்ஸ்" எழுதியுள்ளளார். கிரேக்க திரெஜடி நாடகங்கள் சமயக்கதைகளைப் பயன் படுத்தி ஆக்கப்பட்டிருக்கும். அந்தவகையில் அன்ரிக்கனி நாடகமும் சமயக் கதையினை பயன்படுத்தி ஆக்கப்பட்டுள்ளது. ஆசாபோக்கிக்ஸ் மட்டுமன்றி ஈஸ்கலசும் அன்ரிக்கனி நாடகத்தின் கதையினை அடிப்படையாகக் கொண்டு நாடகம் ஒன்றினை ஆக்கியுள்ளார். இந்த நாடகம் தீபிக்கு எதிராக "எழுவர்" என்ற பெயரில் ஆக்கப்பட்டுள்ளது.

அன்ரிக்கனி நாடகம் இறந்தவர்களின் உலகம் தொடர்பாக விவாதிக்கும் ஒரு நாடகத்தின் செயலியக்கம் " **பொலினீசலின்"** உடல் நல்லடக்கம் செயற்படுத்தல் வேண்டும் என்பதை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. கிரேக்க திரஜெடி நாடகங்களில் அவலநாயகனின் பெருவீழ்ச்சி அழகாக எடுத்துக் காட்டப்படும். அன்ரிக்கனி நாடகத்தில் இரு பாத்திரங்களின் பெருவீழ்ச்சி அழகாக எடுத்துக்காட்டப்படுகிறது. "கிரபோன்" "அக்சிகக்னி" ஆகியோரது பெருவீழ்ச்சி அழகாக எடுத்துக்காட்டப்படுகிறது. நாடகத்தின் ஆரம்பத்தில் தீபிசின் மன்னனாக கிரயோன் அறிமுகப்படுத்தப்படுகிறான். அதிகாரம் மிக்க மன்னனாக அவன் காணப்படுகிறான். **"இன்றைய அரசாட்சி என் பொறுப்பில் வந்துள்ளது... நாட்டு நலம் எமக்கு நல்ல உயிர் போன்றது"** எனக் கூறும் கிரயோன் "பொலின்சனுக்காக எவரும் வாயும் திறக்கப்படாது" எனக் கட்டளை பிறப்பிக்கிறான்இவ்வாறு சமூகத்தில் உயர்நிலையில் காணப்பட்ட கிரயோன் நாடகத்தின் இறுதியில் தனது டன உறுதியை இழந்து கடவுளர் முன்னிலையலும **"நான் என்றொன்று இல்லை நடத்திச் செல்.... செத்வன் நான் ...... குற்றம் புரிந்தகரங்கள் குனிந்த தலை நானே கொலைஞன் நடத்திச் செல் என்னை அப்பால் இங்கினி மேலும் இறங்காது இருப்பேன் நான்"** என்று தனக்குள் கூறிக் கொண்டு இறப்பை நாடிச் செல்லுமளவிற்கு கிரயோன் பெருவீழ்ச்சியடைகிறான். தனது அதிகாரங்களைத் துறக்கின்றான். தனது மைந்தனையும், மனைவியையும் இழக்கின்றான். இவ்வாறு கிரயோனின் பெருவீழ்ச்சி எடுத்துக் காட்டப்படுவதனால் அன்ரிக்கனி நாடகம் ஒரு மிகச் சிறந்த கிரேக்க திரஜெடி நாடகமாகும்.

அவலநாயகன் பெருவீழ்ச்சி இனையடைவதற்கு அவனின் அவலத்தவறு காரணமாக அமையும் அன்ரிக்கனி நாடகத்தில் கிரயோன இழைத்த தவறுகளே அவனுக்குப் பெருவீழ்ச்சியினை ஏற்படுத்தியது. கிரயோன் இரண்டு பிரதான தவறுகளை மேற் கொண்டான். பொலினீசனின் உடல் நல்லடக்கம் செய்யப்படுவதற்கு அவன் நிராகரித்தான். கிரேக்கத்தில் எந்த உயிருக்கும் நல்லடக்கம் அவசியமாகும் என்ற சிந்தனை காணப்பட்டது. எனவே பொலினீசனின் உடலை நல்லடக்கம் செய்தல் கூடாது என்று கிரயோன் தடை செய்தமை அவனின் அவலத்தவறுகளில் ஒன்றாக அமைகிறது. இவ்வாறு உடலை நல்லடக்கம் செய்த அன்ரிக்கனிக்கு கிரயோன் மரணதண்டனை விதிக்கிறான். அவளை உயிருடன் சாவறையினுள் மூடுகிறான். அத்தகைய 2 தவறுகளுமே கிரயோனுக்குப் பெருவீழ்ச்சியினை ஏற்படுத்துகின்றது.

அன்ரிக்கனி நாடகத்தில் கிரயோனின் பெருவீழ்ச்சி மட்டுமன்றி அன்ரிக்கனியின் பெருவீழ்ச்சியும் சித்திரிக்கப்படுகின்றது. கிரயோனின் ஓரே ஒரு மகனான அன்ரிக்கனியை விரும்பியிருந்தான். அன்ரிக்கனி தீபிசுக்கு மகாராணியாக வரவேண்டிய ஒருத்தியாகும். ஆனால் அவள் அரசனின் கட்டளையை மீறியதால் அவளுக்கு மரணதண்டனை விதிக்கப்படுகின்றது. **"என் அருமை நாடே இறுதிப்பயணம் இது இன்னுமென்ன சொல்ல இருக்கிறது. சாக்காடு வந்து தழுவும் மதில் அறைக்கு செல்லுகின்றேன் என் மணநாள் இல்லை நாயனமும் கேளாது"** என்று அன்ரிக்கனி கூறுகிறாள். இது அவளது பெருவீழ்ச்சியை எமக்கு எடுத்துக் காட்டுகிறது.

சோபோக்கினிக்ஸ் கிரேக்க திரஜெடி நாடக மரபினைக் கருத்தில்க் கொண்டு நாடகத்தை ஆக்கியுள்ளார். கிரேக்க திரஜெடி நாடகங்கள் மரபுரீதியிலான கட்டமைப்பினை பெற்றுள்ளன நாடகதத்தின் ஆரம்பத்தில் பாயிரம் என்ற பண்பு காணப்படுகிறது. "பாயிரம்" என்ற பகுதியில் ஒருவர்/இருவர் தோன்றி உரையாடற்பாங்கில் கதையினை அறிமுகம் செய்வர் அன்ரிக்கனி நாடகத்திலும் அன்ரிக்கனி,இசுமெனி ஆகிய இரு பாத்திரங்களுக்கிடையிலான உரையாடலின் மூலம் நாடகத்தின் கதை அறிமுகம் செய்யப்படுவதனை நாம் காணலாம். பொலினீசனின் உடலை நல்லடக்கம் செய்வோர். தண்டனைக்குள்ளாவர் என மன்னன் கிரயோன் கட்டளையினை பிறப்பித்துள்ளான் என்று கூறும் அன்ரிக்கனி "உனக்கும் எனக்கும் எதிராகத்தானே எழுந்தது இந்தச் சட்டம்?" என்று அன்ரிக்கனி கூறுகிறாள். உடலை நல்லடக்கம் செய்ய இருப்பதாக தெரிவிக்கிறாள். 'மன்னனின் ஆணையை மீறி மயானக்கிரிகையா? என்று கூறும் இசுமெனி உடலை நல்லடக்கம் செய்ய மறுக்கிறாள். "நானே என் சகோதரனை நல்லடக்கம் செய்வேன்" என்று அன்ரிக்கனி பதிலளிக்கிறாள். இவ்வாறு இருவருக்கும் இடையிலான உரையாடல் மூலம் அன்ரிக்கனி நாடகத்தின் கதை அறிமுகப்படுத்தப்படுகின்றது. எனவே கிரேக்க நாடகக் கட்டமைப்பின் ஆரம்பத்தில் இடம் பெறும் பாயிரம் என்ற பண்பு அன்ரிக்கனி நாடகத்தில் காணப்படுவதனால் இதனை நாம் ஒரு சிறந்த திரெஜடி நாடகமாகக் கருதமுடியும்.

கிரேக்க திரஜேடி நாடகங்களின் கதைப்பின்னல் பாயிரத்தை அடுத்து கோரஸின் வருகை இடம் பெறும். அன்ரிக்கனி நாடகத்தில் இந்த மரபு

கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. அன்ரிக்கனியும் இசுமெனியும் உரையாடற் பாங்கில் கதையினை அறிமுகம் செய்த பின்னர் தீபிய முதியவரான கோரஸின் வருகை இடம்பெறும். **"இரண்டு சகோதரர்கள் எஞ்சிப் பொருதர்கள் ஒன்றாக மாண்டார் ஒளிந்தார் ஒருமிக்க__"** என்ற பாடலைப் பாடியவாறு கோரஸ் அரங்கில் பிரவேசிக்கிறது. கிரேக்க திரெஜடி நாடகங்களில் **மனித கோரசும்** கிரேக்க பழைய மகிழ் நெறி நாடகத்தில் **மிருக கோரசும்** பயன்படுத்தப்படும். அந்த வகையில் கிரேக்கத்தின் அவலச்சுவை நாடகமான அன்ரிக்கனி தீபிய முதலியவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மனித கோரனது பயன்படுத்துகின்றது. இதனால் கிரேக்க திரெஜடி காணப்படுவதால் அதனை நாம் ஒரு சிறந்த நாடக மரபிற்கு ஏற்ப அன்ரிக்கனி நாடகம் ஆக்கப்பட்டுள்ளது.

அவலச்சுவை நாடகங்களில் கோரஸின் வருகையை அடுத்து காட்சிகள் இடம் பெறும் அன்ரிக்கனி நாடகத்திலும் இந்தமரபு பின்பற்றப்பட்டுள்ளது எனலாம். அன்ரிக்கனியும் இசுமெனியும் கதையினை அறிமுகம் செய்த பின்னர் கோரஸ் தோன்றுகிறது. இதனையடுத்து கிரயோன் தோன்றி பொலினீசனின் உடலை எவரும் நல்லடக்கம் செய்யப்பட்டு விட்டது எனத் தெரிவிக்கின்றான். அவனிடம் மீண்டும் உடலை கிளறி வெளியே போடுமாறும் அவனை அடக்கம் செய்த குற்றவாளியைக் கண்டறியுமாறும் அரசனாகிய கிரயோன் உத்தர விடுகின்றான். இது ஒரு காட்சியாக அமைகிறதுமு. அடுத்த காட்சியில் 2ம் தடவை தன் சகோதரனின் உடலை நல்லடக்கம் செய்த அன்ரிக்கனியை கைது செய்து அரசன் முன்னிலையில் நிறுத்தப்படும். காட்சியும் குற்றத்தில் இசுமெனிக்கும் பங்கு உண்டு என்று அரசன் கூறி அவளை அழைத்து விசாரிக்கும் நிகழ்வும் இடம் பெறுகிறது. 3வது காட்சியில் கிரயோனின் மகனான ஏமன் தோன்றி நாட்டு மக்கள் அரசனின் தீர்ப்புக்கு எதிரான மனப்பாங்கினைக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறுவதும் அன்ரிக்கனி யின் மரணதண்டனையை ரத்து செய்ய வேண்டிய காட்சியும் காணப்படுகிறது. இவ்வாறு கிரேக்க திரெஜடி நாடக மரபிற்கு ஏற்ப காட்சி காட்சியாக அன்ரிக்கனி நாடகம் ஆக்கப்பட்டுள்ளமையால் இந் நாடகத்தினை ஓர் சிறந்த திரெஜடி நாடகமாக கருதமுடியும்.

கிரேக்க அரங்கில் காட்சிகளின் நிறைவின் போது கோரசின் பாடல் பாடப்படும் அன்ரிக்கனி நாடகத்திலும் இப்பண்பை நாம் காணலாம். பொலின்சனின் உடல் இரகசியமாக நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது எனக் கூறும் காட்சி நிறைவடைந்த பின் ஸ்ரசிமா என்றழைக்கப்படும். கோசின் பாடல் இடம் பெறுகிறது. **"தெய்வ நியதிகளும் தேச விதிகளையும் ஏற்பவனே ஆற்றல் அமைந்து சிறப்பவனாகும்"** என்று காட்சியின் சாரத்தை விளக்கி கோரஸ் பாடலினைப் பாடுகிறது. அரசனாகிய கிரயோன் தேசத்தின் விதிகளை மாத்திரமே ஏற்றுக் கொண்டான்.

அன்ரிக்கனி தெய்வநியதிகளை மாத்திரம் பின்பற்றினாள். இருவருக்கம் எழும் முரண்பாடே நாடகத்தை வளர்த்துச் செல்கிறது. ஒவ்வொரு காட்சியும் நிறைவடைவதனை எடுத்துக்காட்டும் வகையில் தீபிய முதியவரான கோசின் பாடல் இடம் பெறுவது அன்ரிக்கனி நாடகத்தினைச் சிறந்த கிரேக்க திரெஜடி நாடகமாக எடுத்துக் காட்டுகின்றது.

கிரேக்க திரெஜடி நாடகங்களில் இசைப்பாமுகாரி ஒன்று கோஸினால் இசைக்கப்படும். அன்ரிக்கனி நாடகத்தின் கதைப்பின்னணியிலும் கோரஸ் இசைப்பாமுகாரியினை இசைக்கின்றது. தெய்ரிசியஸ் (தயிரீசியஸ்) என்ற தீர்க்கதரிசி " இரண்டொரு நாளில் இனிய உமது மகன் சாவுடக்கீடாக தரப்படுவான் சாவின் இடம் உன் இரண்டு முன் கடன்கள் என்று சவஅறைக்குள் வைத்த உயிருக்காக மற்றதுவோ மண்ணுள் புதையாது போற்றப்படாதுள்ள நன்னுயிர்க் காய்......" என்று தீர்க்கதரிசனம் கூறும் போது அவல உணர்வு உச்சம் பெற்றுக் காணப்படுகிறது. இதன் போது தீபிய முதியவராகச் சித்தரிக்கப்பட்டுள்ள கோரஸ் இசைப் பாமுகாரியினைப் பாடல் வடிவில் பாடுகின்றது. எனவே கிரேக்க அவலச்சுவை நாடகப் பண்பிற்கேற்ற வகையில் கோரஸ் அவல உணர்வினை உணர்த்திச் செல்லும் பாடலைப் பாடுகின்றது. இதனால் இவ் அன்ரிக்கனி நாடகம் ஒரு சிறந்த நாடகமாக காணப்படுகிறது.

கிரேக்க அரங்கில் கொலைக் காட்சிகள், இரத்தம் சிந்தும் காட்சிகள் மேடையில் நிகழ்த்திக் காட்டப்படுவதில்லை. இக் காட்சிகளை மேடையில் நிகழ்த்திக் காட்டுவதற்கு செய்தியாளன் பாத்திரம் பயன்படுகிறது. அன்ரிக்கனி நாடகத்தில் அன்ரிக்கனியின் தற்கொலையினை செய்தியாளன் பாத்திரம் எடுத்துரைக்கிறது. 'பாறைக்குகையினன் பதூரமுலையிலே அன்ரிக்கனி தொங்குகிறான்.ஆடை திரித்தெடுக்க தாம்பு கழுத்தைப் பிணித்தபடி ........" என அன்ரிக்கனியின் தற்கொலையினை செய்தியாளன் பாத்திரம் எடுத்துரைக்கிறது. ஏமன் வாளால் தனது உடலைக் கிழித்துக் கொண்டமையும் இயூரிடிசி தற்கொலை செய்து கொண்டமையினையும் செய்தியாளன் கூறுவது போன்று நாடக எடுத்துரு அமைக்கப்பட்டுள்ளது. எனவே இரத்தம் சிந்தும் காட்சி கொலை செய்யும் காட்சி என்பவற்றை மேடையில் நிகழ்த்தாது தவிர்க்கும் பண்பு அன்ரிக்கனி நாடகத்திலும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது எனலாம். நாடகத்தின் இறுதியில் கோஸின வெளியேறுகை இடம்பெறுவது திரெஜடி நாடகமாகும் அந்த வகையில் அன்ரிக்கனி நாடகத்தில் கோரசின் வெளியேறுகையுடன் நாடகம் நிறைவடைதனை நாம் காணப்படுகிறோம்.எனவே கிரேக்க திரெஜடி நாடகப்பண்புகளை உள்வாங்கி படைக்கப்பட்ட அன்ரிக்கனி நாடகம் ஓர் சிறந்த அவலச்சுவை நாடகமாகத்திகழ்கிறது எனலாம்.

கிரேக்க திரெஜடி நாடகங்களில் மனிதன் தனக்குள் தான் முரண்படும் தன்மையை நாம் காண்கிறோம். அன்ரிக்கனி நாடகத்திலும் இப்பண்பை எம்மால் கண்டு கொள்ள முடிகிறது. அன்ரிக்கனி க்கு மரணதண்டனை விதிக்கப்பட்ட போது அவள் **"சகோதரனே இனியாய உன் மீது அன்பு வைத்தமைக்காய் அன்றோ கிரயோன் என்னைத் தண்டிந்தான் என் மணமும் இல்லை நான் தாயில்லை நண்பரில் யேன் தன்னந்தனியே இறக்க உள்ளேன். தெய்வமே உன் விதியில் ஒன்றையும் நான் தாண்டவில்லை அன்பு செய்தல் பாவம் என்றால் ஆதரவு வேறேது"** என்று தன்னுள் தான் வருந்துகின்றான் இந் நிலையானது அவள் தன்னுள் தான் முரண்படுவதனை எடுத்துக் காட்டுகிறது. அன்ரிக்கனியும் கிரயோனும் முரண்படுவதனை நாடகத்தில் நாம் காண்கிறோம் கிரயோன் **"நல்லவனுக்கும் தீயவனுக்கும் ஒத்த சம மாட்சிமையா....? (ஓ(ரே கௌரவமா?)"** என்று அன்ரிக்கனியை

வினாவுகிறான் இதற்கு அன்ரிக்கனி **"இறந்தவரது உலகில் எது நெறியோ எவர் அறிவர்"** என்று கிரயோனிடம் வினாவுகிறார். இவ்வாறு மனிதர்கள் தமக்கு இடையே முரண்படும் திரெஜடி தர்க்கபண்பு அன்ரிக்கனி நாடகத்தில் எடுத்துக் காட்டப்படுவதனால் அன்ரிக்கனி நாடகத்தை ஒரு சிறந்த திரெஜடி நாடகம் என்று கூறுவர்.

கிரேக்க திரெஜடி நாடகங்களில் ஒரு மனிதனும் ஒரு சமூகமும் முரண்படுவதை நாம் காண்கிறோம் அன்ரிக்கனிக்கு ஆதரவாக தீபிய முதியவராகத் தோன்றும் கோரஸ்குரல் வழங்கவில்லை அன்ரிக்கனியும் கிரயோனும் தமக்குள் ஒருவரை ஒருவர் எதிர்த்து முரண்படும் போது **"தந்தை குணமாகும் பிடிவாதம் புத்திரிக்கும் உண்டு மிகவும் உலகே எதிர்த்தாலும்"** என்று அன்ரிக்கனிக்கு எதிராக போரஸ் பேசுகின்றது. இவ்வேளையில் அன்ரிக்கனிக்கு கிரயோன் விதித்த மரணதண்டனையை தீபிஸ் மக்கள் விரும்பவில்லை என ஏமன் கிரயோனிடம் தெரிவிக்கிறான். இதற்கு கிரயோன் **"தீபிஸ் மக்கள் சிறியோர் எப்போது என்மேலாட்சிகள் ஆனார்கள்__"** என்றும் **"நானே நமக்கார் அதிகாரி__**என்றும் கூறுகிகின்றான். இவ்வாறு மனிதன் சமூகத்துடன் முரண்படும் பண்பு அன்ரிக்கனி நாடகத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதனால் இந்நாடகத்தினை ஒரு சிறந்த திரஜெடி நாடகமாக கருதலாம்.

மனிதன் பிரபஞ்சத்துடன் முரண்படும் பண்பும் கிரேக்க திரஜெடி நாடகங்களில் காணப்படுகின்றது. இவ்வகையில் அன்ரிக்கனி நாடகத்தில் பிரபஞ்ச ஒழுங்குகளை கிரயோன் மீற முனைகிறான். எந்த உயிர்க்கும் நல்லடக்கம் அவசியமாகும் என்பதே கிரேக்க நம்பிக்கையாகும். ஆனால் பொலினீசனின் உடலை நல்லடக்கம் செய்வதற்கு கிரயோன் மறுப்புத் தெரித்தான். **"நாயும் கழுகும் நயக்கட்டும் அப்பிணத்தை சாக்குழியும் இன்றி சவம் அழுகிப்போகட்டும்"** என்றான் இவ்வாறு இறைவனது விதிகளுக்கு மாறாக கிரயோன்தொழிற்பட்டான. இதனால் மனிதன் பிரபஞ்சத்துடன் முரண்படுவது அழகாக எடுத்துக்காட்டப்படுகிறது. அந்த வகையில் அன்ரிக்கனி நாடகம் ஒரு மிகச் சிறந்த ஒரு திரஜெடி நாடகம் எனலாம்.

கிரேக்க திரஜெடி நாடகங்கள் **கால இட செயல்** ஒருமைப்பாட்டினைக் கொண்டிருக்கும். கால இட செயல் ஒருமைப்பாட்டினை நாடக மும்மை என்று அழைப்பர். கதைஇடம் மாறாமல் காணப்பட்ட கதையில் வரும் காலமும் செயலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக வளர்ந்து செல்வதே கால இட செயல் ஒருமைப்பாடாகும். அன்ரிக்கனி நாடகத்தில் வரும் அனைத்து செயல்களும் தீபிஸின் அரண்மனை முன்றலில் நிகழ்கின்றன. உடலை நல்லடக்கம் செய்வது தொடர்பாக ஒன்றுடன் ஒன்று தொடர்புபடும் வகையில் செயல்கள் வளர்த்துச் செல்லப்படுகின்றது. இவ்வாறு அன்ரிக்கனி நாடகம் கிரேக்க திரஜெடி நாடகப் பண்புகளை உள்வாங்கி ஆக்கப்பட்டுள்ளது எனலாம்.

ஆக்கம் :-
**P.** இதயராணி
A/L (2011) கலைப்பிரிவு



க.பிரசாந்
(மாணவன்)

# மாணவ சமூக மாண்புகள்...........

இறக்கை முளைத்துப் பறந்து வந்த
பட்டாம் பூச்சிகளே -நீங்கள்
இனிய தேனை உண்டு மகிழும்
பூங்கனிச் சோலைகளோ - சுவைதான்
கல்விச் சாலைகளே

பட்டுப் போன்ற உள்ளங்கொண்ட
சிட்டுக் குருவிகளே - நீங்கள்
பலரும் ஒன்றாய்க்கூடி ஆடிப்பாடி
மகிழ்ந்திடுவீர் - இங்கே
பாடம் படித்திடுவீர்

துள்ளித் திரிந்து குறும்பு செய்யும்
பள்ளித் குழந்தைகளே - நீவீர்
வித்தை பலவும் கற்றேயிங்கு
மேதைகள் ஆகிடுவீர் - நல்ல
பாதையை நாடிடுவீர்

எண்ணும் மொழியும் கண்ணெனப் போற்றி
இன்பமாய்ப் கற்றிடுவீர் - நல்ல
சமய நெறிகள் சூழலில் வகைகள்
கற்றே மகிழ்ந்திடுவீர் - அழகியற்
கலைகள் பயின்றிடுவீர்

விஞ்ஞான யுகத்தின் விந்தைகள் கற்றே
ஏற்றம் பெற்றிடுவீர் - என்றும்
புவியியல் மனையியல், கணனிகளெல்லலாம்
புதுமைகள் கண்டறிவீர் - நாளை
சரித்திரம் படைத்திடுவீர்

ஆக்கம் :-
க.பிரசாந் A/L(2012)
கலைப்பிரிவு



க.பிரசாந்
(மாணவன்)

# பாடசாலை....

பல் விருட்சங்களிற் பழமாகச் சிந்தியே
பள்ளிக்கு வந்த கனிகள் - நும்மைப்
பதியாக்கியே நற்பயிராகி விளைவிக்கும்
பணி நல்ல ஆசிரியத்துவமல்லவோ

அதிகாலை கூடியே ஆண்டவனை ஏத்தியே
அஞ்சலி செய்து நிதமும்
ஆர்வமாய்க் கூடி விளையாடி நல்லவுரை
அன்புடன்கேட்டு மகிழ்வீர்

வண்ணப் படங்களில் எண்ணெழுத்தென்ப
வாசித்தும் எழுதி என்று
வளமான கல்வியைநிலையாகப் பெற்றிட
வழிகாட்டும் ஆசான்கள் சிவரல்லவோ

பாடலோடு ஆடம் பலவிதக் கதைகளும்
பாங்குடன் கேட்டு மகிழ்ந்தே
பண்பான சமுதாய வித்துக்களாய் வளர
பயிலுமிடம் இதுவல்லவோ

தூய்மையாம் உடலும் அன்பான உள்ளமும்
சுற்றாடல் கவின் நிலைகளும் - நல்ல
தோழராய்க் கூடிப்புதுச் செய்திகள் பயின்றிட
கூடும் இடம் பள்ளிச் சாலையல்லவோ

உலக் உருண்டையாம் ஏர் குடிசை தன்னிலே
உயர்கல்வி பெற்று மகிழ்வீர்
உலகிற்கு வேண்டிய நற்சேவைகள் ஆற்றியே
உழைத்துண்டு வாழ்வை நல்வளமாக்குவீர்

ஆக்கம் :-
க.பிரசாந் A/L (2012)
கலைப்பிரிவு



க.பிரசாந்
(மாணவன்)

# வெற்றி நிச்சயம்....

பள்ளி செல்லும் சிறுவனே
நீ கருத்தாய் கல்வி கற்றிடு
ஆசான் சொல்லை மதித்திடு
அனைவரின் அன்பையும் பெற்றிடு

மூத்தோரை கனம் பண்ணிடு
சிறியோரை அன்பாய் நடத்திடு
ஒற்றுமையை பலம் என வாழ்த்திடு
ஒற்றுமையாய் கூடி விளையாடிடு

வீதி விதிகளைப் பேணிடு
முதியோருக்கு உதவி செய்திடு
பெற்றோர் சொற்படி நடந்திடு
நற்பிரஜையாக வாழ்ந்திடு

ஊக்கமுடன் கல்வி கற்றிடு
உலகில் உயர்நிலை அடைந்திடுவாய்
கல்வியை கவனத்துடன் கற்றிட்டால்
நீ வெற்றி காண்பது நிச்சயமே

ஆக்கம் :-
க.பிரசாந் A/L(2012)
கலைப்பிரிவு



தி.கலிசன்
(மாணவன்)

# விஞ்ஞான உண்மைகள் விதிகள் கொள்கைகள்

1. பரிமானக் கோட்டுபாடு (கூர்ப்புக் கொள்கை)
சார்ள்ஸ்டார்வின் பரிமாணக் கொள்கை

டார்வின் கருத்துப்படி உயிரினங்கள் யாவும் ஒரே அடிப்படை பொருட்களில் இருந்து தோன்றி பல்வேறு சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்டு இன்று மேல் நிலைகளை அடைந்துள்ளன. ஒவ்வொரு உயிரினமும் இன்று இருந்ததைப் போல் ஆதியில் இருக்கவில்லை. ஆரம்ப காலத்தில் உயிரினங்கள் சிக்கல் அற்ற எளிய வடிவங்களைக் கொண்டவை. உயிரினத்தின் பரினாமம் சூழலுக்கேற்ப படிப்படியாகவும் மெதுமெதுவாகவும் ஏற்படுகிறது. மனிதன் கூட "சிம்பன்சி" என்ற குரங்கின் இறுதி சந்ததி வழி வந்தது என கூறினார். இவரது கூர்புக் கொள்கையின் அடிப்படை அம்சங்கள் வருமாறு.

1. மாறல்
2. வாழ்க்கை போர்
3. மிகை உற்பத்தி
4. தக்கண பிழைத்தல்
5. இயற்கைத்தேர்வு

இவற்றினூடாக டார்ஷின் கூர்புக் கொள்கையை விளக்குகின்றார்.

## லாமர்க்கின் கூர்ப்புக் கொள்கை

லாமாக் உயிரினங்களின் பரிமாணம் பற்றி பயன்படுத்தல் விதி பயன்படாமை விதி என்பவற்றின் மூலம் விளக்குகின்றார். ஓர் உயிரினம் தமது சூழலுக்கேற்ப உறுப்புக்களை பயன்படுத்துவதன் மூலம் கூர்ப்பு அடைகின்றது. என்பது பயன்படுத்தல் விதியாகும். ஓர் உயிரினம் தமது சூழலுக்கேற்ப உறுப்புக்களை பயன்படுத்தாததன் மூலம் தேய்வடைகிறது என்பது பயன்படுத்தாமை விதியாகும். இவ்விரு விதிகள் ஊடாகவும் பரிணாமம் பற்றி விளக்குகின்றார். இவரது கூர்ப்புக் கொள்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு.

1. தேவை
   - பெற்ற உரிமைகளின் தலைமுறை உரிமை
   - உபயோகம், உபயோகமின்மை

2. உயிரின் உற்பத்தி (தோற்றம்)

- உயிர் எவ்வாறு தோன்றியதென்பது தொடர்பாக பல்வேறு கோட்பாடுகள் காணப்படுகின்றன. இன்றும் உயிரின் தோற்றம் தொடர்பான ஆய்வுகள் தொடர்கின்றன. இது தொடர்பாக பின்வரும் கோட்பாடுகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

- படைப்புக் கோட்பாடு
இக் கோட்பாட்டின் படி உயிரினங்கள் ஒரு காலத்தில் கடவுளால் படைக்கப்பட்டது என கூறப்படுகிறது.

- தன்னிச்சையான பிறப்புக்கோட்பாடு
இக் கோட்பாட்டின் படி உயிரினங்கள் தன்னிச்சையாக தோன்றாது இக்கொள்கையின் படி உயிரற்ற சடப்பொருட்களில் இருந்து தாமாகவே தோன்றியவை என கருதப்படுகிறது.

- உயிர்ப் பிறப்புக்கோட்பாடு
இக் கோட்பாட்டின் படி எல்லா உயிரினங்களும் முன்னிருந்த உயிரினங்களில் இருந்து தோன்றியது என கூறப்படுகிறது.

- அண்ட வெளிக்கோட்பாடு
அண்டத்திலிருந்த நுண்ணிய உயிரானது பூமியில் விழுந்தது எனக் கூறும் கொள்கையே இதுவாகும்.

03. உலகின் தோற்றம் பற்றிய கொள்கை
(பிரபஞ்சத்தின் தோற்றம்)

பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய கோட்பாடுகள் அண்டங்கள் எவ்வாறு தோற்றம் பெற்றன என்பதை விளக்குகின்றது. பிரபஞ்ச தோற்றம் பற்றி பின்வரும் கொள்கைகள் காணப்படுகின்றன.

- மாவெடிப்புக் கொள்கை
ஆதியிலிருந்த மூலமான பொருள் உயர்ந்த அடர்த்தி காரணமாக பெருவெடிப்புக்குட்பட்டு சிதறியதன் மூலகமாக பிரபஞ்சம் தோன்றியது என்பது பெருவெடிப்புக் கொள்கையாகும். சிதறல்களுள் ஒன்றே பிரபஞ்சம் எனவும் வெடித்துச் சிதறிய வேகமே சுழற்சி வேகம் எனவும் கூறப்படுகின்றது. இப் பிரபஞ்சம் 10,000 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றியது என கூறப்படுகின்றது.

- நிலையிருப்புக் கொள்கை
இதன்படி பிரபஞ்சத்திற்கு ஆரம்பமும் முடிவும் இல்லை என கூறப்படுகின்றது. இக்கொள்கையின் படி இன்று பிரபஞ்சம் காணப்படுகின்ற அதே நிலையிலேயே எப்போதும் காணப்படும்.

- குளிவு விரிவுக் கொள்கை

இக் கொள்கையின்படி சுருங்குவதன் மூலமும் விரிவதன் மூலமும் இப் பிரபஞ்சம் உருவானது என கூறப்படுகிறது.

4. புவி மையக் கொள்கை

புவிமையக் கொள்கை தொலமி என்ற வானியல் அறிஞரால் உருவாக்கப்பட்டது. இக் கொள்கையின் படி புவி அசைவற்றது என்பதோடு ஞாயிற்றுத் தொகுதியின் மத்தியில் உள்ளதாகவும் அதனைச் சுற்றி ஏனைய கோள்களும் சூரியனும் இயங்குகின்றன எனவும் கூறினார்.

5. சூரிய மையக் கொள்கை

சூரிய மையக் கொள்கை கொப்பனிக்கஸ் என்பவரால் முன்வைக்கப்பட்டது. இவர் தொலமியின் புவிமையக் கொள்கையை பொய்ப்பித்து சூரியமையக் கொள்கையை நிலைநாட்டினார். இக் கொள்கையின் படி ஞாயிற்றுத் தொகுதியின் மையம் சூரியனாம். சூரியனைச் சுற்றி பூமியும் ஏனைய கோள்களும் வட்டப்பாதையில் இயங்குகின்றன என்பதாகும். கொப்பனிகஸ்சின் கோட்பாடானது வானியல் பற்றிய நவீன ஆய்விற்கு வழிவகுத்தாலும் வானியல் பற்றிய சரியான விளக்கத்திற்கு வழிகோலியதாலும் இதனை கொப்பநிக்கசின் புரட்சி என அழைக்கப்படுகின்றது.

6. சனத்தொகைக் கோட்பாடு (மல்தூசியாரின் கொள்கை)

சனத்தொகை கொள்கை மல்தூசினால் வெளியிடப்பட்டது. இக் கொள்கை சனத்தொகை அதிகரிப்பானது உணவு உற்பத்தியைக் காட்டிலும் பல மடங்கு அதிகமானது என விளக்குகின்றது. அதாவது சனத்தொகை அதிகரிப்பானது கணித பெருக்கு வீதத்திலும் உணவு உற்பத்தி கூட்டல் வேகத்திலும் அதிகரித்து செல்கிறது. என விளக்குகிறது. இயற்கையில் ஏற்படும் பூகம்பம், வெள்ளப்பெருக்கு, சூறாவளி, போர் என்பன ஏற்பட்டு இக்கோட்டை சமப்படுத்துகின்றது. இயற்கையிலேயே இக் கோளாறு ஏற்படாது இருந்தால் இக் கோட்பாட்டின் பிரதிபலிப்பு ஏற்படும் எனவும் குடித்தொகை அதிகரிப்பு யுத்தம் நோய் என்பன இயற்கை அழிவிற்கு காரணம் எனக்கூறுகின்றது.

தி.கலிசன்
கலைப்பிரிவு 2012 (A/L)



தி.கலிசன்
(மாணவன்)

# இயாகோவின் பாத்திரப் பண்பு......

ஒதொல்லோ நாடகத்தின் மையப் பாத்திரமாக இயாகோ அமைகிறான். இயாகோவின் சூச்சிகளே நாடகத்தை வளர்த்துச் செல்கிறது. சேக்ஸ்பியரது நாடகங்களில் மிகச்சிறந்த வில்லனாக இயாகோ பாத்திரம் காணப்படுகிறது. சேக்ஸ்பியர் உருவாக்கிய பாத்திரங்களில் 4 பாத்திரங்களை சிறப்பானதாகக் கருதுவர். அவற்றுள் இயாகோ பாத்திரமும் ஒன்றாகும். இயாகோவின் சூழ்ச்சிகள் நாடகத்தில் அவலத்தை ஏற்படுத்த உதவுகின்றன. அன்பான மனைவி, கணவனான ஒதலோ, டெஸ்ரி மோனாவின் குடும்பம் அழிவடைவதற்கு இயாகோவே காரணமாக அமைகின்றான். இயாகோ தனது உண்மையான குணாம்சங்களை பிறருக்கு தெரியாமல் மறைந்து வாழும் ஒருவனாவான் "நீங்கள் புறத்தோற்றத்தில் காணும் நான் உண்மையில் நான் அகத்தோற்றத்தில் அவ்வாறு இல்லை" என இயாகோ ரோடரிக்கோவிற்குக் கூறுவான். இவ்வாறு தன் வஞ்சக எண்ணங்களை வெளிப்படுத்தாத ஒருவனாக இயாகோ காணப்பட்டான்.

இயாகோ பணத்தாசை மிக்க ஒருவனாகக் காணப்படுகிறான். ரோடரிக்கோவுடன் இயாகோவிற்கு ஏற்பட்ட உறவினை அடிப்படையாகக் கொண்டு இதனை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. ரோடரிகோ டெஸ்ரி மோனா மீது ஆசையினை வைத்திருந்தான். அதனை நிறைவேற்றி தருவதாக கூறி இயாகோ அவனிடமிருந்த பணங்களைப் பெற்றுக் கொண்டான். ரோடரிக்கோவிடம் இருந்த நகைகளைப் பெற்றுக் கொண்டான். இயாகோவிடம் இப்பண்பு அவனது பணத்தாசையை எடுத்துக் காட்டுகிறது.

இயாகோ பிறரிடம் காணப்படும் பலவீனங்களை இலகுவாகக் கண்டறிந்து அதனை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் ஒருவனாவான். காசியோ மது அருந்தினால் நிதானமிழக்கும் ஒருவனாவான். அவனது இப் பலவீனத்தைப் பயன்படுத்தி இயாகோ உபதளபதிப் பதிவியை பெற்றுக்கொள்கிறான். கடமையில் இருந்த காசியோவை மது அருந்துவதைத் தூண்டி கலகத்தை ஏற்படுத்தி அவனது உபதளபதிப் பதவியைப் இயாகோ பறித்துக் கொள்கிறான். ஒதொல்லோ அதிக வயது வேறுபாட்டில் டெஸ்ரி மோனாவைத் திருமணம் செய்தான். இதனால் ஒதொலோவிடம் தாழ்வுச்சிக்கல் உருவாகியது. இப் பலவீனத்தைப் பயன்படுத்தி டெஸ்ரிமோனா மீது ஒதெல்லோவிற்கு இயாகோ சந்தேகத்தை ஏற்படுத்துகிறான். ரோடரிக்கோவின் பலவீனத்தைப் பயன்படுத்தி பணத்தைப் பெற்றுக் கொண்டான். இவ்வாறு பிறரது

பலவீனங்களை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தும் ஒருவனாக இயாகோ காணப்பட்டான்.

இயாகோ உளவியல் ரீதியான பாதிப்பினை கொண்டிருந்த ஒருவனாவான். அவன் தனது மனைவியைச் சந்தேகித்தான். "அந்த காமமூரன் எனது கட்டிலில் நுழைந்து விட்டான் என்று நான் சந்தேகிக்கின்றேன். நான் எனது மனைவியை சந்தேகிப்பது போன்று அவன் தன் மனைவியை சந்தேகிக்க வேண்டும் மனைவிக்கு மனைவி..." என்று இயாகோ கூறுகின்றான். இக்கூற்றிலிருந்து நாம் இயாகோவிடம் காணப்பட்ட சந்தேகம் என்ற உளவியல் பாதிப்பையும் பழிக்குப்பழி வாங்கும் மன நிலையையும் கண்டு கொள்கிறோம்.

இயாகோ திட்டமிட்டு சூழ்ச்சிகளை மேற்கொள்ளும் ஒருவனாவான். தவறவிடப்பட்ட டெஸ்ரிமோனாவின் கைக்குட்டையை தன் மனைவியான எமிலியா மூலம் இயாகோ வஞ்சகமாகப் பெற்றுக் கொள்கிறான் அதனைக் கொண்டு சென்று காசியோவின் படுக்கை அறையில் போடுகிறான். பின்னர் ஓதெல்லோவை அழைத்துச் சென்று அதனைக் காட்டுகிறான். ஓதெல்லோ டெஸ்ரிமோனாவை சந்தேகிப்பதற்கு அது ஒரு வாய்ப்பாக அமைந்து விடுகிறது. எனவே சந்தர்ப்பங்களை தனக்கு சாதகமாக்கி சூழ்ச்சிகளை மேற்கொள்ளும் ஒருவனாக இயாகோ காணப்பட்டதனை நாம் இங்கு காண்கிறோம்.

இயாகோ தேவைக்கேற்றவாறு உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒருவனாவான். மனிதர்களுக்கேற்றவாறு நடிக்கும் ஒருவனாவான். பிரபான்சியோவின் அரண்மனையின் முன் சென்று ஓதெல்லோ திருமணம் செய்ததை கூச்சலிட்டு இயாகோ வெளிப்படுத்துகிறான். பின்னர் ரோடரிக்கோவை பார்த்து "நான் ஒதெல்லோவை நரகத்தைப் போல வெறுக்கிறேன் என்றாலும் எனது இப் போதையை தேவைக்காக நான் அவனை நேசிப்பது போன்று நடிக்கவேண்டும்." என்று கூறுகின்றான். இக்கூற்றிலிருந்து தனது தேவைகளுக்காக பிறருடன் பழகும் ஒருவனாக இயாகோ காணப்படுவதனை கண்டு கொள்கிறோம்.

இயாகோ பிறரது மகிழ்ச்சி கண்டு பொறாமைப் படுபவனாக காணப்படுகிறான். ஓதலோ டெஸ்ரி மோனாவை அவளது தந்தையான பிரபான்சியாவிற்குத் தெரியாமல் இரகசிய திருமணம் செய்திருந்தான். அவ்வேளை இயாகோ ரோடரிக்கோவைப் பார்த்து "அவளது தந்தையை அழை, உறக்கத்திலிருந்து எழுப்பு, ஒதெல்லோவின் மகிழ்ச்சியை நஞ்சாக்கு தெருவெல்லாம் அவனைப்பற்றி அலறும்படி செய் அவன் வளமான சூழலில் வந்தாலும் அவனை ஈக்கள் பிடுங்கும் படி செய்" எனக் கூறுகின்றான். இவ்வாறு ஓதெல்லோ திருமணம் செய்திருந்த வேளையில் அதனை சகித்துக்கொள்ள இயலாத மனப்பாங்கு உடையவனாக இயாகோ காணப்பட்டான். இயாகோ பிறரது மகிழ்ச்சி கண்டு பொறாமைப்படும் தன்மையினையே இது எடுத்துக் காட்டுகிறது.

இயாகோ 28 வயது நிறைந்த ஒரு இளைஞன் ஆவான். இதனை நாம் எழுத்துருவில் கண்டு கொள்ளமுடிகிறது "நான் இவ்வுலகில் 28 வருடங்கள் வாழ்ந்துள்ள அனுபவத்தினைப் பெற்றிருக்கின்றேன்" என இயாகோ ரோடரிக்கோவிற்கு கூறுவான். இதிலிருந்து நாம் 28 வயது நிறைந்த இளைஞன் என்ற இயாகோவின் உடலியல் குணாம்சத்தைக் கண்டு கொள்கிறோம்.

இயாகோ தனது தேவை நிறைவேறுவதற்காகப் பெண் என்றும் பாராது பெரும் பழி சுமத்தும் ஒருவனாகக் காணப்படுகிறான். ஓதெல்லோவை பழிவாங்க வேண்டுமென்ற அவனது எண்ணத்தால் டெஸ்ரிமோனாவை ஒழுக்கம் அற்றவனாக இயாகோ எடுத்துக் காட்டுகிறான். டெஸ்ரி மோனாவிற்கும் காசியோவாவிற்குமிடையில் தகாத உறவு இருப்பதாக ஒதெல்லோவை நம்பச் செய்கிறான். டெஸ்ரிமோனாவின் கைக்குட்டையினைப் பெற்று அதனை காசியோவின் படுக்கையறையில் கொண்டு சென்று போட்டு ஒதொல்லோவை நம்பச் செய்கின்றான். இவ்வாறு நேர்மையான அப்பாவிப் பெண்ணான டெஸ்ரிமோனாவை ஒழுக்கமற்றவள் என எடுத்துக்காட்டும் கொடூர மனம் படைத்தவனாக இயாகோ திகழ்கிறான்.

மனைவியிடத்தில் கூட அன்பில்லாத ஒருவனாக இயாகோ காணப்படுகின்றான். தன்னைப் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்தியதற்காக அவன் எமிலியாவை வாளால் குத்தி கொலை செய்கிறான். தன் மனைவியைக் கூட கொலை செய்ய முற்படும் கொடிய மனம் படைத்தவனாக இயாகோ காணப்படுவதை நாம் இங்கு கண்டுகொள்கிறோம். இயாகோ உயிர்களிடத்து அன்பில்லாத ஒருவனாவான். அவன் ஒதெல்லோவின் மூலம் டெஸ்ரிமேனா கொலை செய்யப்படுவதை தூண்டுகின்றான். விஷம் வைத்து டெஸ்ரிமோனாவை கொலை செய்யப்போகிறேன் என்று ஒதெல்லோ கூறும் போது வேண்டாம் நீங்கள் அவளைக் கழுத்தை நெரித்துக் கொலை செய்யுங்கள் என்று திட்டம் தீட்டிக் கொடுப்பவனாக இயாகோ காணப்படுகிறான். இயாகோவின் இச்செயல் அவனின் இரக்கமற்ற தன்மையை எமக்கு எடுத்துக் காட்டுகிறது.

இயாகோ பிறரது நம்பிக்கையைப் பெற்ற ஒருவனாகக் காணப்படுகிறான். இயா கோவுடன் பழகிய ஏவரும் அவனை நம்பிக்கைக்குரிய ஒருவனாகவே எண்ணிப் பழகி வந்தனர். ஒதெல்லோ தன் மனைவியை சைவப்பிரஸ்சிற்கு கொண்டு வரும் பணியை இயாகோவிடமே வழங்குகின்றான். காசியோ இயாகோவின் ஆலோசனைகளை நம்பியே தனது இழந்த உப தளபதிப் பதவியினைப் பெறுவதற்காக டெஸ்ரிமோனாவின் சிபாரிசினை நாடுகின்றான். இவ்வாறு இயாகோ தான் எவரை வெறுத்த போதிலும் அவர்கள் தன் மீது நம்பிக்கை கொள்ளும்படி நடந்த ஒருவனாவான்.

சேக்ஸ்பியர் இயாகோ பாத்திரத்தை இவ்வாறு குரூரத்தினமும், வஞ்சகமும் உடைய ஒரு வில்லன் பாத்திரமாகப் படைத்துள்ளார். இதன் மூலம் இயாகோ ஒரு கோள் மூட்டும் ஒரு வில்லன் ஆகக் காணப்பட்டான்.

தி.கலிசன்
கலைப்பிரிவு 2012 (A/L)



இ.ஸ்ராலினி
(மாணவி)

# தமிழ்மொழி

தமிழே! எம் தாய் மொழியே!
அமுதே நற்கனியின் சுவையே!
அன்னையே உன் பெருமையும் இனிமையும்
அருந்தேன் போல் இனித்தனவே

உலகப் பொதுமறை தோன்றிய காலத்திலே
உயிர் பெற்றெழுந்த ஒளியே
உண்மைகள் பலவற்றை உன் மூலம்
உணர்வுடன் கற்றோமே

அரிய மொழிகளில் ஆதியாகி
மொழிச்சுவை கொண்டு விளங்கி
பாரினில் இனிய கருத்தினைக் கொண்டு
போரினில் அழிந்திடாப் புதுமை கொண்ட நம் தமிழே!

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆன போதிலும்
ஆனந்தமாய் வாயிலும் மனத்திலும் இளமை கொண்டு
கன்னித்தமிழ் என கசப்பின்றி இன்றுவரை
கனிவுடன் சுவை பயக்கும் நம் தமிழே!

சங்ககாலத்திலே முச்சங்கங்கள் அமைக்கப்பெற்று
சரித்திரம் படைக்கும் இலக்கியங்களை படைத்து
சாதனை படைக்கும் நவீன காலம்வரை போற்றப்படுவதும்
நம் தமிழின் அரிச்சுவட்டின் பெருமையாலே!

சேர சோழ பாண்டியர் எனும்
மூவேந்தர்களது ஆட்சியிலும்
செழிபுடனும் செம்மையுடனும்
செறிவான தத்துவத்தை தந்த செந்தமிழே!

நிறைவுடன் சொற்சுவை தேன்பாயும்
அன்னைத் தமிழவள் அடியினை போற்றியே
பாரினில் தமிழர் நாம் உயர்வு கொள்ளவே
அமிர்தாய் அவளுக்கு நாம் சேவைகள் செய்வோமே

இ.ஸ்ராலினி
2011 (A/L) கலைப்பிரிவு

பண் இந்துவின் இந்துநாதம் வெளியிடுவதை முன்னிட்டு
மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்

## சிவாஸ் பான்ஸி ஹௌவுஸ்

பிரதான வீதி, பண்டத்தரிப்பு



பாடசாலை உபகரணங்கள்,
அழகுசாதனப்பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள்,
டிஜிற்றல் போட்டோப்பிரதிகள், ஐஸ்கிறீம் வகைகள்
அனைத்தும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
ஒரே இடம்.



பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.



பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்

## எமது சேவை என்றும் மக்களுக்காகவே

தரமான நுகர்ச்சிப் பொருட்கள் நியாய விலையில் விநியோகம்
அங்கத்தவர்களுக்கான சுயதொழில் கடன் வசதிகள்
சுத்தமான உணவிற்கு சுவையூட்டும் நல்லெண்ணெய் விநியோகம்
விவசாயிகளுக்கான உடனடி உழவு இயந்திர சேவை
தரமான பேக்கரி உற்பத்தி வகைகள் தயாரித்தல்
கூட்டுறவு நகர் விநியோக சேவை
பண்கோப் புடவை நிலையம்
எரிபொருள் விநியோகம்
இரும்பு, கட்டடப்பொருள் விநியோகம்
அரிசி ஆலை, அரைக்கும் ஆலை

மக்கள் வங்கியின்

மக்கள் வங்கி

01. மொட்டாய் மலரும் மழலைக்கு மழலைகள் மறுமலர்ச்சிக் கணக்கு

02. மாண்புடன் கற்கும் மாணவர்களுக்கு மாணவர் மறுமலர்ச்சிக் கணக்கு

03. மங்கையர் வாழ்வில் மங்களகரமாக மகளிர் அதிஸ்டக்கணக்கு

04. முதியோர் வாழ்வில் நம்பிக்கை தர முதியோர் யாத்திரிகர் சேமிப்புக்கணக்கு

05. சேமிப்புப் பழக்கத்தை செம்மையாய் வளர்த்திட சேமிப்புக் கணக்கு

06. நடைமுறைச் சிக்கலுக்கு இனிய தீர்வாக நடைமுறைக்கணக்கு

07. நிரந்தரமாய் சேமிக்க நிலையான வைப்புக் கணக்கு

08. இளைய தலைமுறையை இமயமாய் உயர்த்திட Yes கணக்கு

09. நாளைய முதலீட்டுக்கு முதலீட்டுச் சேமிப்புக்கணக்கு

10. உங்கள் முயற்சிகளுக்கு உரிமையுடன் கைதர பல்வேறு கடன் வசதிகள்

மக்கள் மனம் அறிந்த வங்கி மக்கள் வங்கி


தொ.இல 0770757607
பவிசான்
ஜுவல்லறி
PAVISHAN JEWELLERY
ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.
பிரதான வீதி, பண்டத்தரிப்பு. தொ.பே:
உரிமையாளர் T.மகேந்திரன்



# இறைமகள் களஞ்சியம்

## பல்பொருள் வாணிபம்

அனைத்து பலசரக்கு பொருட்களையும்
பெற்றுக்கொள்ள
வேண்டிய இடம்



**இறைமகள் களஞ்சியம்**

தொலை பேசி இல. 0776708297


Hatton National Bank
HNB யின் சிறுவர்களிற்கான சிறப்பு
சேமிப்புத்திட்டம் "சிங்கிதி"
மேற்படி சேமிப்புக் கணக்கை
ஆரம்பிப்பதன் மூலம் உங்கள்
மழலைகளின் எதிர்காலத்தேவைக்கு
அடித்தளமிடுவதுடன் கவர்ச்சியான
பரிசில்களையும் வெல்லுங்கள்
அடகுச் சேவை
இப்போது சனிக்கிழமைகளில்
காலதாமதமற்ற துரிதசேவை
Personal
L O A N S
A loan as personal asyour needs
மாதாந்த சம்பளம் பெறும்
அரச/அரச சார்பற்ற/ தனியார்
ஊழியர்களுக்கு அவர்களின்
தேவைகளுக்கு முற்றிலும்
கணனி மயப்படுத்தப்பட்ட
இலகு கடன் வசதி
HNB
ஹற்றன் நஷனல் வங்கி, சுன்னாகக்கிளை


சிவசக்தி ஐஸ்கிறீம்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு
காலை, மாலை, மதிய உணவு வகைகள், குளிர்பானப் பொருட்கள்,
பிஸ்கற், சொக்கலெட் வகை என அனைத்தையும்
தூய்மையான விலையில் குறைவாகவும்
பெற்றுக்கொள்ள ஒரே இடம்
சிவசக்தி ஐஸ்கிறீம்
உரிமையாளர்:- சுரேஸ்குமார்
தொ.இல. 077775144



# அம்பாள்
# குரோசரீஸ்

சகல வித பல சரக்கு பொருட்கள்,
படசாலை உபகரணங்கள்,
பொலித்தீன் பொருட்கள்
மற்றும் அபிஷேகப் பொருட்கள் போன்ற
அனைத்தையும், பெற்று கொள்ள
ஒரே இடம்

**அம்பாள் குரோசரீஸ்**

பிரதான வீதி, பண்டத்தரிப்பு

# ஸ்ரைல் சிற்றி



அனைத்து விதமான சாறிகள்,
சல்வார்கள், சேட்டிங் சூட்டிங் றெடி மெற் ஆடைகள்,
சிறுவர்களுக்கான
ஆடைகள், திருமண நிகழ்வுகளுக்கான பட்டு சாறிகள்
வேட்டிகள் என அனைத்தையும் பெற்றிட நாடுங்கள்

**ஸ்ரைல் சிற்றி**

பிரதான வீதி,
மானிப்பாய்

# மாதுமை பட்டுச் சோலை





அனைத்து விதமான சாறிகள்,
சேட்டிங் சூட்டிங் றெடி மெற் ஆடைகள்,
சிறுவர்களுக்கான சல்வார்கள்,
திருமண நிகழ்வுகளுக்கான பட்டுச் சாறிகள்
பட்டு வேட்டிகள் என அனைத்தையும் பெற்றிட நாடிட

**மாதுமை பட்டுச்சோலை**

பிரதான வீதி, பண்டத்தரிப்பு



# நகுலேஸ் ஹாட்வெயார்

கட்டடப் பொருட்கள், வர்ண பூச்சுவகைகள்,
தூரிகைகள், மின்சார உதிரிப் பாகங்கள்,
துவிச்சக்கர வண்டிகள், உதிரிப்பாகங்கள்
என அனைத்தையும் மலிவாகவும், தரமாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

நகுலேஸ் ஹாட்வெயார்

பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

# கணேஸ் ஸ்ரோர்ஸ்



பல் ஆண்டு காலமாக கொடிகட்டிப்பறக்கும்
கணேஸ் ஸ்ரோர்ஸ்!
பலசரக்கு பொருட்கள், குளிர்பான வகைகள்,
பாடசாலை உபகரணங்கள், விளையாட்டுப்பொருட்கள்
போன்ற அனைத்தையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்,
மலிவாகவும், தரமானதாகவும் பெற்றிட

**கணேஸ் ஸ்ரோர்ஸ்**

பிரதான வீதி, பண்டத்தரிப்பு

# நிதி ஸ்ரோர்ஸ்

துவிச்சக்கரவண்டி, உதிரிபாகங்கள், மின் உபகரணங்கள்,
விளையாட்டுப்பொருட்கள், வானொலிப்பெட்டிகள்
அனைத்தும் பெற்றிட நாடுங்கள்

**நிதி ஸ்ரோர்ஸ்**

பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

# ஸ்ரீமுருகன் புத்தகசாலை



பாடசாலை உபகரணங்கள்,
நாளாந்த வாராந்த ஆங்கிலப் பத்திரிகைகள்,
அன்பளிப்புப் பொருட்கள், குளிர்பானப் பொருட்கள்,
கடந்தகால வினாத்தாள் விடைகள் என அனைத்தையும்
பெற்றுக்கொள்ள வேண்டிய இடம்

**ஸ்ரீ முருகன் புத்தகசாலை**

சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு.

# ஜெயா்ச்சி பாமசி

தரமான நம்பக தன்மை மிக்க அரச அனுமதியுடன்
சகலவித மருந்துகளையும் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்

பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

# நியூ அக்றோ சென்ரர்

விவசாயத்திற்குத் தேவையான பசளை வகைகள் மற்றும்
கிருமி நாசினிகள், பிளாஸ்ரிக் கதிரைகள்,
விவசாய உற்பத்திக்குத்தேவையான தானியவகைகள்
என அனைத்துப் பொருட்களையும் தரமானதாகவும்
குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள
பெற்றுக்கொள்ள வேண்டிய இடம்

நியூ அக்றோ சென்ரர்

சில்லாலை வீதி,
பண்டத்தரிப்பு.


SAIRAM
Sairam Printers
Hot Line,
0776915339
Computer Printing, Photo Copy & Laminating,
Ronio & Stencil Cutting, Offset Printing,
Wedding Cards, Birthday Cards & Puberty Ceremony Cards,
Memorable Moments, Etc.
T.P:- 0213211155
Main Street,
Chankanai.

# பாக்கியரட்ணம்
## கட்டடப் பொருள் விற்பனை நிலையம்

கம்பி வகைகள், கூரைத்தகடுகள், கேற் தகரங்கள்.

பெயின்ற் வகைகள், (Colour bank)

பைப் வகைகள், கட்டிட உபகரணங்கள் என்பவற்றை

நியாயமானவிலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய

இடம் **பாக்கியரட்ணம்**

பிரதான வீதி, சங்கானை. தொ.இல. 0213212713




யம்

ண்டிய

12713



சாய்ராம் பிறிண்டேர்ஸ் சங்கானை. T.P.No:- 0776915339